அல்லியரசாணி மாலை

1897

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

அல்லியரசாணிமாலை.

இஃது

மயிலம்

சுப்பிரமணியசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

சென்னை - இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற் றமது

ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

நெ. 1. திருப்பள்ளிசந்து பெத்துநாய்க்கன்பேட்டை.

MADRAS.

1897.

உ

கடவுள்துணை.

அல்லியரசாணிமாலை.

விநாயகர்துதி.

கலிவிருத்தம்.

அடாதமும்முலையாள் திருவாலவாய்த்
தடாதகைப்பிராட்டியரின்தன்னருள்
கொடாநின்றவல்லிக் கோதைகதைசொல்லக்
கடகளிற்றிணைக்கைதொழுதேத்துவாம்.

வெண்செந்துறை.

சித்திவிநாயகர்தன் செம்பொற்பதம்போற்றி
முத்தியளிக்கவல்ல முக்கணன்றருள்போற்றி
அஞ்ஞானநீக்கிவிடும் அங்குசநின்றருள்போற்றி
சீராறுஅல்லிகதை செந்தமிழால்யான்பாட
ஏராறுநாவினிலே இசைந்தருள்வாயைங்கரனே.

சுப்பிரமணியர்துதி.

சுத்தமெஞ்ஞானகந்தர் துய்யவடிபோற்றி
பத்தர்தமக்குவரம் பாலிப்போன்றருள்போற்றி
ஆதிபரமசிவற் கருள்செய்வோன்றருள்போற்றி
தீதில்லாலாயனையுஞ் சிருஷ்டித்ததாள்போற்றி
சூரபத்மன்சிரந் துணித்தபதம்மோற்றி
தீரகயமுகனைச் சேதித்ததாள்போற்றி
வன்முகன்றருகனை வாதித்ததாள்போற்றி
பின்முகன்றருகனைப் பாழ்செய்ததாள்போற்றி
கந்தாகடம்பா கதிர்வேலாயிக்கதைக்குச்
சிந்தாகுலந்தீரச் செய்திடுவாய்கர்த்தாவே

சரஸ்வதி - துதி.

தாதாருங்கூந்தல்விழுந் தங்கப்பதம்போற்றி
சூதார்முலைவாணி துங்கப்பதம்போற்றி
துன்னுங்கலைமாதின் துணையடிகளைப்போற்றி
மன்னுசரஸ்வதிதா மரையடிகளேபோற்றி
அல்லிகதையுரைக்க அருள்புரிவாய்மாதாவே
வல்லிக்கொடியனைய வண்கரத்துக்கோதாவே
கஞ்சப்பூமன்மனதிற் கலந்தவளேநீயென்று
நெஞ்சந்தனிற்கலந்து நிகழ்த்துமம்மா இக்கதையை

விஷ்ணு துதி.

கூறுந்திருமாலின் கோகலகத்தாள்போற்றி
வீறுமுலகளந்த மெய்யன்பதம்போற்றி
பஞ்சவர்க்குதூதுசென்ற பங்கயத்தாள்போற்றி
எக்கலணடையாத இணைபடிகளேபோற்றி
இந்தக்கதைதனக்கு எம்பெருமாளேநிரும்
சந்ததமும்வந்துவரந் தந்தளிக்கக்கண்பாரும்

நாட்டுச்சிறப்பு.

தேன்பெருகுஞ்சோலை தென்னவளநாடு
கனியுதிருஞ்சோலை கனமதுரைநன்னாடு
வடகாஞ்சிமுத்திரங்கும் வடமதுரைபட்டணமாம்
தென்காஞ்சிமுத்திரங்கும் தென்மதுரைபட்டணமாம்
வாழைவடக்கீனும் வான்மழுகுதெற்கீனும்
கரும்புமிளநீரும் கண்திறந்துமடைபாயும்
கட்டுக்கலங்காணும் கதிருழக்குநெற்காணும்
அரிதாளறுத்துவர மறுதாள்பயிராகும்
அருதாளின்கீழே ஐங்கலம்தேன்கூடுகட்டும்
யானைகட்டத்தாளும் வானமட்டும்போராகும்
மாடுகட்டிப்போர்படித்தால் மாளாதுசெந்நெல்லென்று
யானைகட்டிப்போர்படிக்கும் அழகானதென்மதுரை
தானாகத்தான்வளர்ந்து தழைத்தோங்குந்தென்மதுரை
சோலைமலருடைய சொக்கர்கிருபையினால்
அங்கயற்கண்மீனாட்சி அம்மனருளாலே
மாதமொன்றுமும்மாரி வருஷிக்குந்தென்மதுரை
பஞ்சைபனாதி பரிதேசிகிடையாது
பஞ்சைகிடையாது பாண்டிவளநாட்டில்
கருப்புகிடையாது கனத்ததொருமதுரையிலே
அங்காடிகூடையை அதிரவிலைகூறுர்கள்
ஏழைபரிதேசி இல்லாங்குடிவாழ்க்கை
தழைத்தோங்கிவாழ்வார்கள் சங்கரன்கிருபையினால்
எங்கினுமிருந்து ஏழைபரிதேசிகளும்
அடுப்பார்பரிசனங்கள் அந்தமதுரையிலே
மதுரையிலடுத்தவர்கள் வாழ்வாகபோற்றிடுவார்
நீதிமனுமுறைகள் நெறிதவறுமன்னவனும்
செங்கோல்பிடித்தாளும் சித்திராங்கபாண்டியனும்
மகுடமுடிசூடும் மன்னன்சிங்காதனத்தில்
தங்கமுடிகுடித் தரணிபதியாண்டிருந்தான்
சொக்கர்வலுமையுண்டு துரைராசர்பாண்டியற்கு
மீனாட்சிவலுமையினால் மேன்மையுடனாண்டிருந்தான்
ஆறிலொருகடமை அரசனவன்வாங்குவது

சக்கரநெறிப்படியே தரணிதனையாண்டிருந்தான்
சொக்கர்திருவிழாவை சோராமல்செய்திடுவார்
ஐயர்தன திருவிழா ஆனந்தமாய்நடக்கும்
உலகந்தழைத்தோங்கி யுத்தமனுண்டிருந்தான்
தாழ்வுகளில்லா மற் றழைத்தோங்கிவாழ்ந்திருந்தான்
அப்படியாய்வாழ்ந்து அரசாளுநாளையிலே

சோழமகாராசன் வறுமை-அல்லது சிறுமை.

சோழராசன்தன்னுட்டில் சொர்ணகிரிபட்டணத்தில்
மழைகள்கிடையாது மன்னனதுராச்சியத்தில்
தூரல்கிடையாது சோழனதுசீமையிலே
மயிர்கள்விளையாது பரவைகள்நாடாது
குடிக்கசலங்கிடையாது குருவிகள்நாடாது
காய்ந்தமரங்களெல்லாங் கனிகள்கிடையாது
தீய்ந்தபயிர்களெல்லாம் சொல்லமுடியாது
ஏரிகுளங்கழனி இரைக்கசலங்கிட்டாது
பூமிதனிற்புல்லும் பூண்டுங்கிடையாது
சருகுபோலுலர்ந்தனவே தனிச்சோழன்பட்டணத்தில்
அன்னங்கிடையாது அன்பானசீமையிலே
சோறுகிடையாது சோழனதுசீமையிலே
எல்லோரும்பரிதேசி ஏழைகளாய்ப்போனார்கள்
பெண்டுடனேபிள்ளைகள் புருடசனங்களெல்லாம்
இனியிருந்தாலிவ்விடத்தி லிறந்துமடிவோமென்று
சொல்லாமலோடுகிறார் சோழராசன்சீமைவிட்டு
வலசைவாங்கிப்போனார்கள் மன்னர்பரிசனங்கள்
குடிவலசைவாங்கினார் குடித்தனககாரரெல்லாம்
அண்டிபிழைக்கவென்று அனைவருமோடிவிட்டார்
வந்துமிகச்சேர்ந்தார்கள் மதுரைவளநாட்டில்
பாண்டியன்தேசத்திற் மரிசனங்கள்வந்தடுத்தார்
அப்போதுசோழன் அவனுடையபட்டணங்கள்
பாழடைந்துபோயிற்றே பரிசனங்களில்லாமல்
சோழனதுசீமையிலே துற்குறியடைந்தனவே
பன்னிரண்டுதன்வருடம் பாரில்மழையில்லாமல்
மாடுகள்கிடையாது மனிதருங்கிடையாது
தங்கநிழல்கிட்டாது தரித்திரமேபெரிதாச்சு
என்னசெயவேனென்றுதான் எண்ணமிட்டான்சோழனவன்
வாடிமனந்தளர்ந்தான் வாடும்பயிரதுபோல்
செடியின்கீழ்புல்லதுபோல் செழித்ததிருமுகங்கள்
களர்நிலத்துப்புல்லதுபோற் கருகிநிறங்குலைந்தான்
எண்ணுதுமெண்ணியவ னேங்கிமனந்தளர்ந்து
ஆரையடித்தோமோ அனியாயஞ்செய்தோமோ

கூலிகுறைத்தோமோ குறைமறக்காலிட்டோமோ
பஞ்சைப்பனாதிகளை பறக்கடித்தோட்டினோமோ
அந்தணர்வேதியர்க்கு அபசாரஞ்செய்தோமோ
தெய்வத்தின்செயலோ திருவுளத்தின்சோதனையோ
ஆரையடுப்போம் ஆண்டிப்பிழைத்திடுவோம்
எவரையடுப்போம் இக்குறையைத்தீர்த்திடுவோம்
தேசமும்பாழாச்சு செனங்களெல்லாம்மறிபோச்சு
அனைவரும்போயடுத்தா ரணிமதுரைபாண்டியனை
பாண்டியன்தேசம் பதவியடைந்ததுகாண்
சொக்கர்கிருபையினால் சுகமாயிற்றுதென்மதுரை
தெய்வச்செயலல்லவோ சீர்பெற்றான்பாண்டியனும்
நாமுமவருடைய நாதரடிதாள்பணிந்து
பாண்டியனனுமதியால் பகவானைநாமவணங்கி
ஐயர்கிருபையினா லதிர்ஷ்டங்கள்பெறவேணும்
இதுதான்வயணமென்று இதைவிடவேறேயுண்டோ
மகாதேவர்கண்திறந்தால் மழைக்குக்குறைவுமுண்டோ
தழைத்தோங்குஞ்சீமையென்று தரணிபதியெழுந்து
மதுரைக்குப்போகவென்று மன்னனெழுந்திருந்து
சினேகிதஞ்செய்யவே தென்மதுரைமாண்டியனை
என்றுபயணமிட்டான் இடறுதனைத்தொலைக்க
கொஞ்சநஞ்சஞ்சேனைகளை கூடத்துணையாக்கி
பொன்னார்முடிதுலங்க பூஷணங்கள்சோதிமின்ன
வாளுங்கடகமின்ன வச்சிரமணிடால்துலங்க
புரவியின்மேலேறி புறப்பட்டான்சோழமன்னன்

சோழமகாராசன் பாண்டியனைக் காணுகிறது.

பாண்டியன்தேசத்திற் பட்சமுடன்வாரானே
வெகுதூரமாய்நடந்து விரும்பிவிடாய்பட்டு
தொலைதூரமாய்நடந்து தென்மதுரைவந்துசேர்ந்தார்
மதுரைவளநாட்டில் வந்துவிட்டான்சோழனவன்
கோட்டைக்குள்ளேநுழைய கொற்றவன்சோழனவன்
தூதுவர்களோடிப்போய் சொன்னார்கள்பாண்டியற்கு
சந்தோஷங்கொண்டு தனிமதுரைபாண்டியனும்
வரச்சொல்லுமென்று மன்னன்கொலுவமர்ந்தான்
அப்போதுதூதர்வந்து அறிக்கையிட்டார்சோழனுக்கு
கொலுமுகத்தைத்தேடியல்லோ கொற்றவனுந்தானடந்து
பாண்டியனைக்கண்டு பரிவுடனேதெண்டனிட்டான்
தெண்டனிட்டசோழனை சித்ராங்கதபாண்டியனும்

திடுக்கிட்டெழுந்திருந்து சிங்காதனமேடையிட்டு
கூடவேவகையெடுத்து கும்பிட்டான்பாண்டியனும்
கட்டித்தழுபி கடாலிங்கனஞ்செய்து
கூட்டிவந்துகொலுமுகத்தில் கூடவுட்காரவைத்தான்
இட்டசிங்காதனத்தில் இருந்தானேசோழராசன்
சினேகிதன்முகம்பார்த்துத் தென்பாண்டியராசன்
சோழன்முகம்பார்த்து சொல்லுகிறான்பாண்டியனும்
எங்கேவந்தீரென்னசெய்தி எனனுடையஉயிர்த்தோழா
அவசரமாய்வந்ததென்ன ஆள்கள்படையில்லாமல்
வேர்வையொழிய வேற்றுமுகமாவதென்ன
சிந்தைகலங்கித் திருமுகம்தான்வாட
பூமாலைதான்கசங்க பொன்மகுடம்தான்கருக
அழகுகள்மாறி அனலிட்டமெழுகதுபோல்
உருமாறிவந்ததென்ன வுணர்வுடையமன்னவரே
எந்தனுக்குத்தான்தெரிய இயம்பிடுங்காணென்றுரைக்க

சோழராசன் பாண்டியனிடத்தில்சொல்வது.

அவ்வார்த்தைதான்கேட்டு அரசானசோழனவன்
தனக்குள்ளவருத்தத்தைச் சாங்கமாய்ச்சொல்லுகிறான்
பன்னிரண்டுவருடம் பாரில்மழையில்லாமல்
தவிக்கிறதேயுலகந் தாங்கமுடியவில்லை
நிருவகிக்கமாட்டாமல் நிலைக்காமலோடிவிட்டார்
கருகிறதேபூமியெல்லாங் கம்மிற்றேராச்சியங்கள்
தாளமுடிகவில்லை தனிமதுரைபாண்டியனே
நானிளைத்துப்போனால் நன்மையோவுந்தனுக்கு
உம்முடையராச்சியந்தா னொருகுறைவுமில்லாமல்
தாழ்வுகளில்லாமல் தரணிகள்தானறழைக்க
தேசஞ்செழிக்க சிறப்புடனேநீர்வாழ்க
எளியவன்போலேநான் இக்ச்சிறுமைபட
பார்க்கமனம்வந்ததோ பாராளும்பாண்டியனே
என்தேசம்தான்செழிக்க என்சனங்களீடேற
அவ்வளவுவுதவி அனுக்கிரகம்நீர்செய்தால்
நன்றிமறப்பேனோ நானுள்ளநாள்வரைக்கும்
சகாயமறப்பேனோ சந்திராத்தருள்ளளவும்
உதவிமறப்பேனோ ஊழியுள்ளநாள்வரைக்கும்
இந்தச்சகாயமதை எப்போதும்நான்மறவேன்
சஞ்சலந்தீரவைப்பாய் தனிமதுரைபாண்டியனே
அவ்வசனங்கேட்டு அழகுள்ளபாண்டியனும்
சோழன்முகம்நோக்கிச் சொல்லுவானொருவசனம்
என்னாலேயாகுமோ இவ்வுலகந்தான்றழைக்க

நம்மாலேயாவதுண்டோ நாடுகள்தழைத்தோங்க
உன்னாலுமென்னாலு முலகந்தழைக்குமோதான்
தேவாதிதேவர் திருவருள்தானிருந்தால்
நாதா னுதயவு நமக்குத்தானிருந்ததென்றால்
சொக்கர துதயவால் தொல்லுலகந்தான்றழைக்கும்
அவருடையசெயலல்லா லரசனாலாவதுண்டோ
தெரியாதோவுந்தனுக்குத் தெளிவறிந்தசோழமன்னா
நாதராலென்னுடைய நாடுதழைத்ததென்றால்
அவ்வசனங்கேட்டு அருஞ்சோழனேதுரைப்பான்
உமதுதயவாலே உரிமைபடவெந்தனுக்கு
நாதருக்குச்சொல்லி நாடுதழைக்கவையும்
சொக்கருக்குச்சொல்லித் தேசஞ்செழிக்கவையும்
என்றுமிகவேண்டினான் இராசனந்தபாண்டியனை
அப்படியேநல்லதென்று ஆனதொருபாண்டியனும்
வந்ததொருசோழனுக்கு வருந்திமிகவிருந்துசெய்து

பாண்டியனுஞ்சோழனுஞ்சொக்கரிடம்வந்துகண்டது.

இருவருங்கூடியே ஈசரதுஆலயத்தில்
சொக்கரதுகோவிலுக்குத் துரிதமுடன்வந்தார்கள்
ஈசரதுசந்நிதிக்கு இன்பமுடன்வந்தார்கள்
சுவாமியைக்கண்டு தொழுதடிகளைப்பணிந்தார்
சாஷ்டாங்கதெண்டன் சரணமென்றடிபணிந்தார்
இருவருமேயடிபணிந்து ஈசரைத்தோத்தரித்தார்
தும்பைமலர்சூடுகின்ற சொக்கரைத்தோத்தரித்தார்
ஆலவிடமுண்ட ஐயனைத்தோத்தரித்தார்
நஞ்சையமுதுண்ட நாதரைத்தோத்தரித்தார்
இடறுதனைநீக்கிவிடும் ஈசனேசரணமென்றார்
துன்பமகற்றிவிடும் சொக்கரேசரணமென்றார்
ஏழைமுகம்பாருமையா ஈசனேசரணமென்றார்
அப்போதுசொக்கலிங்கர் அந்தமொழிகேட்டு

சொக்கலிங்கர்சொல்வது.

குஞ்சிரிப்புகொண்டவருங் கோடிமுடிகைலாசர்
ஏதுவகையாக இருவருமாய்வந்தீர்கள்
வந்தவிபரமதை வகையாகச்சொல்லுமென்றார்
அவ்வசனங்கேட்டு அழகுள்ளபாண்டியனும்
சொக்கரைச்சேவித்து சொல்லுகிறான்இராசனவன்
மதுரையிலேவாழுகின்ற மகாதேவாஆண்டவனே
எந்தனுக்குக்குறைவில்லை உந்தனதுசெயலாலே
இச்சோழராசனுக்கு வந்ததொருதுன்பங்கள்
சொல்லத்தொலையாது துயரமிகத்தோன்றுதையா
மழைகள்கிடையாமல் வையகங்கள்பாழாகி

உலர்ந்துதேசரகும்போ னுலகங்களத்தனையும்
வாடித்தவிக்கிறார்கள் மனிதர்களெல்லோரும்
அன்னங்கிடையாது அரசனது பட்டணத்தில்
சோறுகிடையாது சோழனது சீமையிலே
மிகவும்வருத்தமுற்றான் வேந்தனிந்தசோழராசன்
தயவுபுரிந்து தற்காக்கவேண்டுமையா
மனதுகளித்து மழைபெய்யவையுமையா
நாடுசெழிப்பதற்கு நாதரேகண்பாரும்
கண்பார்க்கவேண்டுமென்று கர்த்தரேதெண்டனிட்டோம்

சொக்கநாதர்சொல்வது

அவ்வசனங்கேட்டு ஆண்டவருமேமதுரைப்பார்
அரசர்களேநீங்கள் அஞ்சவேவேண்டாங்காண்
எவனெவன்றன்றனக்கு எந்தவதிகாரமுண்டோ
அந்தவதிகாரம் அவனவனேசெய்கிறது
வருணபகவானு மனதுவைத்தானுமாகில்
பெய்யாமழைபெய்வித்து பெருகவைப்பான்பூமியெல்லாம்
வருணனுக்கதிகாரன் வானவர்கோனிந்திரன்காண்
மேகத்துக்கதிகாரன் மேலான இந்திரன்காண்
தேவேந்திரனைநீங்க ளிருவரும்வணங்கிடுங்கள்
தேவேந்திரனைத் தெரிசித்தீருமாகில்
உங்கள்குறைவுகளை யுரையுங்களிந்திரற்கு
மனதிரங்கவேண்டி வணங்கினீராமாகில்
வருணனைத்தானழைத்து மழைபெய்யவைப்பான்காண்
மேகத்தைதானழைத்து விடைகொடுப்பானிந்திரனும்
இந்திரன்தயவாலே எங்குஞ்செழித்தோங்கும்
அவ்வசனங்கேட்டு அணிமதுரைபாண்டியனும்
சொக்கர்விடைகொடுக்கச் சோழனும்பாண்டியனும்
நல்லதென்றுசொல்லி நாதரடிபணிந்து
இருவருமாய்நடந்தார்கள் ஈசரதுகோயில்விட்டு
ஆலயத்தைவிட்டு அப்பால்நடந்தார்கள்

இந்திரலோகங் காண்கிறது

தெய்வலோகம்போகவென்று சறுதியாய்த்தானடந்தார்
சோழனும்பாண்டியனுந் துருசாய்நடந்தார்கள்
இந்திரலோகத்திற்கு இசைந்துமேவந்தார்கள்
தேவேந்திரலோகத்திற்கு சறுதியில்தானடந்தார்
அமராபதிதேடி அரசர்கள்தானடந்தார்
வானுலகங்கிட்டி வருகிறவேளையிலே

ஆயிரங்கண்ணிந்திரரும் அமர்ந்தார்கொலுமேடை
முப்பத்துமுக்கோடி முனிவர்களுந்தேவர்களும்
நாற்பத்தெண்ணாயிரம் நலமானரிஷிகளுடன்
தும்புருநாரதரும் தூருவாசரிஷிகளுடன்
கிம்புருடர்கின்னரர்கள் கெருடகாந்தருவருடன்
கின்னரிவீணைகள் கீதங்கள்பாடிநிற்க
மேனகைரம்பையும் மெல்லிதிலோர்த்தமையும்
ஊர்வசிநாட்டியங்க ளுச்சிதமாய்செய்துநிற்க
இந்திராணிதேவியுடன் இந்திரன்கொலுவிருந்தார்
அந்தச்சமயத்தில் அழகுள்ளபாண்டியனும்
சோழனும்பாண்டியனும் துரிதமாய்வந்தார்கள்
இந்திரன்கொலுதேடி இருவரும்வருகையிலே
கண்டானேயிந்திரனுங் காவலர்கள்வருகிறதை
பூலோகராசாக்கள் பொன்னுலகம்வருகிறார்கள்
நரமனிதராசாக்கள் நாடிவரக்காரணமேன்
இவர்களாய்வருவாரோ ஈச்சுரனால்வருகிறார்கள்
சொக்கரருள்பெற்று சொர்க்கபதிவருகிறார்கள்
நல்லதென்றுசொல்லி நலமுடனேபார்த்திருந்தார்
பாண்டியனும்சோழனும் பதிகொலுவில்வந்தார்கள்

இந்திரனைக்காண்பது,

சொர்க்கலோகயிந்திரரைச் சோழனவன்பார்த்து
மிகவும்பயந்து மேன்மையுள்ளஇந்திரற்கு
அஞ்சிப்பயந்து அடிதொழுதுதெண்டனிட்டான்
சாஷ்டாங்கதெண்டனிட்டான் சசிதேவிநாயகர்க்கு
தெண்டனிட்டசோழனைத் தேவேந்திரன்வாழ்த்தி
வணங்கியசோழனை வாயாரத்தான்வாழ்த்தி
பொற்பீடம்போடுமென்றார் பூலோகச்சோழனுக்கு
எட்டுப்படியின்கீழிட்டார்கள்பொற்பீடம்
வந்தமகாராசன் மன்னன்மனமகிழ்ந்து
அந்தமுள்ளபீடத்தி லமர்ந்தானேசோழனவன்
எதிராகபாண்டியனும் இருமாப்புதானடைந்து
மதுரையாளும்பாண்டியனும் வணங்காமற்றானிருந்தான்
நம்மைப்போலிவனொருவன் ராஜநல்லோயிந்திரன்றான்
இந்திரனைநாமும் எப்படிவணங்குவது
பூலோகயிந்திரன்போற் பொன்மதுரையாளுகிறோம்
சங்கரன்கிருபையினாற் றாணியையாளுகிறோம்
ஈசன்தயவிருக்க யிவனையேன்வணங்குவதோ
சொக்கர்மகத்துவத்தால் தொழாமலேதிரேகின்றான்
எதிர்நின்றபாண்டியனை யிந்திரனுந்தான்பார்த்து
வந்திருக்கும்பாண்டியன்றான் வணங்காமலிருப்பதென்ன

நம்மைமதிக்கவில்லை நரனானபாண்டியனும்
எதினால்மதியாம லிருக்கிறான்பாண்டியனும்
சொக்கர்வலுமையினாற் றொழுகாமற்போனானே
நாதரதுதயவால் நம்மைமதிக்கவில்லை
பூலோகமன்னனுக்குப் பெருமைகள்தானுமுண்டோ
கெருவம்படைத்தோர்க்குக் கேடுவரும்தெரியாது
இவனுடையகெர்வத்தை யினியடக்கவேண்டுமென்று
நல்லதனத்தாலே நடுங்கவைக்கவேணுமென்று
உபாயத்தினாலே ஒடுங்கவைக்கவேணுமென்று
மர்ம்மத்தைகொண்டாராம் வானவர்கோனிந்திரனும்
ஆரடாதூதுவர்கள் அங்கிருக்குங்காவலரே
சரியொத்தபாண்டியற்குச் சரிபீடம்போடுமென்றார்
எதிராகப்போட்டதொரு ஈடான ஆசனத்தில்
குந்துமென்றார்பாண்டியனைக் கொலுமேடையாசனத்தில்
சரியாகயுட்கார்ந்தான் தனிமதுரைபாண்டியனும்
ஆரடாதூதுவரே அரசாளுமன்னனுக்கு
வந்ததொருமன்னனுக்கு மாலையொன்றுபோடுமென்று
கண்காட்டயிந்திரருங் கனமுடனேமல்லருக்கு

இந்திரன்கெண்டிமாலைசூட்டினது

பாண்டியராசனுக்குப் பதித்தமுத்துகெண்டியொன்று
ஆயிரம்பேர்சுமக்கும் ஆணிமுத்துகெண்டியொன்று
கொண்டுவந்துபோடுமென்றார் கொடிமதுரைபாண்டியற்கு
சூட்சமாயொருமாலை சோழனுக்குபோடுமென்றார்
அப்படியேஓடினார்க ளந்தப்புரந்தானுழைந்து
ஆயிரம்பேர்மல்லரவ ராள்பிடித்துத்தோளூன்றி
நெக்கியெடுத்தார்கள் நேரானகழுத்துகெண்டி
இத்தோடேபாண்டியன்றான் ஈரல்நடுங்கிடுவான்
தூக்கிக்கொண்டுவந்தார்கள் சூரரந்தமல்லர்களும்
இந்திரன்கண்காட்ட எதிர்வந்தார்மல்லர்களும்
பாண்டியற்குவெகுமதியாய்ப் பார்மாலைசூடுமென்றார்
போட்டார்கள்கழுத்திலேதான் போர்மல்லராயிரம்பேர்
அப்பெரியமாலையைதான் அழகுள்ளபாண்டியனும்
நாதரதுகிருபையினால் நடுக்கங்களில்லாமற்
சொக்கரைத்துதிசெய்து தோளிலேதாங்கிகொண்டான்
மார்பைநெளித்துமே மாலையைத்தாங்கிகொண்டான்
கண்டார்களெல்லோருங் கனமானபாண்டியனை
தேவேந்திரன்கண்டானே சிறப்புள்ளபாண்டியனை
இவனாலேயொன்றுமில்லை யீசரதுதன்பலந்தான்

அறிவோம்பிலனுடைய ஆங்காரவலுமையென்று
பாண்டியன்மேலேயல்லோ பகைவைத்தானிந்திரனும்
ஒருவருக்குந்தெரியாம லுள்ளத்தில்கபடுவைத்தான்
பாண்டியன்முகம்நோக்கி பண்புடனேதுசொல்வான்
சோழனுநீருமாய்ச் சொர்க்கபந்திவந்ததென்ன
வந்தவயணமதை வகைபிரித்துசொல்லுமென்றார்
அப்போதுபாண்டியனும் அருள்புரிந்தேதுசொல்வான்
எந்தனதுகாரியமா யிவ்விடத்தில்வந்ததில்லை
சோழனுக்காயிங்குவந்தேன் சொர்க்கபதியிந்திரனே
அவ்வரசனலுவல்கொண்டு அமராபதிவந்தேனென்றான்
தொந்தரைகள்படுகிறானே சோழனிந்தமன்னவனும்
மழைமாரியில்லாமல் வருத்தங்கள்மிகவாகி
கம்முதோர்ச்சியங்கள் கருகுதேபூமியெல்லாம்
பரிசனங்களெல்லவரும் பரதேசியானார்கள்
பன்னிரண்டுதன்வருடம் பாரில்மழைகிடையாது
அந்தவிசனத்தாலே அடுத்துவந்தாரெந்தனையும்
என்னாலேயாகாதென்று யீசரண்டைபோயுரைத்தேன்
உம்மண்டைபோகவல்லோ உத்தரவுசெய்தார்காண்
ஈசன்விடைபெற்றுமல்லோ யிவ்விடத்தில்வந்தோம்யாம்
உம்மாலேயான்நல்ல உதவிபெறவேண்டுமென்றான்
அந்தமொழிகேட்டு ஆயிரங்கணிந்திரனும்
சோழன்முகம்பார்த்துச சொல்லுவாரிந்திரனும்
எதுக்குமஞ்சாதே யின்பமுள்ளமன்னவனே
ஈசர்தயவாலே இனியசவுக்கியமுண்டு
அப்படியேசெய்விப்பேனான் அஞ்சாதேசோழமன்னா
நெறிமுறைமைதானறிந்த நீதியுள்ளமன்னவனே
நாதரதுவார்த்தைக்கு நாமொன்றுபேசுவமோ
அப்படியேயானடப்பேன் அரசனேநடவுமென்றார்
தேவேந்திரன்சொல்லத் திடுக்கிட்டெழுந்திருந்து
சாஷ்டாங்கதெண்டனிட்டுச் சரணமென்றடிபணிந்தார்
வாழ்த்திவிடைகொடுத்தார் வானவர்கோனிந்திரனும்
உத்திரவுபெற்றானே உலகாளும்சோழமன்னன்
பாண்டியனுமப்போது பக்குவமாயெழுந்திருந்து
இந்திரரேவிடைதாரு மெங்களிருவருக்கும்
போய்வாருமென்றுசொல்லி போகவிடைகொடுத்தார்
ஆனந்தமாய்பூரித்து அரசர்களிருவருமாய்
தெய்வலோகம்விட்டுமல்லோ திரும்பினார்பூலோகம்
மதுரைவளநாட்டில் வந்தார்களிருவருமாய்
சோழனுக்குவெகுமதிகள் செய்தந்தபாண்டியனும்
அனுமதிகள்பெற்றுக்கொண்டு அனுப்பிவிடைகொடுத்தார்
பாண்டியன்விடைபெற்றுப் பார்மன்னன்சோழனவன்

சொக்கரைத்தரிசித்துச் சோழன்நடந்துவிட்டான்
தன்னுடையராச்சியத்திற் றனஞ்சயனும்போய்நடந்தான்
இப்படியாய்சோழ னிருக்குமந்தவேளையிலே

இந்திரன்கோபித்துச் சோழன் பெருமைபடவும்

பாண்டியன் சிறுமைபடவுஞ்செய்தது

ஆகாயவிந்திர னன்புடனே துசெய்தார்
பாண்டியன்வந்ததுவும் பார்சோழன்வந்ததுவும்
தன்னைவணங்காமற் றயிரியமாய்போனதுவும்
நரனைபாண்டியன்று னம்மைவணங்காததினல்
மதியாமற்போனவனை மட்டடக்கவேணுமென்று
கோபங்கள்கொண்டானே கொழுந்தணல்போலிந்திரனும்
எறிபறந்தகண்களுடன் இந்திரனுரேதுசொல்வார்
மேகங்களேழையும் மேன்மையுடன்வரவழைத்து
சப்தமேகமத்தனையுஞ் சதிராய்வரவழைத்து
வருணபகவானை வரவழைத்திந்திரனும்
கேளுங்கள்மேகங்களே கீர்த்தியுடனொருவார்த்தை
இன்றுமுதலாக ஈடழிவான்மதுரையிலே
கால்வைக்கக்கூடாது கருமேகம்நீங்களெல்லாம
அன்னீதவான்மதுரையிலே அடிவைக்கலாகாது
தூரல்விழப்போகிறீர்கள் துன்மார்க்கன்மதுரையிலே
எடுத்தடிவையாமல் இடைந்துமழைபெய்யுங்கள்
அவனுடையபூமிதனி லடிவைக்கலாகாது
மதுரையிலேநீங்களும்போய் மழைபெய்தீராமானல்
கால்விலங்குங்கைவிலங்கும் கழற்றுப்பெருவிலங்கும்
தாள்விலங்குந்தோள்விலங்கும் தரிக்காப்பெருவிலங்கும்
விலங்குகள்போட்டுமல்லோ வெட்டியெறிந்திடுவேன்
என்வார்த்தையைத்தடுத்து வருஷிக்கப்போகிறீர்கள்
சோழனதுபூமியிலே சொர்ணமழைபெய்திடுங்கள்
மாதமும்மாரி வருஷியுங்கள்சோழனுக்கு
முப்போகந்தான்விளைய மும்மாரிபெய்திடுங்கள்
கருப்புத்தெளிபவேதான் கருமேகம்பொழிந்திடுங்கள்
எந்நாளுஞ்சோழனுக்கு இடையூறுவாறுமல்
அவனுடையசீமையிலே அமர்ந்துமழைபெய்திடுங்கள்
என்றுவிடைகொடுத்தா ரிந்திரனரப்போது
நல்லதென்றுசொல்லியல்லோ நலமாகமேகமெல்லாம்
மதுரையைநாடாமல் வருகிறதேமேகமெல்லாம்

சோழராசன்பெருமைபட்டது

சோழனதுசீமையிலே சொலிக்கிறதேபெருமழைகள்
கடலிரச்சல்போலாக கம்மிற்றேமேகமெல்லாம்
குமுறியிடித்துக் குடங்கொண்டுபொழிந்ததுவே
இரைச்சலுடனாக ஏகவெள்ளம்பொழிகிறது
சோனமழைகளது சொரிகிறதேபூமியெல்லாம்
நல்லமழைகளாலே நாடுசெழித்ததுவே
பூமிகுளிர்ந்ததங்கே பொய்கைகள்நிறம்பியது
ஏரிகுளம்நிரம்பி புரளுதேஏகவெள்ளம்
மடுக்கள்குளம்நிரம்பி வருகிறதேபெருவெள்ளம்
ஆறுகள்நிரம்புவதா லடைபடுதுவெகுசனங்கள்
கழனிபள்ளம்நிறம்பி கால்வாய்கள்தானிறம்பி
ஊற்றுகள்தான்சுரந்து ஓடிற்றேசலம்விசையாய்
தடாகங்கள்தானிறம்பித் தாமரைப்பூத்தனவே
வயல்கள்நிறம்பியல்லோ வாய்க்காலுந்தானோடி
உலர்ந்தமரங்களெல்லாம் உயிருண்டாய்துளிர்த்தனவே
அடியற்றமரங்களெல்லாம் அன்பாய்துளிர்த்தனவே
காடுசெடிகளெல்லாம் கனமாகவே துளுக்கும்
செடிகள்மரங்களெல்லாம் செழிப்பாய்வளர்ந்திருக்கும்
பூவாமரங்களெல்லாம் பூத்துச்சொரிந்தனவே
காயாமரங்களெல்லாம் காய்த்துச்சொரிந்தனவே
செந்நெல்விளைந்தனவே தேசஞ்செழித்தனவே
கிள்ளப்பழுத்ததுவே கிளிகள்வந்துசேர்ந்ததுவே
அள்ளப்பழுத்ததுவே அணில்கள்வந்துகோதுவன
சோலைகள்சாலைகளுஞ் சூழ்ந்ததடாகங்களும்
குருவியடுத்தனவே குயில்கள்வந்துபாடுவதும்
தாறுவும்மயில்களும் தாவிவிளையாடுவதும்
குயில்களிரைச்சலிடுங் கோகிலங்கள்சத்தமிடும்
அன்னங்கள்பேடையது அனேகம்வந்துசேர்ந்ததுவே
பண்டுபழங்கள்தின்று களித்தனபறவையெல்லாம்
ஏர்கட்டியுழுவாரும் இளநாற்றுநடுவாரும்
பயிரிடுங்குடிகளெல்லாம் பலப்பட்டார்பூமியிலே
ஓடுங்குடிகளெல்லாம் ஊர்வந்துசேர்ந்தார்கள்
பரிதேசியரிதேசி பஞ்சைபஞதியெல்லாம்
சோழராசன்பட்டணத்தில் சுகப்பட்டுவாழ்ந்தார்கள்
பிச்சைக்காரரெல்லோரும் பெருமையடைடந்தார்கள்
சோழமண்டலங்களெல்லாம் சுகமாய்தழைத்தனவே

சோழமகாராசன் தொலைந்தான்விசனமெல்லாம்
கீர்த்தியடைந்தானே கிருபைக்கடலானன்
இந்திரனை மனந்தனிலே எந்நாளும்நினைத்திருப்பான்
மாதமும்மாரி வருஷிக்கும்மண்டலத்தில்
சோழமகாராசன் தொலைந்தான்விசனமெல்லாம்
அப்படியாகவாழ்ந்தான் அழகானசோழமன்னன்

பாண்டியன்வறுமையடைந்தது,

பாண்டியநாட்டார் பரதேசம்போனார்கள்
மழைகள்கிடையாது மதுரைநகர்சீமையிலே
தூரல்கிடையாது தென்மதுரைபூமியிலே
தூரல்விழுவதில்லை சொக்கர்மதுரையிலே
காய்ந்துலர்ந்துபோயினவே க்னமதுரைபட்டணத்தில்
எறிந்துபுகைகிறதே ஈரங்கிடையாமல்
குடிக்கநீர்கிட்டாது குளங்கள்மடுக்களெல்லாம்
காகங்குடிப்பதற்கு-கரண்டிசலங்கிட்டாது
ஆறுகள்குளங்களெல்லாம் அடங்கலும்வரண்டனவே
ஏறிகள்வறண்டனவே ஏற்றக்கோலாழமட்டும்
பூமிகள்சூடேழும்பி பொங்கிற்றேதணலாக
விளைவுகள்கிடையாது வேந்தன்மதுரையிலே
களைவுகள்கிடையாது கனமதுரைப்பூமியிலே
பொன்மதுரைநாட்டிலே புழுதியடைந்ததுவே
சாருபோலுலர்ந்தனவே தழைத்தமரங்களெல்லாம்
பூமியுலர்ந்தது பூண்டுகிடையாமல்
பறவைகள்கிடையாது பாண்டியன்தேசத்தில்
குடிவலசைவாங்கினர் கொடிமதுரையுள்ளவர்கள்
பஞ்சைபனுதியாப்ப் பரதேசம்போகிறார்கள்
அன்னங்கிடையாது அழகுள்ளமதுரையிலே
மதுரையைச்சுற்றி மகாவனங்கள்செடிகளெல்லாம்
காய்ந்துமிகத்தீய்ந்து கரும்புகைச்சல்கொண்டனவே
தங்கநிழல்கிடையாது தனிமதுரைபூமியிலே
ஊரிலேயுள்ளவர்கள் உறக்கங்கள்கொண்டார்கள்
பாழடைந்தமுகமானார் பாண்டியநாட்டுள்ளோர்
அன்னவிசாரம் அதுவேபெரிதாச்சு
பன்னிரண்டுவெருஷம் பாரக்கருப்பாயிற்று
சரீரம்வெளுத்தார்கள் சல்லடைக்கண்ணானார்கள்
பெண்டுடனேபிள்ளை புருஷர்களொருதேசம்
திக்குகள்கெட்டுத் திசைமாறிப்போனார்கள்
அப்படியலைந்தது அணிமதுரைபூமியெல்லாம்
இந்திரனாலே இடருகள்நேர்ந்தனவே

ஆயாசத்துடனே அணிமதுரைபாண்டியனும்
மழையில்லாநாடு வையகமதானேமே
என்றுவிசனமா யிருக்குமந்தவேளையிலே
மேகம்பொழியுந் தனிச்சோழன்நாட்டினிலே
மேகங்குமரி மேலாகப்போய்விடுமாம்
மதுரையைநாடாமல் வகையுடனேபோய்விடுமாம்
இப்படியாயோடும்போது இதிலேயொருமேகம்
குட்டிமேகமொன்று குறுக்கிட்டுவோடும்போது
வருகிறவிசைதனிலே மதுரையென்றுதெரியாமல்
பொழிந்துகொண்டேயோடிற்று போகும்விசைதனிலே
அந்தமழைவெள்ளம் அணிமதுரைபெருகிற்று
வெள்ளம்புரண்டுது வேந்தன்மதுரையிலே
வைகைப்பெருக்கெடுத்து மாவெள்ளமோடுவதை
அதுகண்டுபாண்டியனும் அவசரமாயெழுந்திருந்தான்
துரிதமாயெழுந்திருந்தான் சுந்தரப்பாண்டியனும்

பாண்டியன்வைகை யாற்றை அணைகட்டியது

ஓடுகிறவெள்ளத்தை உள்ளடக்கவேண்டுமென்று
அப்புறம்போகாமல் அணைகட்டவேண்டுமென்று
ஆரடாதூதுவனே அணிமதுரைப்பட்டணத்தில்
வீட்டுக்கோராள்தான் விடுபட்டுவரவேண்டும்
ஆளனுப்பாவிட்டால் ஆக்கினைசெய்வேனென்று
அணைகட்டவரச்சொல்லி அடியடாதமுக்கென்றான்
அப்படியேதானடித்தான் ஆனதொருசாம்புவனும்
அந்தத்தமுக்கடிக்க அணிமதுரையுள்ளவர்கள்
வீட்டுக்கோராள்கள் விடுபட்டுவருகிறார்கள்
அவரவர்கள்தம்முறைக்கு ஆளொருவர்வாறார்கள்
மண்வெட்டிக்கொண்டு வருகிறார்களணைகட்ட
பங்குள்ளவிதமாகப் பாறைகொண்டோடிவந்தார
அவரவர்க்குப்பங்கு அளந்துகொடுத்தார்கள்
அளந்திட்டபங்குகளில் அதிலேகுறைவுபட்டால்
பங்குவிதக்காரனைப் பட்டாவுக்கிறையிடுவேன்
என்றுதிட்டஞ்செய்தான் இராசனந்தபாண்டியனும்
அவரவர்கள்பங்குவீதம் அணைவரும்கட்டும்போது
மதுரையிலேயொருத்தி வாணிச்சியென்பவளாம்
அவளுக்குயாதொரு ஆண்திக்குதானுமில்லை
அவளுக்கொருபங்கு அணைகட்டச்சொன்னார்கள்
பிட்டுசுட்டுவிற்று பிழைக்குமந்தவாணிச்சி
என்னசெய்வேனென்று எண்ணமிட்டாள்வாணிச்சி
ஆளுங்கிடையாது ஆருமற்றப்பாவிநான்

எனக்கிட்டவொருபங்கும் எப்படிக்குச்செய்வேன்யான்
அணைகட்டவந்தனுக்கு ஆளுங்கிடையாது
ஆளில்லையென்றால் அரசனுங்கேட்பானோ
என்றுவிசனமுடனெண்ணியிருக்கையிலே

வாணிச்சிபிட்டுக்குச் சொக்கர் மண்சுமந்தது.

அவளுடையவிசனத்தை யாற்றவேவேண்டுமென்று
அட்டாளுஞ்சொக்க ரையரவரேதுசெய்தார்
அவளுக்குஆளாகி அணைகட்டவேண்டுமென்று
ஒட்டனைப்போலே யுருவெடுத்துசொக்கலிங்கர்
கட்டடனேமண்வெட்டித் தலைமேலேதானெடுத்து
வாணிச்சிஅண்டையிலே வந்துநின்றாரொட்டனுங்
ஒட்டனைக்கண்டாளே உத்தமியாள்வாணிச்சி
ஆரடாஒட்டாநீ அணைகட்டவந்தாயோ
என்பங்குக்காளாகி யெனக்கணைகட்டுவையா
கட்டுவேனென்றார் சுனமதுரையொட்டனவர்
கேட்டதொருகூலி கிருபையுடன்தருவேனென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தவொட்டனேதுசொல்வார்
கூலிக்குபிட்டுசுட்டு கொம்பனையேநீகொடம்மா
உதிர்ந்துவிடும்பிட்டதனை உத்தமியேநீகொடுத்தால்
பிட்டுக்குமண்சுமந்து போடுகிறேனணையாக
அப்படியேயல்லதென்று ளவ்வாணிச்சிக்கிழவி
பிட்டுசுடும்போது பிட்டுமுதிர்ந்ததுகாண்
உதிர்ந்தபிட்டைதானெடுத்து உத்தமியாள்கொடுத்தாளே
ஏந்திமடியில்வைத்து யீஸ்வரனுமொட்டனவர்
வாணிச்சிபங்குக்கு வந்தாரேயணைகட்ட
உதிர்ந்தபிட்டைத்தின்று ஒருகூடைமண்சுமந்து
போடுவாரொருதட்டு பிட்டுஞ்சரியாகும்
மறுபடியும்தான்வருவார் வாணிச்சியண்டையிலே
பிட்டுசுடுவாளாம் பொடியாயுதிர்ந்திடுமாம்
உதிர்ந்தவொருபிட்டுக்கு ஒட்டன்வந்துநிற்பாரும்.
பிட்டெடுத்துத்தான்கொடுப்பாள் பேரானவொட்டருக்கு
ஒருதட்டுமண்ணுக்கு உதிர்ந்தபிட்டுசரியாகும்
வாணிச்சிஅண்டைக்கு வந்துநிற்பாரொட்டனவர்
பிட்டுசுடும்போது பொடிபொடியாயுதிர்ந்திடுமாம்
உதிர்ந்தவொருபிட்டுக்கு ஓடிவந்துநிற்பாரும்
பிட்டுகொடுப்பாளாம் போவாராம்தின்றுகொண்டு
ஒருதட்டுமண்போடுவதி லுதிர்ந்தபிட்டுசரியாகும்
மறுபடியும்வாராராம் வாணிச்சிபிட்டுக்கு

ஒருபிட்டுசுட்டாலும் உதிராதிருப்பதில்லை
சுடப்பட்டபிட்டனைத்துஞ் சொரசொரென்றுதிர்ந்துவிடும்
உதிர்ந்ததொருபிட்டுக்கு ஓடிவந்துநிற்பாரும்
பிட்டுதின்றுகொண்டே போடுவாரொருதட்டு
பிட்டுவிலையாகவில்லை ஒட்டன்வேலைசாயவில்லை
பாதியணையாயிற்று பாதியின்னங்கட்டவில்லை
அவரவர்கள்பங்குக்கு அணைகட்டியாயிற்று
வாணிச்சிபங்குக்கு வரப்புகட்டிதீரவில்லை
பிட்டுகளைதின்கிறதும் போகுறதும்வருவதுமாய்
ஒட்டன்திரிவதிலே உதிர்ந்தபிட்டுஞ்சரியாயிற்று
பொழுதுமறைந்தது பொன்மதுரைபாண்டியனும்
கட்டினஅணைகளை கனமுடனேபார்த்துவந்தான்
வாணிச்சிபங்கு வரப்பின்னங்கட்டவில்லை
ஆருதடாயிந்தபங்கு அணைகட்டிதீரவில்லை
எவனுதடாயிந்தஅணை யென்றானேபாண்டியனும்
அரசனுக்குச்சொல்லுகிறா ரணைகட்டுமன்னவர்கள்
வாணிச்சிபங்குக்கு வந்தானேயொட்டனவன்
அவனுடையபங்கிதுதான் அணைகட்டவில்லையென்றான்
கோபங்கள்கொண்டானே கொற்றவனார்பாண்டியனும்
எங்கேயடாஒட்டனவ னிழுத்துகொண்டுவாருமென்றார்
ஒட்டனைப்பிடித்துவந்தார் உலகாளும்ராசனண்டை
கண்கள்சிவப்பேறிக் கனமதுரைபாண்டியனும்

சொக்கர் பிரம்பாலடிபட்டது.

பிட்டுக்குமண்சுமந்த பித்தரென்றறியாமல்
ஒட்டனென்றெண்ணியல்லோ ஓங்கியடிக்கலுற்றான்
கைப்பிடித்தபிரம்பதனைக் கரகரென்றுதான்சுழட்டி
ஒட்டன்முதுகின்மே லோங்கியடித்தானே
அந்தஅடிபடவே ஐயரந்தசொக்கருக்கு
வருத்தங்கள்கொண்டாரே மதுரைசொக்கநாதருந்தான்
அந்தஅடியுந்தான் அனைவருக்கும்பட்டனவே
அவரவர்கள்தம்முதுகில் அடித்தழும்புநேர்ந்தனவே
திக்குதிசைகளும் தீவாந்தரங்களெல்லாம்
அண்டங்கள்தீவுகளும் ஆகாசமெவ்விடத்தும்
சகலசீவஜெந்துக்கும் தழும்புமிகவுண்டாச்சு
பாண்டியன்முதுகின்மேற் பாரத்தழும்பாயிற்று
எல்லவரும்பயந்தா ரிந்தவடியாலே
பாண்டியனுமப்போது பயந்துநடுநடுங்கி
எங்கேயந்தவொட்டனென்று யேறெடுத்துப்பார்க்கும்போது
மாயமாய்தான்மறைந்தார் வந்ததோரொட்டனவர்

எங்கெங்குந்தேடினான் இனிமதுரைபாண்டியனும்
காலுதறினாலே கனத்தயிடிவிழுந்தான்
வந்தவரொட்டனல்ல மாயாண்டிசொக்கரவர்
ஆண்டவராகவேனும் ஆளடிமைசெய்யவந்தார்
தெரியாமற்போச்சுதென்று சிந்தைமிகவாடி
தீவினைக்காளானேனே தெய்வமென்றம்பாராமல்
வல்வினைக்காளரானேன் மகாதேவனென்றறியாமல்
இந்தவிதிப்பயனை எப்போதொலைத்திடுவோம்
வந்ததுநமக்குமல்லோ மதிமோசமென்றுசொல்லி
எந்தவிதத்திலேயும் ஈடேறப்போவதில்லை
தெரிந்ததுநமக்கென்று தென்மதுரைபாண்டியனும்
மெத்தலிசனமாய் விடுதிக்குவந்துவிட்டான்
அழகியசொக்கரவர் ஆண்டவனாரப்போது
ஒட்டனென்றவுருவை உத்தமனார்தான்மறைத்து
ஆலயத்தில்வந்தாரோ அட்டாளுஞ்சொக்கலிங்கர்
வருத்தத்துடனேயவர் வந்துநின்றாராலயத்தில்
அப்போதுமீனாட்சி யண்டையிலேயோடிவந்து
ஏதுகாண்சுவாமிநீரு மிப்படிக்குவந்ததென்ன
அலையகுலையவந்தீர் அக்துறையைச்சொல்லுமென்றாள்
கேளுமென்னுயகியே கிளிமொழியேமீனாட்சி
வாணிச்சிக்காகவல்லோ மண்சுமக்கப்போயிருந்தேன்
பிட்டுக்குமண்சுமக்கப் பிரம்படிபட்டுவந்தேன்
அடித்தான்பிரம்பாலென் னங்கந்தழும்பேற
கொடுத்தான்முதுகின்மேற் கொடும்பாவிபாண்டியனும்
சகாயஞ்செய்யப்போனேன் அபாயம்வந்துநேர்ந்ததுகாண்
அபாயமென்னைச்செய்தவனை ஆதரிக்கப்போறதில்லை
என்றுரைக்கசொக்க ரெடுத்துரைப்பாள்மீனாட்சி
அறியாமற்செய்தபிழை பெரியோர்மனம்பொறுப்பார்
மறுரூபங்கொண்டல்லவோ மண்சுமக்கப்போனதினால்
ஆளடிமையென்றுசொல்லி அடித்தான்பிரம்பாலே
ஐயனென்றுதானறிந்தா லடிபணிந்துதொழுதிடுவான்
தெரியாதவன்செய்தால் சிற்றத்தில்வையாமல்
ஆதரிக்கவேண்டுமென்றாள் அங்கயற்கண்மீனாட்சி
அவ்வசனங்கேட்டு அழகுசொக்கரேதுசொல்வார்
என்னையடித்தவடி யெல்லோர்க்கும்பட்டதுகாண்
உலகத்துகளெல்லாம் உறைக்கதேபிறம்படிதான்
சிந்தாண்டிமுனிவர்கள் தேவருக்கும்பட்டதுவே
வானவரிஷிகளுக்கும் மாயனுக்கும்பட்டதுவே
சப்தரிஷிகளுடன் தபோதனர்க்கும்பட்டதுவே
சகலசீவசெந்துக்குந் தழும்புவந்துநேர்ந்ததுவே

கன்னியர்கள்கெர்ப்பங் கருவுக்கும்பட்டதுவே
இந்தப்பழிபாவம் எப்படிதொலையுமடி
இந்தப்பழிக்குப்பெண்ணே மைந்தன்வரம்நான்கொடுக்கேன்
கருவுதரிக்கவேதான் கன்னியரோநான்கொடுக்கேன்
அந்தப்பழிபாவம் அத்தோடேதொலையுமடி
என்றுமிவருரைக்க வந்திழையும்பேசாமல்
மௌனமாய்த்தானிருந்தாள் மதுரைமீனாட்சியரும்
இப்படிச்சிலகாலம் இருக்குமந்தவேளையிலே
பாண்டியனுடு பரிசெனங்களெல்லவரும்
அரசனுநாடு அருமைமழையில்லாமல்
தத்தளித்துபோகிறதே தனிமதுரைபூமியெல்லாம்
அரனைத்தானடிக்க அக்கொலைபாதகனும்
கம்முதேநாட்டிற் கதருதேபூமியெல்லாம்
மைந்தருமில்லை மகுடமுடி அரசனுக்கு
பிள்ளைகளுமில்லை பேரானமன்னனுக்கு
அப்படியாய்துன்பம் அரசனும்பட்டிருந்தான்
ஆரையும்வணங்காதே அந்தசித்ராங்கதனும்
சிறுத்தேவனென்றுசொல்லி பெருந்தவரைபோயடுக்கான்
தெய்வமேகதியென்று கேசத்தையாண்டிருந்தான்
சொக்கரேகதியென்று தோத்திரங்கள்செய்திருந்தான்
பனிரண்டுதன்வருடம் பாரில்மழையில்லாமல்
துன்பமுடனேயல்லோ குறைத்தனமும்பண்ணிவர

சொக்கரும் மீனாட்சியுங் கானகமடைந்தது.

மதுரையிலேவாழும் மகாதேவர்சொக்கலிங்கம்
அங்கயற்கண்மீனாட்சி அம்மனும்சொக்கருமாய்
இருவருமப்போது ஏகாந்தவேளையிலே
தேவியரைப்பார்த்து சுவாமியவரேதுசொல்வார்
பெண்ணேபெண்ணேமினாட்சி பொற்கொடியே ஆலயத்தில்
தணலாயெரிகிறது தனிக்காற்றடியாமல்
ஒடுக்கங்களாகுது உன்மதுரைபட்டணத்தில்
காற்றுகுளிர்ந்தடிக்கக் கனிவிருட்சங்கிடையாது
ஒடுக்கங்கள்தீரவேண்டி உலாவிநாம்வந்திடலாம்
காத்துவாடைக்குநாம் கானகத்தில்போய்வரலாம்
மதுரையைச்சுற்றி வருவோம்நாம்பெண்மயிலே
வாருமென்றுசொக்கர் மயிலணையைத்தானழைக்க
அப்படியேநல்லதென்று அங்கயற்கண்மினாட்சி
சம்மதிப்பட்டு சதியும்புருடனுமாய்
இடபத்தின்மேலேறி ஈஸ்பரனும்ஈஸ்பரியும்
எருதின்மேலேறி யிருவரும்வெளியானார்
ஆலயத்தைவிட்டு ஐபரும்வெளியானார்
மதுரையைவிட்டு மகாதேவர்வெளியானார்.

மதுரையைச்சுற்றி வந்தார்களிருவருமாய்
பட்டணங்கள்சுற்றி பார்த்துவருகையிலே
அழகுமறைந்தது அழகானதென்மதுரை
அண்டவொருநிழலும் ஆதரிக்கக்கிடையாது
தோட்டங்கிடையாது துறவுகள்துந்திருக்கும்
நிற்கநிழலுமில்லை நிலத்திற்றரிப்போமென்றால்
கானகங்களத்தனையும் கட்டையாயுலர்ந்திருக்கும்
செடிகள்கிடையாது செட்டுகள்கிடையாது
தழைகள்கிடையாது சற்றேறயிருப்போமென்றால்
வெய்யலுறைக்கிறது வெங்கானல்வீசிடுமாம்
கானலுரைக்கின்றது கடுங்கானல்வீசிடுமாம்
வேர்வைபொழிகிறது விமலருக்கும்பார்வதிக்கும்
அண்டமுடிகூடவில்லை அக்கினிவாடையது
நடுக்காட்டில்வந்தார்கள் நாதருந்தேவியுமாய்
அந்தநடுக்காட்டில் அலைந்துவருகையிலே
அங்கேயொருவில்வமரம் அடர்ந்துதழைத்திருக்கும்
பசுமையாகத்தழைத்துப் படர்ந்துநெருங்கிருக்கும்
சந்துகள்தெரியாமல் தழைத்திருக்குபவில்வமரம
என்னேரமுஞ்சனங்கள் இலையிற்படர்ந்திருக்கும்
காய்த்துப்பழுத்து கனிகளுதிர்ந்திருக்கும்
பூத்துப்பழுத்து புட்பங்கள்பரிமளிக்கும்
தென்னலதுவீசும் தேசங்குளிர்ந்திருக்கும்
அந்தமரமொன்று அவ்விடத்திற்றழைத்திருக்கும்
அவ்விடத்தில்வந்தார்கள் அரனுமுமையவளும்
அந்தவதிசயத்தை அன்புடனேகண்டுவிட்டார்
சோபந்தெளிந்து தேகமுந்தான்குளிர்ந்து
இந்தநடுகாட்டி லிதுதழைத்தவதிசயத்தை
கண்டறிவோமென்று கடுகியேகீழிறங்கி
எருதைநிழலில்விட்டு இறங்கினார்மாத்தருகில்
ஆயாசந்தீர்வதற்கு அவ்விடத்திலுட்கார்ந்தார்
சவுக்கியமானார்கள் தங்கள்சரீரத்தில்
இருவருமுட்கார்ந்து ஏகாந்தமாயிருக்க
பட்டப்பகலிலே பாங்கானவேளையிலே
உச்சியிற்சூரியன் உருமத்தின்வேளையிலே

நீர்க்காக்கையைக்கண்டது.

அங்கேயொருநீர்க்காகம் அலைகடலில்போய்முழுகி
கடலில்முழுகியே கடல்சலந்தைந்தான்வாரி

செப்பட்டையில்நிறைய சலங்கொண்டுவருகிறதாம்
கடல்நீரைக்கையாலே காகமதுகொண்டுவந்து
வில்வமரத்தின்மேல் மேலாகத்தான்பறந்து
மேலிருந்துவீசிற்றும் மேன்மையுள்ளகாகமது
மழைமாரிபோலே வருஷிக்குங்காகமது
வருஷித்தசலங்கள் மகாதேவர்மேற்படவே
குளிர்ந்ததுதிரேகங் கொடிமதுரைசொக்கருக்கு
அங்கயற்கண்ணம்மனுக்கு அங்கங்குளிர்ந்ததுகாண்
எதிர்ந்தசலமென்று ஏறெடுத்துப்பார்த்தார்கள்
சங்கரரும்சங்கரியுந் தலையெடுத்துப்பார்க்கையிலே
நீர்க்காகம்சலம்பொழிந்து நின்றுபறந்ததுவே
அந்தநல்லகாகத்தை ஆண்டவனார்தான்பார்த்து
பார்த்தாயோபெண்ணேநீ பட்சியுடதன்னறிவு
கண்டாயோபெண்ணேநீ காகத்தின்தன்னறிவு
இந்தமரத்துக்கு இக்காகம்நீர்தெளிக்க
ஏதனாற்றெளிக்கிறதோ இதையறியவேண்டுமென்று
காகத்தைத்தான்கேட்டு காரியமறிவோமென்றார்
அப்படியேயழையுங்கள் அறிவுள்ளகாகமதை
என்றுரைமையுரைக்க ஈஸ்வரனுமப்போது
ஆகாயத்திற்றான்பார்த்து அந்தநீர்க்காகமதை
கைகாட்டிதானழைத்தார் கைலாசநாதருந்தான்
கண்டதுகாகம் கைலாசநாதரென்றும்
அஞ்சிப்பயந்து ஆகாயம்விட்டிறங்கி
தாய்தகப்பன்வந்தாரோ தற்காக்கநம்மையென்று
சீக்கிரமாய்த்தானிறங்கி திட்டெனவேயோடிவந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டு
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட
தெண்டனிட்டபட்சியைச் சிவனாரும்தான்வாழ்த்தி
அடிபணிந்தகாகமதை அரனாருந்தான்வாழ்த்தி
இந்தமரத்துக்கு இறைப்பதென்னநீசலத்தை
இந்தமரத்தினாலே இத்தனைவருத்தமென்ன
வருத்தத்துடனேநீ வந்துநீர்தெளிப்பதென்ன
சொல்லுமென்றுகேட்டார்கள் சொக்கரும்அம்மனுமாய்
கண்டதுகாகம் கனக்கமிகப்பயந்து
சொல்லுறதுகாகம் சொக்கரவர்கேள்விபட
தங்களுக்கேயுகந்த தனித்தமரமென்றுசொல்லி
விமலருக்குகந்த வில்வமரமென்றுசொல்லி
அதனால்கடல்நீறை அள்ளிவந்துயான்தெளித்தேன்
நாடோறும்யான்தெளித்தேன் நாதருக்கேற்றதென்று
இதுதானேயெந்தனுக்கு ஈஸ்வரனார்கட்டளைதான்

அவ்வார்த்தைதான்கேட்டு அரனாரும்அம்மனுந்தான்
பூரித்திருதோளும் புத்தியுள்ளகாகமென்று
ஆனந்தமாய்ப்பூரித்து அறிவுள்ளகாகமென்று
கட்டித்தழுவி காகத்தைதானோக்கி
எந்தனுக்கேற்றதொரு இந்தமரமென்றறிந்து
களையாகவந்தவற்கு களையாற்றிவைத்தாயே
இந்தச்சகாயமதை எங்களுக்குச்செய்தாயே

சொக்கர் நீர்க்காக்கைகுவரங்கொடுத்தது

உனக்கொருசகாயம் உதவிசெய்வேனென்றுசொல்லி
என்னவரம்வேண்டும் இன்பமுடனுந்தனுக்கு
கேட்டவரம்தருவேனென்றார் கிருபைமிகக்கூர்ந்து
அப்போதுகாகந்தான் அரனாரைச்சேவித்து
சொல்கிறதுகாகனு சொக்கருக்குதெண்டனிட்டு
கைலாசநாதரே க்கண்மூன்றுடையவரே
என்மனதிலிருக்கின்ற எண்ணத்தைச்சொல்லுகிறேன்
கன்னிப்பெண்ணாகி கனதுரைப்பாண்டியனை
சேரவேண்டுமென்று சிந்தையில்நினைத்திருந்து
என்னுடையபாலனுக்கு இசைந்தபட்டந்தரவேணும்
அந்தவரமெனக்கு அருள்புரியவேண்டுமப்பா
காகமதுசொல்வதைக் கண்டாரேசொக்கலிங்கம்
ஆனாலொருவார்த்தை அன்பானகாகமேகேள்
கன்னிப்பெண்ணாகி கனமதுரைநீபோனால்
மன்னனைச்சேர்ந்தாலும் மலடியாய்போய்விடுவாய்
உன்னைப்பெண்ணாக்கி ஒருமாதங்கெர்ப்பமதாய்
அனுப்பிவைப்பேனுன்னை அரசன்மதுரையிலே
ஆரென்றுகேட்பான் அணிமதுரைபாண்டியனும்
ஆருமற்றபாவிநான் அண்டவந்தேனும்மையென்று
சொல்வாயேயாமாகில் தோழியாய்வைத்துகொள்வான்
தாதியாயிருந்தாயானால் தையலேயுன்றனைத்தான்
வசந்தனுளானால்மருவமனங்கொள்ளுவான
ஆருமறியாமல் அணைவானேயுந்தனைத்தான்
அணைந்தாசைதீர்ந்திடுவாய் அரிவையிளமாதே
உன்வயிற்றிலேபிறக்கும் உறுதியுள்ளபாலனுக்கும்
பட்டந்தரிப்பான் பட்டணத்திலொருபங்கு
அந்தவரமளித்தேன் அப்படியேநடவுமென்றார்
சம்மதித்துகாகனு சந்தோஷங்கொண்டதுவே
காகத்தைப்பெண்ணாக்கி கருப்பமுமுண்டாக்கி
நீர்காக்கையென்று நேரிழைக்குபேர்கொடுத்து
நடவுமென்றுபேர்கொடுத்து நாதரவர்போய்விட்டார்

நீர்க்காக்கை பெண்ணாகிப் பாண்டியனை யடுத்தது.

அப்போதுநீர்க்காகை யரிவையந்தபெண்ணணங்கு
மதுரைநகர்தேடி வந்தாளேபெண்மயிலாள்
பாண்டியனிடத்தில் பக்கத்தில்வந்துநின்றாள்
அப்போதுபாண்டியன் அரிவையரைத்தானபார்த்து
சுந்தரமுமவடிவுமுள்ள தோகையரைத்தானபார்த்து
ஆரடிபெண்ணேநீ யறியவுரையுமென்றார்
அவ்வசனங்கேட்டு ஆரணங்கேதுசொல்வாள்
ஆருமில்லாபரதேசி அண்டிவந்தேனும்மையென்றாள்
ஒருமாதங்கொப்பம் உத்தமியாளெந்தனுக்கு
ஆருமற்றபெந்தனைநீர் ஆதரிப்பாயென்றுரைத்தாள்
அவ்வசனங்கேட்டு பந்தமுள்ளபாண்டியனும்
கெர்ப்பமானமங்கை கிளிமொழியாளாகையினால்
காப்பாற்றவேண்டுமென்றால் கன்னியரேயஞ்சாதே
அப்படியேசெய்வேனென்று அரிவையரைகூட்டிப்போய்
தன்னுடையதேவியண்டை தாதியாய்வைத்துவிட்டான்
சகலவிசாரணைக்குந் தாதியாய்த்தானிருந்தாள்
அழகுந்திருமேனி அலங்காரமாயிருப்பாள்
புத்தியுள்ளகுணவதியாய் பூஷணலங்கிருதையாய்
பாண்டியன்தேவிக்கு பட்சமாய்த்தானிருந்தாள்
சுந்தரமும்எவ்வனமும் சொல்லத்தொலையாது
வாலிபமாய்ப்பெண்மயிலும் மன்னவனார்தேவியண்டை
அதிகாரமும்பெற்று அவளிடத்திலிருக்கையிலே
வசந்தமரனகாலம் வந்துமிகநேரிடவே
மன்மதவேதனையால் மன்னனந்தபாண்டியனும்
தன்னுடையதேவியாந்தையலாள்மனைக்கு
மாளிகைதேடிவரும் போதந்தவேளையிலே
வாசற்படியிலே மயில்போலதாதியவள்
பொற்பதுமைபோலபொன்னுபரணமின்ன
நின்றாளேநீர்காக்கைநேரிழையைத்தான்பார்த்து
அதிகமயல்கொண்டானே அந்தமுள்ளசுந்தரிமேல்
அவளுமிவர்பேரி லாசைகொண்டுநின்றாளே
ஒருவர்க்கொருவர் உடன்பட்டிருவருமாய்
ஆசையுடன்சேர்வதற்கு அரிவையரைத்தானழைத்தார்
அதற்கந்தநீர்க்காக்கைஅரிவையருஞ்சம்மதித்து
என்வயிற்றிலேபிறக்கும்இனிதானமைந்தனுக்கு
பட்டங்கொடுப்பீரோ பாண்டியரேயென்னாளும்
நாலிவொருபங்குநடத்துவேன்மங்கையரே
அப்படிக்குச்சம்மதித்தாள் அரிவையிளமாது
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
கூடியணைந்தான்கோலவிழிமாதரசை

ஆசைக்கலிதீர்த்தாளே அரன்கொடுத்தவரத்தினாலே
சுகத்துடனேசேர்ந்து துரிதமுடன்பாண்டியனும்
தேவியண்டைபாண்டியனுஞ் சீக்கிரமாய்நடந்திட்டான்
இப்படிசிலகாலம் யிருக்குமந்தநாளையிலே
அப்போதுநீர்காக்கை அரிவையிளம்பிறையும்
மாதமும்பத்தாச்சு வருந்திமிகத்தவித்து

நீர்காக்கை நின்முகனைப்பெற்றது

பிள்ளையைப்பெற்றாள் பெருள்ளமதுரையிலே
மைந்தனைப்பெற்றாள் மாதந்தநீர்காக்கை
தாதிவயிற்றிற் சந்ததிபிறந்ததென்று
சந்தோஷங்கொண்டு சர்க்கரைவழங்குகிறார்
நீர்காக்கைபெற்றெடுத்த நேரானபாலனுக்கு
நின்முகனென்று நேர்த்தியாய்பேருமிட்டார்
பிள்ளையில்லாமாளிகையிற் பிள்ளைபிறந்ததென்று
பாண்டியன்தேவி பட்சமாய்த்தான்வளர்த்தாள்
பிள்ளையும்வளர்ந்தது பேரானமாளிகையில்
தாதிபிள்ளையென்று சதங்கைகொலுசுமிட்டு
காப்புகடகமிட்டு கண்டசரமணிந்து
ஆடைகளிட்டு ஆபரணந்தான்பூட்டி
வயதுமைந்தாக வளர்ந்துவருநாளையிலே
ஐந்துவயதாகி அமர்த்தினார்பள்ளியிலே
பன்னுதமிழ்வித்தை படிக்கவைத்தார்பள்ளியிலே
அம்புபிடிக்கரிந்தாள் ஆயுதம்பிடிக்கரிந்தாள்
சகலமுங்கற்று சாமர்த்தியமானபின்பு
அவனுக்குவேறே அரண்மனையமர்த்திவைத்தார்
வெள்ளாட்டிபெற்றெடுத்த வீரியன்நின்முகனும்
அப்படியாயிருக்க ஆனதொருபாண்டியனும்
தமக்குப்பிள்ளையில்லையென்று ராசனந்தபாண்டியனும்
சிங்காதனத்திற் செங்கோலுந்தான்பிடிக்க
பட்டணத்தையாள்வதற்கு பாலகனில்லையென்று
விசனத்தைக்கொண்டானும் வேந்தனந்தபாண்டியனும்
சித்ராங்கதனுடனே சேர்ந்திருந்தபாண்டியர்கள்
ஆறாயிரம்பேர்கள் அணிதிரளாம்பாண்டியர்கள்
பிள்ளைகளில்லாமற் பெருமலடியாய்ப்போனாமே
ஆறாயிரவர்க ளனைவரும்மலடானோம்
அவர்களுடன்கூட ஆராரார்கள்தான்மலடு
பாண்டியர்களேழிவரும் பட்டத்தானைதான்மலடு

தவிர்த்தார்முகம்பாரார் தாகங்கொடுத்தறியார்
ஆண்டிபரதேசியைப்போல் அங்கொருநாள்வடிவெடுத்தேன்
பாண்டியராசாக்கள் பருமுத்தளக்கையிலே
சிவதருமமென்றுசொல்லி சேர்ந்துவந்துபிச்சையென்றேன்
பதரானமுத்தெடுத்துப் பாவியெனக்கிட்டார்கள்
சிப்பிமுத்துபோட்டார்கள் தோஷியந்தபாண்டியர்கள்
பதரிட்டபாவிகட்குப் பாலன்கொடுப்பதில்லை
பிட்டுக்குமண்சுமந்தேன் பிரம்படியும்பட்டுவந்தேன்
என்னதவம்பண்ணிலும் ஏதாலும்பிள்ளையில்லை
ஏழுபிறப்பிலேயு மிப்பிறப்புபிள்ளையில்லை
என்றதுதான்கேட்டு ஈஸ்வரியாளேதுசொல்வாள்
எப்பாவஞ்செய்தாலு மீஸ்பரனேமனமிரங்கி
புத்திரனளிக்கவேணும் புகழானபாண்டியற்கு

பாண்டியற்குஈஸ்வரி புத்திரிவரங்கொடுத்தது,

உன்சித்தமிரங்காமற் போனாலுமீஸ்பரனே
ஒருபெண்ணாகிலும்மளிப்பேன் புகழானபாண்டியற்கு
அங்கயற்கண்ணம்மை யவளதிகமனமகிழ்ந்து
தோள்சதையைகிள்ளியம்மை தூரவெறிந்துவிட்டாள்
அல்லியுங்கொடியுமா யடர்ந்ததொருபொய்கையிலே
செந்தாமரைவெண்டாமரை சேர்ந்ததொருபொய்கையிலே
வானவருமிந்திரரும் வந்திருக்கும்பொய்கையிலே
சந்திரருஞ்சூரியரும் சந்திபண்ணும்பொய்கையிலே
தாமரைப்பொய்கையிலே தண்ணீர்தடாகந்தன்னில்
அல்லியிலைமேலே வந்துவிழுந்ததுகாண்
கையாகிக்காலாகிக் கண்ணுமுகமுருவாகி
குவ்வாகுவ்வாவென்றுசொல்லிக் குழந்தையழுகிறது
சந்திரனைப்போலத் ததும்புதுகாண்பொய்கையிலே
சூரியனைப்போலே துலங்குதிந்தக்குழந்தை
மேகத்துமின்னலைப்போல் மின்னுகிறதக்குழந்தை
குன்றுமேற்சந்திரனுங் குதித்தெழுந்தபாவனைப்போல்
இருண்டிருந்தசோலையிலே திரண்டெழுந்தசூரியன்போல்
இப்படியாகவேதா னிருக்கிறவேளையிலே
அங்கயற்கண்ணம்மை யவளதிகமனமகிழ்ந்து
குழந்தைதனக்கேற்றபடி குலாவிவாங்கொடுத்தாள்
ஏழாம்பிராயந்தனில் இளவரசுபட்டமென்று
பன்னிரண்டாம்பிராயத்திற் பார்த்தனுக்குமாலையிட்டு
எல்லையரசாள இசைந்தவரங்கொடுத்தாள்
அம்மன்கழுத்தினி லணிந்தபதக்கமுடன்

சுவாமிகழுத்திற் றரித்தபதக்கமும்
வாங்கித்தரித்தாளே வரிசையுள்ளகுழந்தைக்கு
அல்லியென்றுபேருமிட்டு அங்கயற்கண்ணம்மாள்
பாண்டியரைத்தானழைத்து பார்வதியேதுசொல்வாள்
ஆறுயிரவரே அணிதிரளாம்பாண்டியரே
அல்லியிலைமேலே அழகுமைந்தனிருக்கிறது
ஆணுமதுபெண்ணுமது ஆறுயிரவருக்கும்
எடுத்துப்போய்வாருமென்று ஈஸ்வரியுமதானுரைத்தாள்
அப்போதுபாண்டியரும் அரனுரைத்தான்வணங்கி
தவசுநிலைகலைந்து தானெழுந்தார்பாண்டியரும்
அல்லியிலைமேலே அமைந்திருந்தகுழந்தையைத்தான்
தாங்கள்பெற்றதுபோலெ தழுவியெடுத்தார்கள்
வாறியெடுத்தார்கள் மார்போடணைத்தார்கள்
மதுரைநகர்நோக்கி வருகிறார்பாண்டியர்கள்
ஆளோடவிட்டார்கள் அரிக்கையிட்டார்பாண்டியர்கள்
மைந்தனைப்பேருபெற்று வருகிறார்பாண்டியர்கள்
புத்திரனைப்பேருபெற்று புண்ணியர்கள்வாரார்கள்
நின்முகராசனுக்கு நீதியுடன்சொல்லுமென்று
தூதனுடன்சொல்லியே சேதிவிட்டார்பாண்டியர்கள்
ஒற்றுளொருவனுந்தா னுத்தமர்க்கேசேதிசொன்னான்
கேட்டந்தநின்முகனும் கோவமதிகமாகி
ஆரடாதூதுவரே அலங்காரமல்லர்களே
பாண்டியராசனுடன் பாங்காகவார்த்தைசொல்லும்
நின்முகராசனிவ னிலைகொண்டானிராச்சியத்தை
நீங்கள்தரித்துவைத்த நிண்ணயப்பட்டமது
பட்டங்குறையவில்லை பாருலகம்வருவதில்லை
மதுரைக்குவந்தாலே வல்லுயிரைவாங்கிடுவான்

நின்முகராசனுக்குப் பாண்டியர்கள் பகுதிகட்ட தீர்மானித்தது.

நீங்க-ளெங்கேயிருந்தாலும் எங்களுக்குப்பகுதிகட்டி.
வருஷத்துக்கொருதரம் வரவனுப்பும்பாற்குடங்கள்
ஆறுயிரம்பாற்குடங்க ளனுப்பவேண்டுமென்னகர்க்கு
அனுப்பாமற்போனக்கா லாக்கினைகள்செய்திடுவேன
நின்முகராசன் நிச்சயமாய்ச்சொன்னனென்று
பாண்டியராசருக்குப் பாங்குடனேசொல்லுமென்றான்
ஒற்றுளொருவனுமே வோடினான்ராசனண்டை
ஆறுயிரம்பாண்டியர்களையருக்கேதெண்டனிட்டு
நின்முகன்சொன்னதொரு னிச்சேதிசொல்லலுற்றான்
உங்களால்வந்தவினைக் காரென்னசொல்வார்கள்
அவனைவெறுக்கவென்று லகிகமானபாவம்வரும்
வடமதுரைபட்டணத்தில் வந்துகுடித்தனமாய்

உன்னைப்பெறவேண்டி ஊரிழந்தோம்பதியிழந்தோம்
சீமையிழந்தோமம்மாள் துரைத்தனமுந்தானிழந்தோம்
எழுவருஷமம்மா யிப்படியனுப்புகிறோம்
இந்தவருஷமுமே இங்குவந்தார்மல்லரவர்
பாங்குடமும்நிரப்பிவைத்தோம் பாலமுதஞ்செய்கிறோம்யாம்
நீ பாலமிர்தமுண்டல்லவோ பள்ளிக்கூடம்போமென்றார்

அல்லியம்மாள் மல்லர்களை அவமானஞ்செய்தனுப்பியது,

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமிககோபமதாய்
எட்டிப்பழம்போலே இருகண்சிவந்தாளே
கோவைப்பழம்போலே கூரியகண்சிவந்து
வெள்ளாட்டிபையலுக்கு வீரியங்களுண்டாமோ
எருதுபசுவாமோ இளைத்தபசுவுமுண்டோ
உயரப்பறந்தாலும் ஊர்க்குருவிபருந்தாமோதான்
கொசுவும்பருந்தாமோ கூடப்பறக்குமோதான்
விரலையுரலானால் உரலென்னகொள்ளுமையா
வெள்ளாட்டிப்பையலைத்தான் வெட்டித்தலைதள்ளாமல்
பாண்டியராசர்களை பாராளவைத்தீர்களே
உங்களைப்போல்ராசாக்கள் உலகத்தில்நானறியேன்
என்றுமிகக்கோபமுட னெழுந்தாளேயல்லியம்மாள்
எழுந்திருந்து அல்லியம்மாள் இயலானபாற்குடத்தை
இடதுகால்தன்னாலே எட்டியுதைத்தாளே
ஆறுயிரம்பாற்குடத்தை அசங்கொண்டிரடிவிட்டாள்
ஆரடாமல்லர்களை அழையும்பிடாரனைத்தான்
ஓடியழையுமென்றாள் ஒருநொடியில்வாருங்கள்
அந்நேரந்தமல்லர் அதிதுரிதமாயோடி
பாம்புப்பிடாரனைத்தான் பரிந்தேயழைத்துவந்தார்
வாழ்வரசியல்லியற்கு வந்துதெண்டம்பண்ணினார்கள்
எம்மையழைத்தவகை ஏதுகருமமென்றார்
காட்டுக்குப்போய்நீங்கள் கன்னிபுத்துமருந்தைவைத்து
கருநாகஞ்செந்நாகம் காலக்கோட்டிவிஷங்களுடன்
மண்ணுளிதாசிரியு மலையேறிவிரியனுந்தான்
ஊதுசுருட்டிபாம்பு இருதலைநாகங்களும்
நீக்கத்துகுட்டிகளும் நீதியுள்ளபாம்புகளும்
வண்ணவண்ணப்பாம்புகளும் வகைவகையாய்த்தான்பிடித்து
ஓட்டம்நடையுமாக ஒருநொடியில்வாருமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தப்பிடாரரெல்லாம்
ஓட்டம்நடையுமாக ஓடினார்கானகத்தில்
காட்டுக்குப்போனார்கள் கன்னிபுத்துமருந்துவைத்தார்

வல்லாவண்ணப்பாம்புகளை வரிசையுடன்தான்பிடித்தார்
பெட்டிகள்நிறம்பவே பிடித்தார்கள்பிடாரரெல்லாம்
காடுசெடிதாண்டி கடுகியேஓடிவந்தார்
அல்லியரசாணி ஆரணங்குமுன்புவந்தார்
பெட்டியிற்பாம்பையெல்லாம்பொற்கொடியாள்முன்னேவைத்தார்
அல்லிப்பெருமாளு மாரணங்கே துரைப்பாள்
பாற்குடந்தன்னிலேதான் பாம்பையடையுமென்றாள்
பஞ்சவர்ணச்சீலையினாற் பானைகள்வாய்கட்டுமென்றாள்
ஆறாயிரங்குடத்தி லடையுமென்றாள்பாம்பையெல்லாம்
பஞ்சவர்ணச்சீலைகட்டிப் பார்த்திருந்துமுன்னேவைத்தார்
அல்லிப்பெருமாளு மாரணங்கே துரைப்பாள்
அம்பட்டரைத்தேடி அழையுமென்றாளல்லியரும்
ஓடியழைத்தல்லவோ ஒட்டம்நடையாகவந்தார்
ஆறாயிரந்தூதுவரை அழகுமொட்டைசெய்யுமென்றாள்
தாடிசிரைத்தவரைத் தலைபோடிபண்ணுமென்றாள்
மீசைசிறையுமென்றாள் மூன்போடிபண்ணுமென்றாள்
கரும்புள்ளியுஞ்செம்புள்ளியுங் கலந்தழகாய்க்குத்துமென்றாள்
அல்லியம்மாள்சொற்படிக்கே அழகுமொட்டையிட்டார்கள்
மீசைதாடிதான்சிறைத்து முகமனைத்தும்பொட்டுமிட்டார்
ஆரடாதூதுவரே அன்பானவார்த்தைகேளும்
நின்முகராசனுக்கு நீங்கள்போய்சொல்லுங்கடா
பாண்டியராசனுக்குப் பட்சமுள்ளஅல்லியம்மாள்
இந்தவரிசைகளை யனுப்பினளென்றுசொல்லும்
உன் தொண்டைக்கிதூண்டுமுள்ளு தொப்புளுக்குவீராணி
அவன் மண்டைக்குக்கோடாலி மார்புக்குசெப்புலக்கை
கழுத்தடியிற்கத்தியவள் காமாட்சியம்மையென்று
ஊட்டியறுக்கவந்த உண்மைப்பரஞ்சோதி
தலைமாட்டிற்பாம்பலவோ தாயாரந்தஅல்லியென்று
சொல்லுங்கள்தூதுவரே துரைராசநின்முகற்கு
வெள்ளாட்டியையனுக்கு விந்தையைசொல்லுமென்றாள்
ஆறாயிரந்தூதுவர்க ளக்குடமெடுத்துக்கொண்டார்
வருகிறார்மதுரையது வடமதுரைதான்விட்டு
தேனமதுரையது தெனமதுரைவருகிறார்கள்
தெத்துத்தெருகடந்து தேரோடும்வீதிவிட்டு
மகாராசன்கோலுதனிலே வந்தார்கள்தூதுவர்கள்
அப்போதுநின்முகனும் அப்பிங்கனமாடுகைக்கு
சனிபெண்ணெய்மண்டபத்தில் தானமர்ந்தான்வாழ்மார்பன்
எண்ணெயிட்டுக்கொண்டே இருக்கிறவேளைதனில்
பாற்குடத்தைமுன்னாலே பார்மீதிலிறக்கிவைத்தார்
வரிசைவரிசையாக வைத்தார்கள்பாற்குடத்தை

வந்திருந்த தூதரெல்லாம் வரிசையாய்நின்றார்கள்
கண்ணைத்திறந்தல்லவோ கட்டழகன்பார்த்தானே
இதுவென்னவதிசயங்கள் ஆரசெய்தவண்மையிது
எட்டிப்பழம்போலே இருவிழிகண்சிவந்தாள்
கோவைப்பழம்போலே கூறுவிழிகண்சிவந்தாள்
உருக்கியசெம்பொனது உதிரம்போல்கண்சிவந்தாள்
இப்படிச்செய்தவனை யெனக்கறியச்சொல்லுமென்றான்
பால்வார்த்தனுப்பாமே பாம்பையடைத்ததென்ன
ஆடாதூதுவரே அறியவுரையுமென்றான்

நின்முகராசனுக்குத் தூதர்கள்சேதிசொல்லுதல்.

அவ்வார்த்தைகேட்டவர்க ளஞ்சியுரைக்கலுற்றார்
ஐயாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
ஆறாயிரம்பாண்டியற்கே அரியவொருமகளாம்
அல்லியிலைமேலே ஆரணங்குபெண்பிறந்தாள்
ஏழுபிராயமுண்டு இளங்கொடியாள்கன்னிகைக்கு
பாண்டியராசரைநாம் பகுதிபோய்கேட்டவுடன்
பகுதியுங்கட்டினார்கள் பாற்குடங்கள்தானிரைத்தார்
எங்களுக்குச்சாப்பாடு இன்பமுடனேசமைத்தார்
பள்ளிகூடமிருந்து பாலமுதமுண்ணவந்தாள்
எங்களைக்கண்டவுட னேனென்றுதான்கேட்க
பாற்குடங்களையா பாண்டியரோசொல்லுமென்றாள்
அவ்வளவிற்பாண்டியர்க ளஞ்சிப்பயந்துரைப்பார்
உமக்குப்பட்டந்தரித்துப் பாரதவம்போனதுவும்
அல்லியரைப்பெற்றதொரு அதிசயத்தைசொன்னார்கள்
அதுகேட்டுஅல்லியவள் அதிகமானகோபமதாய்
வெள்ளாட்டிபையலுக்கு வீரியங்களுண்டாமோ
ஆறாயிரங்குடத்தை அரைநொடியிலிரடிவிட்டாள்
பாம்பைபிடித்துவந்து பாற்குடத்திலேயடைத்தாள்
வாருமென்றாளம்பட்டனை மழுங்கமொட்டையடியுமென்றாள்
தலைபோடிபண்ணினார்கள் தனிப்பொட்டுமிட்டார்கள்
தையலிடம்வந்தவர்கள் தலைபேடியானார்கள்
கரும்புள்ளியுஞ்செம்புள்ளியுங் கலந்தழகாய்பொட்டுமிட்டு
உன் தொண்டைக்குதூண்டிமுள்ளு தொப்புளுக்குவிராணி
மண்டைக்குக்கோடாலி மார்புக்குசெப்புலக்கை
கழுத்தடியில்கத்தியென்றாள் காமரட்சியம்மனென்றாள்
ஊட்டியறுக்களந்த உண்மைபராஞ்சோதியென்றாள்
உந்தனுக்குசொல்லுமென்று உத்தமியனுப்பிவைத்தாள்
தருமதுரைமகராசி தப்பிவிட்டாளெங்களைத்தான்

பிழைத்துநாங்கள்வந்ததெங்கள்பெரியோர்செய்தபுண்ணியந்தான்
என்றுசொல்லக்கேட்டு எழுந்தானேநின்முகனும்

நின்முகராசன் அல்லியின்மேற்படையெடுத்தது.

ஆரடாதூதுவரே அழையுங்கள்மந்திரியை
அந்தட்சணமேதான் கூடாரம்போடுமென்றான்
இன்றுவெளிகூடாரம் இயலுடனேபோடுமென்றான்
பாளையங்களுள்ளதெல்லாம் பயணமிட்டுவாருமென்றான்
சண்டைகொடிபோட்டுச் சண்டைமுரசடியுமென்றான்
சேனையலங்கரித்துச் சீக்கிரமாய்வாருமென்றான்
ஆறாயிரமந்திரிகளனைவரும்பயணமென்றான்
யானைசேனைபரிவாரம் அடங்கலும்பயணமென்றான்
காலாள்பரிசேனை கடுகியேபயணமென்றான்
ஆராயிரம்பாண்டியனை அதம்பண்ணிபோட்டுவிட்டு
அல்லியென்னும்பெண்ணரசை அரைநொடியிலபிடித்துவந்து
தலைபோடிபண்ணியே தம்பலஞ்சுமக்கவைப்பேன்
எண்ணெயிட்டென்தலைக்கே இயல்பாயரைப்பிடுவேன்
அப்போதுஸ்நானமாயாடுவேனபிஷேகம்
என்றுஎழுந்தானே இயல்புள்ளநின்முகனும்
கட்டினதுகச்சையல்ல கைதனிலேவில்லுமல்ல
முகத்தினிலேமீசையல்ல முனைகட்டுச்சீலையல்ல
தலையிலேபாகையல்ல தரித்ததுஆடையல்ல
என்றவனுமார்பைதட்டி எழுந்தானேநின்முகனும்
முகத்தினுநுமாலை முகமழகாயதான்கட்டி
அம்பெடுத்தான்வில்லெடுத்தான் அம்புறாத்தூணிமுதுகணிந்தான்
காங்குகச்சைதானணிந்தான் கத்திவாள்தோளிலிட்டான்
தேரைச்சுற்றிநமஸ்கரித்துத் தேரின்மேலேறினானே
ஏறினான்தேர்மேலே எடுத்தார்நெடுங்குடைகள்
காணல்தனக்கெடுத்தார் கறுப்புநல்லகூடாரம்
வெய்யலுக்கெடுத்தார்கள் வெள்ளைநல்லகூடாரம்
கறுப்புநிஜான்செகப்புநிஜான் கலந்துபறக்குது
அடிபடுதாரணமுரசு அனைவருங்கிடுகிடென்ன
கோடைகாத்திடிபோலே குமுறுதேபேரிகைகள்
வெங்கலப்பேரிகைகள் யிருதுமுழக்கமுடன்
அமரதரும்சமாதரும் அஸ்திராய்வருகிறார்கள்
கலிங்காதெலுங்கருடன் கன்னடையர்வருகிறார்கள்
துலுக்கர்மலுக்கருடன் சோனகரும்வருகிறார்கள்
வன்னியருஞ்சகனியரும் மராட்டியரும்வருகிறார்கள்
வருகிறசனங்களானல் மட்டுமிதங்களில்லை
கொக்குவெளுத்ததுபோல் குடமல்லிபூத்ததுபோல்

வாசங்கமிழ்ந்ததுபோல் மல்லிகைபூத்ததுபோல்
நின்முகன்சேனையெல்லாம நெருங்கிவருகிறது
செந்தூளெழுப்புவது சிவலோகங்கப்பிற்று
கருந்தூளெழும்புவது கதிரோனைக்கப்பிற்று
கோட்டைக்கடந்தார்கள் கொப்பெனவேவருகிறார்கள்
அப்போதுபாண்டியர்கள் அறிந்தார்கள்சேதிதன்னை
நின்முகன்வருஞ்சேதி நிமிஷத்திற்றனறிந்தார்
ஐயோமகளேயென்று அலறலுற்றார்பாண்டியர்கள்
தவம்பண்ணிப்பெற்றோமே தவங்குலயநாளாச்சே
பாரதவம்நாங்கள்செய்து பாலகியைப்பெற்றோமே
நின்முகன்கையாலே நீமடியநாளாச்சே
வருகிறான்நின்முகனும் மட்டில்லாச்சேனையுடன்
என்னசெயவோமகளேயென்று இடிவிழுந்துதானழுவார்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குதான்கேட்டு
அஞ்சாதேஐயமாரே அவனைப்பலிகொண்டிடுவேன்
மாண்டுமடிவேனென்று மனதில்நினைக்கவேண்டாம்
செத்துமடிவேனென்று சிந்தைதனில்வைக்கவேண்டாம்
அரைநாழிக்குள்ளேயவன் ஆங்காரம்நானழிப்பேன்
என்சமர்த்தைப்பாருமென்று எழுந்தாளேஅல்லியம்மாள்

அல்லியம்மாள் சொக்கரையும் அம்மனையுந்தொழுது வரம்பெற்றது,

அல்லிக்குளமுழுகி அலர்தாமரைபூவெடுத்து
சொக்கரதுஆலயத்தில் சுந்தரியும்போய்புகுந்து
கோயில்வலம்வந்து கும்பிட்டுதெண்டனிட்டு
கொண்டுவந்தபூமலரால் கொம்பனையும்பூசைசெய்து
ஒருவர்வயிற்றில்பிறவாமல் வன்கொடுமைசெய்யாமல்
குடலிற்பிறவாமல் குலக்கொடுமைசெய்யாமல்
அல்லியிலேமெலன்னை ஆச்சியரேபிறப்பித்தாய்
பொற்றாமரையிலேதான் பிறப்பித்தாய்யீஸ்வரியே
நின்முகனைக்கொல்லவேண்டும் நீபட்டங்கட்டவேணும்
மாற்றானைக்கொல்லவேண்டும் வையகத்தையாளவேண்டும்
வாழ்த்தியேகதைகொடம்மா மந்திரவாள்கைகொடம்மா
என்றுவணங்கியே இரங்கிநமஸ்கரித்தாள
மாணிக்கச்சொக்கலிங்கம மனதுமிகக்களித்து
அகிலாண்டநாயகியாள் அங்கயற்கண்மைமகிழ்ந்து
மதுரைமீனாட்சியுந்தான் மங்கையர்ண்மனமகிழ்ந்து
மச்சுராதங்கொடுத்தாள் மந்திரவாள்கைகொடுத்தாள்
வாழ்த்தியேகைகொடுத்து வெண்மருந்தள்ளியிட்டாள்
வர்னலட்சந்தூதர்களை மகாதேவர்கைகொடுத்தார்
அல்லியற்குத்துணையாக அநேகம்பேர்வந்துவிட்டார்

அல்லியம்மாள் நின்முகனைச்சங்கரித்தது

காலாளுஞ்சேனைகளுங் கடுகியேபயணமாச்சு
தேரைசுற்றிதெண்டனிட்டு தேறின்மீதேறினளே
அம்புவில்லைகைபிடித்து அச்சுரதந்திருப்பிவிட்டாள்
மந்திரவாள்கைபிடித்து மச்சுரதந்திருப்பிவிட்டாள்
தேவதுந்துமிமுழங்க தேன்மொழியாள்வருகிறாளே
சித்திரத்தேரும் செருக்களத்தேவருகிறதே
வந்துவளைத்தாளே வல்லிடிபோலல்லியரும்
வில்வளைத்துநாபூட்டி வில்லைகுணத்தொனிகள்செய்தாள்
மாரிச்சரம்பொழிந்தாள் மகாசேனையுள்ளவர்மேல்
தொட்டாளேவில்லிதனைச் சொரிந்துவிட்டாள்பாணமது
விட்டாள்சரபாணம் மேனியெல்லாந்தான்மறைய
யானைசேனைபரிவாரம் அடங்கலுங்கொல்லலுற்றாள்
யானைத்தலைகளெல்லாம் அ யமிட்டுக்கீழ்விழவே
ஒட்டைத்தலைகளெல்லாம் ஓலமிட்டுக்கீழ்விழவே
குதிரைத்தலைகளெல்லாம் கொக்கரித்துகீழ்விழவே
யானைமேலிருந்தவர்கள் அபயமிட்டுக்கீழ்விழவே
ஒட்டகத்தின்மீதிருந்தோ ரோலமிட்டுக்கீழ்விழவே
குதிரைமேலிருந்தவர்கள் கொக்கரித்துமண்ணைகவ்வ
தென்னங்காய்போலாகச் சேனைதலையுருளவிட்டாள்
பனங்காயைப்போலாக பார்தனிலுருளவிட்டாள்
செண்டுசெண்டாவேணதலை செருக்களத்திலுருளவிட்டாள்
அறுந்ததலைகளெல்லாம் அம்மானாடுகுது
ஆலையாடுங்கரும்புபோல அரைத்துரசம்பிழிந்தாள்
கரும்புக்கரணைபோல கண்டித்தாள்வேணதலை
மதப்பட்டயானைகள்தான் மடுவைகலக்கினாற்போல்
குட்டிமகயானை குளங்கலக்கிவிட்டதுபோல்
கிண்ணியில்சந்தனத்தைக் கூட்டிவழித்ததுபோல்
நின்முகன்சேனையெல்லாம் நிர்த்தூளிபண்ணலுற்றாள்
பிடாரியம்மன்கோவிலுச்குப் பலிகொடுக்கும்பாவனைப்போல்
அம்மையார்கோவிலுககு ஆடுவெட்டியபாவனைப்போல்
அரைநாழிக்குள்ளே அதப்பண்ணாள்பாளையத்தை
சண்டைபண்ணமாட்டாமற் றளர்ந்தோடிப்போனார்கள்
பண்டாரமென்பாரும் பரதேசியென்பாரும்
நாமத்தைகாண்பித்து நான்காதனென்பாரும்
பூணூலைக்காண்பித்து பிராமணனென்பாரும்
சண்டைக்குவல்லையென்று சலாஞ்செய்துஓடுவாரும்
தண்ணீதண்ணீரென்றுசொல்லித் தவிக்குதுபாளையங்கள்
வடுகரெல்லாமனீளென்பார்வண்றமிழர்தண்ணீரென்பார்
துலுக்கரெல்லாம்பாணியென்று சொல்லிபுலம்புகிறார்

இவ்விதமாய்பாளையத்தை இறக்கடித்தாளல்லியம்மாள்
நின்முகராசனண்டை நேரிழையும்வந்தெதிர்த்தாள்
ஆரடாநின்முகனே அறிவுகெட்டபாதகனே
வெள்ளாட்டிபையலேநீ வீரியமுனக்கேண்டா
தம்பலவட்டிலேந்துந் தாதிபெற்றமகனுமே
மதுரம்புளியாமா வைகாசிதையாமா
எருதுபசுவாமா எதிர்த்துவந்தாய்யாண்பிள்ளையாய்
உன்னைக்கொடுப்பேனே உனக்குமொருசேவகமோ
கொசுவும்பறந்தாமோ கூடபறக்குமோடா
உயரப்பரந்தாலும் மூர்க்குருவிபருந்தாமோ
அணிப்பிள்ளையசிக்கினு மான்குட்டிவிழுமோடா
ஓதிபெருத்தாலு தூணுமா ஒட்டங்கச்சிமுளையாமா
உன்னை-அதம்பண்ணும்படியாக அல்லியிலேபெண்பிறந்தேன்
பொற்றாமரையிலே பிறப்பித்தாளீஸ்வரியாள்
உன்-தொண்டைக்குதூண்டுமுள்ளு தொப்புளுக்குவிராணி
உன்-மார்புக்குச்செப்புலக்கை மண்டைக்குகோடாலி
உன்-கழுத்தையறுக்கவந்த காமாட்சியம்மனடா
உன்-ஊட்டியறுக்கவந்த உண்மைபராஞ்சோதியடா
உன்குலதெய்வமடா ஓங்கார அல்லியம்மாள்
அரியாமல்போனையடா அறிவுகெட்டநாய்தலையா
அரைநாழிக்கொள்ளையிலே யமபுரஞ்சேர்க்கிறேன்பார்
கால்நாழிக்கொள்ளையிலே கைலாசம்சேர்க்கிறேன்பார்
ஒருநாழிக்கொள்ளையிலே உயிர்வதைசெய்கிறேன்பார்
தின்றவுப்புமாண்டதோ தெருவுபாழாச்சோ
உணடவுப்புமாண்டதோ ஆருபாழாச்சோ
காலனுபரவுந்து கைகாட்டியழைத்தானோ
இயமனுநபரவந்து இங்கேவாவென்றானோ
ஆகையினாலேயடா அமருக்குவந்துவிட்டாய்
என்சமர்த்துஞ்சேவகமு மிப்போதறிவாய்பார்
தேரைத்துரத்திவிட்டாள் செங்கையிலேவில்லெடுத்தாள்
கேட்டந்தநின்முகனும் கெர்வமதிகமாய்
நெற்றிக்கண்ணீஸ்வரனூர் நிமிர்ந்துவிழிபார்த்தாற்போற்
வலதுபக்கமீசையது வல்லயம்போலேதுடிக்க
இடதுபக்கமீசையது ஈட்டிபோலேதுடிக்க
மீசைதுடிக்கிறதும் முன்கோபமாகிறது
சாணும்டபெண்ணேநீ சமர்த்தாகப்பேசுகிறாய்
உன்-சவுரியத்தைநானிழப்பேன் தம்பலங்களைந்திவைப்பேன்
வல்லமையைப்பாரென்று வளைத்துக்கொண்டான்வில்லதனை
இவ்விருவர் தேரு மிருநிலத்திற்ருன்சுழல
மாணிக்கச்சொக்கரையு மனதில்நினைத்தாளே

அங்கயற்கண்ணாயகியை ஆதிபரமேஸ்பரியை
மனதில்நினைத்தல்லவோ வாங்கிவிட்டாள்பாணமது
பாவியந்தநின்முசனும் பதறிச்சாம்பொழிந்தான்
விட்டான்சரபாணம் மெல்லிநல்லாள்மேனியிலே
கோடானகோடிபாணம் குறித்தானேநின்முகனும்
அல்லிபெருமாளுக் கதிகமானகோபமுடன்
ஒன்றுக்குப்பத்துகணை ஒருநூற்றுக்காயிரமாம்
சரமேற்சரம்பொழிந்தான் சாயார்த்தியமுள்ளகன்னி
வாய்வினது அஸ்திரங்கள் வருணனது அஸ்திரங்கள்
திவ்வியநல்ல அஸ்திரங்கள் தீர்க்கமுள்ள அஸ்திரங்கள்
சண்முகனஸ்திரமாஞ் சலந்திகானஸ்திரமாம்
மகாதேவியஸ்திரமாம் பார்வதியஸ்திரமாம்
வச்சிர அஸ்திரமாம் மகுடநல்ல அஸ்திரமாம்
இடியினது அஸ்திரமாம் இந்திரனது அஸ்திரமாம்
இராமச்சந்திர அஸ்திரமாம் நவசந்திரவஸ்திரமாம்
சூரியஅஸ்திரமாம் சுப்பிரமணிய அஸ்திரமாம்
கார்த்திகைமாதத்திற் கனத்தமழைபெய்ததுபோல்
ஐப்பசிமாதந்தன்னில் லடர்ந்தமழைபெய்ததுபோல்
சோனைமழையளும் சொரிந்தாற்போற்றாவிவிட்டார்
விட்டதொருபாணமது மட்டுமிதங்களில்லை
நான்குநாள்மட்டும் நல்லசண்டைபண்ணுகிறார்
விற்பிடித்தகைகளது மெத்தசிவப்பேறிற்று
அம்பிழுத்தகைகளிலு ளல்லிப்பூவருணமாச்சு
நெல்லிப்பழப்போல நெருங்கிற்றுகொப்பளங்கள்
இந்தவிதமாக இருவர்சண்டைபண்ணினார்கள்
அப்போதுஅல்லியம்மாள் அம்பனையேதொத்தரித்து
இடியரஸ்திரமெடுத்து இந்திரதூபம்தானுமிட்டு
மார்புருளவாங்கியல்லோ தோள்பிளத்தான்தொடுத்தாள்
கைகளில்நெருப்பெரிய வந்துவிழுந்தனவே
தேருமுடைந்தனவே செம்புரவிசெத்தனவே
போட்டசட்டைவச்சிரகபாய் பொடிபொடியாய்தானழிந்து
சட்டதமான்வச்சிர கபாய்தவிடுபொடியாயினவே
சல்லடைக்கண்கள்போல சரீரங்கள்தொளையாகி
பதாதியாய்நின்றானே பராக்ரமநின்முகனும்
எடுத்தான்வளைதடியை ஏற்றினான்கேடகத்தை
கண்டாளேஅல்லியம்மாள் கனத்தநல்லகோபமுடன்
கேடகமும்வாளெடுத்து கெர்ச்சித்துக்கிழ்குதித்தாள்
எலிகண்டபூனையைப்போ லெழும்பினாளல்லியமமாள்
பசுகண்டபுலியதுபோல் பாய்ந்தானேநின்முகனும்
யானைகண்டசிங்கம்போ லல்லியெழும்பினாளே
கொக்குகண்டராசாளிபோற் குதித்தானேநின்முகனும்

மானைக்கண்டசிவிங்கியைப்போல் வருகிறாளே அல்லியம்மாள்
உன்னைவிடுவேனென்று உன்மனதிலெண்ணாதே
நின்முகா உன்தலையை நிமிஷத்தில்வாங்குவேன்பார்
இடசாரிவலசாரியா இருவருமேசுழலுகிறார்
சக்கரம்சுழல்வதுபோற் சமர்த்தர்சுழலுகிறார்
வண்டுதும்பிபோலாக வட்டமிட்டகருடனைப்போல்
முன்கந்துபாய்ச்சலவோ முதுகின்மேல்வெட்டுவாளாம்
தட்டியுதறிநிற்பான் தாக்குவானல்லியரை
எமனுமியமனைப்போ லிந்திரனுமிந்திரனுமாய்
மலையுமலையோடு வந்தெதிர்த்தபாவனைபோல்
புலியும்புலியுடனே பதுங்கியெதிர்த்ததுபோல்
நான்குநாழிகைமட்டும் நல்லசண்டைபண்ணினார்கள்
பொற்றாமரைதனிலே பிறந்தெடுத்தஅல்லியரும்
ஆலவாய்ச்சொக்கரென்னு மாண்டவனைத்தானினைந்து
மதுரைமீனாட்சியரை மனதிலேதானினைந்து
முன்கந்துபின்கந்து முப்பத்திரண்டுகந்து
பக்கவளைவாகவந்து பாச்சலுடனெழும்பி
வீசினாள்வாளாலே வேறிரண்டுதுண்டாக
கரும்புகருணையைப்போல கண்டித்துக்கீழ்விழுந்தான்
எறினாள்தேர்மேலே யெடுத்தார்பெருங்குடைகள்
நின்முகன்விழுந்தானென்று நீலிசங்குதான்கொனித்தாள்
தேரைதிருப்பிவிட்டாள் தேன்மொழியாளல்லியம்மாள்
நின்முகனமார்மீதில் நீலிரதமோட்டினாளே
செயங்கள்செயங்களென்று செயபேரியடித்துவந்தாள்

அல்லியம்மாள் மதுரைக்குவந்து பட்டங்கட்டிக்கொண்டது

எழுபதுசேனாதிபதி எல்லவருமோடிவந்தார்
தப்பிப்பிழைத்தவர்கள் சகலசெனங்களெல்லாம்
அல்லிப்பெருமாட்கு அடிபணிந்துதெண்டனிட்டார்
அடைக்கலமாச்சியென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
தேவதுந்திமிழங்கத் தேவர்பூமாரிபெய்ய
ஆறாயிரவரென்னு மையனமார்தாமறிந்தார்
சந்தோஷப்பட்டார்கள் தார்வேந்தரோடிவந்தார்
மகளதன்னைப்பார்க்கலவோ மகிழ்ந்தார்கள்பாண்டியர்கள்
மதுரைத்தெருவனைத்து மகுடதோரணங்கட்டுமென்றார்
அரைநாழிகைக்குள்ளே அலங்கரித்தார்பட்டணத்தை
எங்குமலங்கரித்து எத்திசையுநீர்தெளித்து
வாழைமரம்கமுகுமரம் வாசலெல்லாநட்டார்கள்
சேனைகள்சூழ்ந்துவரச் செயபேரியடித்துவர
மேளங்களார்ப்பரிக்க மெல்லிவருகிறாளே

மதுரைத்தெருவைசுற்றி மாளிகையில்வந்தார்கள்
சிங்காதனத்தின்மே லேறினாள்தேன்மொழியாள்
ஆறுயிரம்பாண்டியரா மையன்மாரானவர்கள்
பட்டந்தரித்தார்கள் பத்தினியாளல்லியர்க்கு
செங்கோலுபட்டமுடன் துரைத்தனமுந்தந்தார்கள்
பொம்மைவிருதுகட்டி பூதத்தலைகட்டிவைத்து
அல்லிக்கொடிகட்டி அரசுநிலையாளுகிறாள்
மதுரையைம்பத்தறுகாதம் மாதுமையாளுகிறாள்
ஆண்பட்டங்கட்டியே அரசுநிலையாளுகிறாள்
பெண்பட்டங்கட்டியே பூமியரசாளுகிறாள்
இந்தவிதமாக எல்லையரசாண்டிருந்தாள்
இப்படியாகவேதான் இருந்தரசுஆளுகையில்
அப்போதருச்சுனனும் ஆணலழகுமன்னன்
இந்திரபுரிபட்டணத்தில் அனந்தந்திருடரவர்
பசுதிருடிப்போனசேதி பார்த்திபன்தானறிந்து
அம்புவில்லெடுக்கவென்று அரண்மனையிற்போய்புகுந்தார்
ஏழாநிலையின்மேலு மின்பமாயேறினானும்
தருமரும்திரௌபதையும் சருவிவிளையாடயிலே
குங்குமப்பூமேடையிலே கூடியுறவாடினார்கள்
கலந்திருந்தவர்கள்தனைக் கண்ணாலேகண்டுவிட்டான்
முன்னிட்டகாலையவன் பின்னாகவாங்கினானே
மந்தாரக்குந்தியரை மாதாவைதேடிவந்தான்
ஆச்சியர்தன்பாத மடிவணங்கிதெண்டனிட்டான்
வாழ்த்திவிடைகொடுத்து வருணித்துகுந்தியம்மாள்
ஆச்சியரேயென்தாயே அடியேனொருவார்த்தை
அண்ணனுந்தேவியரு மன்பாகமெத்தையின்மேல்
கலந்துவிளையாடுவதைக் கண்ணாலேகண்டேனம்மா
சருவிமயலாகையிலே சடுதியில்நான்கண்டேன்
பார்த்தபடியினாலே பாவம்வந்துநேர்ந்ததம்மா
ஆகாதபாவத்துக்கு ஆளானேனாச்சியரே
பொல்லாதபாவம்வந்து போதபலித்ததம்மா
இப்பாவந்தீர்வதற்கு எத்தலங்களும்பார்த்து
துங்கபத்திரிகோதாவரி யமுனைசரஸ்வதியாம
காசிஸ்நானஞ்செய்யவேண்டும் கனபாவந்தீரவேண்டும்
பாராஸ்தலங்களெல்லாம் பார்த்துவருகிறேன்யான்
சிவஸ்தலங்களவிஷ்ணுஸ்தலங்கள் தெரிசனமேசெய்வேன்யான்
கால்கொண்டதூரமெல்லாங் கடுகத்திரிந்துவாரேன்
போகவேண்டுமென்று பொன்னடியைதெண்டனிட்டான்
அவ்வார்த்தைதான்கேட்டு அழுதுபுலம்பலுற்றாள்
உன்னையான்பாராமல் ஒருநிமிஷம்நிற்கமாட்டேன்

பாராதிருப்பதற்குப் பாவிமனம்வருமோ
செத்துமடிவேனென்ருள் செலவழிந்துபோவேனென்ருள்
அழுதுபுலம்பலுற்ரு ளாரணங்குகுந்தியம்மாள்
அழுதகுரல்கேட்டு அத்தருமராஜர்வந்தார்
சந்தனவடிவழகன் தருமராசர்வந்துவிட்டார்
ஏதுக்கழுவதுதா னென்தாயேசொல்லுமென்ருர்
அருச்சுனன்சொன்னதெல்லாம் ஆச்சியருந்தாமுரைத்தார்
அவ்வார்த்தைதான்கேட்டு அருண்மைந்தர்நொந்துமனம்
சொற்பேச்சைக்கேளானே சுந்தரப்பூமுடியான்
என்வார்த்தைகேட்கானே இளவிஜயராசனிவன்
ஆரைநினைத்தானே அளவற்றசிந்தைதனில்
எவரைநினைத்தானே இன்பமுள்ளசிந்தைதனில்
அடியளந்தமாயவரே ஆதிமூலமவாருமென்ருர்
இவ்வேளையிச்சமய மிங்கேவாசுவாமியென்ருர்
தருமர்நினைத்ததனைச் சுவாமியதுவறிந்தார்
வட்டமிடுங்கருடனேறி வந்துவிட்டாரெம்பெருமாள்
சிவந்தகருடனேறி ஸ்ரீராமர்வந்துவிட்டார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
சந்தனவடிவழகர் தருமரண்டைவந்துவிட்டார்
வாகனம்விட்டிரங்கி வந்துசரணமிட்டார்
என்னையழைத்ததுதா னேதுகருமமென்ருர்
சிம்மாதனத்தின்மீது ஸ்ரீராமரைவீற்றிரென்ருர்
இட்டசிங்காதனத்தி லெம்பெருமாள்வீற்றிருந்தார்
சந்தனவடிவழகர் தருமராயரேதுரைப்பார்
ஆணழகுமன்னன் அருச்சுனராசனவன்
தீர்த்தயாத்திரைபோகச் சிந்தையில்நினைந்துகொண்டு
காசியாத்திரைபோகக் கருத்தில்நினைந்தானே
ஆர்சொல்லுங்கேளேனென்று அருச்சுனன்போகலுற்ருன்
தனியேயனுப்புதற்குச் சற்றுமனந்தோன்றவில்லை
அருச்சுனர்க்குத்துணையாக அரிராமர்பேசய்வாரும்
கூடத்துணைபோங்கள் கோபாலப்பெருமாளே
கும்பிடுதெய்வமுநீர் குழைத்திடுநாமமுநீர்
உன்னையேநம்பினே னுயிர்கொண்டுலாவுகிறேன்
ஆரைச்சதமெனபேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
உம்மையல்லால்வேறுதுணை யுண்டோயிம்மானிலத்தில்

அருச்சுனர்பின்சென்று அழைத்துமேவாருமையா
போய்வாருஞ்சுவாமியென்றார் புகழ்வேந்தன்தர்யலிங்கம்
மாதாவுங்குந்தியம்மாள் வாழ்த்திசெலவுதந்தாள்
மாயவனும்அருச்சுனனும் வணங்கியெழுந்திருந்து

மாயவரும்அருச்சுனனும் தீர்த்தயாத்திரைபோகிறது

காஷாயநதானுடுத்திக் கடுவேஷங்கொண்டார்கள்
சன்னியாசிவேடங்கொண்டு தவமுனிபோல்வேடங்கொண்டார்
அம்புவில்லுங்கைபிடித்து அரியமுனிபோல்நடந்தார்
தருமாபுரம்வீமாபுரந் தரணிபுரந்தாண்டி
இந்திரவனங்கடந்து இனியவனம்போகலுற்றார்
காடுசெடிதா ்டி கரியமலை தான்தாண்டி
காசிநதிபோய்முழுகிக் கனதீர்த்தமாடினார்கள்
விசுவநாதசுவாமியைத்தான் வேண்டிதரிசித்தார்கள்
துங்கப்பத்திரிகோதாவரி தொலைதீர்த்தமாடினார்கள்
யமுனைசரஸ்வதியு மின்பமுடன்ஸ்நானம்செய்தார்
மல்லிகார்ச்சு ம்வந்து மகேஸ்வரனைப்பூசைபண்ணார்
திருப்பதியேவந்தார்கள் தெரிசனமேசெய்தார்கள்
வேடனது எச்சிலைத்தான் விரும்பியுண்டவித்தகனார்
கண்ணப்பன்காட்சிதந்த காளஸ்திரிவந்தார்கள்
காளத்திநாதரையுங் கண்டுதரிசித்தார்கள்
திருப்பாலைவனந்தனிலே சிறப்புடனேவந்தார்கள்
கபாலீசநாதரைப் பணிந்துதெண்டஞ்செய்தார்கள்
வால்மீகர்பூசைசெய்த மருந்தீசரைத்தரிசித்தார்கள்
திருவொற்றியூரில்வந்து தியாகரைப்பூசைசெய்தார்
கழுக்கள்வலம்வந்து கடைநயினார்பூசித்தார்
திருக்கழிக்குன்றைபதி தேடியேவந்தார்கள்
வேதகிரிலிங்கத்தை வேண்டிச்சரணமிட்டார்
வண்ணாரப்பெண்ணுக்காய் மணம்பேரனென்றுசொல்லி
அண்ணாமலையாரை யாணழகர்தேடிவந்தார்
அருணகிரிநாதரைத்தா னடிபணிந்துதெண்டனிட்டார்
புற்றிடங்கொண்டதொரு பொன்திருவாரூர்போனார்
தியாகரைத்தரிசித்துத் திரும்பினாரிருவருமாய்
சிதம்பரம்தன்னிலேதான் சபாபதியைத்தரிசித்தார்
மாயவரம்கும்பகோணம் வந்துதரிசித்தார்கள்
ஸ்ரீரங்கம்வந்தல்லோ இரங்கரைபூசைசெய்தார்
ஜம்புகேஸ்வரத்திலேதான் ஜலகண்டரைதரிசித்தாராம்
இராமேஸ்வரத்திற்கு யிருவருமாய்வந்தாராம்
சேதுபதிஸ்நானஞ்செய்து இராமலிங்கம்பூசைசெய்து
பிட்டுக்குமண்சுமந்த பித்தரைக்காணவென்று

மதுரைநகர்தேடி வருகிறாரிருவருமாய்
வருகிற வழிதனிலே வாணிபனொருவனவன்
அல்லியரசாணி ஆரணங்குமாதினுக்கு
நித்தமவன்முத்தளந்து நீதியுள்ளவாணியன்றான்
அன்றுடமுத்தி னளவுகுறைந்ததென்று
படிமுத்துக்குறைந்ததென்று பதறிப்புலம்புகிறான்
வாயிலறைந்துகொண்டு மண்ணிற்புலம்புகிறான்
அழுதகுரல்கேட்டு அங்குவந்தாரிருவருமாய்
ஆரடாதம்பியரே யழுதுபுலம்புவதேன்
உன்னையன்னிதம்பண்ணவ ரார்காணும்வர்த்தகனே
அழுதுபுலம்புவதே னவ்வயணஞ்சொல்லுமென்றார்
வணங்கிரியும்சன்யாசி வார்த்தையதுஉங்களுக்கேன
இராசாத்திவார்த்தையது இனியுரைக்கக்கூடாது
சொன்னேனேயாமாகில் சுகமாக்கப்போறீரோ
உங்களாலாவதென்ன யூர்வழியேபோங்களென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனுமேதுரைப்பான்
சொன்னால்குறைவுமுண்டோ சுகம்பெறுவீர்வாணியரே
பெரியோர்க்குச்சொன்னதினாற் பிழையுண்டோஉந்தனுக்கு
உன்மனக்குறையகற்றி வகைமானஞ்செய்திடுவோம்
அழுதவயணமதை அறியவுரையுமென்றான்
ஆனால்கேள்சந்நியாசி அவ்வயணஞ்சொல்லுகிறேன்
ஐயாபெரியவரே ஆண்டவரேகேளுமையா
வாணுமதுரையது வடமதுரைபட்டணத்தில்
தென்மதுரைவாழுகின்ற தேன்மொழியாளல்லியரும்
ஆறாயிரம்பாண்டியர்க் கரியதுரைமகளாம்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரி னுள்ளேமணற்சேருமுண்டு
அடிக்கிறகாற்றதனி லலைகாற்றுரும்புமுண்டு
சந்திரற்குமாசியுண்டு சற்றேகருப்புமுண்டு
குன்றின்மணிக்காணலுங் கொஞ்சங்கருப்புமுண்டு
புருவங்கருப்பொழியப் பின்னேகருப்புமில்லை
மயிரேகருப்பொழிய மற்றகருப்புமில்லை
ஆறாயிரவருந்தா னரியமைந்தனில்லாமல்
மாளுவோமென்றுசொல்லி மலைமேல்தவமிருந்தார்
மாளாதேயென்றுசொல்லி மலரிலவதரித்தாள்
பொற்றாமரைதனிலே பிறந்தாளேமாதுகன்னி
அல்லியிலைமேலே யருமையாய்தவமிருந்து
அல்லியென்றுபேருமிட்டு ஆரணங்குபெண்வளர்ந்தாள்

ஏழுபிராயமதி லெதிர்த்துவந்தநின்முகனை
நின்முகனைக்கொன்றவளு நீலிபட்டங்கொண்டாளே
பொம்மைவிருதுகட்டிப் பூமியரசாளுகிறாள்
அவ்வார்த்தைகேட்டு அர்ச்சுனனுமேதுரைப்பான்
அழகில்மிகுந்தபெண்ணே ஆணழகாசொல்லுமென்றான்
அவளழகும்பாவனையு மையாவேசொல்லுமென்றான்
எல்லார்தலைமயிரு மிருமுழமொருமுழமாம்
ஆரணங்குகூந்தலது அறுபத்துமூன்றுமுழம்
வண்டுமுதுகோடுபோல் மயிர்நிறமாயிருக்கிறது
தேய்பிறைசாயலைப்போல் திருநெற்றிக்கண்ணழகும்
வேப்பிலைசாயலைப்போல் மேற்புருவமிரண்டழகும்
கூரியமூக்கழகும் குளிர்ந்தமுகத்தழகும்
முத்துப்போல்பல்வரிசை முருக்கிதழ்போல்செவ்வுதடும்
நீர்-முட்டையைப்போறகண்ணழகும் நெரிந்தபுருவமுடன்
சங்குகழுத்தழகும் சாதிலிங்கமேனிகளும்
காமன்கடைந்ததுபோல் கலசத்திளமுலையும்
கற்பகச்சாயலைபோல் கைத்தலமிரண்டழகும்
ஆலிலைபோலாக யமர்ந்ததிருவயிறும
சிங்கத்திடைபோற் சேர்ந்தயிடையழகும்
இளவாழைத்தண்டதுபோல் இரண்டுதொடையழகும்
முத்துசிப்பிபோலே முழங்காலிரண்டழகும்
புத்தகஞ்சேர்ந்ததுபோல் புரங்காலிரண்டழகும்
சுவரிலெழுதலாகுஞ் சித்திரம்போல்பார்க்கலாகும்
படத்திலெழுதலாகும் பதுமைபோற்பார்க்கலாகும்
வேரிற்பவளங்கள் மின்னுகிறகாந்தியவள்
மின்னலொளிபோல மெல்லிநல்லாள்தன்னிறங்கள்
கொம்பனையாள்வார்த்தையது குயில்கள்குரலோசை
காய்க்கும்பிராயமையா கன்னிகட்டுங்காலமையா
பூர்க்கும்பிராயமையா பிஞ்சிவிடும்காலமையா
அவளைப்போலழகுடையா ளாருமில்லைவையகத்தில்
கட்டழகிமாதினுக்குக் கலியாணமாச்சுதடா
மாலைப்பசுங்கிளியை மணமுகூர்த்தஞ்செய்தனரோ
ஆனால்கேள்சந்நியாசி அவ்வார்த்தைசொல்லுகிறேன்
கொள்வருமாப்பிள்ளைக்கு குறடாகொடுப்பேனென்றாள்
ஆளவரும்சம்பந்தியை யடிப்பேனென்றாள்சேருபந்தால்
கல்யாணமென்பாரைக் கண்ணைப்பிடுங்கிடுவாள்
முன்வாசற்படிதனிலே முச்சிகொட்டாய்கட்டிவைத்தாள்
பாலைக்கறந்துதான் பட்டணத்தில்வைத்தாக்கால்
பறக்கின்றகாகமது பாராதுதலையெடுத்து
ஆண்காற்றடியாது அல்லியம்மாள்கோட்டைதனில்

ஏறுவதும்பெண்குதிரை யிருப்பதுவும்பெண்சேனை
பன்னிரண்டுவயதாச்சு பாலப்பிருயமையா
அவளுக்கு-நித்தமுங்கலமுத்தளப்பேன் நீதியுள்ளமாதினுக்கு
அன்றுடமுத்தி னளவுகுறைந்ததையா
ஆகையினாலேயா னழுதுபுலம்புகிறேன்
வெட்டியெறிந்திடுவாள் வீரமணிவாளாலே
கொல்லநினைப்பாளே குடிகெடுவந்துவிடும்
ஆகையினாலேதா னழுதுபுலம்புகிறேன்
அவனுக்காதரவுசொல்லி யப்புரமேபோகையிலே

அர்ச்சுனன் அல்லியின்மேலாசை கொண்டது

அர்ச்சுனராசனவன் அதிகமோகங்கொண்டானே
அப்புரம்நடக்கறியான் அர்ச்சுனராசனவன்
அல்லியர்மேலாசையது அதிகமோகங்கொண்டானே
காமவிகாரத்தால் கலைதாங்கிப்போனானே
மன்மதனெய்தகணை மார்பைபிளக்கிறதே
சித்தசன்தொட்டகணை சிறுமார்புருகிறதே
மோகித்துதானுமவன் மூர்ச்சைபட்டுபோனானே
பாணங்களைந்துபட்டு நெஞ்சுருகிப்போகிறதே
மாரன்விடும்பாணமது மார்புருகிப்போகிறதே
ஆயன்பெருமாளே அடியேனொருவார்த்தை
கட்டினவிருதுகளைக் கடுகவருக்கவேணும்
எந்தவிதமானாலு மணமாலைசூட்டவேணும்
மாலையிட்டாலல்லாது மாயவனேவருவதில்லை
செத்துமடிவேனையா செலவழிந்துபோவேனையா
அவ்வார்த்தைதான்கேட்டு அரிராமரேதுசொல்வார்
சட்டென்னகாவலென்ன காவலதிகாரமென்ன
ஆறுயிரவர்களா மையமார்சேனையென்ன
சேவகமிதுந்தமொரு தேன்மொழியாளல்லியரை
கலியாணம்பண்ணுதற்குக் காண்டீபா ஆகுமோதான்
கொல்லநினைப்பாளே குடிகெடுவந்துவிடும்
செத்துமடிந்திடுவாய் செலவழிந்துபோய்விடுவாய்
தேசத்துபெண்களோடா சேனபேர்கிட்டாரோ
சாதியிலொருபெண்ணை தாலிகட்டிவைப்பேனடா
குலத்திலொருபெண்ணைக் கோலம்பண்ணிவைப்பேனடா
மாதுடையவார்த்தையைத்தான் மறந்துவிடுவாய்விஜயா
பெண்ணென்றவார்த்தையைநீ போட்டுமறந்துவிடு
அல்லியரைமாலையிட லாகாதுவுன்னாலே
செத்துமடிவாயே செலவழிந்துபோவாயே

நச்சுநச்சென்றெண்ணுதே நாம்போவோம்ராசாவே
தீர்த்தயாத்திரைவந்து சேனளுளாச்சுதடா
தருமருந்தம்பியரும் தவித்துப்புலம்புவாரே
ஆரணியவாசம்வந்து அனேகநாளாச்சுதடா
என்றதுதான்கேட் டேதுசொல்வான்வாழ்விஜயன்
நான்-செத்துமடிந்தாலும் செலவழிந்துபோனாலும்
மாண்டுமடிந்தாலும் வைகுந்தஞ்சேர்ந்தாலும்
செத்தவிடந்தனிலே செங்கழுநீர்பூப்பூர்ப்பேன்
மாண்டவிடந்தனிலே மல்லிகைப்பூப்பூர்ப்பேன்
பஞ்சணைமெத்தையிலே படுக்கைமலராவேன்
கொண்டைக்குப்பூவாவேன் கொசவனத்திற்பையாவேன்
நெற்றிக்குப்பொட்டாவேன் நேர்விழிக்குமையாவேன்
முந்தாணித்தொங்கலிலே முள்ளாகிவொட்டுவேன்யான்
காலுக்குமிஞ்சாவேன் கைவளையல்நானுவேன்
மாலையிட்டாலல்லாது மாயவனேவருவதில்லை
கலியாணஞ்செய்துவையுங் கரியமாலெம்பெருமாள்
உன்-புண்ணியத்தினலேயான் பிழைக்கவழிபாருமையா
பாதம்பணிந்தானே பார்த்திபன்மாலினது
ஆயர்பெருமாளு மருளாளரேதுசொல்வார்
புத்திகெட்டவர்ச்சுனயுன் பின்னலேவந்தனடா
அறிந்துமிருந்துநா னறிவழிந்துவந்தேனடா
பெண்களைப்பார்த்துநீ பேதைபோற்புலம்புகிருய்
காமக்கணைபட்டு களையாகிகீழவிழுந்தான்
ஆயன்பெருமாளு மாலோசனைபண்ணலுற்றூர்
மாதுகன்னியல்லியரை வரவழைக்கவேண்டுமென்று
மாயமிருகங்களை மாயவருண்டுபண்ணுர்
காட்டானைசிங்கங்களும் கரடிபுலியாளிகளும்
மானுமுயல்களுடன் மட்டற்றபன்றிகளும்
மயிலுங்குயிலன்னம் வண்ணவண்ணப்பட்சிகளும்
அனேகமிருகங்களை யரிராமருண்டுபண்ணுர்
மதுரைக்குடிபடைகள் மகாஜெனங்களத்தனையும்
காட்டில்வரதான்பயந்து கன்னிநல்லாள்முன்னேவந்தார்
அல்லியற்குதெண்டனிட்டு அடிபணிந்தேதுரைப்பார்
இத்தனைநாள்பிழைத்தோ மிடுக்கமில்லையென்றிருந்தோம்
என்னகுறைசெய்தோ மெண்ணவொண்ணுமிருகங்கள்
காட்டுக்குப்போவோமென்ருல் கனத்தமிருகமம்மா
பொல்லாதமிருகங்கள் புலிகள்துரத்துதம்மா
எதாற்பிழைப்போமென் றெல்லாருமழுகலுற்றூர்
அல்லிப்பெருமாளு மாரணங்கேதுரைப்பாள்

அல்லியரசாணிவேட்டைக்குவருகிறது

மிருகத்தால்மடிவனென்று மிகவும்பயப்படாதே
வேட்டைக்குநான்போய் வேணமிருகமெல்லாம்
அரைநாழிக்குள்ளே யதம்பண்ணிப்போவேனென்றாள்
அஞ்சாமலெல்லவரும் அரண்மனைக்குப்போங்களென்றாள்
அத்தண்ட பெண்களெல்லா மரண்மனைக்குப்போனபின்பு
ஆரடிதாதிகளே யலங்காரச்செங்கமலம்
வேட்டையாடும்பெண்களைநீ விரைந்தோடியழையுமென்றாள்
குறவர்பெண்களமறவர்பெண்கள் கூட்டிவாதாதியரே
வில்லியர்பெண்களைநீ விரைந்தோடியழையுமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட் டாரணங்குதாதியவள்
இலாயத்தில்கட்டிவைத்து யிருக்கின்றபுரவிகளில்
பாராசாரிபுரவிதனைப் பாங்குடனேதானவிழ்த்து
குதிரைகுளிப்பாட்டி கொப்பெனவேசுடிவாளமிட்டு
நாலுகாற்குவண்டயமாம் நடுக்கழுத்திற்கொலுசுகளாம்
பக்கத்திலங்குபடி பதியவைத்தாரப்போது
கண்ணாடிசல்லிகட்டி கவரிமான்குச்சுவிட்டு
முத்துத்துரகலிக்கத்துரு முன்னுமேலதான்சொருகி
இமாம்பட்சியிறகுகளை இகலாகத்தான்சொருகி
குதிரையலங்கரித்துக் கொண்டுவந்துமுன்புவிட்டார்
அல்லிப்பெருமாளுமப்போதேதானெழுந்து
சட்டைதமான்வச்சிரகபாய்தரித்தாளேயல்லியம்மாள்
அம்புவில்லுங்கைபிடித்து அம்புறுக்தூணிமுதுகணிந்து
பதினாயிரந்தோழிமார் பக்கப்புடைசூழ
ஆறாயிரம்யானைகுதிரை யல்லியுடன்பயணமாச்சு
வெள்ளித்தமுக்கடித்தார் வெண்கலக்கொம்பூதினார்கள்
பொன்னின்தமுக்கடித்துப் புறப்பட்டார்பெகண்ணெல்லாம்
வேட்டைநாய்சங்கிலியும் விருதுகட்டிவருகிறார்
மான்வலையும்வல்லயமும் வளைதடியுஞ்சக்கரமும
இரட்டைக்குழைத்துப்பாக்கி இருதோளிலிட்டார்கள்
காற்செருப்புந்தோற்சட்டையுங் கைதனிலேயெல்லாக்கோலும்
அனந்தவிதம்பெண்களெல்லாம் அல்லியரைச்சூழ்ந்துவர
அப்போதுஅல்லியரும் ஆரணங்குதானெழுந்து
புரவியருகில்வந்தாள் பொற்கொடியாளமாதுகன்னி
புரவிதனைச்சுற்றிவந்து போதவேசரணஞ்செய்தாள்
கழுத்துமயிர்பிடித்துக் கடிவாளங்கைபிடித்தாள்
கட்டிளுள்புரவிதன்னைச் சடுதியிற்றானேறினாள்
அடிவயிற்றில்கால்தட்ட அபாரியாயோடிற்று
ஆயிரம்புரவிகளும் அல்லியுடன்கூடவிட்டார

ஆயிரங்குதிரைகளில் அல்லியம்மாள்குதிரையது
காற்ருய்ப்பறந்து கடுகனவேவருகிறது
பட்டணத்தைதான்கடந்து பாரவனந்தான்வந்து
காட்டைவளைத்தார்கள் கருநாயைசூழவிட்டார்
செடியைவளைத்தார்கள் செந்நாயைசூழவிட்டார்
கோணக்கொம்பூதுவார்கள் கொப்பனவேதமுக்கடிப்பார்
ஆயன்பெருமாளும் அர்ச்சுனரைத்தானெழுப்பி
வருகிருள்காணல்லியரும் வனந்தனிலேவேட்டையாட

அல்லியருக் கருச்சுனன் னம்புபொருக்கித் தருவது.

அவன்-எய்கிறபாணமெல்லா மெழில்விசையாநீபொறுக்கி
அம்புகள்தான்பொறுக்கி யல்லியர்க்குநீகொடுத்தால்
வல்லமையாய்வந்தாலே மாலையிட்டுவைப்பேனென்ருர்
அவ்வார்த்தைதான்கேட் டருச்சுனனுந்தானெழுந்தான்
மாயமிருகமது வந்ததேயல்லிமுன்பு
புள்ளிமான்றனேயே பொற்கொடியாள்கண்டுவிட்டாள்
மானைத்துரத்தியேதான் வருகிருளேயல்லியரும்
காற்ருய்ப்பறந்ததுவே கானகத்தில்மானதுதான்
குதிரைசவாரிவிட்டுக் கொப்பனவேதுரத்தலுற்ருள்
கூடத்தொடர்ந்தானே கோபாலன்மைத்துனனும்
அல்லியரசாணியவள் அம்புகளெய்ததெல்லாம்
பொறுக்கித்தருவானே போர்விசயனருச்சுனனும்
காடெல்லாம்வேட்டையாடிக் களைத்தாளேயல்லியரும்
விடுவிடுநேரமது வெயிலானவேளையிலே
ஆலமரத்தடியில் அங்கேயிறங்கிவிட்டாள்
ஆரடிதாதியரே யாசனம்போடுமென்ருள்
அரைத்துணியைத்தானவிழ்த்து அருச்சுனனுங்கீழ்போட்டான்
குதிரைகட்டுமென்று கொப்பனவேதான்படுத்தாள்
அகில்மரந்தன்னுடனே யிணைத்துவைத்தார்குதிரைதன்னை
பாங்கியரேயென்னுடைய பாதம்பிடியுமென்ருள்
அருச்சுனராசதுரை யல்லியருக்கெதிரேவந்து
அல்லியம்மாள்தன்பாத மருச்சுனனும்பிடிக்கலுற்ருன்
கையால்பிடிக்கையிலே கணையாழிசுற்றிக்கொண்டான்
ஆடிதாதியரே யலங்காரத்தோழியரே
நீங்கள்-கற்றகதைதனிலே கதையொன்றுசொல்லுமென்ருள்
களைகள்தெளியவேண்டும் கதையொன்றுசொல்லுமென்ருள்

அருச்சுனன் அல்லிக்குக்கதைசொல்லல்.

ஆணுலமுகுமன்னைனல்லியர்க்குக்கதையுரைப்பான்
அல்லியரசாணி யம்மா துரைசாணி
குருகுலவம்மிசமாங் குந்திமைந்தனர்ச்சுபோம்

தூருவாசர்மந்திரத்தால் துலங்கவந்தகுமணிகள்
சந்திரகுலம்விளங்கவந்த தர்மரவரைந்துபேர்கள்
பாண்டுராசன்பெற்றெடுத்த பஞ்சவர்களைவருண்டு
தருமருக்குநேரிளையான் தாக்குடையவீமராசன்
வீமனுக்குநேரிளையான் வில்வாங்குமருச்சுனன்றான்
நெருப்பிற்பிறந்தபெண்ணும் நேரிழையாள்திரௌபதையை
எட்டாதவில்வளைத்து இளங்கொடியைமாலையிட்டான்
மீசைமுறுக்கழகன் விழியிற்கறுப்பழகன்
நாவிதனில்நட்சத்திரம் நயனவிழிப்பார்வையுள்ளான்
தோளிலேதுளசிமாலை தொப்பளிலேயமுர்தகலசம்
பல்லிற்பரசவீணை பாதத்திற்செந்தாமரை
முதுகிலேமட்சரேகை முழங்காலில்முத்துமாணிக்கம்
ஸ்திரிமன்மதன்றான் சிறுபெண்கள்மணவாளன்
முன்னிலும்பின்னழகன் மோககன்னிமணவாளன்
பின்னிலும்முன்னழகன் பெண்களுக்குமணவாளன்
அருச்சுனனைப்போலே அழகுடையான்யாருமில்லை
திக்குகளலபாலகரை செயம்பண்ணுஞ்சேவகன்றான்
இனிபிறக்கும்பெண்களுக்கு யேற்றமணவாளன்
என்றசொல்தான்கேட்டு இளங்கொடியாளல்லியம்மாள்
என்னகதைசொன்னாயென்று யேறமுகம்பார்த்தாள்காண்
மீசைகட்டும்பாவனையும் விழியழகுங்கண்டுவிட்டாள்

அருச்சுனன்பேரில் அல்லியரசாணி கோபித்தது.

நீ-ஆரடாஆண்பிள்ளையென் றாயுதத்தைத்தானெடுத்தாள்
காற்றாய்பறந்தானே கட்டழகனருச்சுனனும்
கத்தியெடுக்கையிலே காதவழியோடிவிட்டான்
நிற்கத்தரியாமல் நீலவர்னர்பக்கம்வந்தான்
அங்கேநடந்தசேதி யாண்டவர்க்குத்தானுரைத்தான்
கதைகளுஞ்சொன்னேன்யான் காலும்பிடித்தேனே
காலும்பிடித்தேனே களைகள்தெளியவில்லை
கணையாழிமோதிரத்தைக் கழற்றிவந்தேன்மாயவனே
மாலைப்பசுங்கிளியை மாலையிட்டுவையுமையா
உள்ளமுருகிறதே உற்றசீவன்போகுதையா
ஆவியுருகிறது ஆண்சீவன்போகிறதே
ஐந்துபாணந்தைத்தல்லவோ அடியேனெஞ்சுருகிறதே
ஆறுருகுபாணமது அடியேன்மார்புருகிறதே
பஞ்சிவிட்டதீப்போலே பதைத்துருகுதென்மனது
அவளைப்போலழகுடையாள் அவனியிலேகாண்கிறியேன்
பார்த்துமறியேனையா படத்திலேகண்டதில்லை
எழுத்துதச்சனவ னெழுதிவரவிட்டானோ
நஞட்டுதச்சனவன் மெய்ப்பாய்ச்சிருஷ்டித்தானோ

ஏதாய்நட்டித்தானே இயலானபிரமதேவன்
அல்லியென்பான்மெல்லியென்பான் வனந்தனிலேபெண்ணேயென்பா
காமக்கணையாலே கணைதாங்கிப்போய்விட்டான்
மூர்ச்சைபட்டுவிழுந்தானே முடிமன்னனருச்சுனனும்
அப்போதுதாதிமா ரத்தனைபேர்தோழிகளும்
பாங்கிமார்தோழியரும் பத்தினியாளருகில்வந்தார்
ஆடிதாயரோ யருகில்வந்தசெங்கமலம்
ஆரோவொருவனவன் ஆணாய்ப்பிறந்தவண்டி
காலும்பிடித்தானே கதைகளுரைத்தானே
தேடிப்பிடித்துவாரும் துண்டித்துப்போடுகிறேன்
ஆங்காரப்பட்டவனை ஆக்கினைகள்செய்யவேண்டும்
ஆயிரந்தோழிகளை யங்கனவேதேடவிட்டாள்
எங்கெங்குந்தேடியே யினியவிடமாராய்ந்தார்
கள்ளன்திருடனைத்தான் காணோமென்றுவந்துரைத்தார்
பேயோபசாசோதான் பின்றொடர்ந்துவந்ததம்மாள்
ஆணுருவாய்த்தோன்றிற்றே ஆச்சியரேயுந்தனுக்கு
அதற்பழுதுமில்லை ஆச்சியரேயெழுந்திருங்கள்
எதிருள்புரவியின்மே லனேகசனஞ்சூழ்ந்துவர
பாங்கியருந்தோழியரும் பக்கம்புடைசூழ
காடுசெடிகள்தாண்டி கரிபமலைதான்தாண்டி
மாளிகைவாசலென்று மண்டபம்போய்ச்சேர்ந்தார்கள்

ஸ்ரீகிருஷ்ணபகவான் படமெழுதிக் காட்டியதும்

அருச்சுனன் தேடுவது.

அப்போதுகரியமா லாலோசனைசெய்து
அல்லியரைப்போலாக அழகுபடமெழுதி
படங்களெழுதியே பாரளந்தமாயவரும்
குளத்தங்கரையிலுற்ற கோங்குமரந்தன்னில்
உயர்ந்தமரந்தனிலே உலகளந்தார்கட்டிவைத்தார்
தண்ணீரில்நிழல்தெரிய சுவாமியங்கேகட்டிவைத்தார்
அர்ச்சுனரைதட்டியேயரிராமர்தானெழுப்பி
காண்டீபா அர்ச்சுனனே களையெனக்குவருகிறது
தண்ணீருங்கொண்டுவந்து தந்தாயேயாமாகில்
மாலைப்பசுங்கிளியை மாலையிட்டுவைப்பேனடா
என்றுசொல்லக்கேட்டு எழுந்தானருச்சுனனும்
கமண்டலந்தைதானெடுத்துக் கடுகியேயோடலுற்றான்
வனத்தினிற்குளந்தேடி வருகிறானேயருச்சுனனும்
தண்ணியிலிறங்கும்போது தையலரைக்கண்டுவிட்டான்
அல்லியரைத்தான்பார்த்து அருச்சுனனுமேதுசொல்வான்
தண்ணியில்போயிருக்கத் தையலரேகாரியமேன்

என்னிலும்புருஷனடி எங்கேகிடைப்பான்காண்
கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கத்தாதியுண்டு
ஆடவென்றூஞ்சலுண்டு அயர்ந்திருக்கமெத்தையுண்டு
பந்தாடிச்செண்டாடிப பள்ளாங்குழியாடி
அம்மானேரரடியேதா னமர்ந்துநீவீற்றிருப்பாய்
தேனேபசுங்கிளியே சிங்காதனம்வீற்றிருப்பாய்
உன்சொல்லுமேலாக உத்தமியேநானினைப்பேன்
உன்னாசைகொண்டுநான் உழன்றுதிரிகிறேனே
உன்மாயமருந்தாலே தாயைமறந்தேனே
அண்ணனைத்தம்பிமாரை யனைவரையுநான்மறந்தேன்
காமக்கணையாலே களைதாங்கிப்போகிறேனடி
ஆசையல்லாமுன்மேலே யலையுதடியென்சிவன்
வாயைத்திறவாயோ மறுவார்த்தைசொல்லாயோ
முத்தானவாய்திறந்து உத்தாரஞ்சொல்வாயோ
தாளைத்திறவாயோ தனிவார்த்தைசொல்லாயோ
வாயைத்திறந்தாயானால் வச்சிரமுதிருமடி
வச்சிரமுதிர்ந்தாலே வாரியெடுக்கிறேனடி
தாளைத்திறந்தாலே தங்கமுதிருமடி
தங்கமுதிர்ந்தாலே தடவியெடுக்கிறேனடியம்மாள்
முத்துஉதிர்ந்துதானால் முந்தாணியேந்தடி
உன்சித்திரவாய்திறந்து செப்பாயோவார்த்தை
மார்போடுமார்பணைந்தால் மகாலியதிருமடி
தோளோடுதோளணைந்தா-தங்கள்தெரியுமடி
நான்-எத்தனைநேரமும் இதக்கங்கள்சொல்லுவேன்யான்
—சொல்லுங்கூம்மாடி சற்றானுமிற்றுவிழும்
உன்மனதுகரையவில்லை மாலைப்பசுங்கிளியே
தண்ணீரில்நானிறங்கித் தழுவிப்பிடிப்பேனடி
என்றுகுதித்தானே இளவிசையராசனவன்
மூர்ச்சைப்பிடித்தவனும் முழுகித்தடவலுற்றான்
சாமநேரமட்டாகத் தண்ணீரில்தடவினனே
தவளையும்பாம்புகளும் தடவிவலித்தெடுத்தான்
அலுக்கச்சலித்தவனு மருச்சுனனும்வெளியில்வந்தான்
கரையின்மேல்வந்தவனும் கட்டழகனேதுசொல்வான்
என்றனைமோசஞ்செய்து எங்கேபோனாளென்றறியேன்
போனவிடமறியேன் போய்ப்பதுங்குந்தாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
என்றுவிசாரமிட்டு இரங்கியவன்பார்க்கையிலே
தண்ணீர்தெளிந்தபின்பு தையலரைப்பார்த்துவிட்டான்
இந்நேரந்தடவினேனே யெங்கிருந்தாயேந்திழையே
என்னவித்தைசூத்திரங்க ளிளங்கொடியேகற்றவள்காண்
மாயமறிந்தவளோ மந்திரங்கள்கற்றவளோ

மலையாளவித்தைகளை மந்திரத்தைகற்றாயோ
எந்திழையேயுனைபிடிக்க என்கையாலாகாதோ
மறுபடியுங்குதித்தாரே மன்னன் துரைராசாவும்
அ[illegible]வளால்மாயவனார் அங்கனையோடிவந்து
அப்போ[illegible]பவிழ்த்தவரும் பாரளந்தார்போய்மறைந்தார்
பாங்கிமா[illegible]கைமட்டும் நல்விஜையராசதுரை
ஆடிதா[illegible]னை குளங்கலங்கிவிட்டதுபோல்
ஆரோமலெ[illegible]விருனே முடிமன்னராசனவன்
காலும்பி[illegible]த்காணாம லலைந்துவிசாரமிட்டான்
தேடிப்பிடி[illegible]ரமாச்சு மாயவரென்சொல்லுவாரோ
ஆங்காரப்ப[illegible]மிட்டு கமண்டலத்தில்நீர்முகந்து
ஆயிரந்தோ[illegible]ரகில் வந்தானேயர்ச்சுனனும்
எங்கெங்கு[illegible]ச்சுனரே இன்னேரமேதுசெய்தாய்
கள்ளன் திருட[illegible]ச்சே தண்ணீர்கொண்டுநீவரப்போய்
பேயோபசாசே[illegible]ருந்தீர் காணர்ச்சுனரே
ஆணுருவாய்த்தே[illegible]டியேயொருவார்த்தை
அதற்பழுதுமில்லை ஆ[illegible]போது தையலைக்கண்டேனையா
எதிருள்புரவியின்மேல[illegible]ரிசித்ததெந்தனுக்கு
தனை[illegible]யருந்தோழியருட
குதித்துதட[illegible]ன கரம்பனையைக்காணாமல்
மூழ்கித்தடவினேன்யான் மொய்குழலைக்காணாமல்

ஸ்ரீகிருஷ்ணபகவான்நித்திரைசெய்யவும் அருச்சுனராஜன் அல்லியைத் தேடிப்போனது

அவ்வார்த்தைதான்கேட் டரிராமரேதுசொல்வார்
அல்லியற்மேல்சித்தமது அபரவில்லையருச்சுனரே
களையாய்வருகிறது காண்டீபாவெந்தனுக்கு
நித்திரைசெய்தபின்பு நேரிழையயுந்தனுக்கு
மாலைப்பசுங்கிளியை மாலையிட்டுவைப்பேனடா
என்று-வாழ்விசையன் துடைமேலே மாயவனார் தான்படுத்தார்
கள்ளக்குறட்டைவிட்டு கரியமால் தூங்கினார்
அப்போதுவாழ்விசைய னருச்சுனனுமேதுசொல்வான்
சிரசைநழுவவிட்டுத் தேர்விசையன் தானெழுந்தான்
பாராங்கல்லை தூக்கிக்கொண்டு பார்த்திபன்வருகிறானே
எம்பெருமாள்மாயவரும் எண்ணாதுமெண்ணுகிறார்
தலைமேலேகல்போடத் தார்விசயன் தானினைத்தான்
என்றுகலங்கி யெண்ணமிட்டுத்தானிருந்தார்
கல்லையெடுத்துவைத்து காண்டீபனர்ச்சுனனும்
தலைக்குயரம்வைத்து சுவாமியைப்படுக்கவைத்தான்
அல்லிமேற்சிந்தைகொண்டு அருச்சுனனும்போகலுற்றான்
மதுரைக்குப்போகவென்று மாதுதனைக்காணவென்று

காடுசெடி தாண்டிக் கடுகிவருகையிலே
அருச்சுனன்போனசேதி யறிந்துமேமாயவரும்
அருச்சுனராசனுக் கனர்த்தம்வந்துநேர்ந்ததென்று

ஸ்ரீகிருஷ்ணபகவான் குறத்தியுருக்கொண்டு வருகி.

மாயன்பெருமாளும் வடிவெடுத்தாரந்நேரம்
செக்கச்சிவலையாய்ச் சிறுபெண்குறத்தியானார்
அக்குமணிகொக்குமணி அழகானபாலமணி
பச்சைமணிபாலமணி யாங்காயலங்கரித்து
குறத்தியரைபோலாகக் கொற்றவனார்மாயவரும்
கண்டானேகுறத்தியரைக் கட்டழகனருச்சுனனும்
ஆச்சிக்குறத்தியரே யடியேன்யான்தெண்டமம்மா
கைபார்த்துகுறியுரைக்கக் கட்டழகிவல்லவியா
மனதில்நினைத்தகுறி சொல்வாயோமாதாவே
எந்தவூருங்களது எனக்கறியச்சொல்லுமென்றான்.

குறம்.

தினதெந்திணாதினதெந்திணாதினதெந்திணாதினா
தெந்தாதினாதினாதினதெந்திணாதினா

எந்தனதுதிருநாடு கேட்கிறேயோதம்பி
ஏற்றமுள்ளஇந்திரனாராளுமெங்கள்நாடு
சந்திரர்கள்சூரியர்கள் தவம்புரியும்நாடு
தவமுனிரிஷிகளெல்லாம் வாழுமெங்கள்நாடு
கொச்சிமலைகுடகுமலை யெங்களதுநாடு
குமரேசர்வாழுவது யெங்களதுநாடு
பச்சமலைபவளமலை யெங்களதுநாடு
பரம்சிவன்வாழுவது யெங்களதுநாடு
வங்காளஞ்சிங்காள மராட்டியெங்களதுநாடு
வளம்பாடிகுறையுரைக்க வந்தேனடாதம்பி
பசிகாலமானாலே பழங்கூறிவருவோம்
பரமசிவனுமையாட்குங் கைபார்க்குங்குறத்தி
ராமக்காளட்சுமக்காள் பொம்மக்காளென்பேர்
நலமறிந்துகுறியுறைப்போம் நட்டணையாய்நாங்கள்
உண்மையாய்க்குறியுரைப்போம் தண்மையில்லைதம்பி
உன்னுணைஎன்னுணை யென்றவளுஞ்சிரித்தாள்

வேறு.

ஆனால்கேள்கட்டுவச்சி யடியேனொருவார்த்தை
தெய்வக்குறத்தியென்றால் சொல்லுங்குறியெந்தனுக்கு
உண்மைக்குறியுரைத்தால் உச்சிதங்கள்தருவேண்டி
காதிலிடுங்குண்டலமும் கையிற்பவுத்திரமும்
நான்-உடுத்துமுடைமான முந்தனுக்குத்தருவேண்டி

கைபார்த்துகுறியுரைம் கட்டழகியெந்தனுக்கு
காம்க்குறத்தியவள் நலமாகவேதுசொல்வாள்
வண்மைகுறத்தியவள் வாய்திறந்தேதுசொல்வாள்

குறத்தி அருச்சுனனுக்கு குறிசொன்னதுகுறம்

தினதெந்தினதினதெந்தினதென்னதினதின
தெந்நாதிநாதின தினதெந்தினதின

திங்கள்மதிபிறைசூடுஞ் சிவனுடையமகனே
திருத்தணிகைவாழ்முருகா சேவையருள்வேண்டும்
வனக்குறத்திவள்ளியம்மை வந்துதவவேண்டும்
மலையாளத்தஞ்சியம்மை வாக்கருளவேண்டும்
அலர்மேலுமங்கையரே மலைமேலுஞ்சிந்தை
அனைவோரும்வந்துகுறி யன்புதாவேணும்
ஆகாசவாணிதுர்க்கை ஐயனார்பிடாரி
அம்மைவள்ளியுடமையவளு மினியகுறிசொல்லும்
பொங்கல்நயினுருங்களும் பொற்கொடியேதெய்வம்
பூவாடைக்காரியம்மை புகழ்ந்துகுறிசொல்லும்
தெய்வங்களைநினைத்தாலே சிலிர்த்துக்கொள்ளுதுடம்பு
திரேகமெல்லாம்மயிர்குச்சி சிலிர்க்கிறதேதம்பி
வாடைமணம்வீசுதடா ஐவர்வந்தாப்போலே
மயக்குகிறதென்னுடம்பை சன்னதங்கொண்டதுபோல்
கூண்டுகொண்டுகவியுதடா கொற்றவனேயெனக்கு
கோலவிழிதுடிக்கிறது குறிகள்சொல்லுவேன்கேளு
சந்திரகுலராசாக்கள் தருமரைவர்திங்கள்
தரணிமுழுதாளுகின்ற தருமர்தம்பிநிதான்
சிலைநுதலனவடிவழகன் தேர்விஜயன்நிதான்
தீர்த்தயாத்திரைபோகவென்று தோழனுடன்வந்தாய்
வடிவழகிசிலைநுகலாள் தென்மதுரைவாழும்
மாதங்கஅல்லியின்மேல் மையல்கொண்டாய்நியும்
ஆறுயிரம்பாண்டியற்கு அரியதுரைமகளாம்
அல்லியின்மேலாசைகொண் டலையுகிறாய்நியும்
பொய்யடாவென்குறிகள் மெய்யோடாபுகல்வாய்
புண்ணியனேதர்மர்தம்பி பொறுமையுடன்சொல்வாய்
என்றவனைத்தான்பார்த் திணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போலே யிடைதுவளநகைத்தாள்

வேறு.

மெய்தான்காணுச்சியரே விளம்பினுயெந்தனுக்கு
கண்டதுகண்டாப்போல் கட்டுவச்சிசொல்லிவிட்டாய்
பார்த்ததுபார்த்தாப்போல் பட்சமாய்சொல்லிவிட்டாய்
தெய்வக்குறத்திநி தெளிவானகட்டுவச்சி
உள்ளக்குறியெனக்கு வுத்தமியேநியுரைத்தாய்
அல்லியரைமாலையிட்டு அழகுமணஞ்சூட்டுவேனு

என்மனதுக்கேற்றபடி வருவாளோ அல்லியவள்
என்மீதிலிச்சைகொண்டு இசைந்துவரப்பாருமம்மா
பாதம்பணிந்தானே பார்த்திபனருச்சுனனும்
ஆனல்கேளுந்தம்பியரே யல்லிவருவதற்கு
மூன்றுவிதக்குளிகையது முடியன்றுநான்றருவேன்
அம்மருந்தைநீவாங்கி யல்லிபுரம்போய்ச்சேர்ந்து
தென்மொழியாள்பட்டணத்தில் திருக்குளத்திற்போய்ச்சேர்ந்து
நான்தந்தமருந்தெடுத்து தண்ணீரில்நீயுரைத்தால்
அல்லியம்மாள்பேரைச்சொல்லி யம்மருந்தைநீயுரையும்
மருந்துகரையும்போதவள் மனதுகரையுமோடா
குளிகைகரையும்போதவள் குணமுந்திரும்புமோடா
அல்லிமனம்வந்து அழகுமணஞ்செய்திடுவாள்
பொம்மக்காள்பேரைச்சொன்னால் திம்மக்காள்நேர்ந்துவிடும்
ராமக்காள்பேரைச்சொல்ல லட்சுமக்காள்நேர்ந்துவிடும்
பொய்யல்லவென்மருந்து புண்ணியனேநான்தருவேன்
உந்தனுடையான முடித்தியதைத்தாறுமென்றாள்
காதிலிடுங்குண்டலமும் கையில்பவித்திரமும்
கச்சைகளுந்தட்டிகளுஞ் சுழட்டிகொடுத்தானே
இந்தமருந்துதான் பலியாமற்போனுக்கால்
உன்னை-எங்கேகண்டுதேடுவேனுச்சியரேசொல்லுமென்றான்
ஆனல்கேள்தம்பியரே யற்பமாய்போச்சுதானல்
நாலுமலைக்கும் நடுவேயடாவென்மலைதான்
எழுகுடிசைகளில் எதிர்குடிசையெந்தனது
ராமக்காள்பொம்மக்காள் லட்சுமக்காளென்றழைத்தால்
உன்னுடைமையான்தருவேனுத்தமனேஅஞ்சாதே
அருச்சுனன்றரித்திருந்த ஆபரணமுள்ளதெல்லாம்
பட்டுக்குல்லாதட்டுகச்சை பலவிதவுடமைகளும்
சுழற்றிக்கொடுத்தானே கட்டழகருச்சுனனும்
வாங்கிநடந்தாளே மலைக்குறத்திதனைப்போலே
ஆணழகராசதுரை அர்ச்சுனன்வழிநடந்தான்
உள்ளேமனமகிழ்ந்து உத்தமனும்போகலுற்றான்
காடுசெடிதாண்டி கடுகிவந்தான்தென்மதுரை
அல்லிப்பெருமாளவள்பிறநதபொய்கைகண்டான்

அருச்சுனன்-அல்லிப்பிறந்த திருக்குளத்தில் மருந்துரைத்தது

பவளக்கட்டுப்பொய்கைதனில் படியிலிறங்கியவன்
வண்ணமருந்தெடுத்து தண்ணீரிலுரைக்கலுற்றான்
அல்லியென்பான்மெல்லியென்பானந்தனிலேபெண்ணேயென்பான்
வருவாளோ அல்லியென்று வாய்திறந்துபெண்ணேயென்பான்
மருந்துகரையும்போ தவள்மனதுகரையாதோ
குளிகைகரையிலே குணமுந்திரும்பாதோ
சித்தமிரங்கியே தேடியேவருவாளோ

எப்போமனம்வருமோ என்னருகில்வாராயோ
காமன்கணையாலே கணைதாங்கிப்போறேனே
மன்மதபாணமது மார்பைபிளக்குதடி
சித்தசன்தொட்டகணை சிறுமார்புருகுதடி
உன்னாசைகொண்டுநான் உழன்றுதிரிகிறேனே
அல்லியென்பான்மெல்லியென்பான் னனந்தனிலேபெண்ணேயென்(பான்
வருவாளோஅல்லியென்பான் வாய்திறந்துபெண்ணேயென்பான்
அல்லிஅல்லியென்றுசொல்லி அலைகிறானர்ச்சுனனும்
வண்ணமருந்தெடுத்து தண்ணீரிலுரைக்கலுற்றான்
அல்லிபெருமா ளவளுடையதாதியர்கள்
ஆயிரந்தாதிமார்க ளாரணங்குதாமெழுந்து
தங்கக்குடமெடுத்துத் தண்ணீர்க்குவருகிறாள்
பவளக்கட்டுதிருக்குளத்தின் படியோரம்வந்தார்கள்
மருந்துரைக்கும்வண்மைகளும்வார்த்தைகள்சொல்கிறதும்
அல்லியரைவைகிறதும் அவ்வார்த்தைகேட்டார்கள்
இடிவிழுவான்சொன்னதெல்லாம் எல்லவருங்கேட்டார்கள்
அல்லிபெருமாளை யரசாளும்நாயகியை
வம்புதும்புஞ்சொல்வார்கள்மண்டலத்திலாருமில்லை
அல்லியென்றுபேர்சொன்னால் அழுதபிள்ளைவாய்மூடும்
ஆடிடும்வார்த்தையெல்லாம் மாச்சியற்கேசொல்லவென்று
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
அல்லியம்மாள்முன்னாலே அடிபணிந்துதெண்டனிட்டார்
ஆர்பணிதாதியரே அறியவுரையுமென்றாள்
ஆர்பணியுமல்லநா னடியேன்திருப்பணிதான்
தங்கக்குடமெடுத்து தண்ணீர்க்குப்போனோமம்மா
பவளக்கட்டுகுளந்தனிலே படியிலொருவனம்மா
வண்ணமருந்துகளைத் தண்ணீரிலுறைக்கின்றானே
ஆகடியம்சொல்லுகிறான் அழும்புகளும்பேசுகிறான்
வம்புதும்புபேசுகிறான்வாய்பழுதுஞ்சொல்லுகிறான்
காதாரக்கேட்டோமம்மா கனங்குலைந்துவந்தோமம்மா
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிவெகுகோபமதாய்
எட்டிப்பழம்போலே இருகண்கள்தான்சிவந்து
செந்தலைநாகம்போற் சீறியவள்கோபமதாய்
எழுபிராயந்தனி லெதிர்த்துவந்தநின்முகனை
நின்முகனைக்கொன்றுநான் நீலிபட்டமாளுகிறேன்
அடிபெண்ணேயல்லியென்பார் ஆருமொருவரில்லை
பொம்மைவிருதுகட்டிப் பூமியரசாளுகிறேன்
பாலைக்கறந்துதான் பட்டணத்தில்வைத்தாலும்
பறக்கின்றகாகமது பாராதுதலையெடுத்து

ஐம்பத்தாறுகாதமு மென்னுக்கினைகள்மெத்தவுண்டு
அஞ்சாமல்வந்துமிங்கே யழும்புசொன்னாரடிதால
*பாக்கியிலும்நல்லவளே பவளசேனை நீகேளும்
என்னவிதமாயவனை யாக்கினைகள்செய்திடுவோம்
என்றுமவள்கேட்க யேதுசொல்வாள்பவளசேனை
கட்டும்விருதருத்துக் கலியாணம்செய்வதற்கு
மண்டலத்துராசாவோ வானவரோதேவரோதான்
மணஞ்சூட்ட வந்தவன்போல் மாதாவேகாண்கிறது
எண்ணாதயோசனைக ளெண்ணியவள்தன்மனதில்
அல்லிப்பெருமாள்தனக் காலோசனையேதுசொல்வாள்
விடிவிடுநேரத்திலே வெயிலானதேளையிலே
வெண்பாமணலிலே போட்டுபறட்டுமென்றாள்
ஆகொடும்பாவிகளை ஆற்றில்புறட்டினாலே
சென்மமுருகியவன் செத்துமடிந்திடுவான்
ஆரடிதோழியரே ஆயிரம்பேர்வாருங்கள்
ஆற்றுமணல்தனிலே அவனைப்புறட்டுங்கள்
வெம்பாமணல்தனிலே விழுத்துப்புறட்டுங்கள்
கட்டியுருட்டுங்கள் கள்ளன்திருடனைதான்
செத்துமடிந்தபின்பு சேதிவந்துசொல்லுமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட் டாயிரந்தோழியர்கள்

அருச்சுனனுக்கு அல்லியரசாணி முதல்தெண்டனையிட்டது

ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
ஆயிரம்தோழிமார்க ளருச்சுனரைத்தானெடுத்தார்
ஆற்றுமணல்தனிலே அருச்சுனரைப்போடவந்தார்
காண்டீபனர்ச்சுனர்க்கு கனமோசம்வருகுதென்று
ஆயன்பெருமாளும் யாரைநினைக்கலுற்றார்
சூரியபகவானைத திருபாலுந்தானினைந்தார்
கானலுறைக்கவேண்டாம் காண்டீபனருச்சுனர்க்கு
அருச்சுனரைக்காருமென்று ஆயரும்தோத்தரித்தார்
அப்போதுதோழியர்க ளாற்றோரம்வந்துநின்று
ஆற்றுமணலிற்போட் டருச்சுனரைப்புரட்டினார்கள்
கொற்றவனாருச்சுனற்கு குளிர்ந்தசலம்போலிருக்கும்
ஆயிரந்தோழியற்கு மனல்கொண்டுவீசுதங்கே
நெல்லிபழம்போலே நெருங்கிற்றேகொப்பளங்கள்
சங்கப்பழமதுபோற் சரீரமெங்கும்கொப்பளங்கள்
ஆத்தண்டதோழிகளும் அலைகுலைந்துஓடுகிறார்
அப்போதுஅருச்சுனரும் ஆணழகனேதுசொல்வான்
அல்லியரும்நானுமா யமர்ந்துவிளையாட
மருவிவிளையாடுதற்கு மண்டபந்தானில்லையோ
ஆற்றிலேவந்துநீ யமர்ந்துவிளையாடிருப்பாய்

எப்போதுதான்வருவா ளென்னுசைதீர்வதற்கு
மனதுவருவதெப்போ மருவியணைவதெப்போ
சித்தமிரங்காதோ சற்றேமனம்வருமோ
என்றுபுலம்புசிரா ணியலானவர்ச்சுனனும்
அப்போதுதாதிமா ராரணங்குவோடிவந்து
அல்லியர்க்குதெண்டனிட்டு ஆரணங்குமையதுரைப்பாள்
வெம்பாமணல்தனிலே வேகவேபுரட்டினோம்யாம்
ஆற்றுமணல்போட்டு அருச்சுனரைப்புறட்டும்போது
ஏங்கள்சரீரமெல்லாஞ் சங்கப்பழம்போலாச்சு
நெல்லிப்பழம்போல நெருங்கிற்றேகொப்பளங்கள்
அவனுக்குவாட்டமில்லைவதக்கமில்லை மாபாவியானவர்க்கு
அல்லிஅல்லியென்றுசொல்லி அலைகிறான்மாபாவி
உன்மேலேசிந்தையாய் உருகிப்புலம்புகிறான்
அல்லிபெருமாளும் ஆரணங்குமேதுசொல்வாள்
வானஞ்சுழலவேதான் மருந்துண்டோபாவிகையில்
என்னமருந்தறிவான் இடிவிழுவான்பாவியவன்
எந்தவிதத்தினாலே அவனைநாம்கொல்கிறது
பாங்கிகளில்நல்லவளாம் பவளசேனையேதுசொல்வாள்
தூக்குமரத்தில்போட்டுத் தூக்கிவிடச்சொல்லுமென்றாள்
செங்கமலதாதியரை தோழியரைதானழைத்து
ஊருக்குமேற்காக ஒருகாதவழிதனிலே
தூக்குமரஞ்சொப்பனிட்டுத் தோழியரேபோடுமென்றாள்

அருச்சுனனுக்கு அல்லி இரண்டாவதுதெண்டனையிட்டது

அவ்வார்த்தைதான்கேட் டருசிருந்தசெங்கமலம்
திடுக்கென்றெழுந்திருந்து தோழியருந்தானுமாக
தச்சன்மகளாரைத் தையலருந்தானுமாக
தூக்குமரம்சொப்பனிட்டு ஜோடித்துவந்தார்கள்
ஊருக்குமேற்காக ஒருகாதவழிதனிலே
கொண்டுவந்துதூக்குமரம் கொப்பனவேநட்டார்கள்
ஏணியுஞ்சாத்தி இனியகயிர்போட்டார்கள்
அர்ச்சுனராசாவை அங்கேயெடுத்துவந்தார்
சுற்றிவளைந்தார்கள் சூழ்ந்தார்கள்தாதியர்கள்
ஏணிமேலேறுமென்றார் இயலானமன்னவனை
அப்போதுஅர்ச்சுனனு மாணழகனேதுசொல்வான்
பார்த்துமறியேனடி பாருலகில்கண்டதில்லை
கண்டுமறியேனடி காதாரகேட்டதில்லை
போட்டுமறியேன்காண் புதிதாகதோணுகுது

எனக்குத்தெரியும்வகை இன்பமாய்க்காண்பியுங்கள்
ஏணிமேலேறி ஏடுத்துக்கயிர்பூட்டிக்கொள்ளு
இந்தவிதமென்றுசொல்லி எந்தனுக்குகாண்பியுங்கள்
அறியாதயெந்தனுக்கு அறியப்படுத்துங்கள்
இவ்வார்த்தைதான்கேட் டெழுந்தாளேசெங்கமலம்
சுரணகெட்டபாதகனே தெரியாதோவிந்நடத்தை
இதோபாருமென்றுசொல்லி ஏணிமேலேறினளே
கயிற்றையெடுத்தவளுங் கழுத்திலேபூட்டிக்கொண்டு

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பெருச்சாளிரூபங்கொண்டு

ஏணியைக் தள்ளிவிட்டது

அதுசமயம்பார்த்தாரே அரிராமரெம்பெருமாள்
பெருச்சாளிபோலேவந்து புரட்டிவிட்டாரேணிதன்னை
சுருக்குவலித்துக்கொண்டு தொங்குகிறாள்தோழியவள்
காலையுதரிக்கொண்டு கண்விழிபிதிங்கிக்கொண்டாள்
நாவையிழுத்துக்கொண்டு நல்லுயிர்தான்போச்சுதங்கே
செத்துமடிந்தாளே செங்கமலதோழியவள்
காண்டீபனர்ச்சுனனும் கட்டழகர்யேதுசொல்வார
காலையுதறுவதுங் கண்பிதிங்கிநிற்பதுவும்
நாக்கைபிதுக்கிக்கொண்டு நல்லவூஞ்சலாடுவதும்
இவ்வளவோசூஸ்திரங்க ளெனக்குத்தெரியவரும்
இனிமேல்தெரியவரும் யிரங்கிவாராதோழியரே
ஐயோதெய்வமென் றழுகிறார்தோழியரும்
ஓட்டமோடையுமாக ஓடிவந்தார்ஆச்சியண்டை
மகுடத்துரைச்சியரே மாதாவேநீர்கேளும்
தூக்குமரத்தினிலே தோழியவள்போடபோன
செங்கமலதோழியவள் தூக்கில்மடிந்தாளே
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமனதுநொந்து
பாங்கியிலுநல்லவளே பந்ளசேனைநீகேளும்
என்னவிதமாக அவனைநாம்கொன்றிடலாம
ஆரடிமந்திரிமே ஆலோசனைசொல்லுமென்றாள்
அப்போதுபவளசேனை யாலோசனைசொல்லுகிறாள்

அர்ச்சுனனை மூன்றுந்தரங் காளிக்குபலியிடச்செய்தது

வடவாசல்செல்லியம்மாள் மகாகாளியம்மனுக்கு
பொங்கலையிட்டுநீங்கள் பொலிபோட்டுவாருங்கள்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயிரந்தோழிமார்கள்
சீக்காயுவெண்ணெயுடன் தேங்காயுமிளநீறும்
புதுபானையரிசிகளும் புட்பமுஞ்சந்தனமும்
கருப்பூரஞ்சாம்பிராணி காளிக்குக்கொண்டுவந்தார்

ஆரடிமாதிகளே அழைத்துவாவோச்சப்பெண்ணை
இவ்வளவில்தாதிமார்க ளிவர்முடுகியோடுகிறார்
ஆயன்பெருமாளும் மவ்வார்த்தைதானறிந்து
கார்மேகவர்னரும் காளியண்டையோடிவந்தார்
வாருமம்மாள்தங்கையரே வார்த்தையொன்றுநீர்கேளும்
அல்லிபெருமாளை அழகுமணஞ்சூட்டவென்று
காளையந்த அர்ச்சுனனும் கனவேழங்கொண்டுவந்தான்
அர்ச்சுனராசனென் றறியாமலல்லியம்மாள்
காளியம்மாவுந்தனுக்கு காவெடுக்கச்செலவுதந்தாள்
ஓச்சப்பெண்போலாக உத்தமியேவருவேனம்மா
பூசையானபிற்பாடு பொங்கலிட்டுதீர்ந்தபின்பு
என்மேசேசந்ததுமா யிந்தபொலிவேண்டேனென்பேன்
என்வார்த்தைவேண்டாமென் றுன்வார்த்தைகேட்பார்கள்
நானுரைத்தபாவனைபோல் நாயகமேநீயுரையும்
அர்ச்சுனராசனுக் கழிவுவந்ததானுக்கால்
வெற்றிமதயானை வீமனுன்னைபிழைக்கவொட்டான்
வச்சிரகோபகெதையால் மண்டிபோட்டுத்தலையுடைப்பான்
தண்டாயுதமெடுத்துத் தாக்குடையவீமராசன்
துண்டந்துண்டமாகவுனைத் துணித்திடுவான்வீமராசன்
கத்தியெடுத்துன்னைக் கழுத்தையறுத்திடுவான்
காளியென்றுபாராமல் கனத்தவுயிர்வாங்கிடுவான்
காளியற்குதாமுரைத்துக் கரியமாலதானடந்தார்
ஓச்சப்பெண்போலாக வுலகளந்தார்வடிவெடுத்தார்
ஓாகத்திவாசலிலே உட்கார்ந்திருந்தாள்காண்
ஓட்டம்நடையாக வோடிவந்தார்தாதியர்கள்
கோவிலுக்குப்போகவேணும் குச்செடுத்துவாருமென்றார்
திறவுகோல்தானெடுத்து தேன்மொழியாள்போகலுற்றாள்
கடுக்முடிகியே காளிகோவில்வந்தார்கள்
கோயில்கதவுதன்னைக் குச்சிட்டுதாள்திறந்தாள்
குளத்தில்மூழ்கிவந்து கொம்பனையைப்பூசைசெய்தாள்
அபிஷேகஞ்செய்துவைத்தா ளாங்காரக்காளியற்கு
செந்நெலரிசிகொண்டு தேவியர்க்குபொங்கலிட்டார்
கோயில்திருவிளக்குக் குறைவெல்லாமேற்றினார்கள்
தேங்காய்உடைத்தார்கள் தீபதூபந்தான்கொடுத்தார்
அருச்சுனரைக்கூட்டிவந்து அம்மனுக்கெதிரேவைத்தார்
மண்பிறக்கும்முன்பிறந்த வழக்காடும்நல்லசெல்வி
யுகம்பிறக்கும்முன்பிறந்த வுத்தண்டபத்திரகாளி
காய்ந்தமழுவேந்தும் ர்த்தனிடதேவியரே
எந்தமழுவேந்தும் ஈஸ்வரனார்தேயரே
வடவாசல்செல்லியம்மாள் மனிதர்பலியேர்வைகொள்ளும்

வசனிக்கும்போதையிலே வந்துவிடும்சந்ததங்கள்
ஒச்சப்பெண்மேலே யுதறுதுதெய்வம்வந்து
ஆண்காற்றடியாத அல்லிமலர்நாயகிக்கு
அவளுடையயெல்லைகாக்கு மாங்காரக்காளியல்லோ
மதுரையைக்காத்திருக்கும் மண்ணுப்பிடாரியல்லோ
அல்லியருக்காகாத யெந்தனுக்குமாகாது
இப்பலியான்வேண்டே னேர்வையில்லையெந்தனுக்கு
பெண்பலியீந்தாலே இப்பவேயேர்வைகொள்வேன்
ஆண்பலியீந்தாலே யனர்த்தம்பண்ணிபோட்டிடுவேன்
மதுரைக்குடிபடையை மாளபலிபோட்டிடுவேன்
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வார்தாதியர்கள்
நீசொன்னவாக்கியங்கள் நிச்சயமுமாகாது
காளியம்மன்வாயாலே கடுகிவுரைத்தாலே
ஈஸ்வரியாள்வாக்குரைத்தால் எல்லார்க்குநிச்சங்காண்
என்றுபணிந்தார்கள் இயலானதாதியர்கள்
அப்போதுகாளியம்மன் அப்படியேவாக்குரைத்தாள்
அஞ்சிபயந்தார்க ளல்லியிடமோடிவந்தார்
மகுடதுரைச்சியற்கு வந்துதெண்டம்பண்ணினார்கள்
காளியற்குப்பூசைபண்ணிக் கனத்தபொங்கலிட்டோமம்மா
ஆண்பலிவேண்டேனென் றுடினாள்சந்ததமாய்
அவளைநம்பாமல் அம்மன்சொல்லவேண்டுமென்றாள்
அப்படியேகாளியம்மன் யாண்பலிகொள்ளேனென்றாள்
அல்லிபெருமாட் காண்காற்றுமாகாது
எந்தனுக்குமாகாது என்றாளேகாளியம்மன்
ஆண்பலிதந்தாலே யனர்த்தம்பண்ணிவிடுவேனென்றாள்
மதுரைக்குடிபடையை மாளபலிகொல்வேனென்றாள்
இவ்வார்த்தைகேட்டவுட னேதுசொல்வாளல்லியம்மாள்
வானஞ்சுழல்வதற்கு மருந்துவித்தைகற்றவனோ
பூமிசுழல்வதர்க்கு ்பொடிகளறிந்தவனோ
என்னமருந்தறிவா னிடிவிழுவானென்றறியேன்
எந்தவிதத்தினாலே யேந்திழையேகொல்வமடி
பாங்கியிலும்நல்ல பவளசேனையேதுரைப்பாள்
பூதக்கிடங்கிலே போட்டடையும்பாதகனை

அர்ச்சுனனுக்கு நான்காவது தெண்டனையிட்டது

ஆடிதாதிகளே யலங்காரத்தோழிகளே
பூதக்கிடங்குதனிற் யோட்டடையுமென் றுசொன்னாள்
எம்பெருமாள்மேகவானர் இவ்வயணந்தாமறிந்தார்
பூதங்கள்தன்னருகே பெருமாளும்மோடிவந்தார்
மாயவரைகண்டவுடன் மயங்கிற்றேபூதமெல்லாம்
யாரடாபூதங்களே யாங்காரராட்சதரே
அருச்சுனரைக்கொண்டுவந்து அடைக்கவருவார்கள்

பார்த்திபனருச்சுனர்க்குப் பணிவிடைசெய்திடுங்கள்
சங்கீதந்தன்னுடனே சந்தோஷமாய்வைத்திடுங்கள்
அருச்சுனராசனுக்கு அழிவுவந்ததானுக்கால்
வெற்றிமதயானை வீமராசன்தானறிந்தால்
வச்சிரகோபகெதையினாலே மண்டியிட்டுத்தலையுடைப்பான்
தண்டாயுதமெடுத்து தாக்குடையவீமராசன்
அஞ்சுதுண்டாக அறுத்திடுவான்வீமராசன்
பூதத்துக்குச்சொல்லியபின் பெருமாளும்போய்நடந்தார்
அப்போதுதாதிமார் அருச்சுனரைகூட்டிவந்தார்
பூதக்கிடங்குதனிற் போட்டடைத்தாரருச்சுனரை
ஆர்காணும்பூதங்களே அல்லியம்மாளுத்தாரம்
பொல்லாதபாதகனை பலியதுகொண்டிடுங்கள்
இவனைப்பலிகொண்டு எடுத்துபுசித்திடுங்கள்
தள்ளிகதவடைத்துச் சங்கிலியைப்பூட்டினார்கள்
முதுகிலேமட்சரேகை கண்டதேபூதமெல்லாம்
பஞ்சணைமெத்தைபோட்டுப் பார்த்திபனையிருக்கவைத்தார்
அத்தண்டபூதமெல்லாம் அர்ச்சுனர்க்குப்பணிகள்செய்யும்
கைபிடிக்கும்சிலதுபூதம் கால்பிடிக்கும்சிலகணங்கள்
பாதம்பிடிப்பதுவும் பாட்டுகளைப்பாடுவதும்
கூத்துகளாடுவதுங் கொண்டானடிப்பதுவும்
தார்விசையனர்ச்சுனர்க்கு சங்கீதம்பாடுவதும்
ஆடாதகேளிக்கையும் அருமபவனிநாடகமும்
சங்கீதம்பார்த்துமே தார்விசையன்தானிருக்க
கண்டார்கள்தாதியர்கள் கனமானபேய்கூத்தை
அல்லிபெருமாளின் அருகாகவோடிவந்து
சாஷ்டாங்கமாக சரணமுடனேதுசொல்வார்
பூதக்கிடங்குதனில் போட்டடைத்தோம்பாதகனை
பூதப்பிசாசனைத்தும் போதப்பணிசெய்கிறது
பாதம்பிடிக்கிறதும் பணிவிடைகள்செய்கிறதும்
கூத்துகளாடிக் கொண்டானடிக்கிறதும்
பார்த்துவந்தோமாச்சியென்று பாதம்பணிந்தார்கள்
அல்லிபெருமாளு மாரணங்குமேதுசொல்வாள்
என்னமருந்தறிவா னிடிவிழுவானென்றறியேன்
வானஞ்சுழல்வதர்க்கு மருந்தறிவான்சண்டாளன்
பூமிசுழல்வதற்குப் பொடியறிவான்சண்டாளன்
என்றுவிசாரமா யிருந்தாளேயல்லியம்மாள்
மாயன்பெருமாளும் மலைராமமேரதுசொல்வார்
அர்ச்சுனராசாவை அழைத்துவரவேண்டுமென்று
என்னவடிவெடுத்தார் யெம்பெருமாள்மேகவர்னர்

ஸ்ரீகிருஷ்ணபகவான் ஸ்திரீரூபங்கொண்டு

அருச்சுனனையழைத்துப்போனது

தெய்வப்பெண்போலே ஸ்ரீராமர்வடிவெடுத்தார்
செக்கச்செவலைபோலே தீவுக்கிளிபோலே
மின்னுகிறகாந்தியைப்போல் வெரிர்பவளம்போல்
காய்க்கும்பிராயம்போற் கன்னிகட்டும்பிராயமவள்
பூர்க்கும்பிராயமவள் பிஞ்சுவிடுங்காலமவள்
கொஞ்சம்வயதுகாண் கொழுந்தெல்லாம்பிஞ்சுவிடும்
பாதிப்பிராயமவள் பக்கமெல்லாம்பிஞ்சுவிடும
இருண்டெழுந்தசோலையிலே செவந்தெழுந்தசூரியன்போல்
குன்றுமேற்சந்திரன் குதித்தெழுந்தபாவனைபோல்
ஈழத்துதச்சனவன் எழுதிவரவிட்டானோ
மேல்நாட்டுதச்சனவன் விளைந்துவரவிட்டதுபோல்
அஷ்டாபரணமெல்லாம் அலங்காரம்செய்தவளும்
பட்டுபளபளென்ன பாடகக்கால்சோதிமின்ன
தெய்வபெண்போலே ஸ்ரீராமர்வருகிறாரே
அழகுகுலுங்கவும் மானந்தங்கொஞ்சவேதான்
உடல்குலுங்கமாயவனோ ரோடிவருகிறாரே
காடுசெடிகள்தாண்டிக் கடுகியேவந்துவிட்டார்
மதுரைதெருவிலே வந்தாரேயெம்பெருமாள்
அக்கமாரேதங்கைமாரே ஆரடிதாய்மாரே
செக்கைசெவலையம்மாள் சிறுவயதென்கணவன்
வெரிபிடித்தமன்னவன்காண் வீதிதிரிவாண்டி
அல்லியென்பாண்மெல்லியென்பானனந்தலிலேபெண்ணேயென்பா(ன்
தண்ணீர்கண்டவிடத்தில் தன்கைமருத்துரைப்பான்
எட்டுநாலாச்சுதம்மா என்கணவன்வீடுவிட்டு
ஆரோதெரியா தடக்கிவசங்கொண்டார்கள்
என்கணவனைக்காணாமல் கதரித்திரிகிறேனே
புருஷனைச்காணாமல் புலம்பித்திரிகிறேண்டி
அறிந்தாலுரையுங்கள் அக்கமாரேயென்றழுதாள்
மாதுபுலம்புவதை மதுரையுள்ளோர்தான்கேட்டு
தாதியர்கள்தோழியர்கள் தானறிந்தோடிவந்தார்
அல்லிபெருமாட் கறிக்கையிட்டார்தாதியர்கள்
பூதக்கிடங்குதன்னில் போட்டடைத்தபாதகனை
அவனைமாலையிட்டதேவியராம் வந்தாளொருத்தியிங்கே
வானத்துரம்பையம்மாள் மயிலனையாள்தோற்றுகிறாள்

கணவனைக்காணேனென்று கதறிப்புலம்புகிறாள்
சொல்லியழுகிறது துக்கம்பெருகுதமமா
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குயேதுசொல்வாள்
ஆரணங்குமாதரைநீ ரழைத்தோடிவாருமென்றாள்
ஓட்டம்நடையாக ஓடிவந்தார்தாதியர்கள்
ஆடிகன்னியரே யழுதுபுலம்புவதேன்
எங்கள்- ஆச்சியருமுன்னை அழைத்துவரச்சொன்னார்காண்
அல்லிப்பெருமாளு மழைக்கிறாள்வாருமென்றாள்
ஏதுக்கழைக்கிறா ளிளங்கொடியாள்மாதுஎன்னை
என்றுநடந்தாளே யெம்பெருமாள்மாளிகைக்கு
வாசலும்வாசலது படியேழும்தான்கடந்து
அல்லியர்க்குமுன்னேவந்து ஆரணங்குதெண்டனிட்டாள்
தெண்டனிட்டகன்னியரைத் தேன்மொழியாளேதுசொல்வாள்
எந்தவூருங்களது எங்கிருந்திங்குவந்தாய்
ஏதுக்கழுகிறா யெனக்கறியச்சொல்லுமென்றாள்
என்னுடைய ஆச்சியரே என்பாவம்கேளுமம்மா
தூரவடக்கேயம்மா துவாரகாபுரிதேசம்
திருமலைநாய்க்கன்பெற்ற சீரானபெண்ணிருவர்
என்பேருமல்லியர்கா ணென்தங்கைபேர்அல்லியம்மாள்
என்னைமணஞ்சூட்டி என்தங்கைபேலிச்சைகொண்டான்
பெண்டுமேல்பெண்டுமல்லோ கொடுப்பாரோபூமியிலே
அல்லியர்மேலாசையாய் ஆணழகன்வெறியெடுத்து
பித்தப்பிடித்தவன்போற் பிதற்றித்திரிகிறானே
தண்ணீரைக்கண்டாலே தன்கைமருந்துரைப்பான்
அல்லியென்பான்மெல்லியென்பா னலைந்துதிரிகிறானே
வீடுவாசல்தங்காயல் வெளிப்பட்டுபோய்விடுவான்
தேடித்திரிகிறேனே சீரானமன்மதனை
கண்டுபிடித்தவரைக் கடுகிமலைகொண்டுபோவேன்
எட்டுநாளொருவரா யிருப்பான்மனம்பிடித்து
மாதுமேல்நினைவெடுத்து மாளிகையில்நிற்கரியான்
பந்தாடும்பட்டணத்தில் பாவியொருபெண்பிறந்தேன்
செல்வத்தலையிலே செப்போடெளிதினதும்
கதியைத்தொலைப்பேண்டி காவேரிநீந்திடுவேன்
விதியைத்தொலைப்பதற்கு விதமற்றுளானேண்டி
வடிவழகாயிருந்தார் மன்னன்துரையென்கணவன்
ஆரோதெரியாது யடக்கிவசங்கொண்டார்கள்
என்புருஷன்றன்னையம்மா யினிகாணப்போறேனோ
என்றதுதான்கேட் டேதுசொல்வாளல்லியம்மாள்
என்பேரைச்சொல்லியவ னெடுத்துமருந்துரைத்தான்
ஆகடியஞ்சொன்னதினா லடைத்தேன்கிடங்கிலே

பயித்தியக்காரனென்றார் பழுதில்லையெந்தனுக்கு
ஆளலைமைத்துப்போ மனுப்பிவிடச்சொல்லுகிறேன்
ஆரடிதாதியரே யலங்காரத்தோழிகளே
கிடங்கைத்திறந்தவனைக் கொப்பனவேபோகவிடும்
அவ்வார்த்தைதான்கேட் டலங்காரத்தோழியர்கள்
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்கிடங்கருகில்
கிடங்கைத்திறந்தார்கள் கொப்பனவேவிட்டுவிட்டார்
அப்போதுதெய்வகன்னி ஆளன்முகம்பார்த்து
வாடாகுடிப்பாநீ மதியழிவாயென்றழைத்தாள்
அல்லியென்பான்மெல்லியென்பா னணழகன்தான்வருவான்
எப்போவருவாளோ என்னாசைதீருமென்றான்
மன்மதபாணமது மாரபுருகிபோகுதென்பான்
சித்தசன்தொட்டகணை சிறுமார்புருகுதென்பான்
ஆறுருகுபாணமது மார்புருகிபோகுதென்பான்
அஞ்சுருகுபாணமது நெஞ்சுருகிபோகுதென்பான்
அருச்சுனரைக்கூட்டியே யரிராமர்போகலுற்றார்
மதுரையைத்தாண்டியே வந்தாரேகானகத்தில்
மாயன்பெருமாளும் மாய்கையாய்போகலுற்றார்
ஆலமரத்தடியி லரிராமர்பள்ளிகொண்டார்
கள்ளக்கொருக்கையிட்டுக் கரியமால்தூங்குகிறார்
ஆயனநகாக அருச்சுனனார்வந்துநின்றார்
பாரளந்தார்பாதத்தைப் பார்த்திபன்பிடிக்கலுற்றான்
அலண்டுபுறண்டதுபோ லரிராமர்கண்விழித்தார்
ஆனலழகுமன்னா அருச்சுனரேகேட்டீரோ
காணாதசொற்பனத்தைக் கண்டேன்காணர்ச்சுனரே
என்னைத்தனியேவிட்டு எங்கேயோபோனதுவாய்
கானக்குறத்தி கைபார்த்துசொன்னதுவாய்
வண்ணமருந்துனக்கு பலைக்குறத்திதந்ததுவாய்
நீதரித்தபூஷணத்தை நேரிழைக்குத்தந்துவாய்
அம்மருந்தைநீவாங்கி யல்லிபுரம்போனதுவாய்
வண்ணமருந்தெடுத்துத் தண்ணீரிலுரைத்ததுவாய்
அல்லியிடதாதிமா ராயிரம்பேரோடிவந்து
அருச்சுனரேயுனையெடுத்து ஆற்றிலேபோட்டதுவாய்
தூக்குமரந்தனிலே தேர்விஜையாபோடக்கண்டேன்
காளியம்மன்கோவிலிலே காவுகொடுக்கக்கண்டேனப்பா
பூதக்கிடங்கிலேதான் போட்டடைக்ககண்டேனப்பா
ஆரோவொருதெய்வகன்னி யழைத்துவரக்கண்டேனப்பா
என்னருகேவந்திருக்க கண்டேன்கனவாக
என்னகாண்மைத்துனரே யிப்படிகனவுகண்டேன்
வாழ்விசையன்கோமானும் மாயவருக்கேதுரைப்பான்
பித்தமுயர்ந்ததினாற் போதக்கனாகண்டீர்

அல்லியர்மேல்சிந்தையது ஆசைமறக்கவில்லை
மாலையிட்டுஅல்லியரை மருவியணைவதெப்போ
கோபாலமைத்துனரே கூட்டிவைப்பதுன்பாரம்
அப்போதுமாயவரு மருச்சுனன்முகம்பார்த்து
ஏறமுகம்பார்த் தெம்பெருமாளேதுசொல்வார்
பட்டுகுல்லாகுண்டலமும் பவுத்திரமோதிரமும்
ட்டிகட்டியொட்டியாணம் பசும்பொன்னாற்சமுதாடும்
தாமரைப்பூச்சல்லடமும் சந்திரகாந்திதட்டிகளும்
உத்தரசஞ்சம்வல்லவாட்டும் உத்தமனேஎங்கேயென்றார்
அஞ்சிப்பயந்தவன் அருச்சுனனுமேதுசொல்வான்
ஆயர்பெருமாளேநீர் அனந்தநித்திரைபோகையிலே
மாதினதுபட்டணத்தை மதுரையைப்பார்ப்போமென்று
மாதுதன்னினைவாய் வந்துகுறிசொன்னாளையா
வண்ணமருந்துதந்து தண்ணீரிலுரையுமென்றாள்
மருந்துரைக்கும்போதவள் மனதுகரையுமென்றாள்
குளிகைகரையும்போது குணமுந்திரும்புமென்றாள்
மருந்துபலியாமல் மாயவரேபோச்சுதையா
நாலுமலைக்குள் நடுவிலவள்குடிசையென்றாள்
இராமக்காள்பொம்மக்காள் இலட்சுமக்காளவள்பேரும்
அங்குவந்துகேட்டாக்கா லாபரணந்தருவேனென்று
மருந்தைக்கொடுத்துவிட்டு வாங்கிப்போனாளுடைமையெல்லாம்
அவள்கொடுத்தபடியேதான் குணமாச்சோவர்ச்சுனரே
சொன்னபடியாகச் சேர்ந்தாளோஅல்லிநல்லாள்
ஒருலாபங்கண்டறியேன் உழன்றுநான்வந்தேனையா
பொம்மக்காள்பேரைச்சொல்லத் திம்மக்காள்நேர்ந்ததையா
உடைமைபறிகொடுத்து உழன்றுநான்வந்தேனையா
அவ்வார்த்தைதான்கேட் டரிராமரேதுசொல்வார்
குறத்தியிருப்பிடத்தைக் கொற்றவனேதேடிப்போய்
உன்னுடைமையுள்ளதெல்லாம் உத்தமனேவாங்கிவாரும்
கடிகியேவாங்கிவாரும் கட்டழகாவென்றுரைத்தார்

அருச்சுனன் குறத்தியிடஞ்சென்றுதான்கொடுத்ததை வாங்கினது.

ஆயரதுசொற்கேட்டு அருச்சுனருந்தானடந்தார்
குறத்தியரைத்தேடி கொப்பெனவேவருகிறாரே
நாலுமலைநடுவே நல்விஜயன்தேடிவந்தார்
இராமக்காள்பொம்மக்காள் லட்சுமக்காளென்றழைத்தார்
மாயன்பெருமானு மக்குறத்திபோலேவந்தார்
யாரடாதம்பியரே யழைத்தகருமமென்ன
அப்போதருச்சுனனு மாணழகரேதுசொல்வார்
நீகொடுத்தமருந்துதனிற் குணமில்லையாச்சியரே
நீதந்தமருந்துதனிற் சற்றும்பலனில்லையோடி

பொம்மக்காள்பேரைச்சொல்லத் திம்மக்காள்நேர்ந்ததம்மா
உன்பேச்சைகேட்டுநா னுதைபட்டுவந்தேனடி
நான்கொடுத்தஉடைமையெல்லாம் கொப்பனவேதாருமென்றான்
என்வார்த்தைநீர்கேளீர் இயலானதம்பியரே
கட்டழகாவுன் னுடமை கடையிலேவிற்கப்போனேன்
காசுக்கடைதனிலே கண்டதலையாரிசேனை
கன்னமிட்டுவந்தெனென்று கட்டியடித்தார்கள்
இடியும்பட்டே றுதையும்பட்டே னலைச்சல்களும்பட்டுவந்தேன்
உடமைபரிகொடுத்து உடுத்தின துணியிழந்தேன்
எங்கிருந்துநான்கொடுப்பேன் இனியவுடமையது
அவ்வார்த்தைதான்கேட் டருச்சுனனுமேதுசொல்வான்
உடமைகொடுக்காம லுன்னைவிடேன்கட்டுவச்சி
மடியைப்பிடித்திழுத்தான் மாதுகுறத்தியரை
குய்யோமுறையோவென்று கூவினாள்குறத்தியரும்
புற்றீசல்போலவேதான் புறப்பட்டார்சிறுகுறவர்
சில்லுபொல்லென்றுசொல்லி சிறுவராய்கூடினார்கள்
ஆளுக்கொருகுத்துவைத்து அடித்தாரேயருச்சுனனை
அருச்சுனர்தரித்திருந்த ஆபரணமுள்ளதெல்லாம்
கொண்டுவந்துதந்தாளே கொம்பனையாள்குறத்தியரும்
அல்லியர்க்குபட்டகளை யர்ச்சுனர்க்குபோதுமய்யா
பெண்ணாலேபட்டகளை போதுமென் றாரருச்சுனரும்
அருச்சுனமகாராச னையரிடம்வந்துவிட்டான்
வாங்கிவந்தேனுடமையென்று வணங்கியேதெண்டனிட்டார்
அப்போதுமாயவனா ரருச்சுனர்க்கேதுசொல்வார்
மாளிகைக்குப்போகவே மனமுண்டோ அருச்சுனரே
தருமர்தவிப்பாரே தம்பிமார்புலம்புவாரே
காணாதேயுன்னாச்சி கலங்கிதவிப்பாளே
வந்துநெடுநாளாச்சே வாழ்விசையா அர்ச்சுனரே
பெண்ணாசைகொண்டுநீ புலம்பித்தவிக்கிறாயே
மாதர்மேலாசைகொண்டு மயங்கிறாயர்ச்சுனரே
ஆணலழகுமன்ன னர்ச்சுனனுமேதுசொல்வான்
எந்தவிதமானாலு மிளங்கொடியாளல்லியரை
தாலிகட்டிவையுமையா சுவாமிபெருமாளே
மாலையிட்டுவையுமையா மாயன்பெருமாளே
என்றுபணிந்தானே இயலானவாழ்விசையன்
மாயன்பெருமாளு மிராமரேதுசொல்வார்
ஆணலழகுமன்னா அர்ச்சுனரேநீர்கேளும்
ஆண்டிவடிவாக அல்லியின்றன்வாசலிலே
மடலூர்ந்துவந்தையாகில் மாலையிட்டுவைப்பேண்டா
அப்படியேபோய்வருவே னய்யாசெலவருளும்

அருச்சுனனாண்டிவேடங்கொண்டு மடலூர்ந்தது
மாயன்பெருமாளு மிராமாப்பொழுது
ஆண்டியைப்போலாக அர்சுனற்குசெலவுதந்தார்
ஆனாலழகுமன்ன னர்ச்சுனனுமேதுசொல்வான்
தொண்ணூறும்பதுஞ்சென்ற துவண்டக்கிழவனைப்போல்
பன்னைப்பூப்போலே பழுத்தகிழவனைப்போல்
நாணற்பூப்போல நரைத்தகிழவனைப்போல்
தோலுய்நரம்புகளும் தொங்கிற்றுகிழவனுக்கு
பழுத்தபழம்போல பார்த்திபன்வடிவெடுத்தார்
காவிகாஷாயமுடன் கைதனிலேமாத்திரையும்
திருநீறுந்தாமணிந்து திரிகண்டமாலைசுற்றி
உருத்திராட்சத்தாழ்வடமும் ருத்திராட்சமாலைகளும்
அன்றுறித்தமான்தோலும் அழகானபுலித்தோலும்
தொட்டமிதியடியும் கோவிலைவைத்தகின்னரியும்
மாத்திரைகோற்பிரம்புகளும் மயிற்குச்சுங்கண்டமேலம்
வேலாயுதமசூலாயுதம் விருதுகண்டகோடாலி
கெவுரிநல்லபாத்திரமுங் கேசரக்கங்கணமும்
திருவோடுபாத்திரமுந் திருநீறுங்கோபிகளும்
சங்குஞ்செயகண்டிகையுந் தரித்தாரேபூஷணங்கள்
சடையுமுடியுமாகத் தம்பிரானைப்போலானார்
ஆதிசிவன்போலாக அருச்சுனனார்வேடங்கொண்டார்
கைலாசநாதரைப்போல் காண்டீபர்வடிவெடுத்தார்
வேடங்கள்பூண்டானே வீராதிவீரனுந்தான்
ஆயர்பெருமாளு மங்கனேயதுசெய்தார்
அல்லியரைப்போலாக அழகுபடமெழுதி
பாங்கியிலும்நல்ல பவளசேனைநாயகியை
கூடவெழுதினாரங் கோவிந்தரெம்பெருமாள்
படத்தைமடித்தவரும் பார்த்திபன்கைகொடுத்தார்
அல்லியதுவாசலிலே யங்கேபடம்விரித்து
உவள்-உடுத்தியபாவாடையில் ஒருமுழம்பிச்சைவாங்கி
வந்தாயேயாமாகில் மாலையிட்டுவைப்பேனடா
போய்வாருமென்றுசொல்லிப் பெருமாளனுப்பிவைத்தார்
வண்ணப்படமெடுத்து வாழ்விசையன்வழிநடந்தார்
தள்ளாடித்தள்ளாடித் தளர்ந்துமெள்ளவழிநடந்தான்
தெத்துத்தெருக்கடந்து தேரோடும்வீதிவிட்டு
அல்லியரண்மனையா மாசாரவாசல்வந்தான்
ஆரடிதாதியரே யரண்மனைக்குப்போகவேணும்
காசியிலிருந்தலவோ யிராமேசுரம்போகவேணும்
பிச்சைகேட்கவந்தேனம்மா போகவழிவிடுங்கள்
பொற்கொடியாள்வாசலிலே போய்வருவேனச்சியரே
ஐயாபெரியவரே யறிவுபடைத்தவரே

தீரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
ஆண்காற்றடியாது அல்லியதுகோட்டையிலே
போனாற்பழுதுவரும் போகாதேசாமியென்றாள்
ஆண்டிபரதேசி யையமென்றுவந்தவரை
வழிமறிப்பார் வையகத்திலாருமில்லை
தொண்ணூறுஞ்சென்றதம்மா துவண்டகிழவனடி
தோலுநரம்புகளுந் தொங்குதேயெந்தனுக்கு
என்னை-பார்த்தவர்களெல்லாரும் பணிந்திடுவார்தப்பாது
போகச்செலவுகொடும் போய்வருவேனாச்சியென்றான்
வாசற்றடைக்காரர் வழிவிட்டார்சங்கமற்கு
அவ்வாசல்வாசலது அருச்சுனனுந்தாண்டிவந்தான்
முத்துச்செம்பொற்படிவாசல் மூன்றுகட்டுந்தாண்டிவந்தான்
ஐந்தாம்படிதளத்தில் அருச்சுனனார்வந்துவிட்டார்
புலிபாசனம்போட்டு பொற்படத்தைமுன்னேவைத்தான்
ஆசனத்தின்மேலிருந்து அல்லிபடம்தான்விரித்து
மான்செவியுங்கண்ணையு மறைத்தாரேமாயவனார்
கண்ணிரண்டுந்தெரியாமற் காதிரண்டுங்கேவாமல்
அல்லிமேற்சிந்தைபா யருச்சுனன்புலம்பலுற்றான்
அல்லியென்பான்மெல்லியென்பானனந்தனிலேபெண்ணேஎன்பான்
வருவாளேஅல்லியென்பான் வாய்திறந்துபெண்ணேயென்பான்
உன்னாசைகொண்டேனடி யூராசைபேர்மறந்தேன்
தாயாரையான்மறந்தேன் தமையனதுபேர்மறந்தேன்
தம்பிதமயனைச் சகலரையும்யான்மறந்தேன்
உன்னாசைகொண்டுநா னுழன்றுதிரிகிறேனடி
மன்மதபாணமது மார்பைப்பிளக்குதடி
சித்தசன்விட்டகணை சிறுமார்புருகுதடி
காமக்கணைபாலே கனிதாங்கிப்போகுறேனடி
அஞ்சுருகுபாணமது நெஞ்சுருகிப்போகுதடி
ஆறுருகுபாணமது மார்புருகிப்போகுதடி
மார்போடேமார்பணைத்தால் மகாவிடாய்தீருமடி
என்றுதெளியுமோ வெக்காலம்செல்லுமடி
அல்லிமேற்சிந்தையா யருச்சுனன்புலம்பலுற்றான்
அவ்வாசல்காக்கின்ற ஆயிரந்தோழியர்கள்
அவ்வார்த்தைதான்கேட் டதிகவிசாரங்கொண்டாள்
இதுவென்னகாலக்கேடோ எதறிவோம்தோழியரே
பாங்கியிலும்நல்லதொரு பவளசேனைதன்னருகில்
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
பவளசேனைபக்கத்திலே பணிந்தவர்களேதுசொல்வார்
ஆரோகிழவ னாண்டிபரதேசியவன்

பிச்சையென் றுவந்தான்காண் போகச்சொல்லிநான் விட்டோம்
அஞ்சாங்கட்டுவாசலது அரண்மனையில்தான்வந்தான்
அல்லியரைப்போலாக அழகுபடமெழுதி
என்னையுங்கூடவே ஒருமையாய்வைத்தெழுதி
வண்ணப்படம்விரித்து வல்லமையாய்ப்படிக்கின்றான்
அல்லியர்மேலாசையா யலைந்துபுலம்புகிறான்
வாடியென்றும்போடியென்று வம்புதும்புஞ்சொல்லுகிறான்
ஆகடியம்பேசுகிறா னழும்புகளுஞ்சொல்லுகிறான்
சொல்லுகிறவார்த்தையது செவிகேட்கமுடியாது
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வாள்பவளசேனை
அல்லிப்பெருமாளே அழகுமணஞ்சூட்டவென்று
மாறுவேடங்கொண்டவனும் மாலையிடவந்தான்காண்
ஆண்டிபரதேசியானு லழும்புகளுஞ்சொல்வானோ
எல்லாமறிந்திடுவோம யாரடிதோழிகளே
ஓரைந்துதாதிமார்கள் ஒருநிறமாயெழுந்திருங்கள்
ஒருநிறமாய்க்குழல்முடித்து ஒருநிறமாய்ப்பட்டுடுத்தி
ஒருநிறமாய்க்குழல்முடித்து ஒருநிறமாயலங்கரித்து
ஐந்துவிதப்பட்டுகளை யலங்காரமாயெடுத்து
பொன்னொருதட்டிலேயும் பூவொருதட்டிலேயும்
ஆடையொருதட்டிலேயு மாபரணமொருதட்டிலேயும்
ஒன்பதுரத்தினமு மொருதட்டில்தானெடுத்து
பண்டாரமுன்னாலே பாங்கியரேகொண்டுபோய்
ஐயருக்குமுன்னேவந்து அடிபணிந்துதெண்டனிட்டு
ஐந்துபேர்பெண்களின்மேலே யார்வேண்டுஞ்சொல்லுமென்று
ஆபரணமுத்துவஸ்திர மாசையென்றாலெடுத்துக்கொள்ளும்
பெண்களின்மேலாசையென்றால் பின்தொடர்ந்துவாருமென்று
ஐயரைகேட்பதற்கு மாரணங்கேபோங்களென்றாள்
அவ்வளவில்தோழிமா ரதிகமுடனோடிவந்து
ஐந்துபேர்தோழிமார்க ளலங்காரஞ்செய்துகொண்டார்
ஐந்துவிதத்தட்டிலே யாபரணபூஷணங்கள்
முத்துகளும்வஸ்திரமும் முன்னாலேகொண்டுவந்தார்
ஐயரதுமுன்னேவைத் தடிபணிந்துதெண்டனிட்டார்
ஐயாபெரியவரே யடியேன்சரணமென்றார்
ஆச்சியருக்தனுக்கு அனுப்பிவைத்தார்பூஷணங்கள்
ஐந்துபேருனக்கு அனுப்பிவைத்தார்சங்கமரே
ஆசையுள்ளபெண்களைநீர் அழைத்தால்வருவோமையா
வேண்டுமென்றரத்தினத்தை யெடுத்துக்கொள்ளும்சங்கமரே
என்றந்தப்பெண்களுமே யிரங்கியேதெண்டனிட்டார்
ஆனாலழகுமன்ன னருச்சுனனுமேதுசொல்வான்
அல்லியென்பான்மெல்லியென்பா னனந்தனிலேபெண்ணேஎன்பான்
வருவாளோஅல்லியென்பான் வாய்திறந்துபெண்ணேயென்பான்

எப்போவருவாளோ என்றாசைதீர்ந்திடுமோ
மன்மதபாணமடி மார்புருகிப்போகுதடி
சித்தசன்விட்டகணை சிறுமார்புருகுதடி
காமக்கணையாலே கணைதாங்கிப்போரேண்டி
அல்லி அல்லியென்றுசொல்லி யலைகிறான்சங்கமனும்
கேட்டந்ததாதியரும் கிலேசங்கொண்டுதானடந்தாள்
பவளசேனை தன்னருகில் பக்கத்தில்வந்தார்கள்
ஆச்சியுடன்சொற்படிக் கைகந்துபெண்கள்போனோமம்மா
அலங்காரந்தன் னுடனே யாபரணமுன்புவைத்தோம்
ஏனென்றுகேட்கவில்லை ஏறமுகம்பார்க்கவில்லை
அல்லியின்மேற்சிந்தைகொண் டலைகிறான்சங்கமனும்
அனேகநெடுநேரம்நின்று அலைந்துமேவந்துவிட்டோம்
இவ்வார்த்தைநான்கேட் டிளங்கொடியாள்பவளசேனை
எண்ணாதவெண்ணமெல்லா மெண்ணியிளங்கொடியும்
ஐயமென்றுவந்ததொரு வாண்டிபரதேசியல்ல
கட்டினவிருதறுத்துக் கலியாணம்பண்ணவந்தான்
தேவனென்றுநாமறியோம் சிவராசனென்றறியோம்
தன்மனதிலேயடக்கித் தானடந்தாள்செங்கமலம்
அல்லிநல்லாள்பக்கம்வந்து ஆரணங்குதெண்டனிட்டாள்
ஏதுபவளசேனை யிந்நேரம்வந்ததென்ன
வேர்க்கவிரிக்க வெண்ணுயிலுஞ்சோர்ந்துவிழ
உச்சியுருமத்தி லுத்தமியெங்குலத்தாய்
ஆச்சியரேகேட்டாயோ அதிசயமானந்தங்கள்
நாடுசுகப்படவே நாளாச்சு ஆச்சியரே
உனக்குவரும்பாக்கியங்க ளொருவருக்குந்தெரியாது
ஆதிசிவனைப்போ லாண்டியிங்கொருவர்வந்தார்
படம்பிடிக்கும்பண்டாரம் பரமசிவன்போலேவந்தார்
மாணிக்கச்சொக்கலிங்கம் வந்தார்போற்காணுதம்மா
சடையுஞ்சடைமுடியுந் தம்பிரான்போற்காணுதம்மா
கண்டுமறியோமம்மா கலியுகத்தில்நானறியேன்
தோலும்நரம்புகளுந் தொங்குதேகிழவனுக்கு
அஞ்சாங்கட்டுவாசலிலே ஐயர்வந்திருக்கிறார்
தெரிசனம்பண்ணோமாகில் தோஷவினைதீருமம்மா
பார்த்தால்பசிதீரும் பண்டாரமானவரை
ஆச்சியெழுந்திரம்மா ஐயரைப்போய்ப்பார்ப்போம்
என்றதுதான்கேட் டேதுசொல்வாளல்லியரும்
ஆண்காற்றடியாத வரண்மனைவாசலிலே
ஆண்டியிங்கேதான்வரவே யதிகாரமாச்சுதடா
ஆண்டிபரதேசி யையமென்றுவந்தாலும்
கொடுத்தனுப்பலாகாதோ கொம்பனையேயென்தோழி
எந்தனுடன்சொல்வாயேன் னெழுந்திருந்தாதிபெண்ணாள்

பாக்கியிலும்நல்ல பவளசேனையேதுசொல்வாள்
பிட்சைகொடுக்கிறது பெருமையென்றுபாரதே
நல்லோர்பெரியோரை நடந்துபோய்சேவித்தால்
காசிபோகவேண்டுமோ கருமந்தொலையாதோ
பெரியோரைசசேவித்தால் பிழையொருக்காலுமில்லை
கைலாசநாதரைப்போற் காண்கிறதே ஆச்சியமோ
என்வார்த்தைத்தள்ளாதே யெழுந்திருந்துபோவோமென்றாள்
மகுடத்துரைச்சியவள் வாழ்வரசியேதுசொல்வாள்
ஆண்டியைப்பார்ப்பதற்கு அழைக்கிறாயென்தோழி
ஆணுமழகுமல்ல அரிகிழவனானாலும்
என்னைக்கண்டாலேயாமாகில் காமங்கொண்டுகிடுமே
பரிகாசஞ்செய்தாலே பாங்கியரேயென்னசெயவேணும்
வீரமணிவாளாலே வீசியெறிந்திடுவேன்
அப்படியேயாகுமம்மா ஆச்சியெழுந்திருங்கள்
சிங்காசனத்தைவிட்டு தேனமொழியாள்தானெழுந்தாள்
பட்டுபளபளென்ன பாடகக்கால்சோதிமின்ன
நெற்றிசுட்டிகனிகென்ன நீலவிழிமதுலங்க
காற்பிலிகலகலென்ன கைவளையலடளபளென்ன
மூன்றானைவிலம்புரள மோதிரக்கால்சத்தமிட
கோழிபரைத்தோளணிந்து தோகைநல்லாள்தானடந்தாள்
பாங்கியர்கள்தோழிமார்கள் பக்கம்புடைசூழ்ந்துவர
வாசலும்வாசலது படியேழுந்தாண்டி
ஆண்டியிருக்குமந்த அஞ்சாங்கட்டுவாசலுக்கா
அல்லிவரும்போது அரசுணருமேதுசொல்வார்
என்னகாணல்லிபமே எப்போமனதிரக்கும
என்றைக்குக்காணுவேனென்றாசைதீருமடி
மாதனவனைத்தகண்ணே மார்மைப்பிளக்குதடி
சித்தசன்தொட்டகணை சிறுயார்புருகுதடி
மாலையிடுவதெப்போ மருவியணைவதெப்போ
கூடியணைவதெப்போ குறைகளெல்லாந்தீர்வதெப்போ
அல்லியென்பாள்மெல்லியென்பாள் அன்னநடைதனிலேபெண்ணேயென்பாள்
வருவாளோ அல்லியென்பாள் வாய்திறந்துபெண்ணேயென்பான்
கட்டழகியல்லியவள் காதாரக்கேட்டுவிட்டாள்
உருக்கியசெம்பொனது உதிரம்போற்கண்சிவந்து
பிறந்துவளர்ந்துநான பூமிபாரமாண்டிருந்தேன
நீனமுகனைக்கொன்றுநான் நீசிபட்டமாண்டேனே
வாடியென்றழைத்தவர்கள் வையகத்திலாருமில்லை
அடியென்றழைத்தவர்க ளவனியிலொருவரில்லை
ஆண்டியதுவாயாலே அலைச்சல்பட்டாளாச்சே

எடுத்துவா பெரியகத்தி இருதுண்டம்போடவென்றான்
எடுபரிசைபெரியகத்தி எடுத்துவா தாதியென்றாள்
பாங்கியிலும்நல்ல பவளசேனையேது சொல்வான்
பாண்டியபெருமாளே பதராதேயாச்சியென்றாள்
அப்படியேகொண்டுவந்து ஆச்சியருகேவைத்தாள்
கண்ணாடியைநேர்வைத்துக் கண்டான்படத்தழகை
தன்னழகும்படமழகும் சரியாகத்தோணுதுது
என்னழகும்பாவையும் எங்குகண்டெழுதினானோ
உச்சிகுழியழகும் ரோமத்தின்பேரழகும்
மயிரழகும்பாவையு மாபாவியெங்குகண்டான்
முக்குத்திருவழகை மூதேவியெங்குகண்டான்
கண்ணின்விழியழகை கழுசறையனெங்குகண்டான்
பவளம்போலவெண்ணிதழ்பல்லழகுமெங்குகண்டான்
மாபினஸ்தனமழகும் மட்சமுமெங்குகண்டான்
இடையழகுந்துடையழகும் யேனுதியெங்குகண்டான்
ஆபரணத்தனழகு வாடைத்துகிலழகும்
வடிவழகுமொப்பனையு மாபாவியெங்குகண்டான்
என்னையெழுதிவந்த தல்லாமலென்தோழி
உன்னையுங்கூடவேயுடனேயெழுதிவந்தான்
எடுத்துவாபெரியகத்தியிருதுண்டாய்போடவென்றா
பக்கச்சனைகளெல்லாம் பதைக்கிறதேயல்லியற்கு
பாங்கியிலும்நல்லதொருபவளசேனையேதுசொல்வாள்
ஐயமார்பட்டதொரு அடவுபோலாகுமிது
பாண்டியர்கள்பட்டதொரு பதலைபோலாகுமிது
ஆண்டிகையைவெட்டினாலே யாராதலைப்பாமோ
அந்தக்கதையையெனக் காரணங்கேசொல்லுமென்றாள்

பவளசேனை பாண்டியாகளடைந்த துன்பத்தை
அல்லியாசாணிக்கு கதையாகக்கூறினது.

வைகைப்பெருக்கெடுத்து மாவெள்ளம்போகையிலே
ஆராலும்வைகைதனை யடைக்கமுடியாமல
பாண்டியாசாக்கள் பகுந்துகரைபோட்டார்கள்
ஆணாய்ப்பிறந்தவர்களரைநாண்கயிர்கட்டினவர்
பெண்ணாய்பபிறந்தவர்கள் புடவையுடுத்தினபேர்
அவரவர்கொருபங்கு அளந்துகரைபோட்டார்கள்
அவரவர்கள்பங்குக்கு அடைத்தார்கள்வைகைதன்னை
ஆண்ணாடம்பிட்டுசுட்டு ஒளவையாவிற்றிருப்பாள்
அவளுக்கொருபங்குமல்லோ அளந்துகரைபோட்டார்கள்
பங்குக்காளில்லாமல் பரதவித்துத்தானழுதாள்
மண்ணாசுமக்கறியாள் மனஸ்தாபப்பட்டழுதாள்
வாணியகிழவியவள் மனத்துயரமாகையிலே
மானிடக்சொக்கலிங்கம் மகாதேவர்தாமறிந்தார்

அட்டாளுஞ்சொக்கலிங்கம் ஆதிசிவன்தானறிந்தார்
ஔவையார்மனத்துயர மாயாசந்திரக்கவென்று
ஒட்டனைப்போலாக உலகளந்தாரமைக்குனரும்
கன்னகருக்கவர்போற் கர்த்தர்வடிவெடுத்தார்
தட்டுக்கலையில்வைத்துக் கெஜகோலைகைபிடித்து
மண்வெட்டித்தோளில்வைத்து மகாதேவாவாரே
மதுரைத்தெருவீதியிலே வந்தாரேசொக்கலிங்கம்
அப்போதுசொக்கலிங்க மாதிசிவன்கூறிவாரார்
மண்வெட்டுபேன்சுவர்வைப்பேன் வைப்பீரோகூலியாளாய்
என்றுமேசொல்லியல்லோ யீஸ்வரனார்கூறிவாரார்
கூறியவர்வந்தாரே கொடிமதுரைவீதியிலே
ஔவையார்தன்னருகிலே ஆதிசிவன்வந்துவிட்டார்
ஔவையருமப்போ வொட்டனுக்கேதுசொல்வாள்
ஆரடாவொட்டாநீ பண்புடனேகேளுமென்றாள்
அன்றாடம்பிட்டுசுட்டு அங்காடிவிப்பேனடா
நாற்றெருநபி டுகூடடா வொருபிட்டுதிருமடா
உதிரந்தீர்பிட்டுனக்கு உக்கமனேநானறருவேன்
மண்வெட்டித்தாரடைத்து வருவாயோமன்னவனே
உதிர்ந்துபோகும்பிட்டையெலலா முத்தமனேநான்றருவேன்
சத்தியந்தப்பாமல் தருகிறேன்போமென்றாள்
பிட்டுகுலைகட்டுமம்மா போயடைத்துவாரேனென்றான்
ஔவையாருந்தாமெழுந்து அடுப்பூதிமூட்டினாளே
பிட்டுக்குலைகட்டியல்லோ போதசசமைக்கலுற்றாள்
இருபதுபிட்டுசுட் டெடுத்தாளேகூன்கிழவி
இருபதுபிட்டுகளு மெல்லாமுதிர்ந்தனவே
ஒட்டமகனையுமாய ஓடிவந்தார்சொக்கலிங்கம்
காலாறடைத்துவந்தேன கனிபசிக்குதென்றார்
சுட்டுவீராபிட்டுகளைச் சொலலுமுதிர்ந்ததுண்டோ
இருபதுபிட்டுசுட்டே னெலலாமுதிர்ந்ததடா
எனக்கென்றுயெங்கிருந்தா யீடழிவாவொட்டாநீ
இந்தாருமென்றுசொல்லி யீந்துவிட்டாள்பிட்டதனை
குறையாறடைத்துவாறேன கொப்பெனவேபிட்டுசுடும்
புறக்கடையிற்போவாரும் புன்னைமரத்தடியிருந்தார்
கொண்டுவந்தபிட்டையெல்லாம் கொப்பெனவேயுண்டுவிட்டார்
ஒருநாழிகைதரித் தோடிவந்தார்சொக்கலிங்கம
அறையாறடைத்துவந்தே னச்சிபசிக்குதென்றார்
சுட்டுவீராபிட்டுகளை சொல்லுமுதிர்ந்ததுண்டோ
ஐம்பதுபிட்டுசுட்டே னனைத்துமுதிர்ந்ததடா
இந்தாருமப்பாவென் றெடுத்துகொடுத்துவிட்டாள்

வாங்கியந்தபிட்டதனை வழிநடந்தாசொக்கலிங்கம்
கொன்றைமரத்தடியிற் கொண்டுவந்துதான்புசித்தார்
ஈறரைநாழிசென் றெழுந்தவருமோடிவந்தார்
மார்மேலுந்தோள்மேலும் மணலாரிட்டுக்கொண்டார
மூககாறடைத்துவந்தேன மெத்தபசிக்குதம்மா
சுட்டரோபிட்டுகளுஞ் சொல்லுமிருந்ததுண்டோ
நூற்றொருபிட்டுகளுஞ் சுட்டாளேகூன்கிழவி
ஒருபிட்டுத்தான்தவிர மற்றபிட்டுதிர்ந்தனவே
உதிர்ந்திருக்கபிட்டடயெல்லாம உத்தமனுர்கைகொடுத்தாள்
வாங்கியந்தசொக்கலிங்கம் வழிநடந்தார்மெல்லெனவே
குருந்தமரத்தருகே சொப்பெனவேவந்தமர்ந்தார்
கொண்டுவந்தபிட்டையெல்லாம் சொப்பெனவேயுண்டுவிட்டார்
தலைக்குயர்ந்ததட்டுவைத்துச் சங்கரனார்பள்ளிகொண்டார்
ஆனந்தநித்திரையா யாதிசிவன்போராரே
ஒருபிட்டுவிற்றாளே உத்தமியாளகூன்கிழவி
நூறுபிட்டுலாபமதை நேருடனேகண்டுகொண்டாள்
ஆறுயிரம்பாண்டியரு மையமார்வந்தாரகள
வையைக்கரைபார்த்து வருகையிலேபாண்டியர்கள்
கொஞ்சமாய்ச்சலம்பெருகிக் குறையாறுவருகிறது
கண்டந்தபாண்டியருங் கடிதானகோபமுடன
ஆருடைபங்கிதுதா னடைக்காமல்போனதென்ன
எவருடைபங்கிதுதா னேதுகசடைக்கவில்லை
பிட்டுவிற்கும்வாணிச்சி பொற்கொடியாள்பங்கிதுதான்
ஆள்பேருமசேவகரும அதிவிரைவாயோடிவந்தார்
ஔவையாரைத்தானுமங்கே யழைத்துவந்தாரசரண்டை
வந்துமேதெண்டனிட்டாள் வாழ்பாண்டிராசருக்கு
வாடிநீகூன்கிழவி மாசக்கன்னிஔவையாரே
அவரவர்கள்பங்குதனை யடைத்தார்கள்வையைதனை
உன்பங்கையடையாமற் போனதென்னகூன்கிழவி
ஆரோவொருவொட்டனையா ஆறடைப்பேனென்றுசொல்லி
நூறுபிட்டுவாங்கித்தின்று நேராயடைப்பனென்றான்
பிட்டுதின்றபாவியைத்தான் பின்வரக்காணேனே
ஆறடைத்தானென்றிருந்தே னன்னீதம்பண்ணிவிட்டான்
அவ்வார்த்தைதானகேட்டா ராயிரமபாண்டியர்கள்
ஆரடாசேவகரே அவனைப்பிடியுமென்றார்
தேடிப்பிடியுமென்றார் சீரானவொட்டனைத்தான்
அப்போதுசேவகர்க ளாராயந்துதேடலுற்றார்
மதுரைத்தெருவுகளும் வனங்களும்தோப்புகளும்
தேடிவருகிறார்கள் சீரானவொட்டனைத்தான்
மரத்தடியிற்பள்ளிகொண்ட மன்னவனைக்கண்டார்கள்

கண்டுபிடித்தவர்கள் கடுகெனவேகூட்டிவந்தார்
பாண்டியராசாக்கள் பார்த்தவருங்கோபமதாய்
வாணியக்கிழவியைநீ வகைமோசமசெய்தாயேடா
ஆறடைப்பேனென்றுசொல்லிப பிட்டெல்லாந்தின்றுவிட்டு
மண்ணெடுததுப்போட்டுநீ வைகையையடையுமென்றார்
தட்டிலேமண்வாரித் தலையிலேடுததுகொண்டு
அடிமேலடிவைததுமல்லோ அஞ்சிநடைநடக்க
ஆதிசிவனென் றறியாமறபாண்டியர்கள்
பிடடுதின்றமயககத்தினும் போகமனமில்லையேடா
என்றுசொல்லிப்பாண்டியர் ஈஸ்வரரைத்தானடித்தார்
பாரப்பிரம்பாலே பாண்டியரடித்துவிட்டார்
அடிபட்டுச்சொக்கலிங்கம் அம்மணைபோட்டுவிட்டார்
ஆறுமடைத்தவ ரருபியாய்ப்போய்மறைந்தார்
ஆறுபிரம்பாணடியற்கு மடிதுடையிற்பட்டதுவே
ஆறுமாகம்பிண்டத்துககு மங்கவடிபட்டதுவே
எறும்புகடையாணவுயி ரெண்ணுயிரசீவனுக்கும்
அத்தண்ட சீவனுக்கு மந்தவடிபட்டதம்மா
அப்படிபோலாகுமிது அல்லியம்மாமிஞ்சாதே
ஆண்டியரைகொன்றாககா லாரார்தலைபோமோ
உனனையரவேகொல்லாதே கட்டழகிசகைமரை
கொல்வாரைவிட்டுமல்லோ கொல்லவிடுசங்கமரை

ஆண்டியைய சற்பங்களால் கெல்லநினைத்தது.

பாம்புகளைக்கொண்டுவந்து பாரவிஷமேற்றி
சர்ப்பங்களைவிட்டுநீ சங்கமரைககொல்லுமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டி டல்லிப்பெருமாளும்
ஆரடிதாதிகளே யலங்காரததோழிகளே
பாம்புப்பிடாரர்களைப் பார்த்தோடியழையுமென்றாள்
ஓட்டம்நடையுமா கஓடியடையுமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட் டாரணங்குதோழிமாரும்
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தாதியாகள்
பாம்புப்பிடாரப்பெண்ணே பத்தினிமாரானோர்களே
அல்லிப்பெருமாளு மழைத்தோடிவாருமென்றாள்
வாருங்களென றுசொல்லி வரவழைததார்தாதியர்கள்
அவ்வார்த்தைகான்கேட் டந்தப்பிடாரப்பெண்கள்
மகடிக்குழலூதி மகாவிருதுகட்டினார்கள
பாமபுப்பட்டிதோளிலவைத்துப் பிடாரப்பெண்கள்வாரார்கள்
வீதியும்வீதியது தெருவும்பலகடநத
அல்லியம்மாள்வாசலிலே அனைவோரும்வந்தார்கள்
மகுடததுநாச்சியற்கு வந்தெண்டமபண்ணினார்
எங்களையழைததவகை யேதுவகைசொல்லுமென்றார்
உங்களையழைத்துதா னென்றார்குற்றவுமில்லை

காட்டுக்குப்போங்களடி கன்னிபுற்றுமருந்துவைத்து
கருநாகஞ்செந்நாகங் காகமோடகப்பாம்புகளை
மண்ணுளிப்பாம்புகளும் மலைவிரியன்காஞ்சிரியும்
மட்டில்லப்பாம்புகளை வகையாய்ப்பிடித்துவாரும்
ஆண்டியைக்கொல்லவேணு மதிதுரிதாய்வாருமென்றாள்
உச்சிதங்களவேணுமட்டும் உங்களுக்குநான்தருவேன்
பாம்புப்பிடாரப்பெண்கள் பாங்குடனேபோகலுற்றார்
அத்துவானகானகங்களாரணியமவந்தார்கள
புற்றுக்குமருந்துவைத்தார் பெரும்பாம்புதானபிடிக்க
மந்திரத்தைச்சொல்லியவர் மகுடிக்குழலூதினார்கள்
புற்றீசல்போலாகப் புறப்பட்டதுபாம்புகளும்
கருநாகஞ்செந்நாகங் கறுக்கதுதிப்பாம்புகளும்
ஆடிவரும்பாம்புகள்தா னையர்க்கதபெட்டியிலே
சீறிவருகின்ற செந்நாகமுள்ளதெல்லாம்
மட்டில்லாப்பாம்புதனை வகையுடனேதாம்பிடித்தார்
காவடியைத்தோளில்வைத்துக கடுகியேவாரார்கள
விருதுகளைக்கட்டிககொண்டு மகுடிககுழலூதிவாரார்
காடுசெடிதாண்டி கடிகிவந்தாரதென்மதுரை
செட்டித்தெருதாண்டி தேரோடுமவீதிவிட்டு
அல்லியம்மாள்தனனுடைய அரண்மனைக்குள்வந்தார்கள்
வாசலும்வாசலது ஏழுகட்டுந்தாண்டி
பத்தினிக்குத்தெண்டனிட்டுப் பாம்புகளைமுன்னேவைத்தார்
வகைகதொருபாம்பாக மாதேநாபகொண்டுவநதோம
கொண்டுவநதோமாச்சியென்று கொம்பனைக்குததெண்டனிட்டார்
மருடத்துரைச்சிபவள் மாதருமேதுசொல்வாள
ஆர்பெண்கள்தாதிகளே யலங்காரதோழியரே
பாலுமபழமுமாய் பாம்புகட்குவையுமெனறாள
அபினிமருந்துகளு மனபானசாராயமும
முட்டையுடைததுமலலோ முன்னாலேவையுமென்றாள்
கொண்டுவநதுவைத்தார்கள் கொம்பனைமார்பாம்புகட்கு
அத்தண்டபாம்புகளும் ஆகாரமுண்கிறது
கண்கள்சிவக்கிறதே காந்தாளமாயினதே
அவவலரிகண்களெல்லாம செவ்வலரிபூத்ததங்கே
பாமபுகளைப்பார்ததுமல்லோ பத்தினியாளேதுசொல்வாள்
ஆங்கையர்கண்ணமமை யருளாலேயானபிறநதேன்
பட்டமுஞ்செஙகோலும பாதிநாடாளுகிறேன்
வாடியெனறும்போடியென்றும் வம்புசொன்னாருமில்லை
ஆண்டியிடவாயாலே யலைச்சல்படுகிறேனே
சாதிகெட்டபண்டாரந் தாறுமாறுமபேசுகிறான்
என் ஆங்கமுமுகிறதே யாவிதணலாகிறது
சென்மமுருகிறது சிந்தைதணலாகுதமயா

பண்டாரமானவனைப் பக்ஷிணியேகொல்லுமென்றாள்
கும்பிடுகெண்டனிட்டாள் குணமுள்ளபாம்புக்கு
அல்லியரைகேட்டக்கண்டபாம்புகளும்
செங்நாகமுள்ளதெல்லாம் சீறியெழுந்தனவே
கருநாகமுள்ளதெல்லாம் கதறியெழுந்தனவே
இருதலைப்பாம்புகள்தானெழும்பிவருகுதங்கே
மூன்றுதலைநாகமல்லோ மூடிவருகிறதே
ஐந்துதலைநாகமெல்லாம் அதிர்ந்துவருகிறதே
சீறிவருநாகமெல்லாம் தோவிசயனைப்பார்த்து
ஓடிவரும்பாம்பனைத்துமர்ச்சுனரைக்கண்டதுவே
ஆனலமுதுமன்னனருச்சுனராசனென்று
மினனழகும்பின்னழகும் முதுகிலேமச்சங்களும்
பல்லிறபாசவினை பாதத்தில்செங்காமரை
மீசைமுறுக்கழகும் விழிநல்லபார்வைகளும்
அவரழகைதான்பார்த்து அருச்சுனரென்றறிந்து
நாககன்னிமணவாளன் நல்விசையராசனல்லோ
தருமராதுதம்பியாம் தனஞ்செயனர்ச்சுனர்காண்
வெற்றிமதயானை வீமருக்குதம்பியல்லோ
மாயாதனைத்துணர்காண் வாள்விசையரிவர்காணும்
அல்லியரைமாலையிட ஆண்டிகோலமானாரே
மாலையிடவேணுமென்று வேடங்கொண்டுவந்தாரே
மாப்பிள்ளையைக்கொல்லவென்று மருந்திட்டாளல்லியரும்
கணவனைக்கொல்லவென்று கட்டழகிமருந்திட்டாளே
அல்லியதுவார்த்தைகேட்டு அர்ச்சுனரைக்கொன்றுவிட்டால்
பொற்கொடியாள்நாககன்னி போதச்சிறையாவாள்
கனமோசம்வந்துவிடும் கன்னிசெய்தகாரியங்கள்
செல்வமருமகனுக்குச் செங்கால்வீசுதென்று
வெய்யலுறைக்குதென்று வெண்கானல்வீசுதென்று
ஐந்துதலைநாகமவந்து அருச்சுனர்க்குகுடைபிடிக்கும்
மூன்றுதலைநாகமவந்து முடிமேற்குடைபிடிக்கும்
தோள்மேலேயேறுவதும் தும்பிபறப்பதும்
கீதங்கள்பாடுவதும் கொண்டாடிப்பதுவும்
அரும்பவனிகூத்துகளு மாதிஞ்சிலநாகம
பகுத்துரைச்சியவல மாதரும்பார்த்துவிட்டாள்
பாம்புமயங்கவேதான் பாவிமருந்துவைத்தான்
வானஞ்சுழல்வதற்கு மருந்துண்டோஇவன்கையில்
பூமிசுழல்வதற்கு பொடியுண்டோயிவன்கையில்
என்னைமயக்கவொரு மருந்தறியமாட்டானே
யார்காணுக்காதிகளே யலங்காரத்தோழிகளே
வெள்ளிடபிரம்பாலே வீசுங்கள்பாம்புதனை

பாரப்பிரம்பாலே பார்வையடியுமென்றான்
தாதிமாரப்பொழுது சவுக்கெடுத்துவீசலுற்றார்
மாறிபடிக்கலுற்றார் வண்ணவிகடபாமபுகளே
அப்போது சர்ப்பமெல்லவாம் அல்லியரைப்பார்த்துரைக்கும்
மாபபிள்ளையுமா மணமுகூர்த்தஞ்செய்கையிலே
அன்னவுஞ்சலாடுதற் கழைத்தால்வருவோமோ
என்றந்தப்பாமபுகளதா னெகிரிப்பறந்ததுவே
பாவஙிலும் நல்லதொரு பவளசேனைசேரும்
எந்தவிதத்திறைலே கொன்றிடுவோமென்றேழி
பண்டாரந்தனைக்கொல்லப் பக்குவஞ்சொல்லுமென்றாள்
ஆனல்கேளாச்சியரே ஆலோசனைசொல்லுகிறேன
நீபிறந்தக்கவசுபண்ண நீதியுளளகாட்டானை
யானையையழைக்துவந்து அனைததமயக்கமேற்றி
கொல்லவிடலாமோ கொம்பனேயேசங்கமனே
அவ்வார்த்தைதான்கேட் டல்லியனமகிழ்ந்து
யானையினல் ஆண்டியைககொலல வகைதேடினது
ஆரடிதோழிகளே யலங்காரதகாதிகளே
காட்டானைதன்னை நீங்கள் கடுகஅழையுமென்றாள்
ஆச்சியரே நீ கேளுமடியேனெருவார்த்தை
நீபிறககதகவசுபண்ண நீதியுள்ளகாட்டானை
வெறித்துக்கிரிகிறதே வேங்கைவனங்களிலே
தன்னிழலைத்தானபார்த்து தன்மதம்பொழிகின்றது
கொம்பினால்மலையையல்லோ குத்திப்பிளக்கிறது
மலைகள்பாவதங்கள் மண்ணோடேசாய்த்துவிடும
மனிதரைக்கண்டாலே வாரியறைந்துவிடும
மதப்பட்டுத்திரியுதம்மா மயிலனையேயவ்வானை
எங்களைககண்டாலே யெடுத்துஅறைந்துவிடும
செத்துமடிந்திடுவோம சிவலோகஞ்சேர்ந்திடுவோம்
சென்றேமேயாமாகில் திருமபியுருவதில்லை
இவ்வார்த்தைதானகேட் டேதுசொல்வாளல்லியரும்
கணையாழிமோதிரத்தைக் கழற்றிக்கொடுத்தானே
முத்திரைமோதிரத்தை மொய்குழலேகொண்டுநீங்கள்
யானையின்முன்னேவைத்து அடிபணிந்துதெண்டனிட்டு
நீ-பெற்றமகளல்லியம்மாள் புலம்பியழுகிருளே
உன்னை-பார்க்கமனதாகப் பதினியாளிருக்கிருளே
அழைத்தோடிவாருமென்று சொன்னளேயல்லியமமாள்
கணையாழிகாட்டியல்லோ கடுகழைத்துவாருமெனறாள்
ஓட்டநடையுமாக ஓடுவகள்தாதியனருள
மதத்தகஜந்தானபிடிக்கும மாவெட்டிப்பெண்கள்வர
கணையாழிவாஙகியவர் கடுகநடந்தார்கள்
தஙகளதுமாளிகையிற சடுதியிற்போய்நுழைந்து

புத்திராணவர்க்கும் புத்திமிகவுரைத்து
மக்கசஜன்தான்பிடித்தமகாவனைப்போனாரே
சாவேமோபிழைப்போமோ சாமிசெயலெப்படியோ
பிழைத்துமேவந்தோமானால் பிள்ளைமுகம்பார்ப்போம்
இல்லாமற்போச்சுதானால் ஈசன்பதஞ்சேருகிறோம்
பிள்ளைகளைகூட்டிவந்து பெரியோர்கையிலொப்புவித்து
வாய்க்கரிசிவாங்கி மலைதனிற்போகலுற்றார்
மதுராபுரிதாண்டி மலைதனிற்போகலுற்றார்
காடுசெடிகளெல்லாம் மந்திரியைதேடலுற்றார்
இருண்டவனங்களெல்லா மெத்தசெக்குத்தேடலுற்றார்
மலையோரம்படுத்திருந்த மதயானைக்கண்டதுவே
யானையதுவீறிட்டலங்காரமாயெழுந்து
தன்னிழல்தானோர்ந்து தரையில்நடக்குமது
கொம்பால்வனையைத்தூக்கி இளம்பிஞ்சுயானையது
கண்டுபயந்தார்கள் கட்டழகிபெண்களவர்
யானையைக்கண்டுமெல்லடிபணிந்துதெண்டனிட்டார்
கணைபாழிறம்போட்டுக் கன்னிமாரேதுசொல்வார்
அல்லிப்பெருமாளரசாணைக்குநாயகியாள்
நீங்கள்-தவசுபண்ணிபெற்றகொருதையலல்லாளல்லியரும்
உன்னைக்காணவிருப்பமாகிக் கலங்கித்தவிக்கிறாளே
பார்க்கமனதாகிப் பதைத்துப்புலம்புகிறாள்
போசனமுபண்ணாமற் புலம்பித்தவிக்கிறாள்காண்
உன்னைநினைக்காவொருபொழுதுமிராடாள்
படுக்கைபொருக்காளே பத்தினியாளல்லியம்மாள்
அழுதகண்ணுஞ்சிந்தையுமா யழைத்தோடிவாருமென்றாள்
நீ-வாராமற்போனாக்கால் மாண்டுவிடுவேனென்றாள்
செத்துமடிவேனென்றாள் செலவழிந்துபோவேனென்றாள்
கடுகெனவேவாருமென்று கையெடுத்துதெண்டனிட்டார்
கேட்டந்தமதயானை கெர்ச்சித்துதான்வருமாம்
யானைவரும்போது அழகானதாதியர்கள்
தெருவெருதாண்டி தேரோடும் வீதிவிட்டு
அல்லியம்மாளண்ணருகே யாராணைக்குமோடிவந்து
யானைவருகுதென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
மதுரைத்துரைச்சியவள் மாதுகன்னிதான்கேட்டு
கரும்புசுமைகளைத்தான் கட்டிகட்டாய்வையுமென்றாள்
தென்னமட்டைவாழைமட்டை தோழிகளேவையுமென்றாள்
பச்சரிசிதேங்காயும் பாக்கிகளேவையுமென்றாள்
ஐங்கலச்சாராயமு மருகலமெட்டிக்கொட்டை
கஞ்சாவபினிகளும் கொண்டுவந்துவையுமென்றாள்
இடிமருந்துபாஷாண மிளங்கொடியேவையுமென்றாள்

கொண்டுவந்துவைத்தார்கள் கொம்பனையாள்முன்னாலே
வாழ்மதுரைபட்டணத்தில் மத்தகசம்வருகிறதாம்
யானைவருகுதென்று அம்மதுரைபட்டணத்தார்
மதுரைகுடிபடைகள் மாளிகையிற்போய்நுழைந்தார்
ஓடியொளிப்பாக ளுத்தமரானவர்கள்
அப்போதுமத்தகசம் ஆங்காரமாய்நடந்து
தெற்குதெருகாணடி தேரோடுமெவீதிவிட்டு
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
அல்லியம்மாள் தன்னுடைய அரண்மனையில்வந்ததுகாண்
யானையைக்கண்டவுடன் அல்லியெழுந்திருந்து
மத்தகஜமுன்னேவந்து வணங்கியேதெண்டனிட்டாள்
யானைக்குமுன்பாக ஆகாரம்வைத்தார்கள்
வயிரா . வுண்டதுவே மயக்கம்டெரிதாச்சே
கண்கள்செவந்தனவே கனமயக்கம்கொண்டதுவே
அல்லிப்பெருமாளு மடிவணங்கியேதுசொல்வாள்
நான்பிறக்கவேணுமென்று நல்லதவஞ்செய்தீர்களே
நீங்கள்-தவசுபண்ணிபெற்றமகள் தம்மாரிவின்னுவிட்டேன்
அன்று-ஏழுபிராயத்திலே யெதிர்த்துவந்த பின்முகனை
வெட்டிதலையறுத்து வீரபட்டங்கட்டிக்கொண்டேன்
நீன்முகனைக்கொன்றுநான நீலிபட்டமாளுகிறேன்
வாடிபெண்ணேயென்பார்கள் வையகத்திலாருமில்லை
அடியென்றழைக்கதவர்களாருமில்லைபூமியிலே
ஆண்டியிடவாயாலே யலைச்சல்படுகிறேன்யான்
சாதிகெட்டபண்டாரக் தாறுமாறாய்ச்சொல்லுகிறான்
சொல்லாதுஞ்சொல்லுகிறான் சென்மமுருகுதையா
பொறுத்துமுடியவில்லை பெருமபாவிசொன்னதெல்லாம்
கேட்டுமுடியவில்லை கேடுகாலன்சொன்னதெல்லாம்
செல்வம்குலைந்துதையா சீரழிந்துதின்னுவிட்டேன்
ஆண்டியைக்கொல்வதற்கு அழைப்பித்தேனுச்சியென்றான்
அல்லியதுயரத்தைகேட்டு ஆங்காரக்கோபமுடன்
கண்சிவந்துமத்தகசங் காளையரைகொல்வதற்கு
தும்பிக்கைதூக்கியல்லோ சுற்றியவரைவரும்
முதுகிலமட்சரேகைகளும் முன்னழகுகண்டதுதான்
மட்சவடிவுகண்டு மயங்கிற்று அப்பொழுது
மட்சரேகைபடைத்தவர்கள் மண்டலத்திலாருமில்லை
அருச்சுனனொருவனல்லால அவனியிலேயாருமில்லை
வாழ்விசையனல்லாமல் மண்டலத்திலாருமில்லை
தேவேந்திரன்மகன்காண் திருமாற்குமைத்துனன்காண்
திரௌபதையைமாலையிட்ட தேர்விசையன்யிவர்காணும்
அல்லியரைக்கன்னமிட ஆண்டிகோலமாகிவந்தார்
மாபிள்ளையைக்கொல்லவென்று மருந்துயிட்டாள்மாபாவி

கணவனைக்கொல்வதற்கு கனத்தமருந்திட்டாளே
அல்லிதன்வார்த்தைகேட்டு அர்ச்சுனரைக்கொண்டுவிட்டாள்
ஆயர்பெருமானும் அரிங்கால்பழுதுவரும்
வீமனறிந்தாலே வெகுமோசம்நேர்ந்துவிடும்
அல்லிபற்கேற்றதொரு அழகுள்ளபுருஷனிவன்
மகாராசமாலையிட வையகத்திலாருமில்லை
செல்வமருமகனுந்தான் சீரழியகாரணமேன்
அருமைமருமகன்தானலைச்சல்படுவானேன்
அம்பிகையாலேதான் சுழற்றியெடுத்துக்கொண்டு
கும்பஸ்தலத்தில்வைத்து கூத்தாடுமானையது
கண்டாளேயானைதனை கண்கொள்ளாக்கோபமுடன்
மதயானைதானமயங்க மருந்தறிவாளபாவியிவள்
காட்டானைதான்மயங்க கனமருந்தறிவாண்டி
என்னைமயக்கும்வகை யிவளறியமாட்டாளோ
ஆரடிதாதிகளே யடியுங்கள்யானைதன்னை
மாறியடியுமென்றாள் மதயானைதனையவள்
அப்போதுமத்தகசம் அல்லியரைப்பார்த்துரைக்கும்
மாப்பிள்ளையும்நீயுமாக மணக்கோலம்வரும்போது
என்னையழைத்தாலும் ஏந்திழையேவருவேனோ
வேண்டியழைக்காலும் வருவேனோமெல்லியரே
என்றுநடந்ததுவே இருண்டவனங்களுக்கு
மதயானைபோனபின்பு மாயவரேதுசெய்தார்
மான்செவியுங்கண்கள்ரெண்டு மாயவனார்தெரியவைத்தார்
கண்ணுந்தெரிகிறதே காதிரண்டுங்கேட்கிறதே
அல்லிப்பெருமாளு மாரணங்கேதுசொல்வாள்
பாக்கியிலுநல்லவளே பவளசேனநாயகியே
இந்தக்கிழவனைத்தான் என்னசெயவேண்டோழியென்றாள்
செல்வனைகுலையுதடி தேன்மொழியேயென்னசெய்வேன்
பாண்டிப்பெருமாளே பதராதேசற்றேநில்லும்
அறிந்துநான்வருதுமல்லோ ஆச்சியரேசொல்லுகிறேன்
தெரிந்துதான்வந்துமல்லோ சொல்லுகிறேனுந்தனுக்கு
இடுக்கென்றெழுந்து தோழியரும்வருகிறாளே
சங்கமனாருகில்வந்து தையலருமேதுசொல்வாள்
ஐயாபெரியவரே யறிவைப்படைத்தவரே
நீரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
புதிதாதவசுபண்ணி புத்திமிகக்கற்றவரே
எங்கிருந்துவந்தீர்கா ணிங்கேபுலம்புகிறீர்
ஏதுவகையாக இங்கேவந்தீர்சொல்லுமையா
ஆர்காணுமாச்சியரே யருகில்வந்துகேட்கிறது
மல்லிகார்ச்சுனமிருந்து வந்தேனிதுவழியாய்
துங்கபத்திரிகோதாவரி அய்யகிருஷ்ணாநதியுடனே

கோரஞ்சரஸ்வதியும ஸ்நானங்களாடிவந்தேன்
பாரஸ்தலங்களில்லை பணியாதகோவிலில்லை
முழுகாததீர்த்தமில்லை மிதியாதகோவிலில்லை
புண்ணியகோடிதீர்த்தமாடிப் போனேனம்மாராமேசுரம்
மதுரைநகரமவந்து வைகைதீர்த்தமாடினேனயான்
பிட்டுக்குமண்சுமந்த பித்தரையுந்தெரிசித்தேன்
நூறுபத்துஞ்சென்றதம்மா கொணடியென்வயது
கோலுமரமபுகளும தொங்குதுபாரெந்தனுக்கு
இப்போதுபின்னையோ இன்னமனைநாழிகையோ
எப்போவோவென்னுடலம் இறப்பதுயானறியேன்
அலமேப்பெருமாளும் ஆரசாளும்நாயகியாள்
கன்னிகையென்றாள் கட்டழகியல்லியரை
பதினியாளென்று வெகுபேர்களுஞ்சொன்னார்கள்
ஆகையினாலேதா னாணைகைதேடிவந்தேன்
எங்கள்-முப்பாட்டனாரிலே கைத்தபழுஞ்சோளி
அட்சயபாத்திரக்கைணடிமிராலாச்சுதென்று
சோளிக்குபழஞ்சோலை கேட்கவந்தேனசுந்தரியே
உடுத்திக்கிழிந்திருக்கு முள்ளாடையொருமுழந்தான்
எனக்குமவளதந்தாலே எழுந்திருந்துபோவேனம்மா
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குவந்துவிட்டார்
அல்லியர்க்குகெதண்டனிட்டு ஆனபுடனேதுசொல்வாள
ஐயாபெரியவரேமேலாயாசப்பட்டீரே
அவர்முப்பாட்டனாரிலே கைத்தபழஞ்சோளியமயா
அட்சயபாத்திரதா னைமிராலாச்சுதம்மா
சோளிக்குப்பழஞ்சேலை கேட்டீருசுந்தரியே
பிச்சைகொடுத்தனுப்பும் போய்விடுவோன்சுவாமியென்றான்
அவ்வார்த்தைதானகேட்டு ஆரிதனாநாயகியாள
அறுபதுமுழப்புடவை அழகானபசசைவடம
எடுத்துக்கொடுங்களடி இரக்கிலவாடாவியர்க்கு
நச்சுச்சென்றிறந்து நரைகிழவனபோராட்டம
எப்போதுதானெந்தோலேயும் எடுத்துக்கொடுங்களென்றாள்
ஓட்டமநடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
பசசைவடங்கொண்டுவந்து பண்டாரமுன்னேவைத்தார
ஐயாபெரியவரே யறிவுடைத்தவரே
சோளிக்குபபழஞ்சோலை சுந்தரியைக்கேட்டீரே
முபபதுமுழப்புடவைமுன்னேவைத்தோமெடுத்துப்போம்
ஆகாதையாசசியரே ஆரணங்குநீகேளும்
இப்படிக்குவேணுமானால எனக்குமனைகழுண்டு
நாட்டிலேநான்குலட்சம நமக்குக்கொடுப்பார்கள்
பத்தினியாளகட்டினதோர் பாவாடையுள்ளாடை
உள்ளாடைசேலைதனி லொருமுழம்வேணுமென்றார்.

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியங்கோபங்கொண்டு
இப்படிக்குபிச்சைகேட்டோருண்டோவுலகுதனில்
பாக்கியிலும்பாதிகொடு பவளச்சேனையேதுசொல்வாள்
ஆச்சியரேயுங்களுக்கு அக்குறைபழுதுமில்லை
கெடிப்பதினாலமா குதிரையானையுவருவதில்லை
அழகிலங்கனையோர் ஆடைதந்தாற்போதுமென்ன
கொடுக்கமறப்போனாலும் கொஞ்சத்திற்கீடுவதில்லை
சனிபகைத்தொலையவேண்டும் சற்றேகொடுத்தனுப்பும்
அப்படிமேனாகொடுத்தால் ஆண்டிபவன்போவானே
கேட்டுவாதாதியரே கேடுகெட்டசகமனே
பாக்கியிலும்மங்கலவனாமடி பவளச்சேனையோடிவந்து
ஐயாமாரியவரே அறிவைப்படைத்தவரே
நீசபடித்தவரே தெளிவுறந்தசங்கபரே
உள்ளாடைசேலையது ஒருமுழத்துக்காலே
போகிறீரோபெரியவரே புண்ணியரேசொல்லுமென்று
ஆனாலாச்சியரே அதிலுமொருவயணம்
ஏந்திழையாள்பிச்சைதந்தால் இருகையால்வாங்கிக்கொள்வேன்
தேமொழியாள்கைத்தலத்தை தீண்டியேயான்பிடித்து
அள்ளியேறிக்வேணு ஆனந்தமாரியர்க்கு
இருகையிலுலவாங்கி ஏந்திழையாளளிக்கவேண்டும்
உலகத்திலுள்ளபடி உத்தமியேதப்பாது
அவ்வார்த்தைதான்கேட்டு அழகானகாரியரும்
மகுடத்துரைச்சியர்க்கு வந்தவனோதெண்டனிட்டான்
ஆச்சியரேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
ஐயருக்குப்பிச்சையது ஆரணங்கேதந்தபின்பு
உமக்கைத்தலத்தைத்தான்பிடித்துக் கடுகியேநீறிடுவீர்
வாங்கிக்கவித்துக்கொண்டால் வாழ்ந்தியவர்போய்விடுவார்
உலகத்திலுள்ளபடி வுனக்குகுறைவுமில்லை
தலையிலெழுத்திதுவோ மையலுமேநயனதோழி
உடுத்தியசேலையது உள்ளாடையன்றிதான்
இந்தாருஞ்சாமியென்று ஈந்தாளேயல்லியம்மாள்
வாங்கியந்தசங்கனும் வாழ்வாசிமுகம்பார்த்து
அள்ளிப்பேநீறுமிட்டார் ஆரணங்குதனைத்தலத்தில்
பத்தினியைவாழ்த்திப் பலபல வினையகாட்டினரே
அடிவானமின்னலைப்போல லல்லியர்க்குமேற்றினது
கண்டுமைபங்கினேனே கட்டழகியல்லியவள்
காண்டீபனருச்சுனருங் காற்றாய்ப்பறந்திட்டார்
தெத்துதெருவாண்டி சீராணகட்டிலவுகா
மாயன்பெருமாளிடம் வந்துவிட்டானருச்சுனனும்
அல்லியின்வாசலிலே அதிசயங்களுள்ளதெல்லாம்
மாயருடன்சொல்லியல்லோ மனஸ்தாபப்பட்டழுதான்.

மாலைதரிப்பதெப்போ மனதுகுறைதீர்வதெப்போ
கூடியணைவதெப்போ குறைகளெல்லாம் தீர்வதெப்போ
மன்மதபாணமது மார்புருகிப்போகுதென்றாள்
அப்போது அல்லியரும் அவள்கோபந்தீர்ந்தெழுந்து
ஆரடிதோழியர்களாயிரம்பேர்வாருங்களடி
ஆண்டியைக்கொண்டுவாரும் ஆக்கினைகள்செய்யவேணும்
பாங்கியிலும்நல்லதொரு பவளச்சேனைவேதுசொல்வாள்
சந்திரனோசூரியனோ சதுர்முகப்பிர்மாவோ
மாணிக்கச்சொக்கலிங்கம வடிவுகொண்டுவந்தாரோ
எங்கென்றுதேடுவோம்எழிலானசங்கமனை
போனாலும்போய்ப்போறான் போவோமரண்மனைக்கு
அல்லியரைக்கூட்டிக்கொண்டு அரண்மனையில்வந்தார்கள்
மாளிகைவாசலது மண்டபம்வந்தார்கள்

ஸ்ரீகிருஷ்ணபகவான் பாம்புப் பிடாரனாகவும் அருச்சுனன் பாம்பாகவும் வடிவுகொண்டது.

அப்போதுபெருமானும் ஆயரென்னவடிவெடுத்தார்
பாம்புப்பிடாரனைப் பாரளந்தார்வடிவெடுத்தார்
தொண்ணூறப்பத்துஞ்சென்றதுகண்டகிழவனைப்போல்
பண்ணைப்பூப்போலாகப் பழுத்தகிழவனானார்
பத்துவிதப்பாம்புகளைப் பாரளந்தாருண்டுபண்ணா
வாழ்விஜையனருச்சுனனை மாணிக்கப்பாம்பாக்கி
போர்விஜையனருச்சுனனைப் பெட்டியிலேதானடக்கி
முப்பதுவிருதுகட்டி முகடிக்குழலெடுத்து
பாம்புப்பெட்டிக்காவடியைப் பாரளந்தார்தோளில்வைத்து
மகுடிக்குழலூதி வாராரேயெம்பெருமாள்
அல்லியவள்பிறந்த அழகானபொய்கையண்டை
ஆலமரத்தடியில் அரிராமர்வந்தமர்ந்தார்
நடுகாட்டிடைச்சியர்கள் நானூறுகன்னிகளும்
பாற்குடங்கள்தாமெடுத்துப் பக்தினிகருக்கொண்டுவந்தார்
சாரம்பசுப்பாலைக் கப்பங்கள்கட்டிவைத்தார்
ஆலமரநிழலிலே அனைவருமவந்தமர்ந்தார்
பெண்ணரசுமாதரெல்லாம் பிடாரனைக்கண்டார்கள்
ஐயாபெரியவரே அழகானபிடாரனே நீர்
எந்தவூரெந்தநாடு எங்கிருந்துவந்தீரையா
ஊரென்னபேரென்ன உத்தமரேசொல்லுமென்றார்
கொங்குமலையாளம் சோச்சிதேசமெங்களது
பாம்புபிடிக்கிறதும் பவனியாட்டிவைப்பேனென்றார்
ஆனால்கேளையாவே அடியேனொருவார்த்தை
என்னென்னபாம்புவிதம் எடுத்துதானாட்டுமென்றார்
பசியாயிருக்குதம்மா பாம்பாடமாட்டாது
ஐந்துநாளாச்சுதம்மா ஆகாரந்தான்புசித்து

பேர்சனங்களில்லாமல் புல்லாடல்பட்டுதம்மா
பாலதுதான்கொடுத்துப் பசியதுதீர்ந்துதானால்
அப்போவிளையாடும அழகானபாம்பிதுதான்
அவ்வார்த்தைதானகேட்டு அங்கிருக்குமாதரெல்லாம்
கொஞ்சம்பால்வார்க்கிறோம குடிக்கவையும்பாம்பையென்றார்
அப்போ பிடாரன் ஆயாவரேதுசொல்வார்
ஒருவர்கண்பார்க்கக்குடியாது கனமுள்ளபாம்பிதுதான்
பக்கத்திரைவளைத்துப பாற்குடத்தைமுன்புவைத்தால்
உண்டுபசியாறும் உத்தமியேஇப்பாம்பு
பாற்குடங்களைத்திலுமுள்ளபாலையெல்லாம
பாம்புகுடித்தது.
அத்தண்டபெண்களெல்லாம் அவ்வார்த்தைதான்கேட்டு
பாற்குடமுள்ளதெல்லாம் பார்த்துவைத்தார்கள்
சுற்றித்திரையோட்டுசீரானபாம்பைவிட்டார்
பக்கத்திரைவளைத்து பாம்புகளையுள்ளேவிட்டார்
ஆணலழகுமன்னன் அருச்சுனவீரியனும
பாலைக்குடித்துவிட்டு பானையையுருட்டிவிட்டான்
திரையெடுத்துப்பார்த்தார்கள் திகிலடைந்தார்பெண்களெல்லாம்
ஐயையோதெய்வமென்று அரைந்துகொண்டெல்லவரும
பாவிகெடுத்தாயே பாலெல்லாம்போச்சுதடா
இத்தனைபாலையது ஏதாய்குடித்ததடா
அல்லியறிந்தாலே ஆக்கினைகள்செய்வாளே
தாமணிப்போட்டல்லவோ தலையைத்தறிப்பாளே
கொல்லநினைப்பாளே குடிகேடுவந்திடுமே
ஆரடாபாதகனே அறிவுகெட்டபிடாராநீ
கொஞ்சம்பால்குடிக்குமென்று குடமெல்லாம்வைத்தாயே
நரைத்தலையைநாயபிடுங்க கிழத்தலைக்குக்கேடோ
எங்களைக்கெடுத்தாயடா எங்கள்பாலைக்கொண்டாயடா
என்றுபுலம்புகிறா ரிளங்கொடிமாரெல்லவரும
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய்ப் போரார்கள்மாதரெல்லாம்
அல்லியம்மாள்தன்வாசல் அரண்மனையிலவந்தார்கள்
அல்லியர்க்குமுன்புவந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
ஆச்சியரேயெந்தாயே அதிசயத்தைநீர்கேளும்
மதுராபுரியருகே வைகைக்கரையோரம
ஆலமரத்தடியில் அங்கேயொருகிழவன
பாம்புப்பிடாரனவன் பாருலகில்யாமறியோம
பத்துவிதப்பாம்புகளின பஞ்சரத்தினப்பாம்பிதுதான்
சந்திரனைப்போலாகத் தளும்புகுதேயென்னுச்சி
சூரியனைப்போலேயல்லோ துலங்குதேயென்னுச்சி
வேரிற்பவளமது மின்னுகிறகாந்தியைப்போல
மின்னற்கொடிபோலே விளங்குகிறதப்பாம்பு

பாம்பு-பசியாயிருக்கிறது பால்வார்த்துபோங்களென்றான்
பாற்குடத்தைக்கீழிறக்கிப் பாலதுவார்க்கவந்தோம்
கண்ணாலேபார்த்தாலே கரண்டிபால்குடிப்பதென்றான்
அத்தனைபாலையுங்கா ணப்பாம்புஉண்டுதம்மா

அல்லியரசாணி பாம்புப்பிடாரனை வரவழைத்தது

இவ்வார்த்தைதான்கேட்டு அல்லியருமென்னசொல்வாள்
இந்தஇசயத்தை எங்கிலுநான்கண்டதில்லை
பாம்புகளைப்பார்க்கவேணும் பிடாரனையழையுமென்றாள்
அந்தக்கிழவனைப்போய் அழைத்தோடிவாருமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அலங்காரத்தாதியர்கள்
பாம்புதனையாட்டிவைத்தால் பாக்கியங்கள்தந்திடுவாள்
வேணுமென்றவச்சிரங்க ளுத்தமியாள்தான்கொடுப்பாள்
வாருமையாவென்றுசொல்லி வருகிறார்தாதியர்கள்
அப்போபிடாரனவன் அரிராமர்தானெழுந்து
காலடியைக்கோளில்வைத்துக் கடிதெழுநடந்தார்
மகுடிக்குழலூதிக் கொண்டுவிட்டாரெனமதுரை
கடையுங்கடைத்தெருவுங் கருமாரவீதிகளும்
ஆகாசவீதிகளும் அரண்மனைத்தெருதாண்டி
அல்லியம்மாள்தன்வாசலரண்மனையிற்போய்ப்புகுந்தார்கள்
வாசலும்வாசலதுபடியேழுந்தான்தாண்டி
சிங்காதனத்துக்கு முன்பாகவந்துநின்றார்
உத்தமியைக்கண்டவனும் ஒதுங்கியேதெண்டனிட்டான்
வந்துபணிந்தவரும் வணங்கியேநிற்கலுற்றார்
ஐயாபிடாரனே அப்பாம்பையாட்டுமென்றாள்
வண்ணவண்ணபாம்பெடுத்து விதம்விதமாயாடலுற்றான்
ஆடாதகூத்துகளையாட்டிவைத்தான்பிடாரனவன்
ஐயாகிழவனாரே அன்பானபிடாரனே நீ
வேறிற்வளம்போலே மின்னுகுதுபெட்டியிலே
சந்திரகாசம்போலே தளும்புகுதுபெட்டியிலே
சூரியன்போலே துலங்குறதுபெட்டியிலே
என்னபாம்பிருக்கிறது எடுத்துநீயாட்டுமென்றாள்
ஆசிரியரேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னோடேதான்பிறந்த எனக்கிளையதங்கையவள்
தங்கையவள்வளர்த்துவந்த தயவானபாம்பிதுதான்
எப்பாம்பெடுத்தாலும் யிப்பாம்பெடுக்கறியேன்
பெண்டுகளைக்கண்டாலேபிரியமுடனோடிவரும்
மார்போலுந்தோள்மேலும் மடிமேல்புரண்டாடும்
தோளின்மேலேறுவதும் தும்பிப்பறப்பதுவும்
மார்பின்மேலேறுவதும் மடியிலிருக்குமது
முகத்தோடேமுகமணைத்து முத்தங்கொடுக்குமது

மார்பின்மேலே யிப்பலோ மருவிவிளையாடும்
கீதங்கள்பாடியது கொண்டாடிக்குமது
ஆட்டங்கூத்துகளு அரும்பவனியாடுமது
வெட்டிராப்பிளக்கடுத்து மெத்தனவேவாயிடும்
வெற்றிலைச்சுருளெடுத்து விரும்பியதுகொடுக்கும்
பஞ்சரகனப்பாம்பிதுதான் பத்தினியேயானெடுக்கேன்
உன்னையிதுகண்டாலே ஓடிவந்துமடியிலேறும்
இப்பாம்பைநீயெடுக்கே யென்றுனேயிடாரணும்
ஆனல்கேளையாவே அனபானபிடாரனீ
அப்பெரியபாம்பினது அதிசயத்தைப்பார்க்கவேணும்
சதிசெய்யெடுத்துவிடு சந்தேகப்படவேண்டாம்
உசிதங்கள்வேணதெல்லா முன்றனுக்குயான்றருவேன்
மெத்தவருத்திருனே மெல்லினலவாளல்லியரும்
அப்போபிடாரனவன் அப்பாம்பைதானெடுத்தார்
பெட்டிதிறக்கையிலே பேரானவாழ்விசையன்

அர்ச்சுனன்பாம்புருக்கொண்டு அல்லியமடிமேலேமருவியது.

அல்லிமடிமேலே அர்ச்சுனனேநின்றனே
மார்மேலுந்தோளமேலும் மருவிவிளையாடுகிறான்
முகத்தோடேமுகமணைந்து முத்தங்கொடுக்கிறானே
போதுமையாமைத்துனரே போயவாருனுகசாமியென்றான்
மாயவனாகண்காட்டி வழிபித்துப்பேசகமென்றான
தம்பிபறக்கிறதுஞ் சேர்ந்துவிளையாடுவது
கொண்டாணடிப்பதுவு கூத்துகளாடுவதும்
வெற்றிலைபாக்கெடுத்து மெல்லியாகருக்கொடுப்பதுவும்
பார்த்துமகிழ்ந்தகாலே பத்தினியாளல்லியம்மாள்
ஐயாபிடாரனே அன்பானவார்த்தைசொல்லும்
இன்றையாத்திரிக்கு இருக்கட்டுமிப்பாம்பு
நாளைக்குவந்துநான் வாங்கிப்போறபாம்பையென்றாள்
அவ்வார்த்தைதானைக்கேட்டு அன்புடனேயேதுசொல்வான்
என்னுடையதங்கையவள் இசபுருன்னராயியவள்
பஞ்சணைமெத்தையிலே பக்திநகரும்போதையிலே
கூடப்படுத்துக்கொண்டு குலாவிவருகிறபாம்பிதுதான்
பக்கத்திலிருந்திடில்லை பத்தினியாள்தங்கையவள்
காணாதபோதினிலே கலங்கித்தவிப்பாளே
பாராமற்போனாலே பக்கைபொருத்தாளே
உண்ணாள்குளியாளே உறக்கமவளுந்தூங்காளே
அல்லியென்றவுன்னிடத்தி லாசியோடேவிட்டுப்போனால்
பாம்புகளைத்துப்போகும் பத்தினியேயேதுசெய்வேன்
அனாப்பலங்குறைந்துபோகும் அழகானவிப்பாம்பு
கொரங்குறைந்தாலும் கனகந்தருவேனென்றான

தராசுநிறையாக நிறுத்துப்போம்பாம்பையென்றாள்
அப்படியேசம்மதித்தான் ஆயன்பிடாரனவன்
எடுத்துத்தராசில்வைத்து இடைபார்த்துத்தூக்கிவிட்டான்
பாலும்பழங்களுமே பசியாமல்லவையுமென்றான்
நாளைவருகிறேனே நாயகமேபோகிறேன்யான்
பாவைதனிலேயல்லோ பார்த்திபனேதுசொல்வான்
எட்டொருநாள்போனபின்பு இங்கேவாலமைத்துனரே
இந்தவிசுவாசமெனக்குத்தெரியுமென்றான்
போய்க்காணுஞ்சுவாமியென்று புகழாகத்தெண்டனிட்டான்
பாம்பைக்கொடுத்தல்லவோ பாரளந்தார்போய்நடந்தார்
பாலும்பழங்களுமே பாம்புக்குவைத்தார்கள்
பார்த்திபனருச்சுனனும் பசியாறித்தானிருந்தார்
அந்திகாலமாச்சுதங்கே ஆதித்தன்போய்மறைந்தார்
ஆதித்தன்தான்மறைய அல்லியம்மாளேதுசொல்வாள்
அநுஷ்டானம் அனைத்துமிகக்கழித்து
செபதபங்களுள்ளதெல்லாம்செய்தாளேயல்லியம்மாள்
சொக்கரைப்பூசைசெய்து செவிதனிலேபூச்சொருகி
போசனச்சாலையிலே புகுந்தாளேயல்லியம்மாள்
சக்கரைப்பாற்போசனமும் சாதங்கறிவகையும்
உண்டுபசியாறி உத்தமியாள்கையலம்பி
பஞ்சணைமெத்தையது பள்ளியறைசோடியென்றாள்
தோழிமாரானவர்கள் சுறுக்காயெழுந்திருந்து
கண்மூன்றுடையதொரு கனவயிரக்கட்டிலிட்டார்
மெத்தைமடித்துவிட்டார்மேலேதலையணைபோட்டார்
காம்பரிந்தமல்லிகைப்பூ கட்டிலின்மேல்சொரிந்தார்
தங்கத்தலையணையுஞ் சாய்மணையுமிட்டார்கள்
ஒருகுதலையணையும் ஒய்யாரதிண்டுவைத்தார்
அருகுதலையணையும்வைத்து அலங்காரஞ்செய்தார்கள்
ஆத்தர்புனுகுகளும் அள்ளித்தெளித்தார்கள்
கதம்பமுங்கஸ்தூரி கரைத்துத்தெளித்தார்கள்
சந்தனமும்பன்னீருஞ் சாடிஞரெத்திசையும்
சந்தனமும்புகைகொடுத்துசாம்பிராணிதூபமிட்டார்
குத்துவிளக்குகளைக் கொழுந்துபடவேற்றினார்கள்
மாடங்கள்தோறுமங்கே மணிவிளக்குமேற்றினார்கள்
சுன்னவிலேபனமரச் சாடிஞரெத்திசையும்
பஞ்சணைமெத்தையண்டை பாக்குபடிக்கம்வைத்தார்
முத்துச்சுட்டசுண்ணாம்பும் மோரங்கிவெற்றிலையும்
ஆரங்கிப்பாக்குகளும் அழகுநல்லவெற்றிலையும்
காய்ச்சாக்களிபாக்கும் கம்மாறுவெற்றிலையும்
வாகாய்ச்சுருள்மடித்து மாணிக்கத்தட்டில்வைத்தார்
தண்ணீரிற்பாலைவைத்து கெண்டிகையில்தீர்த்தம்வைத்தார்

சோடித்தோமாச்சியென்று தெண்டனிட்டார்தாதியர்கள்
பாயவிரித்துமடியில்வைத்து பத்தினியாள்தானடந்தாள்
பஞ்சணைமெத்தையிலே படுக்கையறைபோய்ச்சேர்ந்தாள்
மாணிக்கக்கதவடைத்து வயிரத்தாள்பூட்டினாளே
அத்தண்டதாதிகளும் அங்கங்கேபள்ளிகொண்டார்
பஞ்சரகனப்பாம்பெடுத்து பக்கத்தில்வைத்துக்கொண்டாள்
பைங்கிளியாளல்லியம்மாள் பள்ளிகொண்டாள்மலரணையில்
அப்போதருச்சுனரும் ஆயனைத்தானினைந்து
என்சோபந்தெளியவேண்டும் ஸ்ரீராமர்கிருபைசெய்யும்
காமவிகாரமதை களைதீரவேண்டுமென்றான்

ஸ்ரீகிருஷ்ணபகவான் மூதேவியையழைத்து
அல்லியின்மேல்பிரவேசிக்கச்செய்தது

அருச்சுனன்தன்துயரமறிந்தாரேயெம்பெருமாள்
சீதேவிமுனம்பிறந்த திருவிளையாள்மூதேவி
மூதேவிநாயகியை முகில்வண்ணரழைத்து
மகுடத்துறைச்சியர்க்கு மாராகிதநிசையை
விடிந்துமொருசாமம் மெல்லிவிதநிசைதெளியாமல்
மாறுதிந்நிசைகொள்ளுமென்றுவரவிட்டாராமாயவரும்
வந்துநிசைகொண்டாள்வலம்பெரியமூதேவி
அனந்தலதெளியாமல்அசந்துநித்திரைபோகலுற்றாள்
பாம்புவடிவைவிட்டு பார்த்தீபனருச்சுனனும்
எப்போதும்போலாகவேவிசையன்வடிவுகொண்டா
சங்கரரும்பார்வதியுமசலிருந்ததுபோல் (ன்
சிவனுடனேபார்வதியாள்சேர்ந்திருந்தபாவனைபோல்
தென்னகரிராமருக்குச் சீதைவசதுவாய்த்ததுபோல்
கந்தருடனேவள்ளியம்மை கைகலந்தபாவனைபோல்
சாரையுஞ்சர்ப்பமும் சருவியயலானதுபோல்
மானுங்கலையுமல்லோ மருவியணைந்ததுபோல்
கூடிமருவினனே குங்குமப்பூமெத்தையிலே
கண்ணாடிமேலயல்லோ கடுகுருண்டபாவனைபோல்
மல்லிகைப்பூமேலே வண்டுறைந்துவாய்த்ததுபோல்
மருவியணைந்தானே மகாவிடாய்தீர்ந்தானே
ஆறுதம்பாகமெல்லாம் ஆறினனருச்சுனனும்
தீராதசோபமெல்லாம் தீர்ந்தானருச்சுனனும்
மங்கையரைப்புல்கியல்லோ மருவினனருச்சுனனும்
வெள்ளிமுளைக்கையிலேவெடிகோட்டான்கூவுமபோ
பாம்புவடிவெடுத்துப்பக்கம்படுத்திருந்தான் [து
எப்போதுஞ்சர்ப்பம்போலெழில்விசையன்வீற்றிருந்தான்
பொழுதுவிடிந்ததன்பே பொற்கொடிமார்கண்விழித்தார்
தோழியர்களதாதியர்கள் திடுக்கிட்டெழுந்தார்கள்

அல்லிப்பெருமாளும் அசந்துவிக்கிரைபோகலுற்றான்
கொம்பனையைத்தோழிமார்கள் கூவியெழுப்பினாரே
தட்டியெழுப்பினார்கள் தாமக்குழலாளை
பொட்டெனக்கண்விழித்துப்பொற்கொடியாள்தானெழுந்து
அலைகுலையக்கலைகுலைய ஆடைகளைந்திருக்க
தலைவிரித்தாளே கட்டழகிஅல்லியம்மாள்
பாங்கியர்கள்சூழவேதான்பவளசேனைவந்துவிட்டாள்
அல்லிப்பெருமானை ஆரணங்கைதான்பார்த்து
உற்றுப்பார்த்தவளும் உத்தமியைக்கேட்கலுற்றாள்
ஒருநாளுமில்லாத உச்சிதங்கள்காணுதம்மா
வாரிமுடித்ததலை மயிருங்கலைந்ததென்ன
கோதிமுடித்ததலை கூந்தல்கலைந்ததென்ன
மஞ்சளழிந்ததென்ன மார்பழிந்துபோனதென்ன
பொட்டுக்கலைந்ததென்ன பூவழிந்துபோனதென்ன
கண்ணிலிட்டமைகளெல்லாம் கரையவந்தகாரணமேன்
கோவைப்பழம்போல் குமரியின்செவ்வுதடும்
குமரியின்செவ்வுதடும் கோதிவிருப்பானேன்
பதிக்குக்கலைவானேன் பஞ்சணைகலைவானேன்
சாம்பிராங்கலைப்பு சகத்திரங்குலைவானேன்
மங்கையரேயுந்தனக்கு வாட்டம்வந்தவாறேது
அல்லிப்பெருமாளு மாரணைந்துயேதுசொல்வாள்
பிடாரனவன்சொன்னவார்த்தை பொய்யல்லதாதியரே
மனிதனுடன்கூடவே மருவினபாம்பிதுகாண்
பஞ்சணைமெத்தையிலே பக்கத்தில்வந்திருந்தேன்
மாயவிளையாடிநின்று இளங்கொடியேயென்தோழி
என்றுமுத்தின்றியடியை தொட்டுடைந்தசைந்தான்
பூங்காவனத்திற்போய் புனல்கன்னைக்கோடி
பானெவெண்பல்விளக்கி ஓலைகொண்டுதொழித்து
தண்ணீரினங்கொடிமாதர்கள் கமல்மூழ்ஞ்சுதிசெய்து
வாயோபெண்ணும் மஞ்சள்முஞ்சுத்திசெய்து
சிவனுக்கருளாளு இருநேரக்காப்பணிந்து
சிங்காரமெத்தையின்மேல் செண்மொழியாள்வந்தயர்ந்தாள்
ஆடியரசியரே அலங்காரதோழியரே
பாம்புகளைக்குப்பாலும் பழங்களும்வையுமென்றாள்
கொண்டுவந்துவைத்தார்கள் குடமுநிறைந்தபாலதுவை
பஞ்சாரணப்பாம்புதான் பாலைக்குடிக்கவே
அப்போதுபெருமாளும் ஆயரவர்தானெழுந்து
பிடாரனைப்போலவே பெருமாளும்வந்துவிட்டார்
வாசலுள்ளவாசலது படியேழுந்தாண்டி
அல்லியம்மாள்முன்னேவந்த அடிபணிந்துதெண்டனிட்டார்
ஆச்சியரேநீரேனும் அடியேனொருவார்த்தை

இப்பார்புவில்லாமல் என்னுடைய தங்கையவள்
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய் அழுதுண்ணமாட்டாமல்
கண்ணீரைவிட்டவளும் கலங்கியழுதாளே
சேனாசவார்த்தையெல்லாம் கேட்டேனம்மாவுன்னாலே
உன்னாலேபட்டக்லை உத்தமியேபோதுமம்மா
என்னுடையபாம்பதுதான் எத்தனைகரைந்துபோச்சோ
எவ்வளவுதேய்ந்துதோ எதுவாயிருப்போமென்றார்
கொண்டுவந்திருந்தார்கள் கொப்பெனவேசிராகுதனில்
பாரமிகக்குறைந்து பாம்புதட்டெழும்பியது
அவைவாசிகுறைந்ததம்மா அழகானபாம்பதுதான்
இன்னமரைவாசியிருந்தால் இங்கேதானாகுமம்மா
அறியாமல்விட்டுப்போனேனே அனர்த்தம்வரலாச்சுதம்மா
கொஞ்சமிடைக்குத்தான் கொண்டுவாரும்ரத்தினத்தை
என்றுசொல்லக்கானகேட்டு இளங்கொடியாளல்லியம்மாள்
வச்சிரமும்மாணிக்கமும் வைத்திடைக்கட்டிக்காள
பாம்பெடுத்துப்பெட்டியில்லே பாரளந்தாவைத்துக்கொண்டார்

ஸ்ரீகிருஷ்ணபகவானருச்சுனனுகிய பாம்பையெடுத்துப்போனது

போகிறேனுச்சியென்று போய்நடந்தான்பிடாரனவன்
கோட்டைக்கடந்தவரும் கொத்தளமுங்கடந்தாண்டி
தெருக்கெருநடந்து தேரோடும்வீதிவிட்டு
ஆரணியந்தன்னிலே அரிராயர்வந்துவிட்டார்
ஆணழகுமன்னன் அர்ச்சுனனோதுசொலவான்
வாழ்வாரிஅல்லியரை மாலையிடுவதெப்போ
தாலிதரிப்பதெப்போ சுவாமிபெருமாளே
கட்டிவிருந்துக்குக் கலியாணஞ்செய்வதெப்போ
என்றுவெளியுமோ எக்காலஞ்சென்றிடுமோ
அல்லிமேமறசிகையாய் அலைகிறானருச்சுனனும்

ஸ்ரீகிருஷ்ணபகவான்மறுபடியும் மிருகங்களைஉண்டுபண்ணினது

அன்றுபோய்மற்றுநாள் அக்கிரமமேசெய்தார்
மாயமிருகங்களை வனத்திலேயுண்டுபண்ணுர்
காட்டானைசிங்கங்களும் கரடிபுலியாளிகளும்
ஏனக்கடமைகளும் எருமைக்குரங்குகளும்
புள்ளிமான்முள்ளம்பன்றி புனுகுப்பூனைமுயல்களுடன்
மயிலகுயிலன்னமும் வண்ணவண்ணப்பட்சிகளும்
அனேகமானமிருகமெல்லாம் அகிரமமாவுண்டுபண்ணுர்
மறுதைக்குடிபடைகள் வனத்தில்வர அஞ்சுகிறார்
கண்டவரையெதிர்க்கிறது காட்டானைசிங்கந்தான்
ஓடிப்பதுங்கிபல்லோ ஒளிப்பார்சனங்களெல்லாம்
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய் அல்லியண்டையோடிவந்தார்
அழுதமுகத்துடனே அல்லியெதிரில்வந்தார்
இத்தனைநாள்பிழைத்தோம் இடுக்கமில்லாதிருந்தோம்

என்னகுறைசெய்தோமோ இயலானமிருகமம்மா
காட்டானைத்துஷ்டரடிப்புலி கண்டுறுத்துதம்மா
எந்தவிதம்நாம்பிழைக்க இடுக்கமில்லாதிருப்போம்
மிருகபன்றிமானினமும் விம்மிதுரத்துதம்மா
மறுதேசம்போய்நாங்கள் வாசாய்ப்பிழைப்போமம்மாள்
மதுரையிலுள்ளசனம் வலசைகுடிபோரோமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு யலங்காரத்தாதியர்கள்
அல்லியம்மாள்தன்னுடனே அறிக்கையிட்டார்தாதியாகள்
மகுடத்துரைச்சியவள் வார்த்தையதுகேட்டு
வேட்டைக்காரப்பெண்களை விரைந்தோடியழையுமென்றாள்
குறவர்பெண்கள்மறவர்பெண்கள் கூட்டிவாதாதியென்றாள்
வில்லியப்பெண்களை நீ வேட்டைக்கழையுமென்றாள்
கேட்டதாதியர்கள் கொப்பெனவேவோடிவந்தார்
வேட்டைக்காரப்பெண்களைத்தா னோடியழைத்தார்கள்
அப்போதுவில்லியர் மெ. லியர்வாராகள்
காசெருப்புந்தோல்குல்லாவுங் கைதனிலேசில்லாக்கோலும்
துரட்டைகுண்டுதுபபாக்கி இருதோளில்வைத்தாகள்
பன்றிகுத்தும்வல்லயங்கள் பாக்குகளுந்தானெடுத்தா
ராணவலையுமுயல்வலையும் வகையுடனேதானெடுத்தார்
உண்டுவில்லுஞ்சுண்டுவில்லுஞ் சிங்காணிவில்லெடுத்தார்
வேட்டைநாயுஞ்சங்கிலியும் விருதுகட்டிவாரார்கள்
வெள்ளித்தமுக்கடித்து வெண்கலக்கொம்பூதிவாரார்
பொன்னின்தமுக்கடித்துப் புறப்பட்டார்பெண்களவர்
வேட்டைநாயுஞ்சங்கிலியும் விருதுகட்டிவாரார்கள்
கருநாயுஞ்சங்கிலியும் சுருக்கெனவேகூட்டிவந்தார்
அல்லியம்மாள்வீதியிலே அனைவருமவந்துநின்றார்

அல்லியம்மாள் மறுபடியும் வேட்டைக்குப்போகிறது

ஐயாயிரந்தோழியர்க ளனைவரும்பயணமென்றாள்
பல்லக்கைஜோடியென்றாள் பத்தினியாளல்லியரும்
கைத்தண்டிசொப்பனிட்டுக் கன்னியர்கள்முன்னேவைத்தார்
ஆயிரம்பெண்களவ ரழகுள்ளகுதிரையேறி
பாண்டிப்பெருமாளும பல்லக்கிலேறினளே
பாராசாரிபுரவியது பஞ்சகல்யாணியது
விருதுகுதிரைஜோடித்து மெல்லியர்கள்கொண்டுவந்தார்
ஏறினாள்கனகத்தண்டி எடுத்தார்கொடிவிருது
யானையின்பேரிகைதா னடிபடுதேதமுகுவென்று
வெண்கலபேரிகைகள் விருதுமுழக்குதங்கே
மேளமுழங்குறது முழுமண்டலமதிர
மதுரைத்தெருக்களெல்லா மண்துளெழும்புது
மதுரைத்தெருதாண்டி வந்துவிட்டார்கானகத்தில்
காடுசெடிபுகுந்து கனவேட்டையாடுகிறார்

கனகதண்டிவிட்டிறங்கி கட்டழகியல்லியம்மாள்
ஏறினாள்புரவியின்மேல் எடுத்தாளே அம்புவில்லை
தட்டினாள்புரவிதனைச் சாரிவிட்டாள்கானகத்தில
வளைத்தாளே வில்லதனை வாங்கிவிட்டாளஸ்திரத்தை
இழுத்துவிட்டாள்பாணந்தன்னை இமயகிரிநடுங்க
தொட்டாளே வில்லதனைச் சொரிந்துவிட்டாள்பாணங்களை
காட்டானை சிங்கங்களைக் கண்டுதுரத்தலுற்றாள்
புலிகள்கரடிகளைப் போடுகிறாள்பாணத்தாலே
கலைமானும்பன்றிகளும் கண்டமிருகங்களை
மட்டில்லாமிருகங்களை வதைபண்ணிப்போட்டிடுவாள்
புள்ளிமான்றன்னைக்கண்டு போட்டாளேபாணத்தாலே
மதயானைமிருகங்களை அதமாக்கிப்போடுகிறாள்
அனேகமிருகங்களை அதமாக்கிப்போடுகிறாள்
மாயன்பெருமானும் மலைஜோகியேதுசெய்தார்
அந்தவனந்தனிலே அதிகஜலமில்லாமலே
தண்ணீர்கிடையாமல் சுவாமியவர்வுண்டெண்ணார்
அல்லிப்பெருமாட்கு அதிகதாகமுண்டெண்ணார்
தண்ணீர்களையல்லோ தாகவிடாயனாளே
நெஞ்சுலர்ந்துபோகிறதே நினைவுதப்பிப்போகிறதே
உண்ணாக்குத்தொண்டையது உலர்ந்துமேபோகிறதே
காதையடைக்கிறதே களையாய்வருகிறதே
தண்ணீர்களையாலே தான்விழுந்தாள்பூமியிலே

அர்ச்சுனன் காசிப்பிராமணனாய்வந்து காசிதீர்த்தங்கொடுத்தது.

காண்டீபனருச்சுனனுங் கட்டழகரப்போது
காசிபிராமணன்போல் கடுகவடிவெடுத்தார்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்ட கிழவனைப்போல்
நாணப்பூம்பலேயல்லோ நரைத்தகிழவனானா
காசிநல்லதீர்த்தமது காவடியைத்தோளில்வைத்து
மூர்ச்சையாய்விழுந்தாளே மொய்குழலாளல்லியம்மாள்
அந்தவழியாக அருச்சுனரும்வந்தாரே
பிராமணனைக்கண்டார்கள் பொற்கொடிமார்தோழியர்கள்
ஐயாபெரியவரே அழகானவேதியரே
மெத்தப்பெரியவரே மேனாட்டுவேதியரே
பாருலகையாளுமொரு பதினியாளல்லியம்மாள்
தண்ணீர்களையாகத் தவித்துவிழுந்தாளே
தாகவிடாய்மிகுந்து தளர்ந்தார்காணராஜகன்னி
காதடைத்தவளுங் களைத்துவிழுந்தாளே
காசிதீர்த்தம்வாருமையா களைகள்தெளியவேணும்
புண்ணியமாய்ப்போகுதையா பிராமணரேதீர்த்தங்கொடும்
என்றுதான்கேட்டு இறக்கினாள்காவடியை
திறந்தானேகாவடியை தீர்த்தகுப்பிதானெடுத்து

மானுகளைத் தெளிய வார்க்கிலுற்றான் தீர்த்தமதை
தாகந்தெளியதற்குத் தண்ணீருந்தான் கொண்டு
வினைகள் தெளிந்தானே கட்டழகியல்லியுமாள்
கடுக அருச்சுனனுக் காவடியைத் தோளில்வைத்து
காற்றாய்ப்பறந்துமல்லோ கரியமால்பக்கம்வந்தான்
ஆயன்பெருமானே வார்த்தையொன்று நீகேளும்
கணைபட்டிருந்தானே கல்வியினைக் கொடியாள்
தண்ணீர் வாயார்க்கொடுத்துத் தாகவிடாய் தீர்த்துவந்தேன்
மாலரிப்படிச்செப்பவே மணமுகூர்த்தஞ்செய்வதெப்போ
தாலிதரிப்பதெப்போ சுவாமிபெருமானே
என்றுதெளிந்திடவே எக்காலுஞ்செல்லுமோதான்
அல்லியின்மேலசிந்தைகொண்டு அலைகிறானருச்சுனனும்
மாதுமேற்சிந்தையாய் மயங்குகிறானருச்சுனனும்
மாயன்பெருமானு மலோசனமேதுசெய்தார்

ஸ்ரீ கிருஷ்ணபகவானும் அருச்சுனனும் மாறுவேடங்கொண்டு தண்ணீர்ப்பந்தல் வைத்தது.

அத்வானகானகத்தில் ஆரணியந்தன்னிலேதான்
தண்ணீர்ப்பந்தல்போட்டிருந்தார் சுவாமிபெருமானும்
வெந்நீர் குளிர்ந்தநீர் மோர்களும்வைத்தார்கள்
கொண்டுதண்ணீர்வைத்தார் குளிர்ந்தசலம்வைத்தாராம்
தண்ணீர்ப்பந்தல்வைத்துப் பின்பு சுவாமி பெண்வடிவெடுத்தார்
தெய்வபிராமணத்தி சிறுபெண்வடிவெடுத்தார்
காய்க்கும்பிராயமவள் கனிகட்டும்பாவையாம்
பூக்கும்பிராயமவள் பிஞ்சுவிடுகைமையவள்
கொஞ்சுமவயதல்லவோ கொழுந்தெல்லாம் பிஞ்சுகண்டீர்
சோலையிலே சந்திரனைச் சுற்றிப்பிடித்ததுபோல்
ஈழத்துச்சனத்தை யெழுதிவரவிட்டாரோ
மேல்நாட்டுக்கச்சனத்தை விளைந்துவரவிட்டாரோ
வேரிற்பழமது மின்னுநிறசாங்கியைப்போல
மின்னற்கொடிபோலே மேகவர்ணர்வடிவெடுத்தார்
அழகுதுலங்குவதும் ஆனந்தங்கொஞ்சுவதும்
வடிவுதுலங்கிறதும் மாணிக்கங்கொஞ்சுவதும்
இந்தவிதமாக எமபெருமான்வடிவெடுத்தார்
அருச்சுனராசதுரை அவரென்னவடிவானார்
தொண்ணூற்றும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனைப்போல்
பனைநறைப்பூப்போலாக பழுத்தகிழவனானார்
நாணற்பூப்போலாக நரைத்தகிழவனானார்
தோலுநரம்புகளும் தொங்குங்கிழவனுக்கு
ஒருகண்ணுநொள்ளைக்கண் ஒருபக்கம்நொண்டிக்கால்
ஒருகையுமொண்டிக்கை ஒருபக்கஞ்சாய்ந்தவுடல்

இந்தவிதமாக இளவிசையன்வடிவெடுத்தான்
தண்ணீர்பந்தலுக்குள்ளாக தானிருந்தாரிருவர்களும்
பிரசொர்புனைபிடித்து பிராமணத்திமுன்னிருந்தாள்
அல்லிப்பெருமாளும் அவளுடையசேனைகளும்
அந்தவனகானகத்தில் அந்தவழிவாரார்கள்
பிருவேட்டையாடியல்லோ வெளிப்பட்டுவாரார்கள்
தண்ணீர்பந்தல்வழியாகத் தையலர்கள்வாரார்கள்
கண்டாளேதண்ணீர்பந்தல் கன்னியுள்ளேவந்தாளாம்
வந்துஇறங்கினாளே வர்னலட்சம்சேனையெல்லாம்
அத்தனைசேனைகளும் அனைவோரும்வந்தமர்ந்தார்
தாககளைகளுமே சகலருந்தான்தெளிந்தார்
அல்லிப்பெருமாட்கு ஆசனங்கள்போட்டார்கள்
ஆசனத்தின்மேலாக அமர்ந்தாளேயல்லியம்மாள்
பிராமணக்கன்னியென்னும் பெண்ணரசைதான்பார்த்து
ஆர்காணுங்கன்னியரே அலங்காரப்பெண்மயிலே
எந்தவூரெந்ததேசம் எங்கிருந்துவந்தீர்காண்
அந்தவனகானகத்தில் ஆர்வைத்தார்தண்ணீர்பந்தல்
இந்தவனத்திலே எவர்வைத்தார் தண்ணீர்பந்தல்
பிராமணப்பெண்ணழகி பொற்கொடியாளேதுசொல்வாள்
என்பாவம்பெரிதுகணவர் பத்தினியேயேதுசெயவேன்
தெய்வலோகம்வாழுகின்ற தெய்வப்பிராமணத்தி
நான்வாழும்பெருமையது மகிழ்ச்சிகள்மெத்தவுண்டு
ஆண்டிபரதேசி அமுதுக்குவந்தார்கள்
அள்ளிப்பதரையிட்டு அநியாயம்பண்ணதோஷம்
சாணிதிரட்டிவந்து சாணங்கள்போட்டதோஷம
ஆதிசிவன்சந்நிதிமுன் அழகாய்வளர்ந்ததுகாண்
மகாதேவர்சந்நிதிமுன் மலையாய்வளர்ந்ததுகாண்
சாணிமலையதுதான சதிராய்வளர்ந்ததுகாண
பிட்டுதிருநாளுக்குப் புறப்பட்டார்சொக்கலிங்கம்
முப்பத்துமுக்கோடி முனிவர்களுந்தேவர்களும்
வானவருமிந்திரரு மகாதேவர்தான்முதலாய்
கைலாசஞ்சுற்றியல்லோ வருகிறவேளையிலே
சாணிமலையதனைச் சங்கரனார்கண்டுவிட்டார்
என்னவிலைவந்ததொரு இடருவிளைக்காமறிந்தார்
பொல்லாதசாபமிட்டுப பூமியிலேபோங்களென்றார்
சாபந்தொலைவதற்கு தண்ணீர்பந்தல்வைத்தேனம்மா
அண்ணனில்லைதம்பியில்லை அனுசரிக்கயாருமில்லை
தாய்வீட்டுசனங்களில்லை தாபரிக்கயாருமில்லை
மாமிவீட்டுசனங்களில்லை மட்டுமனிதரிலலை
தான்தழைவதற்கு தாழ்வாரமில்லையம்மா

எட்டிநுழைவதற்கு எரவாணந்தானுமில்லை
வாவென்றழைப்பதற்கு மனிதரொருவரில்லை
தோலும்நரம்புகளும் தொங்குகிறகிழவனுக்கு
மாளுங்கிழவனுக்கு மாலையிட்டேனென்றாச்சி
இந்தக்கிழவனுந்தா னிறந்துமடியவில்லை
பாவந்தொலையவில்லை பத்தினியேயென்னசெய்வேன்
ஏவல்பணிசெய்து எங்கேயாகிலும்பிழைப்பேன்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியம்மாளேதுசொல்வாள்
எந்தனுக்குத்தோழியாக என்னருகில்நீயிருந்தால்
சகலமானபாக்கியமுஞ் சம்பத்துந்தருவேனென்றாள்
கூட வருவாயோ கொம்பனையேயென்றழைத்தாள்
எப்படிவருவேனம்மா இளங்கொடியேயுன்பிறகே
இலக்குமிநோன்பதுதான் நாளைவருகுதம்மா
நோன்புமுடிக்கவேணும் நீதியுள்ளதாயாரே
என்றைக்குமுன்னடிமையாகவிருக்கிறேன்காண்
மருத்துவச்சியவள் மாதருமேதுசொல்வாள்
எந்தனரண்மனையி லுந்தனிடநோன்புதன்னை
குறையாமற்செய்துவைப்பேன் கொம்பனையேயென்தோழி
வேணுமென்றசாமான்கள் மெல்லியரேயான்றருவேன்
வாருமம்மாவென்றுசொல்லி வருந்தியழைக்கலுற்றாள்
இந்தமுடவனைநான் எங்குபோட்டுவருவேனம்மா
டோலியிலேபோட்டவனைத் தூக்கிவரச்செய்யுமென்றாள்
பல்லக்கிலேற்றினாள் பத்தினியாளல்லியம்மாள்
கிழவனைத்தூக்கிவந்து டோலியிலேபோட்டார்கள்
தோழிமாருள்ளவர்கள் தூக்கியெடுத்தார்கள்
காடுசெடிதாண்டி கடுகிவருகிறார்கள்
ஆறுகளைதாண்டி அதிகவனந்தாண்டி
மதுராபுரிபட்டணத்தில் மகிழ்ச்சியுடன்வாரார்கள்
தெத்துத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
மாளிகைவாசலிலே வந்தாளேயல்லியம்மாள்
கனகதண்டிவிட்டிறங்கி கன்னியரும்போகலுற்றாள்
இந்தக்கிழவனையு மிவ்வாசலில்வையுமென்றாள்
ஐந்தாங்கட்டுவாசலிலே ஆரியனைவையுமென்றாள்
அப்போபிராமணத்தி அரிராமரேதுசொல்வார்
தனியாகவிட்டுப்போக தகுமோவென்மனது
முடவனைநான்விட்டுவிட முறையல்லவென்றனுக்கு
அவராலேயென்னகுற்றம் ஆச்சிவாடுமென்றாள்
அல்லிப்பெருமாளும் அரண்மனையிற்போய்புகுந்தாள்
முத்துச்செம்பொன்வாசலது மூன்றுகட்டுந்தாண்டி
ஆசாரவாசலது அரண்மனையிற்போய்ச்சேர்ந்தாள்
அந்தியனுஷ்டானம் அனைத்துமேதான்கழித்து

போசனச்சாலையிலே புகுந்தாளேமாதுகன்னி
பிராமணகன்னியர்க்கும் அவளுடையபுருஷனுக்கும்
அமுதுபடியரிசி ஆனதெல்லாம்கொடுக்கவென்றாள்
அந்திகாலமாச்சுதங்கே ஆதித்தன்போய்மறைந்தான்
போசனங்களுண்டவர்கள் பொற்கொடிமார்பள்ளிகொண்டார்
மற்றநாட்காலையிலே கதிரோனும்வந்துதித்தான்
திங்கட்கிழமையது தசமிபுனர்பூசம்
அன்றைபதினமதிலே அரிராமரேதுசொல்வார்
அல்லிப்பெருமாளே அரசிதுரைநாயகமே
விரதமுடிக்கவேண்டுமே என்னோன்புதீரவேண்டும்
சாலுங்காரகமது தையலரேவேண்டுமென்றாள்
வேணுமென்றசாமானை வாங்கிக்கொண்டாள்பிராமணத்தி
தேவையுள்ளவஸ்துவெல்லாஞ்சேகரித்துக்கொண்டவளும்

அருச்சுனன அல்லியம்மானைச் சூதாகத்தாலிகட்டி விருதறுத்துப்போனது.

பந்தக்கால்நட்டுமல்லோ பந்தலலங்கரித்தார்
பச்சோலைபந்தலது பாங்காயலங்கரித்தார்
நிலத்தைமெழுகியல்லோ மாவாலேகோலமிட்டார்
சாலுங்காரகமுமே சதுராய்நிறுத்திவைத்தார்
பாலிகைவைத்துமல்லோ பாங்காயமுளைதெளித்தார்
அரசாணிகால்மாட்டி அம்மிகுழவிவைத்தார்
அந்திகாலமாச்சுதங்கே ஆதித்தன்போய்மறைந்தார்
ஆயிரம்பெருவிளக்கை அழகாகயேற்றிவைத்தார்
குத்துவிளக்குங் குடவிளக்குமேற்றிவைத்தார்
மாயன்பெருமாளும் மலைராமரேதுசெய்தார்
அந்தண்டதோழிகட்கும் அல்லிப்பெருமாட்கும்
மயக்கத்தையுண்டுபண்ணார் மாயன்பெருமாளும்
மூதேவிதனையழைத்து முகத்திலிரையுமென்றார்
வந்துநிரைந்தாளே வாடையிட்டாள்மூதேவி
சொரணைதப்பித்தோழியர்கள் சோர்ந்துபடுத்தார்கள்
அப்போதுபெருமாளும் அருச்சுனனைத்தானழைத்து
ஓமம்வளர்த்துமென்று றுலகளந்தமாயவரும்
வேதங்கள்தப்பாமலே வேள்விவளர்த்தினார்கள்
ஆயன்பெருமாளும் அருளாளரேதுசெய்தார்
தேவேந்திரனையல்லோ சிந்தையிலேதானினைத்து
அருச்சுனராசனிவன் அல்லியரைமணம்பொருந்த
மணமுகூர்த்தம்செய்வதற்கு மங்கிலியம்வேண்டுமையா
யானைத்தலைபோல அழகானமங்கிலியம்
தும்பிக்கைபோலே திருமங்கிலியச்சரடு
மாயத்திருநீறும் வரவனுப்பவேண்டுமென்று
தோத்திரம்செய்தாரே ஸ்ரீராமரெம்பெருமாள்

இந்திரரும்போல இருதயத்திற்றனாநினைந்து
உள்ளமகிழ்ந்துமல்லோ உம்பர்பிரானிந்திரனும
யானைத்தலைபோலே அழகானமங்கிலியம
அயபிகளைகபோலே இருமங்கிலியச்சரடும
மாய்த்திருநீறும் மகிழ்ச்சியுடனெதானெடுத்து
நாதனைகையிற்கொடுத்து ஸ்ரீராயர்கைகொடென்றார்
வாங்கியந்தநாதனவன் மாயவனார்கைகொடுத்தான
ஆயரவாவாஙிபலலேலா ஆர்ச்சுனனார்கைகொடுத்தார்
லக்கினமும்தப்பாமல் நலவிசையனைகைகொடுத்தார்
தாராபலன்பார்த்து தரியுமென்றார்மங்கிலியம்
மாயரிடதன்பாதம வணங்கிபந்தஆர்ச்சுனனும்
ஈஸ்வரனைப்பாரவதியை இருதயத்திலதானினைந்து
பிட்டுக்குமனைசுமந்த புனிதனைத்தானினைந்து
தேவேந்திரபகவானை சிந்தையிலேதானினைந்து
அல்லியென்னும்பெண்ணரசி ஆரணங்குதன்கழுத்தில்
சிவசிவாவென்றுசொலலித் தேவிலஜபனகட்டலுற்றான்
அரகராவென்றுசொல்லி அழுத்தினான்மங்கிலியம்
பிரமமுடிமூன்றுமுடி போட்டானே அர்ச்சுனனும
ஈஸ்வரனார்வெண்ணீறை இட்டானேநெற்றியிலே
மாயனைபெருமானும் வரமெனனதான்கொடுத்தார்
இந்தமங்கிலியந்தன்னை யிவள் நொத்திப்பிளந்தாலும
கோடாலியாலேயிவள் கொத்திப்பிளந்தாலும
இரம்பத்தைப்பூட்டியிவள் கலமாயறுத்தாலும்
கத்திகொண்டறுத்தாலுங் கட்டழுங்மங்கிலியம
அறுமலிருக்கவென்று அரிராமர்வரமளித்தார்
ஆர்ச்சுனராக்கூட்டிக்கொண்டு அரிராமாதானடந்தார
பத்துநூறுகோட்டைகளும பார்த்திபன்தாண்டிவந்து
மஞ்சடகொடிகளுமே மகுடரதத்தோரணமும
பொமகனக்கிருங்களும பூக்கலைகளுமே
அல்லிகொடிவிருதும அறுத்தெரிந்தானர்ச்சுனனும்
முரசுகொட்டாகொடிவிருதை முனைவீரன்தானறுத்தான்
கிருஷ்ணபகவான் அருச்சுனனும தருமாபுரம்வந்துசேர்ந்தது
வீராதிவீமனதம்பி விசையனவெளியானான
மாயனுங்கனுமாக வழிநடந்துபோனார்கள்
மதுராபுரிகடந்து வனமாயவனங்கடந்து
காடுசெடிகடந்து கரியமலைதானடந்து
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
பொலலாதவனந்தாண்டி போய்ச்சேர்ந்தார்தருமபுரம்
மாளிகைவாசலிலே வந்துசேர்ந்தாரிருவருமாய
பொறகோழிகூவியல்லோ பொழுதுவிடிந்ததுகாண்
அக்கமாதேவிபுத்திரன் சூரியனுமுவந்துதித்தான்

அருணனுடதேரேறி ஆதித்தன்வந்துதித்தான்
தோழியருமதாதியர்கள் தூக்கம்விழித்தார்கள்
அத்தனைதோழியர்கள அனைவருமகண்விழித்தார்
பாங்கியிலும்நல்லதொரு பவளசேனையேதுசொல்வாள்
அல்லிப்பெருமாளின் அருகாகவந்தார்கள்
தட்டியெழுப்பினர்கள் காமகுழலாளை
பொட்டெனக்கண்விழித்தாள பொற்கொடியாளானவளும்

அல்லியம்மாள் மங்கிலியங்காணாது பரதவிக்கிறது

கழுத்திலேமாங்கிலியம் கண்டாளே அல்லியம்மாள்
அத்தனைதோழிகளும் அனைவோருமபார்த்தார்கள
மூடாப்போலேதாலியது பூணமார்பிலதொங்குதல்லே
கண்டுஇடிவிழுந்தாள கட்டழகியலலியரும
பார்த்துப்பதங்குலைந்தாள் பத்தினியாளலலியம்மாள்
இந்திருட்டப்பாதகப்பாவி எங்கேபோனான்பாருமென்றாள்
தேடிப்பிடித்துநீங்கள் சீக்கிரமாயவாருமென்றாள்
எங்கெங்குந்தேடி இனியவிடமாராய்ந்தார்
தேடியலைந்தார்கள திசையெட்டுங்கண்ட தில்லை
என்னதுமெண்ணிப்பவ ளிடிவிழுந்தாளல்லியம்மாள்
கதறிப்புடிக்களடிக அழுதகவென்றாள்
கதறிக்கொண்டழுதாளே காரிழையாளல்லியம்மாள்
இம்மைகொண்டழுதாலும நாலுதுண்டாய்ப்போகுதல்லே
வாளகொண்டழுதாலும் வாருமடிபுதல்லே
மெத்தவிசாரப்பட்டு மெலிவிபுலம்பலுறாள்
கட்டினவிருந்துமதுக கழுத்திலதாலிகட்டினதார்
ஆறெனறறிவேனடி ஆரணங்கேபவளசேனை
எ[illegible] என்னபயனடி[illegible] ஏலப்பசுங்கிளியே
ஆறுபிரபாண்டியனை அழைத்துவாங்களென்றாள்
பொன்னி[illegible]பெரிதிக்கஅண்ணனையும்
அழைத்து[illegible]வருவதற்கு அனுப்பினாள் தாதியரை
ஓட்டமெடுத்தோடி ஓடிவந்தார் தாதியர்கள்
ஆறுபிரபாண்டியருக்கும் அண்ணனருக்கும்சேதிசொன்னார்கள
மாதுகளவியலாதபர மங்கிலியங்கொட்டினர்கள்
கட்டவிருந்துகளை கதிலைவந்தார்கள்
அல்லிப்பெருமாளும் அழைத்துவாருமென்றாள்
வாருங்களென்று அழைக்கினார் தாதியர்கள்
அந்தவார்த்தைகேட்டு ஆறுபிரபாண்டியர்கள்
அலைகுலையத்தலைகுலைய அரைப்புடவைநழுவிவிழ
அல்லியிடவாசலுக்கு அனைவோருமவந்தார்கள்

மகளாரைக்கண்டல்லவோ வயிறெறிந்துதானழுதார்
ஐயோமகளேயுன்னை அந்நீதம்பண்ணவனூர்
யானைத்தலைபோலே அழகானமங்கிலியம்
மூடப்போலேதாலியல்லோ முன்மார்பில்கட்டினதார்
இதுவென்னகாரணமோ வென்றழுதார்பாண்டியர்கள்
கண்ணீராவிட்டுமல்லோ கதறிப்புலம்புகிறார்
மகுடதுரைச்சியவள் வாய்திறந்தேதுரைப்பாள்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
அக்கையக்கள்கிருபையாலே அல்லியிலேபெண்பிறந்தேன்
சொக்கர்கிருபையாலே தாமரையிற்பெண்பிறந்தேன்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தசீன்முகனை
வெட்டித்துணித்துதான் வீரபட்டங்கட்டிக்கொண்டேன்
பன்னிரண்டுபிராயமட்டும் பாலகையாண்டிருந்தேன்
கொள்ளவருவார்க்குக குறடாகுடுப்பேனென்றேன்
ஆளவருஞ்சமர்த்தை அடிப்பேனென்றேன்சேருபந்தால்
கலியாணமென்றவனைக் கண்ணைப்பிடுங்கிடுவேன்
எனறுவிருதுகட்டி எல்லையரசாண்டேனே
பொம்மைவிருதுகட்டி பூமியெல்லாமாளுகிறேன்
மூச்சுகொடிவெருவிருகட்டி முடிசூட்டியாளுகிறேன்
காணவருவாரும கைகட்டிநிற்பாரும்
நோக்கவருவாரும் பணிந்துகைகட்டுவாரும்
எதிரிகளில்லாமல் எல்லையரசாண்டேனே
அடியென்றழைககள் அவனியிலொருவரில்லை
வாடிபெண்ணேயென்றவர்கள வையகத்திலாருமில்லை
மதிக்குமபடியாக மண்டலத்தையாண்டேனே
கட்டினவிருதழகதுக் கழுத்திலாலிகட்டினவன்
யாரோதெரியாது அந்நீதமபண்ணனே
ஆகாயலோகத்து அமரனென்றுயானறியேன்
அந்தரலோகத்திக் க தருவரென்றறியேன்
இகவெட்டையாண்டதொரு துரைகளென்றுயானறியேன்
பாம்போல்தாலிகட்டிப் பறையன்மகன்போனானே
மூடாப்போலேதாலிகொண்க மூமகுடியான்வேனோ
கண்டார்சிரிப்பாரே கலியுகததோர்கேலிவாரே
பாரதால்நகைப்பாரே பரியாசம்பண்ணுவாரே
சற்றும்மதியாரே தரணிகளிலுள்ளவர்கள்
நான்செத்துமடிந்திடுவேன் சிவலோகஞ்சேர்ந்திடுவேன்
மாண்டுமடிந்திடுவேன் வைகுண்டஞ்சேர்ந்திடுவேன்
வல்லபிராணனைநான் கல்லிலேபடமோதிடுவேன்
சாவேன்கெடுவேனான் சமுத்திரத்தில்போய்விழுவேன்
முட்டிகொண்டாள்தான்றேடே முகத்திலறைந்துகொண்டாள்
மார்பிலறைந்துகொண்டு மண்மேற்புரண்டழுதாள்

பாண்டியர் அல்லியம்மாளுக்கு மனந்தேறுதல் சொல்லுகிறது.

ஆராயிரவர்களும ஐயமாரேதுசொல்வார்
அஞ்சாதேஎன்மகளே ஆலோசனைசொல்லுகிறோம்
கட்டினசாலியனை கசிக்அறுத்தெரிந்து
விருதெடுத்துக்கட்டியல்லோ வெற்றியுடன்ஆளுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியம்மாளேதுசொல்வாள்
கத்திகொண்டறுத்தாலும் கத்திமடியுதையா
வாள்கொண்டறுத்தாலும் வாளுமொடியுதையா
இரம்பங்கொண்டறுத்தாலும் இரம்பமொடிந்திடுதே
பட்டிமாடுபோலாக பறையன்மகன்கட்டினனே
கழுத்துமிகநோகுதையா கட்டினதோர்தாலியாலே
எடுக்கமுடியவில்லை என்னசெய்வேனையாவே
ஆரொன்றுநானறிவேனையாவேசொல்லுமென்றாள்
அறிந்தேனேயாமாகில் ஐந்துதுண்டாய்போட்டிடுவேன்
தெரிந்தேனேயாமாகில சிவவதைசெய்திடுவேன்
என்றுசொல்லும்போது சொலலுவார்பாண்டியர்கள்
வந்தவரலாற்றை மகளேநீர்சொல்லுமென்றார்
ஆனால்கேளையாவே அற்புதவதிசயங்கள்
பரிவேட்டைபோனேனையா பாரவனங்களிலே
ஆரோ ஒருவனவ னம்புபொறுக்கிதந்தான்
பார்த்தேனேயாமாகில பாணத்தாற்போட்டிடுவேன்
அறிந்தேனேயாமானால் அம்புகூலிகொடுப்பேன்
காலும்பிடித்தானே கதையெனக்குச்சொன்னானே
அவனமுகத்தையான்பார்த்து ஆயதமெடுக்கப்போனேன்
ஓட்டம்பிடித்தானே ஓடிவிட்டான்பாவிமகன்
மற்றொருநாளையிலே மதுரையிலேயொருவன்
பயித்தியக்காரனைப்போல பவளங்கட்டுத்திருக்குளத்தில்
வண்ணமருந்தெடுத்துத் தண்ணீரிலுறைததானே
வம்புதும்புஞ்சொல்லியல்லோ மருந்தையவனுரைததான்
அவனையான்கொண்டுவந்து ஆக்கினைகள்செய்வதற்கு
ஆற்றிலேபோட்டவனை அன்பாய்புறட்டுமென்றேன்
அதிலுஞ்சாகவில்லை அரும்பாவியானவனும்
தூக்குமரத்திலே துஷ்டனைப்போடுமென்றேன்
போடப்போனதாதியவள் பொலியானாள்செங்கமலம்
காளியம்மன்கோவிலிலே கடுகபொலிபோடுமென்றேன்
அக்காளிசெல்லியம்மாள் ஆண்பெலிகொண்டேனென்றாள்
பூதக்கிடங்கிலே போட்டவனைகொல்லுமென்றேன்
பூதங்களுள்ளதெல்லாம் போதப்பணிசெய்ததய்யா
அதிலுஞ்சாகவில்லை அரும்பாவியானவனும
எவளோசிறுகன்னி இந்திரரம்பைபோலேவந்தாள்
தன்கணவனென்றுசொல்லித் தனித்துப்புலம்பிவந்தாள்

அவனைத்தூரத்திவிட்டேன் அழைத்தபோதுஞ்சீக்கிரமாய்
பண்டாரம்போலொருவன் படமெழுதிவந்தானையா
என்னைப்போற்படமெழுதி இங்கேமடலூர்ந்தான்
சொல்லாதவார்த்தைசொல்லிச் சோளிக்குச்சேலைகேட்டான்
கொடுக்காதேயல்லாது போமேகனென்றான்பாவியவன்
பாம்புகளைவிட்டேன் பாவிகையைக்கொல்வதற்கு
யானைமதமேறி அவனையேகொல்லவிட்டேன்
ஏதாலுஞ்சாகாமல் இருந்தான்மகாபாவி
மற்றொருநாள்பிடாரனவன் வகையாகப்பாம்பெடுத்து
ஆடாதபாம்புகளை ஆட்டிவைத்தான்வாசலிலே
மற்றொருநாளிலே வனத்தில்நான்வேட்டைபோனேன்
தண்ணீரில்லையாலே தாகவிடாய்பட்டுவிட்டேன்
காசிப்பிராமணன்போல் காசிதீர்த்தம்வார்த்துக்கொண்டு
வனவேட்டையாடிய பின் மாளிகைக்குவரும்போது
தண்ணீர்ப்பந்தல்போட்டிருந்தான் தையல்பிராமணத்தி
பரதேசியென்றழுதாள் பரிதாபப்பட்டேனையா
மாளிகைவாசலுக்கு பயிலுணையகூட்டிவந்தேன்
இலட்சுமிகோன்பெண்ணு நடக்கினான்பாவியவன்
ஏவிபாணசலங்குபோலே நகைமிழற்றினான்
பெண்ணிவனாகினான் வேடங்களோதினான்
பார்த்திருந்தேன் பண்ணினகோசபுகளை
கண்டிருந்தேனோ கண்ணுறங்கிதூங்கிவிட்டேன்
பார்ப்பானைப்போலிருந்த பாவியவன்கட்டிவிட்டான்
கழுத்திலேதாலிகட்டிக் கனவிருகறுத்துவிட்டான்
ஆயெனறிந்திடுவேனா ஐயாமேலேசொல்லுமென்றாள்
ஆறுயிரவாகளும் ஆலோசனைஏதுசொல்வார்
தேவனேயென்றாலே செயிக்கமுடியாது
மண்டலத்தரசரென்றால் மாதேயறிந்திடலாம்
சீமைசீமைராசருக்குத் திருமுகமெழுதுமென்றார்
சொக்கலிங்கர்தன்னுடைய சொர்ணமயச்சந்நிதியில்
அங்கயற்கண்ணம்மை அகிலாண்டர்சந்நிதியில
கோயிற்கெதிராக கொப்பறையில்நெய்காய்ச்சி
சத்தியங்கள்பண்ணச்சொன்னால் சாடையறிந்திடலாம்
மண்டலத்தையெழுதும் மதியுள்ளமந்திரியை
இராசசமர்த்தையெழுதும் நன்மையுள்ளமந்திரியை
ஊர்கணக்குப்பிள்ளைகளை உத்தமரைத்தானழைத்து

அரசர்களுக்குத் திருமுகமெழுதி அனுப்புகிறது,

சீமைசீமைராசருக்கு திருமுகமெழுதுமென்றார்
என்னென்றனுலே எழுதுவதென்றாளே
அயோத்திகோசலமுஞ் சலகர்ணுபுரிதனிலே
ஆரியப்பனமும் அசெலமுக்கொருமார்க்கம்

அங்கதேசங்கலிங்கதேசம் அவந்தி அளகாபுரி
மூய்யாசிமன்னூறு கோலைமலையாளம்
அஸ்தினாபுரமசந்திரனாடு அழகுள்ள இந்திரனாடு
துலுக்காணம்பைகோலை தெலுங்குதேசதருமாபுரி
குருநாடுசிந்துதேசம் பங்காளமகாப்பிலயதேசம்
விசையபுரிவீமாபுரி நேபாளம்யாழ்ப்பாணம்
மராட்டியம்சோமாபுரி மச்சதேசங்குடகுநாடு
சீனங்கிகளுசுமார்க்கம் பைந்தாசிங்காளமும்
ஆனைகுந்திபட்டணமும் அழகானஒட்டியமும்
ஐம்பத்தாறுதேசத்து அரசர்களானவர்கள்
நடபிக்கைசெய்து நலமுடன்போவதற்கு
அல்லிமிகநினைந்து அரியகணக்கர்களை
மெலலியாளல்லியம்மாள் மிகவுமேதானழைத்து
தேசதேசராசருக்குந் திருமுகமெழுதுமென்றாள்
அப்படியேகணக்கர்களனைபுடனெழுதுகிறார்
மதுராபுரியாளுகிற வாழ்வரசியல்லியம்மாள்
சொக்கராருளாலே சுந்தரியாள்தான்பிறந்தாள்
அங்கயற்கண்ணருளாலே அல்லியருந்தான்பிறந்தாள்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவகதீன்முகனை
வெட்டித்தலைதுணித்து வீரபட்டங்கட்டினவள்
பனிரண்டுபிராயமட்டும் பாருலகையாண்டகன்னி
விருதுகொடிகட்டியல்லோ வேணமட்டுமாண்டவள்காண்
ஆராயிரம்பாண்டியர்க்கு அரியதுரைமகளாம்
அல்லியம்மாள்தன்கழுத்தில் ஆரோதெரியாது
தேன்மொழியாள்தனகழுத்தில் திருட்டுத்தாலிகட்டினார்காண்
கழுத்திலேதாலிகட்டிக் கட்டினவிருதறுத்தான்
இன்னாவனென்றுசொல்லி எனக்குத்தெரியாது
சீமையிலுள்ளதொரு துரைகள்மேலெலந்தனுக்கு
ஐபமவுதோனறியாது அரசமன்னராசர்களே
சீமையாளும்ராசர்கள் துரைகள்வரவேண்டும்
எல்லையரசாளும் இராசாக்களிங்குவந்து
கழுத்திலேதாலியது கட்டவில்லையென்றுசொல்லி
நாங்கள்சொன்னம்பிக்கையைச் செய்துகொடுக்கவேண்டும்
ஓலையைத்தள்ளிவிட்டு வாராதிருந்தோர்களை
கோட்டையிடித்திடுவேன் கொத்தளங்கள்பேர்த்திடுவேன்
அரண்மனையைநானிடித்து ஆமணக்குவிதைத்திடுவேன்
ஆண்சிறையும்பெண்சிறையு மங்கலுநான்பிடிப்பேன்
வெட்டித்தலையறுப்பேன் வீரசொர்க்கஞ்சேர்த்திடுவேன்
ஓலைகண்டநாழிகைக்கு வந்திடுங்களென்றுசொல்லி
எழுதுமென்றாளோலையது இளங்கொடியாளல்லியம்மாள்
அவ்வார்த்தைதான்கேட்டார் அன்பானமந்திரிகள்

சேமக்குருக்கோலை சீக்கிரமாய்தானெடுத்து
ஈழப்பனையோலை யிருபக்கங்காம்பரிந்து
தாளிப்பனையோலை கலைபக்கங்காம்பரிந்து
வாரியவோலையிலே வக்கணைகள் தானெழுதி
செங்கிரிக்கம்போட்டுமெல்லோ சிக்காமுத்திரைகள்வைத்து
அல்லியம்மாள்முன்புவைத்து அடிபணிந்துதெண்டனிட்டு
ஆரடாசெட்டிமல்ல ராயிரமபேரெழுந்திருங்கள்
சீமையுள்ளராசருக்குச் சுருளோலைகொண்டுபோங்கள்
மல்லரெழுந்திருந்து வாங்கினாரோலைதன்னை
காலால்நடவாமற் காற்றாய்ப்பறந்தாக்ள்
மதுரையைத்தாண்டியவர் வனங்கள்புகுந்தார்கள்
காடுசெடிதாண்டிக் கரியமலைதாண்டி
சீமைசீமைராசருக்குத திருமுகமதந்தார்கள்
ஓலைச்சுருள்விரித்தா ருலகாளுமராசாக்கள்
அதிலிருந்தமர்மமெல்லாம் அனைத்துமறிந்துகொண்டார்
நாமுமவருவோமென்றார் இராசாத்திசொற்படிக்கே
கம்பிக்கைதானகொடுத்து நலமுடனேவருவோமென்றார்
தருமாபுறமாளும தருமருக்கோலைதந்தார்
சந்தனவடிவழகர் தருமரவரேதுசொலவார்
சீரகணககரையழைத்து சுருளோலைபடியுமென்றார்
அப்போது கணக்கபிள்ளை யன்பாய்ச்சுருள்விரித்து
படித்தார்களோலைதனைப் பார்வேந்தர்கேட்டுவிட்டார்
சநதனவடிவழகர் தருமரதுகேட்டு
நாமுமவருகிறோம் ராசாத்திகொலுவுக்கென்றார்
மாயன்பெருமாட்கு வந்ததுசுருளோலை
ஓலையதுபடிக்க உலகளந்தமாயவரும்
நாமுமவருகிறோம நடவுங்கள் தூதரெல்லாம்
சீமையிலுள்ளதொரு துரைகளுக்குசொல்லிவந்தார்
காடுசெடிதாண்டிக் கடுகிவந்தார் தூதரவர்
அல்லியம்மாள்முன்புவந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
சீமைசீமைராசருக்குச் சொல்லிவந்தோமாச்சியென்றார்
சீமைகளிலுள்ள துரைகளெல்லாம்வாரார்கள்
மண்டலததுராசாக்கள் மகுடமன்னர்வாரார்கள்
இக்கெட்டையாண்டதொரு துரைராசர்வாரார்கள்
சந்தனவடிவழகா தருமரவரேதுசொல்வார்
ஆடாதுதுவரே அலங்காரமல்லர்களே
மாயன்பெருமாளை வரவழைததுவாருமென்றார்
ஓட்டநடையுமாக ஓடிவந்தார் தூதுவாகள்
மாயன்பெருமாட்கு வந்துமேதெண்டனிட்டார்
சந்தனவடிவழகர் தருமருமைக்காணவென்று
கூட்டிவரச்சொன்னார்காண் கோபாலசுவாமியென்றார்
அப்போபெருமாளும் அக்கணமேதானெழுந்து

தாரகனை யெச்சரித்து சுவாமிரதம்வேண்டுமென்றார்
கொண்டுவந்தான் தாரகனும் கொப்பெனவேசித்திரதம்
ஏறினார்தேர்மேலே யெம்பெருமானாண்டவரும்
காடுசெடிதாண்டிக கடுகிவந்தார்தர்மாபுரம்
கோபுரவாசலண்டை கோபாலர்தேறிறங்கி
மாயன்பெருமானும் மாளிகையில்வந்துவிட்டார்
தாணியளந்தமாயன் தருமருக்குதெண்டனிட்டார்
சிங்காதனமேபோட்டு ஸ்ரீராமர்வீற்றிருக்கார்
இட்டசிம்மாதனத்தி லெம்பெருமான்வீற்றிருந்தார்
என்னையழைத்ததுகா ணேதுகருமமென்றா
தாராபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
மதுராபுரியாளுகின்ற வாழ்வரசியல்லியற்கு
காணுமல்மக்கிலியங் கட்டியேபோனார்களாம்
இக்கட்டையாண்டநல்ல துரைகள்மகாராசருக்கு
சுருளோலையெழுதியல்லோ அனுப்பினாள்தேசத்திற்கு
நம்பிக்கைசெயதுபோக நமக்கோலைவந்ததையா
அருச்சுனரும்வீமனாக ஆரணியம்போனீர்களே
காசியாத்திரைபோனபோது களவுசெய்துவந்ததுண்டோ
தறுதலைப்பெட்டிமகன் தாழ்வுசெய்துவந்ததுண்டோ
குற்றங்களுண்டானால் கோபாலாசொல்லுமென்றா
அருச்சுனன்றன்னாலே யழும்புண்டோசொல்லுமென்றார்
நானொக்கநடந்தேனே யொருபாவங்கண்டதில்லை
கூடநடந்தேனே குற்றங்கள்நானறியேன்
அழும்புகளுண்டானா லருண்மைந்தாசொல்வேனே
எங்களுக்குமோலையது யெழுதிவரவிட்டாள்காண்
நாளுமிதோபோறே னன்மதுரைசீமைக்கு
வீட்டுக்கொருவரல்லோ வேந்தர்கள்போகவேணும்
ஐவர்தன்னிலொருவ ராருகிலும்வாருமென்றார்
ஆரையழைத்துபோறீ ரரிராமாசொல்லுமென்றார்
வெற்றிமதயானை வீமனையழைத்துப்போறேன்
நம்பிக்கைதந்துவிட்டு நாங்களும்வந்திடுவோம்
போய்வாருமென்றுசொல்லவிப் புண்ணியருஞ்செலவுதந்தார்

ஸ்ரீகிருஷ்ணசுவாமியும் வீமனும்மதுரைக்குப்போகுதல்.

வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
சந்திரகாந்திகட்டிகட்டித் தாமரைப்பூச்சுங்குவிட்டார்
அம்புவில்லுங்கைபிடித்து அம்புறாதூணிமுதுகணிந்து
தேறின்மேலேறினனே திக்குவிசயங்கொண்டவீமன்
மாயவ பெருமானு மச்சுரதமேறினாரே
இருவருமாகவல்லோ ரதமேறிவாரார்கள்
தருமாபுரந்தாண்டி வீமாபுறந்தாண்டி
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி

ஆறுகளைதாண்டி யதிகவனந்தாண்டி
வனமாய்வனந்தாண்டி வந்துவிட்டார்தென்மதுரை
மண்டலத்து ராசரெல்லாம் வந்தார்மணிபுரத்தில
முடியோடே முடிவணங்க முடிமன்னர்வந்துவிட்டார
வச்சிரக்கிரீடங்கள் மணிமுடிநெருங்குதங்கே
எல்லையரசாண்டராச ரெல்லோரும்வந்தமர்ந்தார்
ஆறுயிரவருடன் அல்லியருந்தானிருந்தார்
மகுடத்துறைச்சியவள் வாய்திறந்தேதுசொல்வாள்
மாணிக்கச்சொக்கலிங்கம் மகாதேவர்கோவிலண்டை
கோபுரவாசலண்டை கொப்பறையைவையுமென்றாள்
ஆயிரங்கலநெய்விட்டு அக்கினியைமூட்டுமென்றாள்
பாதாளக்குழிக்கலித்துப பாங்கானபள்ளம்வெட்டி
இருப்புநல்லகொப்பறையை யெடுத்துவந்துவைத்தார்கள்
ஆயிரக்கலநெய்வார்த்து அக்கினியைமூட்டினார்கள்
நெய்யைக்கொதிக்கவைத்து நேரிழைக்குச்சேதிசொன்னார்
பதின்கலநெல்லெடுத்துப் பாக்கியரேவையுமென்றா
அம்பாரப்போடுமென்று ளாண்டவனார்சந்நிமுன
சம்பாநெல்லுங்காறுநெல்லும் அம்பாரம்போடடார்கள்
மகுடத்துறைச்சியற்கு மணியாசனம்போட்டார்கள்
ஆறுயிரவர்களும் அல்லியருந்தானெழுந்து
ஆலயத்தன்னருகே வந்தார்களெல்லவரும்
கோபுரவாசலண்டை கொப்பெனவேவந்தார்கள்
மகுடத்துறைச்சியும் வந்தமர்ந்தாள்ஆசனத்தில்
வந்தவந்தராசரெல்லாம் வீற்றிருந்தாரெத்திசையும்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குமேதுசொல்வாள்
கேளுங்கள் ராசர்களே கீர்த்திபெற்றமன்னர்களே
ஆலவாய்ச்சொக்கலிங்கம் ஐயர்தன்கிருபையாலும்
அங்கயற்கண்ணம்மை ஆச்சிசெயலாலும்
அல்லியிலைமேலே யாரணைக்குப்பெண்பிறந்தேன்
ஒருவர்வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலககொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரில் உள்ளேமணற்சேருமுண்டு
அடிக்கிறகாற்றதனிற் அலைககாற்றிற்றுரும்புமுண்டு
ஆலகாலமுண்டவர்க்கு கண்டக்கறுப்புமுண்டு
குண்டுமணிக்காறலும் கொஞ்சக்கறுப்புமுண்டு
எனக்குமயிரேகறுப்பொழிய மற்றுக்கறுப்புமில்லை
புருவக்கறுப்பொழியப் பின்னைக்கறுப்புமில்லை
மாசிலாப்பெண்பிறந்தேன் மீனாட்சிதன்செயலால்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநீண்முகனை
வெட்டித்தலைதுணித்து வீரபட்டங்கட்டிக்கொண்டேன்
பன்னிரண்டுபிராயமட்டும் பாருலகையாளுகிறேன்
வாடியென்றழைத்தவர்கள் வையகத்திலாருமில்லை

வம்புதும்புஞ்சொன்னவர்கள் மண்டலத்திலாருமில்லை
யாரோதெரியாது அநியாயம்பண்ணாரே
காணாமல்மங்கிலியங் கட்டினானென் கழுத்தில்
இன்னானினியானென் றெனக்குத்தெரியாது
ஆகையினாலேதா னழைப்பித்தேனுங்களைநான்
நானறியேனென்றுசொல்லி நம்பிக்கைசெய்திடுங்கள்
கொதிக்கின்றநெய்தனிலே கொப்பெனவேகையிடுங்கள்
அம்பாரம்போட்டநெல்லை யள்ளிமிமிட்டிடுங்கள்
நெல்லிமிமிட்டாமற் போனவனை விடுவதில்லை
கைகளதுகொப்பளிக்க கண்டதேயுண்டானால்
வெட்டித்தலைபிளப்பேன் வீரசொர்க்கஞ்சேர்த்திடுவேன்
நாகலோகம்போனாலும் நானவனை விடுவதில்லை
ஆகாயம்போனாலும் நானவனை விடுவதில்லை
வானத்திற்போனாலும் வலைகட்டிநான்பிடிப்பேன்
பாதாளம்போனாலும் பேதிப்பேன்பைங்கொடியாள்
விட்டுவிடுவேனென்று சற்றுமனமெண்ணவேண்டாம்
சத்தியங்களைச்செய்யுங்கள் உடனேபோய்விடுங்கள்
அவ்வார்த்தைதானுங்கேட்டு அநேககோடிராசரெல்லாம்
எழுந்தார்கள்சபையிலேதுசொல்வாராராசர்கள்
அன்னமடமாதேயாரணங்குநாயகமே
பாருலகையாண்டதொரு பாண்டியர்கள்சீர்மகளே
செங்கோல்முடிசூட்டித் துரைத்தனங்கள்செய்பவளே
உன்-ஊரறியோம்பேரறியோம் ஒருசெய்கையாமறியோம்
மங்கிலியங்கட்டினவரோ தரித்தவனையறியோம்
அறிந்தோமேயாமாகி லறும்புவருமெங்களுக்கு
அக்கினிதேகிராக அவைவரும்வந்துநின்றார்
மகுடமுடிராசாக்கள் வந்தவர்கள்தாமெழுந்து
நெய்க்கிடாரந்தன்னருகே அக்கினிக்குமுன்னாலே
இருகையைக்கட்டியவரேதுசொல்வார்மன்னவர்கள்
ஐயன்பிடாரிகளே ஆகாயத்துற்கங்களே
அகரதேவதையே சந்திரசூரியரே
இந்திரப்பிரமாவே காசதாவரிஷிகளே
ஆலவாய்ச்சொக்கலிங்க மங்கையற்கண்மையயே
மாணிக்கச்சொக்கலிங்க மகாதேவரீஸ்வரரே
ஏதுமறியோமென்று இருகையைத்தானெடுத்து
மாதருக்குமங்கிலியம் தரித்தவனையறியோம்
ஏதுமறியோமென் றிருகையைத்தானெடுத்து
காய்கின்றநெய்தனிலே கைவைத்துவந்தார்கள்
அம்பாரநெல்லையெல்லா மள்ளிமிமிட்டினார்கள்
ஒவ்வொருமன்னர்களாய்ச் சோதனைதந்தார்கள்
மாயன்பெருமாளும் வந்துசத்தியம்பண்ணாரே
வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து

நெய்க்கிடாரந்தன்னருகே நேரேவருகையிலே
அக்கினியாய்வீசியது அருகில்வரவொட்டாமல்
வெந்துகருகிறது வீமனதுதேகமெல்லாம்
மாயன்பெருமாளே மைத்துனரேதிரு கிருஷ்ணா
முன்னிட்டகாலேபவன் பின்னிட்டுவாங்கிக்கொண்டான்
அக்கினிபகவானை ஆபரும்கைதொழுது
எம்பெருமான்மாயவரும் யாரைநினைக்கலுற்றார்
என்னபுதுமையிது எம்பெருமானென்றுகேட்டான்
அருகில்வரவொண்ணாமல் அக்கினியாய்வீசுதுகாண்
சேரவேவொண்ணாமல செந்தணலாய்வீசுதுகாண்
ஒருபாவமநானறியேன் ஏதுவினையென்றறியேன்
நன்றிசெய்தவரை யுள்ளத்தில்வைக்கவேண்டும்
அக்கினிபகவானே அர்ச்சுனனுமக்கு
ஏதகனசகாயஞ்செய்ததெல்லாமறந்தீரோ
மானுமின்றஉன்னைபந்த வாழ்விசையன்காத்தானே
அந்தசகாயமல்லோ அறியாமலேன்மறந்தீர்
பெண்டுடையமன்னவன் பெண்ணரசைமாலையிட்டான்
உந்தனுக்குகோபமென்ன வுருத்துவாளேன்செந்தணலாய்
கோபத்தைவையாதே குளிர்ந்தசலம்போலிருக்காண்
என்றுதொழுதாரே யெம்பெருமான்மாயவரும்
ஆயாதுசொற்கேட்டக்கினிதேவரவர்
குளிர்ந்தசலம்போலாக கொப்பெனவேநின்றுவிட்டார்
வாருங்காண்வீமசேனா வார்த்தைகேளுமைத்துனரே
மாதினுக்குமங்கிலியம் மதவிமாதரித்ததுண்டோ
செய்ததுவேயுண்டானால் சேரவரவொட்டாது
கலக்கங்களுண்டானால் கட்டமொருதூரமில்லு
மனதிற்கபடுகளும் வஞ்சனைகளில்லையென்றால்
இராசாக்கள்போலேநீ நம்பிக்கைசெய்யுமென்றான்
வீமராஜன் நெய்குடித்துவிட்டுக் கொப்பறையை யுருட்டினது.
மறுபடியுமவீமராசன் மன்னவனுந்தான்வருவான்
கொதிக்கிறநெய்யருகே கொப்பெனவேவந்துநின்றான்
மணக்கின்றநெய்தன்னை மகவீமன்பார்த்துவிட்டான்
தூக்கினான்கொப்பறையைத் துரிதமாயநெய்யையெல்லாம்
வெற்றிமதயானை வீமனவன்வாயில்வைத்து
நெட்டிக்குடித்துவிட்டு நோக்கவிட்டெறிந்து
தருமாதனக்கிளைய மதவீமன்வந்துவிட்டான்
மாயனுடனாக வழிபிடித்துபோய்நடந்தார்
மதுரைத்தெருதாண்டி வனமாய்வனங்கடந்து
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறசுனைதாண்டி பதிகவனந்தான்தாண்டி
தருமாபுரிபட்டணத்தில் தார்வேந்தர்வந்துவிட்டார்
அல்லிப்பெருமாளு மாரணங்குயேதுசொல்வாள்

இத்தனைபேர்தனிலே எவனைத்திருடனென்பேன்
அநேகங்கோடிராசர்களி லாரைத்திருடனென்பேன்
சத்தியங்கள்செய்தாரே தரணியுள்ளராசரெல்லாம்
நெய்யிலேகைதோயத்து நெல்லைநிமிட்டிவிட்டார்
சோதனை காட்டிடல்லோ துரைகளெல்லாம்போகையிலே
அனைவோரைப்போலாக அவனுங்கைதோய்க்கவேண்டும்
கொதிக்கின்றநெய்யதனைக் குடிக்கவிதிமுறையோ
திருடருக்குதெய்வமுண்டோ சோரருக்குநேசமுண்டோ
வானஞ்சுழல்வதற்கு மருந்துண்டவனைகையில்
பூமிசுழல்வதற்கு பொடியுண்டவன்கையில்
வண்ணமருந்தெடுத்துத் தண்ணீரிலுரைக்கிலையோ
வம்புதும்புபேசியவன் வாய்பழுதுசொல்லலையோ
ஆற்றில்புரட்டியல்லோ அவனைநான்கொல்லுமென்றேன்
அவனுடையமந்திரத்தா லாற்றைத்தடைக்கட்டலையோ
தூக்கிலேபோட்டவனைத் தொழியரேகொல்லுமென்றேன்
தாதியைக்கொன்றுவிட்டான் தந்திரவித்தையினால்
காளியம்மன்கோவிலுக்கு காவுகொடுக்கவென்றேன்
வடவாசல்செல்லியரை வாய்தடைகட்டிவிட்டான்
பண்டாரம்போலேவந்து படம்படித்தானவாசலிலே
வம்பாடிவார்த்தைகளும் வாய்பழுதுஞ்சொன்னானே
அரவத்தைவிட்டுநொ ண்டியைக்கொல்லுமென்றேன்
பாம்பைத்தடைகட்டினானே பாதகனானவனும்
யானையைமதமேற்றி யாண்டியைக்கொல்லுமென்றேன்
யானைதடைகட்டினானே யரும்பாவியானவனும்
வேதியனைப்போலாக வேள்விவளர்த்தினானே
மறையவனைப்போலேவந்து மங்கிலியஞ்சூட்டிவிட்டான்
நெய்யைக்குடிக்கவன் வகையறியமாட்டானோ
மலையாளவித்தைகளும் மந்திரமுங்கற்றபாவி
எந்தவூராஜாவோ எனக்கறியச்சொல்லுமென்றாள்
தருமபுரமாளும் தருமர்தம்பிவீமனென்றார்
நெய்யைக்குடித்தவனும் நிகரில்லாவீமனென்றார்
அவ்வார்த்தைதான்கேட் டல்லிப்பெருமாளும்
எட்டிப்பழம்போலே இருகண்ணுந்தான்சிவந்து
உருகியசெம்பொன் உதிரம்போலகண்சிவந்து
தருமபுரமுள்ளதெல்லாம தவிடுபொடியாகி
தங்கமதிலங்கோபுரத்தை தரையோடேசாய்த்திடுவேன்
ஆமணக்குமபருத்தியுமா யடங்கலும்விரைத்திடுவேன்
ஆண்சிறைபெண்சிறை யடங்கலும்நான்பிடிப்பேன்
பயணம்பயணமென்று தனிபேரிபோடுமென்றாள்
வெட்டியானைத்தானழைத்து வீரமுரசறையுமென்றாள்
ஆறுயிரப்பாண்டியர்கள் அடங்கலும்பயணமென்றாள்
இன்றுவெளிகூடாரமியலுடனேபோடுமென்றாள்

சண்டாளனை வெட்டுமென்ருள் தமுனையடியுமென்ருள்
அப்போ துசாமபுலனும் யானையேறியாலைகூட்டி
அடித்தான்பரசியானை அம்மதுரைதானதிர
மதுரைப்படைகளெல்லாம் வாருங்களென்று சொல்லி
ஆயுதங்கட்டியல்லோ அனைவோரும்வாருமென்று

அல்லியரசாணி பஞ்சபாண்டவர்மேலில் சண்டைக்குவருகிறது.

மதுரைப்படைகளும் மகாசனங்களுள்ளவரும்
எண்ணுத ஆயுதத்தை எடுத்தரையிற்கட்டிக்கொண்டார்
அமாசருஞ்சமாதரும் அஸ்திராரானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னிடயரானவரும்
ஈழத்துவங்கணரும இளநாட்டுச்சோனகரும்
ஆரியருமாரியரும அனைமலைத்துநாடர்களும்
உடையவருஞ்சூதகரு மொட்டியரும்பார்பபாரும்
சிட்டிமன்னர்தேசமன்னர்உரைமன்னாபோசமன்னர்
குறவர்மறவர்களும் குச்சிலியருள்ளவரும்
வன்னியர்துலுககர்களும் மராட்டியருள்ளவரும்
வேடரும்வில்லியரும வேணசனமுள்ளவரும
ஆயுதங்கள்கட்டியல்லோ அனேகசனம்வகதார்கள்
பட்டயஞ்சூரிகளும பாரியவிலசமுதாடும்
நிலைமயில்சுடுக்குண்டுகளும் நேரிசமாம்பெரியகத்தி
கூலிசமும்சூலிசமும் குண்டுதுப்பாக்கிகளும்
மண்வெட்டிகோடாலி வல்லயதுருப்புலககை
வாளுகளும்வேலுகளும் வளைதடிசக்கரமும்
கண்டகோடாலிகளும் கவண்டுகல்லுண்டுவில்லும்
சிங்காணிபூச்சிவில்லும் சேணவித ஆயுதமும்
இரம்பமும்பாசங்களும் நாலெட்டுவாயுதமும்
எண்ணுத ஆயுதத்தை எடுத்தரையிறகட்டிஞர்கள்
சட்டைதமான்வச்சிரகபாய் தரித்தாகளெல்லவரும
சண்டைககுமுஸ்திபாய்ச் சமர்த்தரெல்லாம்வருகிருர்
வந்துநிரைந்தார்கள் வளம்பெரியசேனையெல்லாம
யானைகளோ ஆறுலட்சம் அசுவங்களேழுலட்சம்
ஒட்டகமோபத்துலட்சம ஒன்ருககக்கூட்டிஞர்கள்
கார்மேகம்போலாகக் கருத்தானைகூட்டம்வரும்
செவ்வானம்போலாகச் செவந்தபுரவிகளும
வந்துநிரைந்தார்கள் வாழ்வரசியல்லியண்டை
பொன்னின்மலைநாடாளும பேரெடுத்த அண்ணுவை
அண்ணுவைதானழைத்து ஆளுமென்ருள்பொனமதுரை
வெள்ளைகுகெலித்துநான் விருதுகட்டிவருமளவும்
செயித்துவருமளவும் தென்மதுரையாளுமென்ருள்
முத்துபடுந்துறையும் மூனைவீரர்பட்டுறையும்
யானைபடுந்துறையு மடகைலுமபட்டணமென்ருள்
பவளப்படுந்துறையும் பட்டணமும்பத்திரங்கள்

கப்பற்படுந்துறையுங் கடற்சேக்கும்பத்திரகாளன்
செயித்துவருமளவும் சீர்மதுரையாளுமென்றாள்
பயணம்பயணமென்று பயணம்பெரியதுவென்றாள்
அப்பொழுதுவில்லெடுத்து அம்புறத்தூணிமுதுகணி
வல்லார் நுமபயணமென்று எதிர்த்தோசையேமேல (ந்து
யானைத்துமேகம்போலே மணிரதங்கள் உருளுது
ஆறு ஈரங்கிந்நூம அணியணியாய்வருகுது
பசாககனிககதுணேயென்று சேனைநடத்தினளே
அச்சுதிக்கிடங்க யானைநெருக்கோசைய
பலனடல்திருச்சியிட மதயானைகொண்டுவிட
குதிரையனுமானிகைகள் கொடிமன்னர்ச்சுற்றமிட
வெய்யலுக்கெடுத்தார் வெள்ளைநல்லகூடாரம்
காலனுக்கெடுத்தார் கறுப்புநல்லகூடாரம்
கறுப்புநிஜாஞ் சிவப்புநிஜாம் கலந்துபறக்குதுபார்
அலமிக்கொடிவிருது அலைகிறதுதோளின்மேலே
மஞ்சட்கொடிபறக்க மாதோரணமசைய
வருகிறதேழுமபலன் மன்னரிடமசொல்லாமல
ஆறறுமணல்போலே யங்ககோடிசேனைவரும்
மேகம்புறண்டாற்போல சேனைசனங்கள்வரும்
காட்டுக்குளாப்பூவுதிரக்கானமுழுதாப்போல்
சுற்றிக்குடைபிடித்து சூரியனைத்தோற்றுமல்
பக்கக்குடைபிடித்தார பகலோனைக்காணுமற
செந்தூளெழும்பினதே சூரியனைக்கப்பிறறதே
அடிமுத்தபேரிகைகள் எக்காளமதிர
யானைமேல்பேரிகைகள் குதிரையின்மேல்டக்காவும்
ஒட்டையின்மேல்நகராத்துகா நோசையெழும்பினதே
வெள்ளைகலைபேரியசு விருதுமுழங்கிறதே
பாஞ்சசன்னியமேவத்தம பலவிருதுகாண்முழங்க
சச்சரிகைவினைகளுந் தாக்கிமுறைசய்ய
ஒற்றைவாசககையது உள நாசுழுருலகிர
மதுராபுரியைவிட்டு வன்காட்டுமெபாசலுந்தாற்
காடுசெடிதாண்டிக் கரியமலைதான்றாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
வேங்கையடர்த்தவனம் வெண்காளப்பூர்த்தவனம்
ஆண்டாறியாத இருண்டவனந்தாண்டி
தருமபுரிபட்டணத்தை தானடுத்தாளல்லியம்மாள்
பட்டணத்தைசுற்றிக்கொண்டு பாளையஞ்சூழ்ந்தாளே
பந்தவறனகூடாரம் பலதிசையும்போட்டார்கள்
இட்டசேனைபோட்டாளே இராஜாத்தியல்லியம்மாள்
ஜண்டாவைநட்டார்கள் தமுறதுதார்பானையதனில்

அடிபடுதோரயபேரி அடிவானத்திடிபோல
கோடைகாலத்திடிபோலே குமுறுதோரயபேரி
செவ்வானத்திடிபோலே சோமுழங்கிறதே
சத்தத்தொனியதுதான் தருமரவர்கேட்டுவிட்டார்
ஊரிலுள்ளசெனங்களெல்லாம் ஓடிவந்துபுலம்புகிறார்
சந்தனவடிவழகர் தருமலிங்கமகாராசர்
வெற்றிமதயானை வீமனைதானழைத்தார்
ஆணழகுமன்னனருச்சுனரைத்தானழைத்தார்
நகுலசகாதேவ ராசாக்களைத்தானழைத்தார்
மாயன்பெருமாளை மனதிலேதானினைத்தார்
அடியளந்தமாயவரே ஆதிமூலம்வாருமென்றார்
வாருமென்றபோதே வந்தாரேயெம்பெருமாள்
சந்தனவடிவழகர் தருமருக்குசரணஞ்செய்தார்
கூடச்சரணஞ்செய்தார் கோபாலர்மாயவரும்
என்னையழைத்தது தானேதுகருமமென்றார்
பட்டணத்தைசுற்றிபல்லே பாளையங்கள்வந்ததுதான்
கோட்டையைசசுற்றியவர் முத்திரைபோட்டார்கள்
சண்டைபண்ணவாருமென தமுருமடித்தார்கள்
சண்டைநிசாணிட்டார்கள் தனவேந்திரங்கினதே
எந்தவூராசாவோ ஏதுமறியேனே
ஆளோடேவிட்டுநீங்களறிந்துவரச்சொல்லுமென்றார்
அரக்கரொருவனைத்தானனுப்பினார்மந்திரியை
வந்தவராரென்று வார்த்தையறியுமென்றார்
ஒற்றனொருவனவன் ஓடினான்மந்திரியும்
பாண்டியர்களெதிரிலவந்து பாங்குடனேதெண்டனிட்டு
எந்தவூராசரையா எதற்காகவந்தீர்கள்
சண்டைபண்ணவந்ததொரு வயணமென்னராசர்களே
சொல்லுங்களையாவென்று தெண்டனிட்டார்வந்தவர்கள்
மந்திரியுங்கேட்கையிலே மகாராசரேதுசொல்வார்
மதுராபுரியாளும் வாழ்வரசியல்லியற்கு
காணுமல்மங்கிலியம் கட்டினாரவன்கழுத்தில்
பொய்சத்தியம்பண்ணியல்லோ புகழ்வீமன்வந்துவிட்டான்
ஆகையினாற்சண்டைசெய்ய ஆனைகதளங்கூட்டிவந்தோம்
சண்டைபண்ணிகெலிக்கச்சொல்லும் சாமர்த்தியராசர்களே
வந்தாலேயாச்சுது வாராமலிருந்தாக்கால்
நாளைக்கோட்டையிடித்திடுவோம் கொத்தளங்கள்பேர்த்திடுவோம்
தங்கமதில்கோபுரத்தை தரையோடேசாய்த்திடுவோம்
ஆமணக்கும்பருத்திகளும் மடாவிரைத்திடுவோம்
ஆண்சிறையும்பெண்சிறையு மடங்கலும்பிடித்திடுவோம்
கடுகவரச்சொல்லும் கட்டழகராசர்களை
அவ்வார்த்தைதான்கேட்டு அழகானதூதுவர்கள்

சுந்தனவடிவழகர் தருமரண்டை வந்துவிட்டார்
வணங்கிநமஸ்கரித்து மந்திரியுமேதுசொல்வார
மதுராபுரியாளும் வாழ்வரசிகன்னியற்கு
காணுமல்மங்கிலியங் கட்டினராமவள்கழுத்தில்
பொயசத்தியம்பண்ணியல்லோ வந்தாராம்புண்ணியரும்
ஆகையினாலேதா னல்லிதளங்கூட்டிவந்தாள்
சண்டைக்குவந்தாலே அல்லதுராசாவே
கோட்டையிடிப்பேனென்றாள் கொம்மைபறிப்பேனென்றாள்
சண்டைக்குவரச்சொன்னாள் தருமலிங்கராசாவே
என்றுசரணமிட்டா னியலான தூதவனும்
தக்கப்புகழுடைய தருமாதுகேட்டு
மாயன்பெருமாளின் மதிமுகத்தைதான்பாத்து
தையலிளங்கொடிக்கு சத்தியஞ்செய்யவென்று
தென்மதுரைபோனீர்களே செய்தியென்னசொல்லுமென்றார
அங்கேநடந்ததொரு அதிசயத்தைசொல்லுமென்றார்
அருண்மைந்தர் தருமருக்கரிராமரேதுசொல்வார்
மண்டலத்துராஜாக்கள் வந்துசத்தியம்பண்ணாகள்
வெற்றிமதயானை வீமனவனேதுசெய்தான்
கொதிக்கின்றநெய்தனிலே கொப்பெனவேகைதனைவைத்து
சத்தியங்கள்செய்யாமல் தாமந்தவாழ்மார்பன்
கொதிக்கின்றநெய்யதனைக் கொப்பரையோடெடுத்து
நெய்யைக்குடித்துவிட்டு கொப்பரையையுருட்டிவிட்டான்
மதப்பட்டவீமன்செய்த வல்லமையினாலிப்பொழுது
சண்டைக்குவந்தாளே சாமார்த்தியமுள்ளகன்னி
சண்டைபண்ணவந்தவளைச் சற்றுவிடலாகாது
சண்டைகளைச்செய்யவேணுஞ் சமர்த்தரியவேண்டுமென்றார
வந்தசண்டைவிடலாமோ வளம்பெரியதருமரேசொல்
பின்னுக்கிடைந்தாலே விடுவாளோபெண்ணரசி
வென்றுசெயிக்கவேண்டும் வீரபட்டஞ்சூட்டவேண்டும்
அவ்வார்த்தைதான்கேட் டருண்மைந்தரேதுசொல்வார்
ஆரையனுப்புவே மயமாதுசெய்யவென்றால்
எவரையனுப்புவோ மெம்பெருமாள்சொல்லுமென்றார்
நகுலசகாதேவ ராசாக்கள்தங்களையும்
வெற்றிமதயானை வீமனையனுப்புமென்றார்
மூவருடனாக வெகுசனங்கூட்டமென்றார்
நானுங்கூடப்போறேன் ராசாவேயஞ்சாதே
வென்றுசெயித்துநான் வெளிப்பட்டுவருவேனென்றார்
மனதுக்கிசைந்தபடி மாயவரேசெய்யுமென்றார்

பஞ்சபாண்டவர் அல்லியோடு சண்டைக்குவருகிறது.

தாமரதுசேனைகளை சகலஜனம்வாருமென்றார்
இன்றுவெளிகூடாரமியலுடனேபோடுமென்றார்.

சண்டைமுரசறையுமென்றார் சண்டைகொடிநாட்டுமென்றார்
பாளையக்காரருள்ளதெல்லாம பயணங்கள்சொன்னார்கள்
ஆடாதேர்ப்பாகா அலங்கரியுந்தேரையென்றார்
தேர்ப்பாகனோடிவந்து தேரையலங்கரித்தான்
ஆறுகண்டிநூறுசட்டம் முழுகாலகுத்துக்கால்
குத்துக்கால்சொப்பனிட்டுக் கொடுக்கைநிரைவளைத்து
கும்பக்கலசமது கொடுங்கையலங்கரித்து
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்கொண்டுவந்தான்
அழகானதேரையினு லலங்காரம்பண்ணினானே
நாலுபக்கத்ஜாலாகளும் நவரத்தினத்தோரணமும்
கண்ணாடிச்சல்லி கவரிமான்குச்சுவிட்டு
ஐந்துகொத்தாயாரச்சி யழகுமணிகட்டினானே
நவகண்டவீரமணி நான்குபக்கங்கட்டினானே
வாழைமரங்கட்டியே மகமேரலங்கரித்து
நான்குபுரவிகளை நன்றாய்க்குளிப்பாட்டி
பாராசாரிபுரவியொன்றும் பஞ்சகல்யாணியொன்றும்
தேசியென்னும்புரவியொன்றும் ஜீவரத்தினப்புரவியொன்றும
நாலுகால்வெண்டையமாம நடுக்கழுத்தில்கொலுசுகளும்
முன்னாலேகட்டிகளும் பின்னாலேகுச்சுகளும
மாணிக்கக்கடிவாளம் வாயிற்கொடுத்தானே
நான்குகுதிரைகளை நன்றாயலங்கரித்து
தேரின்மேலேறினானே சிங்காரமாய்ப்புரவிகளை
சாய்ந்திருந்துசண்டைசெய்ய சாமணைபோட்டானே
தூங்கியேசண்டைசெய்ய குரிஞ்சிப்புமேடையிட்டான்
ஒளித்திருந்துசண்டைசெய்ய ஒருகுதலோணைகளிட்டார்
சந்தனப்பொட்டுமிட்டு சாம்பிராணிதூபமிட்டான்
தேரையலங்கரித்து தேர்ப்பாகனோடிவந்து
அலங்கரித்தேனென்றுசொல்லி யடிவணங்கித்தெண்டனிட்டான்
வெற்றிமதயானை வீமனவனெழுந்து
நகுலசகாதேவ ராசரவரெழுந்து
ஆயர்பெருமானு மரிராமாரெழுந்து
மகுடமணிந்தாரவர் வாகுவலையமிட்டார்
வாள்களுங்கதைகளும வல்லுகையில்தானெடுத்து
அம்புவில்லுந்தானெடுத்து அம்புறாத்தூணிமுதுகணிந்தார்
சட்டைதமான்வச்சிரகபாய் தாமணிந்தாரரசரெல்லாம
உண்டுவில்லுஞ்சுண்டுவில்லுஞ் சிங்காணிப்பூச்சிவில்லும்
வச்சிரகதையணிந்தான் மதவீமராசனவன்
தண்டாயுதமணிந்தார் மந்திரவாளணிந்தார்
சண்டைக்கடிமுஸ்திபாய்ச் சமர்த்தர்வெளியானார்
அருச்சுனரதுவரிந்து ஆயரண்டை ஓடிவந்தார்
அல்லியவளோடே யாருக்குப்போரீரோ

அவள்மேலேயம்புபட்டால் என்னுயிருகிவிடும்
சீவனழிந்திடுவேன் செலவழிந்துபோவேனென்றான்
மாண்டுமடிந்திடுவேன் மாதருக்குபாணம்பட்டால்
எந்தவிதமானாலு மிட்டுவரவேண்டுமையா
பொற்கொடிமாதரைநீர் பிடித்துவந்துசேருமையா
நல்லதருச்சுனரே நமக்குத்தெரியவரும்
எந்தவிதமானாலு மிட்டுவந்துசேர்க்கிறேன்பார்
உன்மனதுக்கிசைந்தபடி மன்னவனேசெயகிறேன்போ
என்றுமேசொன்னாரே எமபெருமாள்மாயவரும
அப்போதருச்சுனரு மானழகர்தாமெழுந்து
வெற்றிமதயானை வீமனண்டையோடிவந்து
மதகரிவீமனுக்கு வணங்கிநமஸ்கரித்து
அண்ணாமதவீமா அடியேனொருவார்த்தை
அல்லியவள்மேலே அமருக்குப்போநீரே
அவள்மேலேபாணமதை விடவேண்டாமண்ணாவே
வில்வித்தைசெயயவேண்டா விசைபாணமபோடவேண்டாம்
தந்திரமாய்க்கொண்டுவாருங் காமந்தவாழ்மார்பா
என்றுதொழுதானே யெழில்விசையனருச்சுனனும்
அவ்வார்த்தைதன்னைக்கேட்டு வாணழகனேதுசொல்வான்
நல்லதுதமபியரே நமக்குக்தெரியவரும்
என்றுசொல்லிமதவீம னேறினான்தேர்மேலே
ஏறினார்தேர்மேலே எடுத்தார்வெண்குடையை
முத்துக்குடைகளுமே முழுவயிரநற்குடையும்
பட்டுக்குடைகளுமே பலதிசையுந்தானெடுத்தார்
கிருஷ்ணரதுதேர்மேலே கருடக்கொடிபறக்க
வீமனதுதேர்மேலே சிங்கக்கொடிபறக்க
நகுலனதுதேர்மேலே நாகக்கொடிபறக்க
சகாதேவன்தேர்மேலே சாஸ்திரக்கொடிபறக்க
அச்சுதிருகிறனை யானைநெடுந்தேரதையும்
வண்டிலகிறுச்சிடுமா மதயானைகோஷ்டமிடும்
குதிரையனுமாணிக்கக் கோடிமன்னர்சத்தமிட
யானைசேனைபரிவார மடங்கலும்வருகிறதே
செந்தூளெழும்புவதுஞ் சூரியனைக்கப்புவதும்
சருகதூளெழும்புவதும் இரோனைக்கப்புவதும்
மண்தூளெழும்புவதும் மண்டலத்தைக்கப்புவதும்
அடிபடுதேதாபபேரி அங்கரங்கானதிர
வெண்கலபேரியது விருதுமுழங்கிவர
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைபேரியடிபடுதே
வெற்றிவெற்றியென்றுசொல்லி வெற்றிகொடிபடுதே
ரணங்கள்ரணக்களென்று ரணபேரியடிபடுதே
கோடைகாலத்திடிபோலே குமுறுதேராயபேரி

அடிவாளத்தடிபோலே அடிபடுதேராயபேரி
அண்டங்கிடுகிடென்ன அடிபடுதேராயபேரி
அல்லியென்றபேர்சொன்னால்கல்லுதெய்வங்கூத்தாடு
மண்ணாளுஞ்செந்தாளுமண்டலத்தைக்கப்பியதே [ம்
வருகிறஜெனங்களைகளுல் மட்டுமிதங்களில்லை
பட்டணத்தைத்தாண்டிப் பாளையம்வருகிறதே
யூகமபிரித்தாகளுபித்தியஞ்செய்யவென்று
வந்துமுனைகொடுத்தார் வளம்பெரியசேனையெல்லாம்
இருவயுபாளையங்கள் கட்டிநெருங்கிற்றே
உத்திபிரித்தார்களுபிதியம்பண்ணுகிறார்
வில்வளைத்துநாரிபூட்டி வேணபாணந்தொடுத்தார்
சரமேசரம்பொழிந்தார் சாமார்த்தியமுள்ளவர்கள்
அமரகருஞ்சமரதரும் சமரதரும்அமரதரும்
கலிங்கர்தெலுங்கர்களுந தெலுங்கர்கலிங்கர்களும்
கன்னடியர்கஸ்தியர் கஸ்தியர்கன்னடியர்
சத்திரியர்முகதிரியர் முகதிரியர்சத்திரியர்
யானையோடியானைதாக்க அஸ்வந்தோடஸ்வந்தாக்க
ஒட்டகமுமொட்டகமும ஒக்கப்போர்செய்யுதங்கே
ஒருவர்கொருவரல்லோ யுயித்தங்கள்பண்ணுகிறார்
எட்டிற்றேநல்லசண்டை எழும்பிற்றேருயபேரி
மூணுநேநல்லசண்டை முழங்கிற்றேருயபேரி
வந்துமுனைகொடுத்தாள் வாழ்வரசிஅல்லியம்மாள்

வீமசேனன்யுத்தம்.

வெற்றிமதயானை வீமனவன்பார்த்து
வந்தவளைத்தானே வல்லிடிபோல்தேர் இருப்பி
தேரைத்திருப்பியவன் செங்கையிலேவில்லெடுத்து
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைகுணத்தொனித்து
அம்புதொடுத்தானே அல்லியவள்மேலாக
வாரிப்பொழிந்தானே வளம்பெரியஅஸ்திரத்தை
வாயுவாஸ்திரங்களொடு இந்திராஸ்திரங்களுந்தான்
சூரியஅஸ்திரமாம் சுப்பிரமண்யஅஸ்திரமாம
மூடுபனிபோலாக முடுக்கிவிட்டான்பாணமது
அம்புவரும்வேகமானாலார்க்குமுடிபோகாது
பாணம்வருவேகமானால் பார்க்கமுடிபோகாது
சாவருஷம்போலாகச் சரமேற்சரமபொழிந்தார்
கண்டாளேயல்லியம்மாள் கண்கள்செவந்தாளே
ஓடிவெறிபறந்துசிங்கத்தைப்போற்கதும்பி
கழுகிலேமங்கிலியங் கட்டினவனாரடா
இருட்டுப்பயலேயுன் ஜீவன்பறித்திடுவேன்
சண்டிப்பயலேயுன் சாமாத்தியமதானழிப்பேன்

என்சமர்த்துஞ்சேவகமு மிப்போதெரியுதுபார்
அல்லியென்றுபேர்சொன்னால் அழுகபிள்ளைவாய்மூடும்
அல்லியென்றுபேர்சொன்னா லண்டரண்டங்கிடுகிடென்னும்
அரைநாழிக்கொள்ளையிலே யளகபுரஞ்சேர்த்திடுவேன்
தேரைத்திருப்பினாளே தெக்கையிலேவில்லெடுத்தாள்
பம்பரம்போலாக பாராதர்திருப்பி
சக்கரதிகிரிபோலே சமற்றதுடனேதேர்திருப்பி
வில்வளைத்துநாரிபூட்டி விட்டாள்சரபாணம்
தொட்டாளேவில்லதனை தொடுத்தாள்சரபாணம்
ஆகாயமுள்ளதெல்லா மப்பாலேபந்தலிட்டாள்
அம்புவரும்விதங்க ளார்க்குமுடிகூடாது
பாணம்வருமவிதங்கள் பார்க்கமுடிகூடாது
கார்த்திகைமாதத்திலே கனத்தமழைவந்ததுபோல்
ஐப்பசிமாதத்திலே யடர்ந்தமழைபெய்ததுபோல்
சோனைமழைபோலே சொரிகின்றான்பாணங்களை
அக்கினியஸ்திரங்கள் அனந்தம்பொழிகிறாளே
நெல்லிப்பழம்போலே நெருங்கிறதேகொப்பளங்கள்
அருநெல்லிப்பழம்போலே யஸ்தமெல்லாங்கொப்பளிக்க
நாலுநாள்மட்டாக நல்லசண்டைபண்ணுகிறான்
தனமேல்வரும்பாணமெல்லாஞ் சங்கரியபான்வீமனவன்
ஒருவர்விட்டபாணமை ஒருவர்விலக்கிக்கொள்வார்
ஒருவர்சமானமாக இனியசண்டைபண்ணுகிறார்
வீமன்விடும்பாணத்தினால் வெகுசனங்கள்மாளுகுது
யானையின்மேலிருந்ததுரை யழுந்திவிழுகிறார்கள்
குதிரையின்மேலிருந்ததுரை கொசகரிகதுக்கிழ்விழுந்தார்
ஒட்டகத்தின்மேலிருந்தசோ ரோலமிட்டுவிழுவார்கள்
அம்மாடியென்றுசொல்லி யலறிவிழுவார்கள்
தென்னங்காயபோலாகச் சேனையுருளவிட்டான்
பனங்காய்கள்போலாகப் பறிகதெறிந்தான்வேணதலை
அறுத்ததலைகளெல்லா மம்மனாடுதங்கே
பெட்டியும்பேழைபோலே பெலிகொடுத்தலைகள்போலே
சட்டிகள்பானைபோலே தலைகளுருளவிட்டான்
அம்மாடியென்றுசொலவி யனேகந்தலையுருளும்
காலறுந்துபோய்விடுதே கைகளற்றுப்போய்விடுதே
ஈரலகுடல்சரிந்து இருநிலத்தில்வீழ்வாரும்
மணிக்குடல்தான்சரிந்து மண்ணில்விழுவாரும்
நிலப்பூசிபோலாக நிலத்தில்நசுங்கலுறார்
சாகிறவுணிபோலே தரையில்நசுங்கலுற்றார்
மாண்டசெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
செத்தஜெனங்களென்றால் சொல்லமுடிபோகாது
அல்லியம்மாபாளையங்க டலைந்தலைந்தோடுகுது

வில்பிடித்தகைகளெல்லா மெத்தவப்பெறிற்று
கைகளெல்லாஞ்சோர்ந்துவிடக் கன்னியரும்பாணம்விட்டாள்
ஆகாயதேவரெல்லாம் அல்லியரைக்கொண்டாடினர்
இக்கப்படியாக இனியசண்டைசெய்கையிலே
இவளுமெதுபார மென்றொருபாணமதை
மார்புரளவாங்கியல்லோ தோள்புரளக்கொடுத்துவிட்டாள்
வாயில்நெருப்பெரிய வந்துவிழுந்தது
தேருமொடிந்து பாச்சு செப்புரவிகளும்பேச்சி
சட்டைதமான்வச்சிரகபாய் கவிழ்பொடியாகி
செங்கையில்வில்லெடுத்து சோடுசட்டைதானணிந்து
பதாதியாய்போகிறார் பாரளந்தவெம்பெருமான்
வலகமேசம்வந்ததென்று கரியமாலோடுகிறார்

சகாதேவன்யுத்தம்

கண்டான்சகாதேவன் கரியமாலோடுவதை
தேரைத்திருப்பினனே செங்கையில்வில்லெடுத்தான்
வந்துவளைந்துகொண்டான் வல்லிடிப்போல்சகாதேவன்
பேரிகையறைவித்துப் போயெதிர்த்தானல்லியண்டை
சண்டைபேரிகையடித்துச சமர்த்துடனேவந்தெதிர்த்தான்
கண்டாளேயல்லியம்மாள் கணைகளெடுத்தாள்செவக்க
ஒருபாணம்விட்டாளே யலகமெல்லாந்தானதிர
பேரிகையைகிழித்தாளே பெரிபடமாதான்கிழித்தாள்
வச்சிரபாணம்விட்டு மாலைப்பத்தலாயக்கிழித்தாள்
விழுந்துஎழுந்திருந்தான் வெட்கங்கொண்டோடிவிட்டான்

சகாதேவன் அல்லியைப்புலிக்கூண்டிலேற் பிடித்துவருகிறது.

எந்தவிதத்திலுமே யிவளைசெயித்திடலாம
அடங்காதஇவளை யடக்கும்வழியெப்படிதான்
என்றதுதானினைந்து இனியசகாதேவன்
உள்ளங்கைசாஸ்திரத்தை யுக்தியுடன்பார்த்து
பாதாளஅஞ்சனத்தைப் பார்த்துசகாதேவன்
பத்துசுற்றுப்புலிக்கூண்டை பாங்குடனேகொண்டுவந்தார்
சூதுபண்ணியல்லியரை கோணிலடைக்கவேணும்
இல்லாமற்போனுக்கா லிவளைசெயிக்கமுடியாது
இவள்கையிலேமாளுவ தெல்லவருநிச்சயந்தானே
சாஸ்திரத்தைத்தான்பார்த்து தாக்குளேசகாதேவன்
செருக்காத்தைவிட்டவனுஞ் சீக்கிரமாய்ப்போகலுற்றான்
மாளிகையிற்போய்ச்சேர்ந்து மன்னனசகாதேவன்
விசுவபிரயபுத்ரர்களை விரைந்தோடியழையுமென்றான்
அப்போதுவாலவர்கள் அழைத்தோடிவந்தார்கள்
ஆயிரம்புத்திரர்களை யழைத்துவந்துவிட்டார்கள்
வந்துபணிந்தார்கள் மன்னனசகாதேவனைத்தான்

எங்களையழைத்தபணி யாதென்றுகேட்டார்கள்
நிமிஷமரைநாழிகையில் திருமியுங்கூண்டையென்றான்
ஒருபக்கம்பார்த்தாலே உச்சிததேர்போலே
ஒருபக்கம்பார்த்தாலே யுச்சிதக்கூண்டைப்போலே
மறுபக்கம்பார்த்தாலே மச்சுவீடுபோலக
பத்துசுற்றுக்கோட்டையதாய்ப் பக்கங்கதவடைத்து
வாசலுக்குவ சலது வச்சிரத்தாள்போட்டு
சாவியுஞ்சங்கிலியும் தாப்பாளுமவையுமென்றான்
ஆயிரந்தச்சர்களும் மக்கணமேசொப்பனிட்டு
நிமிஷமரைநாழிகையில் நியமித்தார்விஸ்வகர்மர்
சோடித்தோமென்றுசொல்லித் தெண்டனிட்டுபோனார்கள்
அப்போசக தேவன் அங்ஙாவேதாமெழுந்து
தேரைத்திருப்புகிற சூரனைத்தானழைத்து
குதிரையலங்கரித்துக் கூண்டிலேகட்டுமென்றான்
சாத்திரக்கொடிவிருதைச் சார்த்துடனேகட்டுமென்றான்
பாராசாரிப்புரவிகளைப் பாங்காயலங்கரித்து
கூண்டிக்கழகாகக் குதிரைகளைக்கட்டுமென்றான்
சாத்திரக்கொடிவிருதைச் சமர்த்துடனேகட்டுமென்றான்
அங்கேசகாதேவ னம்புவில்லுங்கைபிடித்து
ஏறினான்கூண்டுதனி லெடுத்தடித்தாபேரிகையை
திமவுகேங்கைபிடித்துச் சூதாகபோனானே
கூண்டைத்திருப்பியல்லோ கொண்டுவந்தான்பாளையத்தில்
செயங்கொண்டோமென்றுசொல்லி செங்கையில்வில்லெடுத்தான்
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைபேரியடிபடுது
வெற்றிவெற்றியென்றுசொல்லி வெற்றிநகராடிபடுது
ரணங்கள்ரணங்களென்று ரணபேரியடிபடுது
கண்டாளேயல்லியம்மாள் காற்றைப்போல்தேர்திருப்பி
வந்துமுனைந்தாளே வல்லிடிபோல்வளைந்தாள்
எட்டுதேநல்லசண்டை யெழும்பிற்றேராயபேரி
முட்டுதேநல்லசண்டை முழங்கிற்றேராயபேரி
விட்டாள்சாபாணம் மேனியெல்லாந்தான்மறைய
ஒருவர்விடும்பாணமொருவர்விலக்கிக்கொள்வார்
இருவர்சமானமாக விருதுசண்டைபண்ணுகிறார்
அர்த்தசந்திபாணங்களி லல்லியொருபாணம்விட்டாள்
சகாதேவன்வில்முறியச் சமர்த்துடனேபாணம்விட்டாள்
வேதாளமாகவந்து வில்லைமுறித்ததுவே
வில்லுமுறியவேதான் வேந்தன்சகாதேவன்
வாள்கேடகந்தானெடுத்து மண்ணிற்குதித்தானே
முன்சந்துபின்சந்து முப்பத்திரண்டுசந்து
இந்த ஜாலவித்தை [illegible] சகாதேவன்

அப்போது அல்லியரு மாரணங்குதான்பார்த்து
காணங்கள்போடுகிருள் கைலாகுபண்ணுகிருள்
கருடபாச்சல்தானெடுத்துக் கொப்பெனவேபாயுகிருள்
புலியும்புலியுமது போயெதிர்த்தபாவனைபோல்
யானையும்யானையுமாய் அதிர்ந்துமெதிர்ந்ததுபோல்
சிங்கமும்சிங்கமுமாய் சீறியெதிர்த்ததுபோல்
கொக்கரித்துவாளியிட்டுக் கொற்றவனும்பாயுகிருன்
துள்ளுமான்குட்டியைப்போல் துள்ளுகிருள் அல்லியம்மாள்
ஓடியொளிப்பவன்போ லுபாயமாய்ச்சகாதேவன்
கூண்டிற்குதித்தானே கொப்பெனவேசகாதேவன்
ஓடிப்போருனென்று உலகாளும்ராசகன்னி
கூடக்குதித்தாளே கூண்டுதனிற்பாய்ந்தாளே
முன்வாசற்புகுந்தவனும் பின்வாசலோட லுற்ருன்
அவ்வாசற்புகுந்தாளே அல்லிநல்லாநாயகியாள்
எங்கேபோனான்கள்ளனென்று இளங்கொடியாள்தேடுகிருள்
ஐந்தாங்கட்டுவாசலிலே அல்லியம்மாள்தான்புகுந்து
அவ்வாசல்கதவடைத்து அருந்தாப்பாள்பூட்டினுனே
சன்னல்கதவடைத்துத் தாப்பாளும்போட்டானே
ஐந்துவாசற்கதவடைத் தாணழகன்வெளியானுன்
அகப்பட்டாளல்லியென்று அடியுமென்ருன்பேரிகையை
செயங்கள்செயங்களென்று செயபேரிபோடுமென்ருன்
அகப்பட்டாளல்லியென்று அடிபடுதேபேரிகைகள்
சிக்கினுளல்லியென்று சின்னங்களூதுகிருர்
அத்தணடபோகளுமே அனைவோருங்கேட்டுவிட்டார்
சந்தோஷப்பட்டார், தருமருடசேனையெல்லாம்
தப்பினசேனையெல்லாம் தென்மதுரைசேர்ந்துவிட்டார்
அப்போசகாதேவ னானந்தமாய்வாரானே
கூண்டைத்திருப்பியே கொண்டுவந்தான்பட்டணத்தில்
அருச்சுனன்தன்னருகே யடிபணிந்துதெண்டனிட்டான்
தெண்டனிட்டசகாதேவன் சொல்லுவானொருவார்த்தை
அல்லியுடன்சண்டைபண்ண வமருக்குப்போனபோது
அகங்காரபெண்புலிதா னகப்பட்டதென்கையில்
வேங்கைபுலியதனை விடுகூண்டிலடைத்துவந்தேன்
மதுராபுரியாண்ட வாழ்வரசியல்லியரை
தேறேறிச்சண்டைசெய்யுந் துரைமகளைக்கொண்டுவந்தேன்
அவ்வார்த்தைதான்கேட் டருச்சுனன்மனமகிழ்ந்து
சந்தோஷப்பட்டானே தாமந்தவாழ்மார்பன்
அன்னநடைதிரௌபதையாள் ஆரணங்கைதானழைத்து
நாகமடந்தையரை நறுநுதலைதானழைத்து
சோரவளநங்கை சுபத்திரையைத்தானழைத்து
நான்செய்தகாரியத்தை நாயகமேகேளீர்

மாயவருமியானுமாக வனவாசம்போனபோது
தீர்த்தயாத்திரைபோனவழியிலே செய்தபிழைதீர்கேளும்
ஆதிசிவனைநான் அடிவணங்கவேணுமென்று
மதுராபுரியிலே மாணிக்கச்சொக்கலிங்கம்
பிட்டுக்குமண்சுமந்த பித்தரைக்காணவென்று
மதுரைக்குப்போகின்ற வழியிலேயங்கொருவன்
அழுதக்கண்ணுஞ்சிந்தையுமா யங்கொருவன்புலம்பிநின்றான்
மதுராபுரியாளும் வாழ்வரசியல்லியற்கு
அன்றாடமுத்தெடுத்து அளப்பானுமரிமைக்கு
படிமுத்துகுறைந்ததென்று பதறியவன்விழுந்தான்
அல்லியரசாணி யரசுநிலையாள்கிறது
அவள்பிறந்தவண்மைகளும் ஆவலெல்லாம்சொல்லுமென்றேன்
ஆறாயிரம்பாண்டியர்க ளறியதவஞ்செய்ததும்
அகிலாண்டசொக்கலிங்கம் அங்கயற்கண்கிருபையினாலே
அல்லியிலேமேலே அவள்பிறந்தவண்மைகளும்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநீன்முகனை
வெட்டித்தலைதுணித்து வீரபட்டங்கட்டினதும்
கொள்ளவரும்மாப்பிளைக்கு குறடாகொடுப்பேனென்று
சேரவரும்மாப்பிளைக்குச் சேருபந்துதருவேனென்றும்
ஆளவருஞ்சம்பந்தியை யடிப்பேனென்றாள்சேருபந்தல்
முச்சுகொட்டாதெருவிற்கட்டி மொய்குழலாண்டிருந்தாள்
இவ்வார்த்தைதான்கேட் டென்மனதுதாளாமல்
கட்டினவிருதறுத்துக் கலியாணஞ்செய்வதென்று
என்றுமனதிலெண்ணி எட்டுநாள்காத்திருந்தேன்
பத்தினியானவள்பாரிவேட்டைபோனதுவும்
பெண்வேஷம்போட்டுமல்லோ பின்தொடர்ந்துநான்போனேன்
கரும்புரவிமேலேறி மான்வேட்டையாடையிலே
ஆளந்தமாரியர்க் கம்புபொரிக்கித்தந்தேன
வேட்டைகளாடியே மெத்தக்களைத்தவளும்
ஆலமரத்தடியிலே யக்கேபடுத்தாளே
காலுபிடித்தேனே கதையொன்றுஞ்சொன்னேனே
அடையாளங்காட்டவென்று யாரமகழற்றிக்கொண்டேன்
அஃதறுபோய்மற்றானாள் மற்றொருவேடங்கொண்டேன்
பித்தம்பிடித்தவன்போல் பெரும்பயித்தியங்கொண்டவனாய்
அல்லியதுபட்டணத்தில் அழகுதிருக்குளத்தில்
வண்ணமருந்தெடுத்து வளம்பாடியானுரைத்தேன்
அனேகதாதிமாரைவிட்டு யாற்றிலென்னைபுரட்டுமென்றாள்
அதிலுஞ்சாகாமல் அவள்நினைவதாயிருந்தேன்
தாக்குமரங்தனிலே போடுமென்றாளென்னையவள்
செங்கமலதாதியைத்தா னுபாயமாய்க்கொன்றுவிட்டேன்
காளிபட்டமன்கோவிலிலே காவுபோடச்சொன்னாளே

பூதக்கிடங்கிலே போட்டடைக்கச்சொன்னாளோ
பூதம்பணிமாரப் பிழைத்திருந்தேனவ்விடத்தில்
மாயனொருபெண்ணாகி வரவழைத்துக்கொண்டுவந்தார்
ஆண்டியைப்போல் வடிவெடுத்து அல்லிதன்வாசலிலே
வண்ணமடலெடுத்து மாதுபிச்சைவாங்கிவந்தேன்
மாயன்பிடாரனார் வண்ணவிதப்பாம்பானேன்
பாம்புருவாய்ப்போயிருந்து படுக்கையில்நான்கலந்து
பொற்கொடிமாதினுக்குப் புத்திரனுண்டாக்கிவைத்தேன்
மற்றொருவேஷமது மறுநாள்வடிவெடுத்து
பெருமாளந்தமாயவனார் பிராமணபெண்ணானார்
மெத்தக்கிழவனைப்போல் வேதியனாய்வடிவெடுத்து
அத்வானமானகாட்டில் தண்ணீர்ப்பந்தல்வைத்திருந்தோம்
அந்தவேஷந்தன்னுடனே அரண்மனையிற்போயிருந்தோம்
தேவேந்திரனைநோக்கி செய்தேன்பெருந்தபசு
ஆனைத்தலைபோலே அழகானமங்கிலியம்
தும்பிக்கைபோலாகத் திருமங்கிலியச்சரடும்
கொடுத்தனுப்பவேண்டுமென்று கொப்பெனவேதவசுசெய்தேன்
மாயத்திருநீரும் மங்கிலியம்தந்துவிட்டார்
மாலைப்பசுங்கிளிக்கு மங்கிலியம்தரித்துவிட்டேன்
ஆருமறியாமலங்கொருவர்காணாமல்
கட்டினவிருகருத்துக் கடுகியேவந்துவிட்டோம்
நான்குமாதங்கெர்ப்பமது நடக்குதுகாண்மாதினுக்கு
இன்னவனென்றுசொல்லி என்னையறியமாட்டாள்
கழுத்திலேமங்கிலியங் கட்டினவனையறியாள்
தரையிலுள்ளராசாக்களை வரவென்றழைத்தவளும்
நெய்களைக்காச்சியல்லோ கைதனைத்துவையுமென்றாள்
மண்டலத்துராஜரெல்லாம் வந்துசத்தியஞ்செய்தார்கள்
வெற்றிமதயானை வீமன்குடித்துவிட்டான்
ஆகையினாலேயவள் அமருக்குமிங்குவந்தாள்
தர்மமுடியாளும் சகாதேவன்பிடித்துவந்தான்
புலிக்கூண்டிலேயடைத்துப் பொற்கொடியைக்கொண்டுவந்தான்
இந்தவயணமெல்லா மேந்திழைக்குநீயுரைத்து
நம்பிக்கைவாங்கியே நாயகியைவெளிவிடுங்கள்
கோபங்களாற்றுங்கள் கொம்பனையாள்நாயகிக்கு
மனந்தேறச்சொல்லுங்கள் மாலையிடப்பாருங்கள்
சத்தியத்தைத்தப்பாருங்கள் தையலைவிட்டுவிட்டு
ஆயுதத்தைவாங்கியேதான் அப்புறத்திலவிட்டுவிடு
என்றதுசொல்லியே பொழில்விசயனனுப்பிவைத்தான்

திரௌபதைமுதலானவர்கள்வந்து அல்லியம்மாளை
மணந்திருப்பிமாலையிடச்செய்தது

அப்படியேயாகுதென்று அன்னநடைமாதர்களும்
துரௌபதைநாககன்னிசுபத்திரைவருகிறாள்
மந்தாக்குந்தியம்மாள் மற்றுமுள்ளோர்வருகிறார்கள்
வாசலுக்குவாசலது படியேழுந்தான்கடந்து
புலிக்கூண்டுதன் அருகேபோய்ச்சேர்ந்தார்மாதரெல்லாம்
தோரணவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
ஆடியம்மாளே யழகானகூண்டிலேதான்
இப்பெரியகூண்டிலேதா னிருக்கிறவளார்காணும்
வாயைத்திறந்துநீ வந்தவகைசொல்லுமென்றாள்
மகுடத்துரைச்சியவள் வாய்திறந்தேதுசொல்வாள்
என்னசொல்வேனாயகியே என்தலைவிதிப்பயனே
ஆருக்கடங்காம லரசுநிலைசெய்திருந்தேன்
பெண்ஜன்மமெடுத்துநான் போதுமம்மாவெந்தனுக்கு
வயிற்றில்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலில்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரி லுள்ளமணற்சேருமுண்டு
அடிக்கின்றகாற்றுதனி லலைகாற்றுறும்புமுண்டு
ஆலாலமுண்டருக்குக்கண்டங்கருப்புமுண்டு
குண்டுமணிக்காருளும் கொஞ்சங்கறுப்புமுண்டு
மயிரோகருப்பொழிய மற்றகறுப்புமில்லை
புருவக்கருப்பொழிய பின்னைக்கறுப்புமில்லை
ஆறுயிரம்பாண்டியர்க ளறியதவஞ்செய்தார்கள்
மாளுகிறோமென்றுசொல்லி மலைமேற்றவமிருந்தார்
யாளாதேயென்றுநான் மலரிலவதரித்தேன்
அல்லியிலேமேலே ஆரணங்குபெண்பிறந்தேன்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநீன்முகனை
வெட்டித்தலைபிளந்து வீரபட்டங்கட்டிக்கொண்டேன்
நீன்முகனைக்கொன்றுநான் நீலிபட்டங்கட்டிக்கொண்டேன்
எல்லையரசாண்டு இருந்தேனம்மாவிக்காலம்
கொள்ளவருமாப்பிள்ளைக்குக் குறடாகொடுப்பேனென்றேன்
சேரவருமாப்பிள்ளைக்குச்சேருபந்துதருவேனென்றேன்
ஆளவரும்சம்பந்தியை யடிப்பேனென்றேன்சேருபந்தால்
பொம்மைவிருதுகட்டிப்பூமியாரமாண்டேனம்மா
எவனோதிருட்டுப்பயல் என்கழுத்தில்மங்கிலியம்
தாலியைக்கட்டினமேலே தனிவிருதையறுத்துவிட்டான்
அறிந்துபிடிக்கவென்று அனைவரையுமழைத்தேன்
நெய்தனைக்காச்சியே கையைதுவையுமென்றேன்
நெய்தனைக்குடித்துவிட்டான் நிர்மூடனவனும்

சண்டைக்கிவங்கிடத்தில் சமர்த்துகளைகாட்டாமல்
எதிரேயிருந்தல்லவோ வென்சமர்த்தைப்பார்க்கவேணும்
என்னைமோசம்செய்தல்லவோ இக்கூண்டிலடைத்தானே
சரியாகநிற்கவேண்டுஞ் சமர்த்துகளைக்காட்டவேண்டும்
வெளியேவிடச்சொல்லும்வீரியத்தைக்காட்டுகிறேன்
அவ்வார்த்தைதான்கேட்டு பேதுசொல்வாள்திரௌபதையாள்
கழுத்திலேமங்கிலியம் கட்டினவண்மையெல்லாம்
அந்தவதிசயத்தை ஆரணங்கேசொல்லுகிறேன்
காட்டிலேவேட்டையாடநீ கடுகவரும்போது
பெண்வேஷம்போட்டுமல்லோ பின்னேதொடர்கிலையோ
அம்புபொறுக்கிலையோ வாரணங்கேயுந்தனுக்கு
காலும்பிடிக்கலையோகதையொன்றுஞ்சொல்லலையோ
பித்தம்பிடித்தவர்போல் பெருமருந்துதானெடுத்து
வண்ணமருந்தெடுத்துத் தண்ணீரிலுரைக்கலையோ
அல்லிப்பெருமாளேநீ அதிககோபங்கொள்ளாதே
ஆற்றிலேபோட்டுநீ யவரைப்பிரட்டலையோ
தூக்கிலேபோடுமென்றாய் துய்யபசுங்கிளியே
காளியம்மன்கோயிலிலே காவுகொடுக்கச்சொன்னாய்
பூகக்கிடங்கிலே போட்டடையுமென்றுசொன்னாய்
மற்றநாள்தெய்வகன்னி மணவாளனென்றழுது
ஆண்டியரைப்போலவந்துவல்லியேயுன்வாசலிலே
மடலூர்ந்துவுந்தனது வாசலிலிருக்கும்போது
பாம்புபிடாரனைப்போற் பத்தினிவறுகையிலே
பாம்பாகவேடங்கொண்டு படுக்கிலையோவுன்னிடத்தில்
உன்னிடத்தில்போகஞ்செய்து உனக்குமைந்தனுக்கிவைத்து
பாற்பானைப்போலவந்து பனிமாலைசூட்டலையோ
தாலிதரித்தவர்தான் தருமர்தம்பியருச்சுனர்காண்
உன்னைதாலிகட்டிவந்ததுதான்சமர்த்தென்றும்பாராதே
அல்லிஇலைமேலே அதிசயமாய்ப்பெண்ணானது
மெத்தப்பெரிதென்று பாராதேயல்லியரே
நான்-அக்கினியில்பெண்பிறந்த அதிசயத்தைநீகேளும்
வயிற்றிற்பிறந்ததில்லைவன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
சந்திரற்குமச்சமுண்டு சற்றேகறுப்புமுண்டு
குண்டுமணிக்கானாலும் கொஞ்சங்கறுப்புமுண்டு
எனக்கு-மயிரேகறுப்பொழியமற்றக்கறுப்புமில்லை
புருவங்கறுப்பொழியபின்னேகறுப்புமில்லை
மாசிலாப்பெண்பிறந்தேன் வளருகிறேனக்கினியால்

நெருப்பில்பிறந்தேனே நீலப்பசுங்கிளியே
பாஞ்சாலனெக்கியத்தில் பிறந்தபதிவிரதை
மந்திரகிரிமேடைதனில் மச்சரையில்பெண்பிறந்தேன்
அருச்சுனரைமாலையிட அக்கினியில்பெண்பிறந்தேன்
அரக்குமாமாளிகையி லைவரிறந்தாரென்று
செய்திதெரிந்து சுயரமிட்டானென்தகப்பன்
ஐவரிறந்தாரென்று ஆயாசப்பட்டார்கள்
கான்மீறிவளர்ந்தேனே மெல்லிருதுவானேனே
போதவளர்ந்தேனே பிள்ளைபெறும்காளமானேன்
கொள்ளவேவந்தவர்கள் கோடானகோடியுண்டு
மாலையிடவந்தவர்கள் மட்டுமிதங்களில்லை
அப்போதருச்சுனரு மன்றுமொருபார்ப்பானாய்
குஷ்டரோகிபோலாகக் கொற்றவரும்வடிவெடுத்தார்
பாஞ்சாலன்பந்தலிலே பார்ப்பான்போல்வந்திருந்தார்
அப்போதென்தகப்பன் ஆலோசனையேதுசொல்வார்
வில்லைவளைத்தவற்கு மெல்லியரைக்கொடுப்பேனென்றார்
அவ்வார்த்தைதான்கேட் டரசமுடிராசாக்கள்
மண்டலத்துராசாக்கள் வந்துவில்வளைத்ததில்லை
இக்கரசையாண்டொரு துரைகளெல்லாம்வந்தார்கள்
வானவர்கோனிந்திரரும் வந்துவில்வளைத்தார்கள்
விண்ணுலகுராசர்களும் வில்லைவளைத்ததில்லை
தேசத்துராசாக்கள் வில்லைவளைத்ததில்லை
அரசுமுடிராசாக்கள் அவ்வில்லைவளைத்ததில்லை
இக்கரசுராசாக்கள் இலைவளைக்கமாட்டாமல்
வெட்கமுங்கெட்டாரே வேந்தராந்தராசாக்கள்
ஆரால்முடியாது அவ்வில்வளைப்பதற்கு
வந்தவந்தராசாக்கள் மானங்குலைந்தார்கள்
அப்போதுஉன்புருஷ னர்ச்சுனன்டியாணமுகன்
பார்ப்பானைப்போலிருந்து பாத்திபன்தானெழுந்து
தேவாதிதேவர்மெச்ச துரைகளெல்லாம்பார்த்திருக்க
விஷ்ணுவும்பிர்மாவும் வியர்த்துகடுங்கிடவே
விண்ணிரண்டுந்தானதிர அவ்வில்வளைத்தாரே
நீர்பார்த்துமீனெய்தார் கித்திலங்குபூமுடியார்
என்னைமாலையிட்டாரே யெழில்விசையனருச்சுனரும்
எனக்கொருகுறையுமுண்டோ வென்னுடையதங்கையரே
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வாள்நாககன்னி
அல்லியரேயப்பியரே அதிசயத்தைநீகேளும்
நான்-இந்தவுலகமல்ல இன்றுட்டுமனுஷியல்ல
நாகலோகமபெண்பிறந்த நாககன்னிநானல்லவோ
ஊருமொருமாணிக்கம் பேருமொருமாணிக்கம்

மௌ

மாணிக்கந்தன்னால் மடையடைக்கும்பொற்பாவை
என்னைவந்துமாலையிட்டா ரியலானவுன்புருஷன்
எனக்கென்னகுறையாக விருக்குதேண்டியப்பியரே
இவ்வார்த்தைதான்கேட்டெழுந்தாள்சுபத்திரையும்
பூவிற்பிறந்தவளே பொற்கொடியே நீர்கேளும்
மகுடத்துரைச்சியரே வார்த்தையொன்று நீர்கேளும்
ஆயாதுதங்கையர்காண் அம்மாங்கனல்லவோ
என்னைச்சிறையெடுக்க இவனை உன்புருஷன்
சந்நியாசிவேடங்கொண்டு தான்வியாசாரமாயிருந்தார்
மாயப்பொடிமருந்தை மயக்கத்தைத்தூவிவிட்டார்
என்னைச்சிறையெடுத்து இட்டுவந்தானுன்புருஷன்
காவென்னகுறையாக விருக்கிறேன்காணுச்சியரே
அருச்சனரைப்பார்த்தாலே ஆவல்தெளியாது
மீசைமுறுக்கழகர் விழியிற்கறுப்பழகர்
காவிலேவட்சத்திரம் நயனவிழிப்பார்வைகளும்
தோளில்துளசிமாலை தொப்புளிலமிர்தகலசம்
பல்லிலபாசவினை பாதத்தில்செந்தாமரை
மூக்கிலேமட்சரேகை முழங்காலிலேமுத்துமாணிக்கம்
ஸ்திரீலீலைமன்மதன்டி சிறுபெண்கட்குசுகவண்டி
அருச்சனரைப்பார்த்தாலே ஆவல்தெளிந்திடுமே
இவ்வார்த்தைதான்கேட்டல்லியருமேது சொல்வாள்
அழகுவேண்டுமென்றுசொல்லி ஆடிகாத்திருந்தார்
மாப்பிள்ளைவேண்டுமென்று மயங்கினவராரடி தான்
கணவனூர்வேண்டுமென்று காத்திருந்தாரடி தான்
வேண்டுமென்றிருந்தாலல்லோ விசயனைவேணுமோ
இராசாக்கள்தன்னைப்போலே யானும்மகுடஞ்சூட்டி
மாணிக்ககிரீடமது மகுடஞ்சிரசிலிட்டு
கத்திகட்டிசீமைதனை கனணிரோயாளலையோ
எதிர்த்தவரைச்சங்கரித்து எல்லையரசாளலையோ
மண்ணாண்டராசாத்தி மனையாட்டியாயிருந்தால்
பூமியாண்டராசாத்தி பெண்சாதியாயிருந்தால்
கண்டார்கள்யாரோ சவிபுகழ்த்தாரோசாற்று
பார்த்தார்கள்யாரோ பாருலகமேசாரோ
இவ்வார்த்தைதான்கேட்டேதுசொல்வாள்திரௌபதையும்
மகுடத்துரைச்சியரே வார்த்தையொன்றுநீர்கேளும்
தலையிலெழுதியதைத் தள்ளிவைப்பாராருமில்லை
எட்டிலெழுதியதை யெடுத்தெறிவாராருமில்லை
அன்றெழுதுமாதிசிவ னெழுத்தெழுதப்போகுதில்லை
கதியைத்தொலைக்கலாம் காவேரிநீந்திடலாம்
விதியைத்தொலைப்பதற்கு வேறுவிதமாமறிவேன்
கழுத்திலேதாலியது கட்டியிருக்கையிலே

வயிற்றிலேபிள்ளையாது வந்துமிருக்கையிலே
ஆயாசப்படுவதுகாண் அன்னியருக்கெச்சாரும்
தரணியுள்ளோர்கேட்டாலே சற்றேநகைப்பார்கள்
மாலைதரித்துநீ மணமுகூர்த்தஞ்செய்யவேணும்
எப்போதுமபோலேயுங்க ளிராச்சியமாளவேண்டும்
மதுராபுரிபட்டணத்தில் மண்டலத்தில்யாருமில்லை
எப்போதும்போலநீ யல்லியரசாணுமம்மா
அவ்வார்த்தைதான்கேட் டல்லியம்மாளேதுசொல்வாள்
நல்லதுஆச்சியரே நம்மைவெளியேவிடும்
உங்கள்-மனதின்படியாக விவகாரம்பேசுவேன்
கூண்டிலடைத்துமென்னை விவகாரம்பேசுவதேன்
விழிஎதிரேநிற்கவேணும் விவகாரம்பேசவேணும்
வெளியேவிடுங்களென்றாள் மெல்லியிளங்கொடியாள்
அவ்வார்த்தைதான்கேட் டன்னநடைதிரௌபதையாள்
தோகைமயிலாளும் திரௌபதையுமேதுசொல்வாள்
கையிலிருக்குமவாளைக் கன்னியரேவிட்டுவிடு
சக்கிராயுதத்தைநீ சன்னலிலேவீசிவிடு
என்வார்த்தைதன்னைநீ யாதொன்றும்பேசவேண்டாம்
என்று-நம்பிக்கைதந்தாலே நான்விடுவேன்வெளியிலேதான்
சத்தியத்தைதந்தாலே தையலேவிடுவேனம்மா
அப்படியேயாகுமென்று ஆரணங்குமேதுசொல்வாள்
சொக்கர்திருவாணை ஸ்ரீராமர்தன்னாணை
ஆதிசிவன்தன்னாணை ஆறுயிரவராணை
அங்கயற்கண்ணம்மை யவர்மேலுதன்னாணை
பரமசிவன்தன்னாணை பார்வதியாள்தன்னாணை
சந்திரர்சூரியருஞ் சமர்த்தானதேவதைமேல்
ஈஸ்வரருமீஸ்வரியு மிருடியர்மேலாணையென்றாள்
இந்திரரும்பிர்மாவு மெல்லார்மேலாணையென்றாள்
சத்தியந்தருவேனென் றெண்ணாதேதையலரே
காலமிரண்டாலும் கலியுகம்பொய்த்தாலும்
சந்திரர்கள்சூரியர்கள் தெற்குவடக்கானாலும்
சத்தியந்தருவேனென் றெண்ணாதேதையலரே
கதவைத்திறக்கலேனா கடுகவிடுங்களென்றாள்
அப்போதுதிரௌபதையாள் ஆரணங்குமேதுசொல்வாள்
சகாதேவராசாவை சடுதியில்வரவழைத்து
கதவைத்திறந்துநீர் கன்னியைவிடுங்களென்றாள்
அப்போதுசகாதேவன் அன்புடனேதானெழுந்து
தந்திரவுபாயத்திற் சாத்துங்கதவுக்கே
எட்டித்திறந்தானே இயலானபொற்கதவை
சூஸ்திரமாகவேதான் திறந்துவிட்டானேபொற்கதவை
மின்னலொளிபோலே வெளிப்பட்டாளல்லியம்மாள்

சந்திரனைப்போலே தரும்புகிறாள் தோகைநல்லாள்
குன்றுமேற்சந்திரன் குதித்தெழுந்தபாவனைபோல்
மகுடத்துரைச்சியவள் வந்தாள் வெளியாக
மூடிச்சிவிகைவைத்தார் முன்றலேயல்லியற்கு
ஏறினாள்சிவிகைதன்னி லெடுத்தார்கள்தாதியர்கள்
அந்தப்புரத்திலே யாரணங்கைக்கொண்டுசென்றார்
பத்தாங்கட்டாண்மனையிற் பத்தினியைக்கொண்டுசென்றார்
சிவிகைதனைவிட்டிறங்கிச் சென்றாளேமாளிகையில்
கெண்டிகையிற்றீர்த்தமது கொண்டுவந்துமுன்புவைத்தார்
கைகாலுஞ்சுத்திபண்ணிக் கனிவாயைக்கொப்பளித்தாள்
அமுதுண்ணுமண்டபத்தி லாரணங்குபோய்ச்சேர்ந்தாள்
பந்திப்பாய்மேலாகப் பாங்குடனேவந்தமர்ந்தாள்
வாழையிலைபோட்டு வரிசையுடனீர்தெளித்து
மல்லிகைமொக்குபோல் மாற்றுவெள்ளிநிறம்போல
போசனமும்பாலித்துப் பொற்கறியும்வைத்தார்கள்
பத்துவகைக்கறியும் பதினெட்டுபச்சடியும்
சர்க்கரைபாற்போசனமும் முப்பழமும்போசனமும்
உண்டுபுசித்தார்க ளுரிமையுடனெல்லவரும்
கைகாலலம்பினார்கள் கனிவாயும்சுத்திபண்ணார்
மற்றுமொருமண்டபத்தில் வந்தமர்ந்தாரெல்லவரும்
சந்தனமும்புட்பமுந் தாம்பூலந்தான்கொடுத்தார்
வாங்கித்தரித்தார்கள் மண்டபத்தின்கொலுவில்லந்தார்
அன்னநடைதிரௌபதையாள் அருச்சுனரைத்தானழைத்து
கல்யாணமுகூர்த்தமது கடுகனவேவையுமென்றாள்
ஓலையெழுதியே யூருக்கனுப்புமென்றாள்
ஆறாயிரம்பாண்டியர்க ளனைவோர்க்குமவோலையது
எழுதியனுப்புமென்றா ளின்பத்திரௌபதையாள்

கல்யாணஓலையெழுதி இராசருக்கனுப்புதல்.

அவ்வார்த்தைதான்கேட் டருச்சுனருமன்மகிழ்ந்து
அண்ணன்தருமராசருக் கறிக்கையிட்டானருச்சுனனும்
மாயனபெருமாளு மற்றுமுள்ளோர்யோசனையாய்
சாஸ்திரபிராமணரைச் சடுதியிலேதானழைத்து
ஊர்க்கணக்கபிள்ளைகளை வுத்தமரைவரவழைத்து
சேனகணக்கர்களைச் சிறப்புடனேதானழைத்து
திங்கட்கிழமையிலே தெசமிநல்லமுகூர்த்தம்வைத்து
அல்லியர்க்குமற்சுனர்க்கு மழகுமுகூர்த்தம்வைத்து
ஆறாயிரம்பாண்டியர்க ளனைவோருமவாருமென்று
எழுதுமோரோலையது இன்பமுடன்தருமலிங்கம
அப்போதுகணக்கப்பிள்ளை அன்புடனேஓலைகொண்டு
ஈழப்பனையோலை இருபக்கஞ்சாமபரித்து
தாளிப்பனையோலை தலைபக்கங்காம்பரித்து

வாரியலோலையிலே மஞ்சளைமேற்பூசி
ஆறுயிரம்பாண்டியர்க ளையன்மார்தங்களுக்கு
வக்கணையாகவேதான் வைத்தெழுதினார்கள்
எழுதியவோலைதன்னைச் சுருள்மடித்துத்தந்தார்கள்
செந்திருக்கந்தான்போட்டுத் திருவடிக்கீழ்வைத்தார்கள்
சாஷ்டாங்கதெண்டனிட்டு நடந்தாரேகணக்கப்பிள்ளை
ஓலைதன்னையெடுத்து உத்தமனார்தருமலிங்கம்
காற்றிலதிகமான கடுந்தூதரையழைத்து
மலையுடனே தலைமோதிக்கும் மன்னவரைத்தானழைத்து
ஓலைகொண்டுபோமென்றார் உத்தமனார்தர்மலிங்கம்
இந்திரபுரந்தாண்டி இயலானகாடுவிட்டு
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுகளைதாண்டி பதிகளைந்தாண்டி
குன்றுமலைதாண்டி கொப்பெனவேதூதாட்கள்
மதுராபுரிபட்டணத்தில் வந்துவிட்டார்தூதாட்கள்
பாண்டியராசர்முன்னே பாங்குடனேஓலைவைத்தார
ஆறுயிரம்பாண்டியர்கள் ஐயன்மார்முன்னேவைத்தார்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்தூதாட்கள்
ஓலைதன்னைப்பிரித்து உத்தமர்கள்தான்மகிழ்ந்து
சந்தோஷப்பட்டார்கள் தர்மமுடிராஜாக்கள்
நாமும்வருவோமென்றார் ராஜாக்கள்பந்தலுக்கு
ஆறுயிரவர்களு மையன்மார்பயணமானார்
பொன்னின்மலைநாடனும பேரெழுதியவர்கூட
மற்றுமுள்ளராஜாக்கள் மன்னர்பயணமானார்
யானைபரிவார மடங்கலும்பயணமானா
துரியோதனராஜனுக்குச் சுருளோலைவந்ததுகாண்
துருபதேயராசனுக்குச் சுருளோலைவந்ததுகாண்
மத்ராதேசனுக்கு வந்ததேஓலையது
மண்டலத்துராசருக்கு வந்துதேஓலைகள்தான்
கல்யாணஓலைதன்னைக் கண்டந்தராஜாக்கள்
சகலமானபேருஞ் சந்தோஷமாய்வருகிறார்கள்
திக்கரசையாண்டதொரு துரைகளெல்லாம்வாரார்கள்
மண்டலத்தையாண்டவாகள் வருகிறார்துரைகளெல்லாம்
மேளம்முழங்கிற்று மும்மண்டலந்தானதிர
செந்தூளெழும்பியது சூரியனைக்கப்பிற்றங்கே
கருந்தூளெழும்புவது கதிரோனைக்கப்பிற்றங்கே
முத்தைப்பிளந்தார்கள் மூன்றுங்கால்நட்டார்கள்
பவளம்பிளந்தார்கள் பந்தக்கால்நாட்டினார்கள்
வெள்ளியால்கால்நிறுத்தி வெற்றிலையாலபந்தலிட்டு
மூங்கில்பிளந்தார்கள் முச்சுருக்குப்பந்தலிட்டார்
கருப்பாலேகால்நிறுத்தி அருமட்டாலேபந்தலிட்டார்

பச்சோலைப்பந்தலது பாங்காயலங்கரித்து
வன்னிமரமகமுளுமரம் வாசலெல்லாங்காட்டினார்கள்
சோலைபலாமரமுந் தெருவெல்லாம்நாட்டினார்கள்
வாழைமரங்களது வாசலெல்லாம்நாட்டினார்கள்
மாவிலைத்தோரணமும் குடைத்தோரணங்கட்டினார்கள்
எங்கெங்குஞ்சோலைகளு மெத்தவிசைதோரணமும்
கண்ணாடிசலவைகட்டிக் கவரிமானைக்குச்சுவிட்டு
பஞ்சவர்ணக்கிளிகளை பந்தலிலேதூக்கிகட்டி
அன்னமுமயிலுமும் அழகுறத்தாங்கட்டினார்கள்
சன்னவிலைபனிநீருஞ் சாடினாரெத்திசையும்
கிலக்கோலமிட்டார்கள்நிலமெல்லாம்பூசதெளித்தார்
அத்தர்புனுகுகளை அள்ளித்தெளித்தார்கள்
பட்டுரத்தினப்பாய்போட்டார் பந்தலுக்குள்ளாக
சாரத்துலக்கணையுஞ் சகலாத்துதிண்டுவைத்தார்
அந்தச்சமயத்திலே அனேகதங்கோடிராஜாக்கள்
வருகிறதுரைகளெல்லாம் மட்டுமிதவனிலே
வாகனங்கள்விட்டிறங்கி வந்தார்துரைகளெல்லாம்
சந்தனவடிவழகர் தருமருக்கேதெண்டனிட்டார்
பந்தலிலேவந்தமர்ந்தார் பாங்குள்ளராஜாக்கள்
அத்தனைபெண்களுமனைவோருஞ்சிவிகைவிட்டு
அந்தப்புரத்திலே யனைவோரும்போய்ச்சேர்ந்தார்
சாஸ்திரப்பிராமணர்கள் சகலருமேவந்தமர்ந்தார்
செங்கெல்லைக்கீழ்பரப்பிச் சேஷமணைபோட்டு
மணவறையைப்போட்டார்கள் மாப்பிள்ளையைக்குந்தவைத்தார்

அல்லியரசாணியையருச்சுனன்மாலையிடுதல்

மாப்பிள்ளைபெண்ணுமாக வந்தமர்ந்தார்பந்தலிலே
சேஷமணைமேலே சீருடனேவந்தமர்ந்தார்
செங்கலரிசிகொண்டு தெற்குநோக்கிப்பொங்கவிட்டார்
நாவிதன்வந்துநின்று நல்லமணைப்பந்தலிலே
பாலால்முகமழைத்துப் பத்துவிரலகும்வாங்கி
பணிசெய்வோர்சங்கூத பார்த்தோர்குதூகலிப்ப
சங்கீதமேளங்கள் சகலவிதமுழங்கிநிற்க, வெற்றிசங்கூதவேவிருது
[illegible], சீக்கிரமுடித்தார்கள் சிறாயிருவருக்கும்
பு[illegible]னு [illegible]ணைப்பெண [illegible] நலங்குசெய்தார்
எ[illegible]னு [illegible] மேழுநலங்குசெய்தார்
ம[illegible] மந்திரமோட்டிவைத்தார், ஸ்நானங்களாட்டினா
ர் [illegible], நீரூட்டிபுலக்கினார் கிலங்கிள்ளிகாப்புமிட்டார்
ச[illegible]துகில் [illegible] இழைசேர்ந்தபட்டுடுத்தி
[illegible]துகிகளைத் [illegible] காக்தளிர்பட்டுடுத்தி
மாப்பிள்ளையும்பெண்ணையும் மணடபத்திற்கூட்டிவந்தார்

முத்துவடங்களாம் மோகனமாலைகளாம்
வட்டச்சரப்பளியும் மார்நிறைந்ததாழ்வடமாம்
ஐந்துவிரலுக்கு மழுக்கியமோதிரமாம்
பத்துவிரலுக்கு பதித்தகணையாழிகளாம்
பாடகமதண்டைகளாம் பருஞ்சிலம்புகாலாழி
காலாழிகல்லணையாம் பீலாழிபீலணையாம்
அஷ்டாபரணமெல்லாம் அலங்காரம்பண்ணினார்கள்
சோடித்தோமென்று சொல்லிதெண்டனிட்டார்கள்
அருச்சுனனையல்லியையழைத்தார்கள் பந்தலிலே
மணவறையின்மேலாக வந்தாரிருவருமாய்
அரசாணிநாட்டினார் ளமிருழவிலைத்தார்
சாலுக்கரகமுஞ்சட்டமுடன்வைத்தார்கள்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
குத்துவிளக்குகளும் கூடவிளக்குமுன்புவைத்தார்
பார்த்திபனருச்சுனன்முன் பாலியெதிராக
ஓமப்புகையிலே யுடனிருந்துவேதஞ்சொல்ல
ஆயிரம்பிராமணரளக்கிருந்துவேதஞ்சொல்ல
காப்பரிசிதான்வழங்கிக் கங்கணந்தரித்தார்கள்
ஆறாயிரம்பாண்டியர்களையமார்களெழுந்து
மாவுங்கழுநாலு மஞ்சளுடசெல்வினையும்
தாலியுங்கூறையுந் தந்தாரேபாண்டியர்கள்
காலுக்குமிஞ்சியிட்டார் கைக்குகணையாழியிட்டார்
காலுக்காழிவியே கன்னியைத்தானமிட்டார்
தந்தேனுனக்கிந்தேன் தாரைநீர்பிடியுமென்றார்
மாவுங்கழுநாலே மஞ்சளுடனரிசி
அத்தண்டபிராமணர்களஸ்தமிட்டார்மங்கிலியம்
மண்டலத்துராஜாக்கள் மணவர்களஸதமிட்டார்
ஆறாயிரம்பாண்டியர்களாயன்பாரஸதமிட்டார்
மாயன்பெருமாளு மன்ராமாஸ்தமிட்டார்
ஆகாவென்றுசொல்லி யழுத்துகிறான்மங்கிலியம்
சிவசிவாவென்றுசொல்லி தேர்விஜயன்கட்டலுற்றான்
மாதுதலைகுனிய மன்னன்தரிக்கலுற்றான்
பிரமமுடிமூன்றுமுடி போட்டானே புண்ணியனும்
தேவதுந்துமியுழுங்கத் தேவர்பூமாரிபெய்தார்
சங்கீதமேளமது சபையில்முழங்கிவர
அடிபடுதேபேரிகைதான அநேகராத்தாந்திர
முப்பத்துமுக்கோடி முனிவர்களதேவரெல்லாம்
ஆகாயவீதியிலே அருச்சுனனைவாழ்த்தினார்கள்
முப்புரத்தைத்தானெரித்த முக்கணனும்வாழ்த்தினாரே
அருச்சுனற்குமல்லியர்க்கு மட்சதைதெளித்துவிட்டார்

அலங்காரம்பண்ணலுற்றா ரழகாயிருவரையும்
எழில்விஜயராஜாவை எப்படியலங்கரிப்பார்
கோதிமுடித்தார்கள் கீறிக்கொண்டைபோட்டார்கள்
உட்கொண்டைபோட்டார்க ளருமாலைக்கட்டினார்கள்
வண்டித்தலைப்பாகை மன்னனுக்குத்தான் தரித்தார்
முத்துக்கடுக்கனது முகமழகாய்காதிலிட்டு
முத்துக்கலிக்கத்துராய் முன்னெற்றியிலேசொருகி
லலாடச்சிங்கத்துராவும் நடுத்தலையிலேசொருகி
ஒட்டுக்கடுக்கனது உலகமவிலைபெருமே
பச்சைக்கம்முருகுதனைப் பதித்தார்களருச்சுனர்க்கு
வச்சிரக்கடக்கனுடன் மாணிக்கக்கடுக்கனிட்டார்
கண்டசரங்களுடன் கனவிதவாபரணமும்
மோகனமாலையுடன் முத்துச்சரப்பணியும்
ஐந்தாம்பிறைபோலே அடுக்கடுக்காய்ப்பதக்கம்
சிங்கமுகக்கடகம் சிராணபாசிபந்து
அரைநாண்கயிறுகளு மைந்துவிரல்மோதிரமும்
நீட்டி வைக்குங்கால்களுக்கு கெரிஞ்சிப்புசல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
சந்திரகாந்திதட்டிகட்டித் தாமரைப்பூசுங்குவிட்டு
பூவிழைத்தஅங்கிதன்னை பூட்டியலங்கரித்து
பொன்னிழைத்தபட்டாடைப் போட்டார்கள்வல்லவாட்டு
சிவசிவாவென்றுசொல்லித் திருநீற்றுக்காப்பணிந்தார்
சந்தனபொட்டுமிட்டார் தருமதம்பியருச்சுனர்க்கு
மல்லிகைமாலைதன்னை மார்பிலணிந்தார்கள்
அருச்சுனனைசோடித்தா ரழகுபெறத்தோழரெல்லாம்
ஆறுயிரம்பெண்க ளலைவருஞ்சோடித்தார்கள்
சம்பங்கியெண்ணெய்கொண்டு தடவிமயிராற்றி
சீவிமயிராற்றி சிமிள்போலேகொண்டையிட்டாள்
ஒவ்வொருமயிருக் கொவ்வொருபொன்னிதழாம்
பூவிதழுமபொன்னிதழும் பூட்டியலங்கரித்தார்
கட்டிமுடித்தகொண்டை காதின்கீழ்சோதிமின்ன
சுற்றிமுடித்தகொண்டை சூரியனைத்தோற்றடிக்கும்
ஆண்மயிலைப்பெண்மயிலை யண்டையிலேசேர்த்தார்கள்
சந்திரனை சூரியனை சரியானபிறையணிந்து
பக்கத்திற்சேர்த்தார்கள் பல்லியாழ்வார்பிறையும்
பல்லிசெல்லிசி பக்கமயிற்கொலுசும்
அருகுசொப்புசொருகுவாளி அன்னகொப்புமணிந்தார்கள்
பச்சைக்கல்முருகுகளும் பதித்தாகளல்லியற்கு
மூக்குத்தியட்டிகைமேற் கத்திரிபாவிலையும்
காசரிக்காலையது நடுக்கழுத்திற்பூஷணமாம்
ஒற்றைச்சரங்களும் ஒருபுரமாய்பொற்சரிகை

வாழ்த்தியேபோனார்கள் வானவர்களைவருந்தான்
அரசாணிசுத்தினார்க ளம்மியிதித்தார்கள்
அப்போதருச்சுனரு மல்லிப்பெருமானும்
அருந்துதிபூசைபண்ணி யள்ளிப்பொரியிறைத்தார்
கணையாழிமாற்றினார் கட்டழகரிருவருமாய்
மாலைதனைமாற்றி வந்தமர்ந்தாரிருவருமாய்
அத்தண்டபேர்களு மள்ளியேசேஷையிட்டார்
வந்திருந்தராஜாக்கள் வந்தவர்கள்மொய்யுமிட்டார்
ஆறாயிரவரு மையன்மார்சேஷையிட்டார்
சேஷைதரித்தபின்பு சீருடனேமொய்யுமிட்டார்
மகுடமுடிராஜாக்கள் வந்தவர்கள்மொய்யுமிட்டார்
காப்பரிசிதான்வழங்கிக் கங்கணமவிழ்த்தார்கள்
அனைவரையுந்தண்டம்பண்ணி யரண்மனையிலுட்புகுந்தார்
பாலிகைப்பாய்மேலே பாங்குடனேபோய்ச்சேர்ந்தார்
பாலும்பழங்களுண்டு பசியாறிவீற்றிருந்தார்
அந்தமணப்பந்தலிலே யழகானதருமலிங்கம்
மொய்பாக்குவெற்றிலையு முடிமன்னராசருக்கு
சந்தனபுஷ்பமுந் தாம்பூலம்வழங்கினாரே
ஆயிரபிராமணர்க்கும் மந்திரதேசிகட்கும்
பலதானங்கொடுத்தார்கள் பிராமணருள்ளவர்க்கும்
மண்டலத்துராஜாக்கள் வந்திருந்ததுரைகளெல்லாம்
போஜனச்சாலையிலே போய்புகுந்தாரெல்லவரும்
பந்திப்பாய்போட்டார்கள் பாங்குடனேவந்தமர்ந்தார்
வாழையிலைபோட்டு வரிசையுடன்தெளித்தார்
முப்பழமுஞ்சர்க்கரையும் முடிமன்னர்கள்வைத்தார்கள்
புத்துருக்குநெய்வார்த்துப் போஜனமுண்ணுமென்றார்
அத்தளிகையுண்டபின்பு மறுதளிகைமுன்னேவைத்தார்
மல்லிகைமொத்தைபோலேமாற்றுவெள்ளிநிறம்போலே
போஜனங்கள்பாலித்துப் பொரிக்கறியும்வைத்தார்கள்
பத்துவிதக்கறியும் பதினெட்டுபச்சடியும்
எட்டுவிதக்கறியும் மியலானபோசனமும்
பொன்போல்பருப்பும்வைத்து புத்துருக்குநெய்சொரிந்தார்
அத்தளிகையுண்டபின்பு மறுத்தளிகைவைத்தார்கள்
இளந்தோச்சல்தயிருமிட்டா ரெலுமிச்சங்காயுமிட்டார்
போஜனங்களுண்டபின்பு பொடியிட்டுக்கைதிமிரி
கைகால்கள்சுத்திபண்ணிக் கனிவாயுங்கொப்பளித்து
சித்திரப்பந்தலிலே வந்தார்துரைகளெல்லாம்

சம்பந்திதாம்பூலந் தட்டோடேவழங்கினார்கள்
உறன்முறைதாம்பூல முற்றவர்கள்வழங்கினார்கள்
யானையலங்கரித்து அருச்சுனர்க்குகொண்டுவந்தார்
அத்தளங்கள்சோடித்து அல்லியர்க்குகொண்டுவந்தார்
யானைமேலருச்சுனரு மத்தளத்திலல்லியரும்
ஏறினார்இருவருமா யெடுத்தார்நெடுங்குடைகள்
சண்டாபறக்கவிட்டார் தனிபேரியடித்தார்கள்
யானைமேல்பேரிகையும் குதிரைமேல்டங்காவும்
ஒட்டகமேல்நகபத்தும் ஓசையுமுழங்கவேதான்
சங்கீதமேளமது சபையில்முழங்கவேதான்
எக்காளைசின்ன மெழில்பெறவேயூதிவர
பாஞ்சசன்னியம்தேவதத்தம் பல்வாத்தியமுழங்க
சாமரங்கள்சின்னம் யெக்காளையூதிவர
பகல்வத்திமத்தாப்பு பட்டம்பகல்போல்பிடித்தார்
புருசுவெடிபாணம் போதமுழங்கிற்றே
நக்ஷத்திரபாணமது நன்றாய்முழங்கிற்றே
ஆடாதகூத்துகளும் அரம்பவனிநாடகமும்
கேளிக்கைகளுடனே கீர்த்திமன்னனருச்சுனனும்
நான்குதெருக்கோலம் நன்றாய்வருகிறார்கள்
தண்ணீர்தெளிப்பார்கள் சாம்பிராணிபோடுவார்கள்
வாழைக்கமுகும் வாசலெல்லாம்நடுவார்கள்
நிலக்கோலமிடுவார்கள் நிலமெல்லாம்பூத்தெளிப்பார்
ஊர்கோலமாகியே யுத்தமர்கள்வந்தார்கள்
ஆலஞ்சுழற்றினார்க ளர்ச்சுனர்க்குமல்லியற்கும்
திருட்டிகள்சுத்தியே தெருவிலேகொட்டுவார்கள்
வாகனங்கள்விட்டிறங்கி மண்டபத்திற்போய்புகுந்தார்
பாலுமபழங்களுண்டு பசியாறிவீற்றிருந்தார்
ஐந்தாறுநாள்சென்றபின்பு அத்தண்டராஜர்களும்
அவரவர்மாளிகைக்கு அனைவோரும்போகவென்று
தருமரேசொல்வதினால் தானடைந்தார்மாளிகைக்கு

பாண்டியரும் அல்லியரும் விடைபெற்று மதுரைக்குவந்தது.

தருமரிவரு மையன்மார்தாங்கள்முதல்
முடிசூடிகையிலே மெல்லியளைவைத்துக்கொண்டு
காலாளுஞ்சேவகருங் கடுகப்பயணமானார்
தருமர்செலவதினால் சந்தோஷமாயெழுந்து
யானைகளுஞ்சேனைகளும் யாவர்களுமாக
மேளமுழங்கிவர முடிமன்னர்போகிறார்கள்
மதுராபுரிபட்டணத்தில் வந்தார்களெல்லவரும்
நான்குதெருக்கோலம்வந்து நாயகியேபோய்ச்சேர்ந்தாள்

மண்டபத்துக்குள்ளாக வந்தமர்ந்தாரெல்லோரும்
அப்போது அல்லியரு மாசுக்குரித்தானாள்

அல்லியரசாணிபாலகனைப்பெற்றது

ஓராந்தான்மாதமது ஒருதிங்கட்கிழமையிலே
இரண்டாந்தான்மாதமது இரண்டுதிங்கள் ஆச்சுது
மூன்றாந்தான்மாதமது மூத்துகொங்கைமுகங்கருத்து
நான்காந்தான்மாதத்திலே நல்மசக்கையானாளே
ஐந்தாந்தான்மாதத்திலே அடிவயிறுகனத்திடுமாம்
ஆறாந்தான்மாதத்திலே யங்கமெல்லாந்தங்கநிறம்
ஏழாந்தான்மாதத்திலே இசைந்தஸ்ரீமந்தஞ்செய்தார்
எட்டாந்தான்மாதத்திலே இளைப்புந்தவிப்பாளாம்
ஒன்பதாந்தான்மாத்திலே உடம்பெங்கும்நோகுதென்றாள்
பத்தாந்தான்மாதத்திலே பாலனைப்பெற்றெடுத்தாள்
பப்பிரவாயனென்று பாண்டியர்கள்பெயருமிட்டார்
மாணிக்கதொட்டிலிலே வளருகிறானிந்திரனும்
இந்தக்கதைதன்னை யின்பமாய்பாவைகளும்
விந்தையாயிக்கதையை விரும்பியபூவைகளும்
அன்புமிகக்கொண் டல்லிகதைபடிக்க
துன்பமிகத்தீர்ந்து துரிதமுடன்படிக்க
கோதைமார்தானேங்கிக் கொள்ளமனங்களிக்க
பேதைமார்தானேங்கிப் பெருக்களிப்பில்தானகுளிக்க
சொக்கநாயகர்படிக்கச் சுந்தரமாயிக்கதையை
அக்கரையாகவே யனைவோரும்படிப்பதற்கு
இக்கதையாவர்களு மிசைந்துமேகேட்டவர்கள்
சொக்கர்பதியதனைச் சேர்வார்கள்வையகத்தில்
அருமையாய்க்கேட்டவர்க ளனைவோருந்தான்வாழி
பெருமையாய்க்கேட்டவர்கள் பெரியோர்கள்தான்வாழி
பாருலகிலல்லிகதை படிப்பவர்கள்தான்வாழி
சீருலகுமெல்லிகதை சிந்திப்போர்தான்வாழி
ஆவலாய்க்கேட்பவர்க ளன்புடன்தான்வாழி
தேவரும்மூவரும் யாவருந்தான்வாழி
ஆதிசிவனருளால் அனைவோருந்தான்வாழி
மாயனருளாலே மண்டலங்கள்தான்வாழி
காயங்களுள்ளளவும் களிப்புடன்தான்வாழி
சொக்கரருளாலே சுகமாகத்தான்வாழி